மாற்றுவெளி

ஆய்விதழ்

4

ரோஜா முத்தையா ஆராய்ச்சி
நூலகச் சிறப்பிதழ்

மாற்று

மாற்றுவெளி

ஆய்விதழ் : 4

ஜூன் 2010

அழைப்பாசிரியர் (Guest Editor)
க. சுந்தர்
இயக்குநர்
ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகம்

சிறப்பாசிரியர்
வீ. அரசு

ஆசிரியர் குழு
அ. சதீஷ், பா. இளமாறன்
கா. அய்யப்பன், தே. சிவகணேஷ், ஜ. சிவகுமார்
மு. நஜ்மா, க. செந்தில்ராஜா, வெ. பிரகாஷ், சு. சுஜா
கன்னியம் அ. சதீஷ், இரா. வெங்கடேசன்
கு. கலைவாணன், அ. கார்வண்ணன், மு. காமாட்சி

வள அறிஞர் குழு
கண்ணன். எம், வ. கீதா, அ. மங்கை
எஸ். பாலச்சந்திரன், சித்திரலேகா
மௌனகுரு, தெ. மதுசூதனன்

வெளியீட்டாளர்
சிவ. செந்தில்நாதன்

வடிவமைப்பு
தி. முரளி

தொடர்பு
பரிசல் புத்தக நிலையம், எண் : 176 Q பிளாக்
தொல்காப்பியர் தெரு, அரும்பாக்கம்
சென்னை - 600 106 பேச: 93828 53646
மின்னஞ்சல்: maatruveli@gmail.com

விலை ரூ.100
10 இதழ்கள் ரூ.500

வரைவோலை (D.D.)அல்லது பணவிடை (M.O.) அனுப்புபவர்கள்
பரிசல் புத்தக நிலையம் என்ற பெயருக்கு அனுப்பவும்.

ISSN 0976-1667

அழைப்பாசிரியர் எனும் சொல்லாக்கம் செய்தவர் பா. ரா. சுப்பிரமணியம்

மாற்றுவெளி தொடங்கியபொழுது, பல்வேறு துறை சார்ந்த அறிஞர்களின் வளங்களைப் பயன்படுத்த விரும்பினோம். குறிப்பிட்ட துறை சார்ந்தவர்களை அழைப்பாசிரியர்களாகக் கொண்டு இதழை உருவாக்குவது என்பது எங்கள் திட்டம்.

கடந்த மூன்று இதழ்களில் அதனை நடைமுறைப் படுத்த இயலாது போயிற்று. திரு க. சுந்தர் அவர்களை அழைப்பாசிரியராக இவ்விதழுக்கு இருக்கக் கேட்டுக் கொண்டோம். அவர் அதனை ஏற்று இவ்விதழை உருவாக்கியுள்ளார். அவருக்கு எங்கள் நன்றி. இவ்விதழ் பெரியவர் ரோஜா முத்தையா அவர்களை நினைவு படுத்தும் வகையில் வெளிவருகிறது. தமிழகத்தின் நூலக வரலாறு எழுதும்போது இவர் குறித்த பதிவு பெரும் வியப்பளிப்பதாகவே (Legend) அமைகிறது.

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகச் சிறப்பிதழ்

பண்பாட்டின் அடையாளம்

அச்சு ஆவணங்களைப் பாதுகாக்கும் ஆவணக் காப்பகங்களின் வரிசையில் ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகம் ஒரு முக்கியப் பங்கு வகிக்கிறது. செவ்வியல் இலக்கியங்கள், மருத்துவம், குறிப்பாகச் சித்த மருத்துவம், வெகுசன இலக்கியம், நாட்டார் வழக்காறு, இருபதாம் நூற்றாண்டின் வெகுசன நூல்கள், தமிழ் சினிமா, நாடகம், காலனிய அரசு சார்ந்த ஆவணங்கள் (Official Reports), எனப் பலதரப்பட்ட ஆவணங்களைக்கொண்டு ஆயிரக்கணக்கான ஆய்வாளர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்துவருகிறது. நூலகங்களின் வளர்ச்சிக்கு இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் வழங்கப்படாத முக்கியத்துவம் தமிழகத்தில் வழங்கப்பட்டுள்ளது. அதற்குச் சாட்சியாகத் தற்போது புதிதாகக் கட்டப்பட்டு வரும் அண்ணா நூற்றாண்டு நூலகத்தைக் கூறலாம். செம்மொழியாகிய தமிழின் தொன்மை பற்றி அதிகமாகப் பேசப்பட்டு வரும் இச்சூழலில் ரோஜா முத்தையா நூலகம் கடந்த ஐம்பது ஆண்டுகளாகத் தமிழ்ச் சமூகத்திற்கு ஆற்றிவரும் பங்கினைப் பற்றிப் பேசுவதும் பதிவு செய்வதும் இத்தருணத்தில் மிகப் பொருத்தமானதாக இருக்கும்.

வால்டர் பென்ஜமின் தனது நூலகத்தின் ஒழுங்கு -ஒழுங்கின்மை குறித்து, இருவேறு நிலைகளில் தனது மனம் ஊசலாடுவதைப் பதிவு செய்கிறார். இது சேகரிப்பாளர்களுக்கென்றே உள்ள மனநிலை. அதற்கு ரோஜா முத்தையா முதலானோர் விதிவிலக்கல்ல. ரோஜா முத்தையா புத்தகங்களை அலமாரிகளிலும், மேஜைகளிலும் திண்ணையிலும் வீட்டு அடுக்கைகளையிலுமாகத் தனது சேகரிப்புகளை விரித்து, எங்கும் நூல் மயமாகத் தோன்றும்படி வைத்திருந்தாரென்று பலரும் கூறுவர். பல புகைப்படங்கள் அதைச் சித்திரிக்கவும் செய்கிறது. நிறுவனங்களே இப்பிரச்சனையை எதிர்கொள்வது கடினமாக உள்ளது. ரோஜா முத்தையாவின் நூலக மேலாண்மை வியக்கத்தக்க வகையில் இருந்துள்ளது. அவை வரலாற்றில் பதிவு செய்ய வேண்டிய ஒன்றாகும். அவர் இல்லையென்றால் ஆயிரக்கணக்கான ஆய்வாளர்கள் தங்களது ஆராய்ச்சிக்காகத் தரவுகளைத் தேடி அலைந்திருக்க வேண்டும். பல தரவுகளுக்கு இலண்டனிலுள்ள பிரிட்டிஷ் நூலகத்தைத் தான் நாடியிருக்க வேண்டியிருக்கும். ரோஜா முத்தையா குறிப்பிடுவது போல் இப்புத்தகங்கள் யாவும் பலகாரக் கடைகளில் பொட்டலம் மடித்துக் கொடுக்கப்பட்டிருக்கக்கூடும். சிகாகோ பல்கலைக்கழகம் இதைப் பாதுகாக்கும் முயற்சியில் ஈடுபடாமல் இருந்திருந்தால் அவை பல்வேறு இடங்களில் சிதறிப் போயிருக்கும். நல்லவேலை அப்படி ஒன்றும் நடக்கவில்லை.

பத்தொன்பது - இருபதாம் நூற்றாண்டுத் தொடங்கி நவீன கல்வி முறையினால் வாய்வழி, செவிவழி அறிவு பரிமாற்றம் அழிந்தது. அச்சு கலாச்சாரத்தின் வருகையால் ஆவணங்கள் அச்சேறின. ஒரு பிரதி, பல படிகளாக மாற்றப்படுவதற்குரிய அச்சியந்திரங்கள் நவீன இந்தியாவின் அறிவு பரவலாக்கலின் ஊடகமாயின. அரிய இலக்கியங்களெல்லாம் அச்சில் ஏற்றப்பட்டு, நாளடைவில் அச்சு சார்ந்த பண்பாடு வந்தது. இவ்வச்சுப் பிரதிகள் இல்லையென்றால் நமது மொழி சார்ந்த தகவல்களை, நாம் சரியாகப் புரிந்துகொள்ள முடியாது, ஆகையால் அச்சு

மாற்று

ஆவணங்களை நாம் பாதுகாக்க வேண்டியது மிகமிக அவசியமாகிறது.

உலகில் தலைசிறந்த நூலகங்களான இலண்டனிலுள்ள பிரிட்டிஷ் நூலகம், ஆக்ஸ்போர்டிலுள்ள இந்திய நிறுவன நூலகம், நியூயார்க்கிலுள்ள நியூயார்க் பொது நூலகம், பாரிஸிலுள்ள நேஷனல் பிப்லியோதிக் நூலகம், புதுதில்லியில் நேரு அருங்காட்சி யக நூலகம் போன்ற நூலகங்களின் வரிசையில் ரோஜா முத்தையா நூலகமும் இடம்பெற்றுள்ளது. இந்நூலகம் தமிழ்த் தரவுகள் எங்கெல்லாம் உள்ளன என்ற தகவல்களைத் திரட்டி, அதனைப் பட்டியலிட்டுத் தமிழ் ஆர்வலர்களுக்கும் ஆய்வாளர்களுக்கும் அளித்து வருகிறது. அத்தகவல்களை நூலகவியல் கோட்பாடு களுடன், நவீன தகவல் தொழில்நுட்பத்தைக் கொண்டு பாதுகாத்து, தெற்காசியாவிலுள்ள பிற நூலகங்களுக்கும் அளித்து வருகிறது.

பழைய, அரிய வரலாற்று ஆவணங்களை மக்கள் உதாசினப் படுத்தி ஒதுக்கினர். ஆனால் ரோஜா முத்தையா பழைய ஆவணங்கள் மீது பற்றுடையவராக இருந்ததனால் மற்றவர்கள் தேவையில்லை என்று தூக்கி எறிந்ததையெல்லாம் சேகரித்தார். சென்னை மூர் மார்கெட் எரிந்து போகாதிருந்தால் அது பண்பாட்டுச் சின்னமாக இருந்திருக்கும். ரோஜா முத்தையா மூர் மார்கெட்டில் பல அரிய ஆவணங்களை வாங்கி கோட்டையூருக்கு எடுத்துச் சென்று பாதுகாத்து வந்தார். அமரர் ரோஜா முத்தையாவின் காலத்திற்குப் பிறகு சிகாகோ பல்கலைக்கழகம் இத்தொகுப்பை வாங்கியது. தமிழகத்திற்கே அதைக் கொடையாக அளித்ததை நாம் என்றென்றும் நினைவில் கொள்ள வேண்டும்.

நூலகத்தைப் பயன்படுத்துபவர்களில் சிலர் கேட்கும் கேள்விகளில் ஒன்று, நம் நாட்டின் பண்பாட்டு எச்சங்களைப் பாதுகாப்பதில் நம்மைவிட வெளிநாட்டவர்களுக்கு அப்படியென்ன அக்கறை இருக்க முடியும்? அதற்குப் பல காரணங்கள் இருந்தா லும் மிக எளிதாகச் சொல்லவேண்டுமானால் அவர்கள் வரலாற் றுக்கு முக்கியத்துவம் கொடுப்பதுதான். பிரிட்டிஷ் நூலகத்தை எடுத்துக் கொண்டோமேயானால் அவர்களது பண்பாட்டை மட்டும் பாதுகாக்காமல் உலகத்தில் உள்ள நாடுகளின் அறிவுச் செல்வத்தைப் பாதுகாக்க அக்கறை காட்டுகிறார்கள். ஒவ்வொரு நாட்டிலுமுள்ள தரவுகளையும் திரட்டுகிறார்கள். அதே போன்று ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகமும் 1556 முதல் பதிப்பிக்கப் பட்ட உலகிலுள்ள அனைத்துத் தமிழ்த் தரவுகளையும் (நூல்கள், இதழ்கள், இசைத்தட்டுகள், துண்டறிக்கைகள், மற்றும் பிற) தேடி, அதன் பட்டியலை உருவாக்கி வருகிறது.

வரலாறு என்பது எப்போதும் மேல்தட்டு மக்களின் வரலாறாக உள்ளதே தவிர விளிம்பு நிலை மக்களின் வாழ்க்கையைப் பதிவு செய்வதில்லை. வெகுசன மக்களின் வாழ்க்கையைச் சித்திரிக்கும் நூல் சாரா ஆவணங்களைத் தேடி எங்கே போவது. நல்லவேலை ரோஜா முத்தையா போன்றவர்களின் தொலைநோக்குப் பார்வை யினால் இதுபோன்ற இலக்கியங்களும் இந்நூலகத் தொகுப்பில் அதிக அளவில் இடம்பெற்றுள்ளது. விளிம்பு நிலை ஆய்வுகளின் அவசியத்தைப் பல ஆய்வாளர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

புதுச்சேரியில் உள்ள பிரெஞ்சு நிறுவனம், International conference on Collection, Selection and Erudition: Reading practices and Textual culture in Classical Tamil என்ற கருத்தரங்கை 2009இல் நடத்தியது. அதில்

ஆவணத் தொகுப்புகளின் நிலைமை பற்றியும் அவைகள் கிடைக்கும் இடங்கள் பற்றியும் ஆராய்ச்சிக்குத் தேவையான மூல நூல்கள் பற்றியும் பேசப்பட்டது. அதில் கட்டுரைகளை வாசித்த ஆய்வாளர்கள் ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகத்தை எவ்வாறு எளிதாகப் பயன்படுத்த முடிகிறது என்றும் அங்குக் கிடைக்கும் பல்வேறு செவ்வியல் இலக்கண, இலக்கியங் களையும், இதழ்களையும் பற்றித் தங்களது கட்டுரைகளில் வாசித்தனர். இதேபோல் சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் இலக்கியத் துறையில் நடைபெற்ற வெகுசனப் பண்பாடு பற்றிய கருத்தரங்கில், சினிமா பாட்டுப் புத்தகங்கள், திருமண அழைப்பிதழ்கள், நாடக நோட்டீஸ்கள், விளம்பரங்கள், பிற காட்சிப் படிவங்கள் ஆகியவைகளை ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகத்தைப் பயன்படுத்தித் தங்களது கட்டுரைகளை வாசித்தனர். அவர்கள் குறிப்பாகப் பேசிய விஷயங்கள் என்னவென்றால், ரோஜா முத்தையா நூலக நூற்பட்டியல் கணினி மயமாக உள்ளதால் ஒரு நூல் இல்லையென்றால் உடனடியாகத் தெரிந்துகொள்ள முடிகிறது, நூல்கள் இந்நூலகத்தில் இல்லையென்றாலும் வேறு எங்குக் கிடைக்கும் என்கிற தகவல்களை அளிப்பது போன்ற சேவைகளைப் பற்றி எடுத்துரைத்தார்கள். இந்நூலகத்தில் என்ன இல்லை என்றும் அவைகளை விரைவில் தருவித்தால் அவர்களுக்கு அது பயனுள்ளதாக இருக்கும் என்றும் பேசினர்.

இந்த இரு கருத்தரங்குகளும் ஒரு புரிதலைத் தந்தன. அவை நூலகத்தைப் பற்றிக் கொடுக்கப்பட்ட மதிப்பீட்டறிக்கை(status report)யாகப் பார்க்கிறேன். பேராசிரியர் அரசு இந்த இதழுக்கான அவசியத்தையும் இது நல்ல தருணம் என்றும் கூறினார். அது நூலகத்தைப் பற்றிப் பல்வேறு பரிமாணங்களை எடுத்துக் கூறுவதற்கு ஒரு வாய்ப்பாகவே அமைந்துவிட்டது.

தன் வாழ்நாள் முழுவதும் இவ்வாவணங்களைப் பாதுகாக்கும் முயற்சியில் ரோஜா முத்தையா மரணத்தைத் தழுவினார். ரோஜா முத்தையா உயிரோடு இருக்கும்போது அவரைச் சரியாக கவனித்தவர்கள் யாருமில்லை. ரோஜா முத்தையா ஏன் இவற்றைச் சேகரித்தார், அவருக்கு உந்துதல் என்ன என்ற கேள்விகள் அடிக்கடி எழும். நூல் சேகரிப்பாளர்களுக்கான பிரத்யேகமான மனநிலை என்ன என்று தெரிந்துகொள்ள ஆர்வம் ஏற்படும். இவைகளை மனத்தில் கொண்டு ரோஜா முத்தையா அவர்களே பதிவு செய்த தகவல்கள், அவரோடு நெருங்கிப் பழகியவர்கள் அவரைப் பற்றிக் கூறும் கருத்துகள், அவர்கள் எப்படி இந்நூலகத்தை அணுகினார்கள், மேலும் சிகாகோ பல்கலைக் கழகத்தின் இடம், அறிஞர்கள் எவ்வாறு இத்தொகுப்பினைப் பார்க்கிறார்கள், இப்போது நிறுவனமயமாக்கப்பட்டப் பின் எவ்வாறு இயங்குகிறது ஆகிய பல தரவுகளைத் தெரிந்து கொள்வதற்கான ஓர் ஆவணமாக இவ்விதழ் வருகிறது. தமிழ் இலக்கிய வரலாற்றை எழுதுவதற்கான தரவுகளின் தொகுப்பாக இந்நூலகம் அமைந்துள்ளது. ரோஜா முத்தையா தொகுப்பின் முக்கியத்துவம்; இந்நூலகம் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி நூற்களைப் பாதுகாப்பது, அதற்குத் தேவையான பொருளுதவி ஆகியவையும் இவ்விதழில் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

இந்த இதழ் மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு முதலில் ரோஜா முத்தையா அவர்களின் தொகுப்பு, சிகாகோ பல்கலைக்கழகத் தொடர்பு, நிறுவனமான பின் நடந்தேறிய


முக்கியப் பணிகள் ஆகியவை இடம்பெற்றுள்ளன. ரோஜா முத்தையா 1985இல் எழுதிய கட்டுரை சேகரிப்பாளர்களுக்கென உள்ள மனநிறைவையும் அவஸ்தைகளையும் பதிவுசெய்வதோடு அவர் சித்திரிக்கின்ற அந்த வரலாறு ஒரு சமூகத்தின் வரலாற்றை அறிந்துகொள்ள மிகவும் உதவுகிறது. என்னுள் மிகந்த தாக்கத்தை ஏற்படுத்தியது. இரண்டாவதாகப் பல துறை வல்லுநர்கள் இத் தொகுப்பினைத் தங்கள் ஆய்வுக்குப் பயன்படுத்தியதன் மூலம் அவர்கள் கண்டறிந்த ஆவணங்களைப் பற்றிப் பேசுகிறார்கள். அவைகளைப் படிக்கும்போது ஆராய்ச்சி செய்பவர்களுக்குப் பல தரப்பட்ட ஆவணங்களைப் பற்றியும் அவைகளை எவ்வாறு தங்களது ஆராய்ச்சிக்கு உட்படுத்தலாம் என்ற தகவல்களையும் அறியலாம். நூலகத் தொகுப்பின் செழுமையை பிரதிபலிப்பதாகக் கருதலாம். மூன்றாவதாக, நிறுவனத்தின் செயல்பாடுகள் மற்றும் சேவைகளைக் குறித்து பதிவு செய்யப்பட்டுள்ளது. இக்கட்டுரைகள் அனைத்தும் மூன்று மாதங்களில் எழுதப்பட்டவை. பேரா. அரசு என்னிடம் இதுபற்றிக் கூறியவுடன் முதலில் நான் தொடர்பு கொண்டது பேரா. குரோவ் அவர்களைத்தான். சரியான நேரத்தில் எனக்குக் குரோவ் அவர்களைச் சந்திக்க ஆலோசனை வழங்கிய கண்ணன் அவர்களுக்கும் நன்றி. மூத்த ஆராய்ச்சியாளர், சிந்தனை யாளர், ரோஜா முத்தையாவைச் சந்தித்தவர், ஆவணங்களின் அவசியத்தை நன்கு அறிந்தவர் என்ற வகையில் அணுகினேன். அவர் ஒப்புதல் அளித்ததும் இந்த இதழ் வெளிவந்துவிட்டதாகவே கருதினேன். அவருக்கும், இந்த இதழுக்குக் கட்டுரைகளைத் துரிதமாக எழுதிக் கொடுத்த அனைத்து ஆராய்ச்சியாளர்களுக்கும் நண்பர்களுக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு நடக்கும் இந்தத் தருவாயில், இந்நூலகச் சேவைகளைப் பற்றியான புரிதலை எல்லோரும் அறியும் படியாகச் செய்யவேண்டும் என்று ஆலோசனை வழங்கியவரும், ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகச் சிறப்பிதழாகக் கொண்டு வரக் காரணமாக விளங்கிய பேரா. வீ. அரசு அவர்களுக்கு நூலகத் தின் சார்பாக எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். இவ்விதழைச் சிறப்பான முறையில் வெளியிட்ட நண்பர் சிவ. செந்தில்நாதன் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். பேரா. அரசு அவர்கள் அட்டையில் ரோஜா முத்தையாவின் படத்தை மருது அவர்களை வரைந்துகொடுக்க கேட்கலாம் என்று கூறியவுடன், நான் நண்பர் மருதுவிடம் கேட்டேன். மறுப்பு ஏதும் கூறாமல் உற்சாகத்துடன் வரைந்து கொடுத்தார். அது மட்டுமல்லாமல் அவர் இப்படத்தை வரையும் போது இருந்த மகிழ்ச்சியினை என்னிடம் பகிர்ந்துகொண்டார். அவருக்கு அனைவரின் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்விதழ் பலருடைய கேள்விகளுக்குப் பதிலளிப்பதாகவும் மேலும் பல கேள்விகளைக் கேட்கத் தூண்டுவனவாகவும் இருக்கும். ரோஜா முத்தையாவைப் பற்றிய சுயசரிதை, இதுவரை வரலாற்றில் பதிவு செய்யப்படாத நிலையில் இவ்விதழ் அக்குறையைத் தீர்த்துள்ளது. ரோஜா முத்தையாவிற்குப் பிறகு இந்நூலகம் பல்வேறு வளர்ச்சிநிலையை அடைந்துள்ளது. இந்நூலகம் குறித்தான வரலாற்றை எழுதுமாறு நண்பர்கள் பலரும் கூறிவருகின்றனர். இவ்விதழ் அதற்கு முன்னோடியாக அமையும் என நம்புகிறேன்.

க. சுந்தர்

பகுதி

1



ரோஜா முத்தையா வரைபடம்

கோட்டையிலிருந்து சென்னை

- ரோஜா முத்தையா
- ஜேம்ஸ் நை
- க. சுந்தர்
- பிரான்சி குரோவ்
- அம்பை
- சு. தியடோர் பாஸ்கரன்
- தி. ந. இராமச்சந்திரன்
- எஸ். வி. ராஜதுரை
- வ. கீதா
- இரா. பிரகாஷ்

புத்தகங்களைத்தேடி அலைந்தபோது!

■ ரோஜா முத்தையா

எனது சொந்த ஊராகிய கோட்டையூர் என்பது "செட்டி நாடு" என்ற ஒரு தனிப்பட்ட முத்திரையுள்ள ஒரு பகுதியைச் சேர்ந்தது. டாக்டர் அழகப்பா செட்டியார் அவர்கள் பிறந்த ஊர். செட்டி நாட்டில் சுமார் 1800ஆம் ஆண்டு முதல் 1920 வரை கட்டப்பட்டுள்ள வீடுகள் அனைத்துமே ஒவ்வொன்றும் பிரமாண்டமான கலைக் கூடங்கள். சுமார் 150x100 சதுரஅடி அளவுள்ளவை. முற்றிலும் பாலை, வீரை, தேக்கு முதலிய உயர்ரக மரங்களால் கட்டப் பட்டவை. வெண்மையும், வழுவழுப்பும் மிகுந்த சுவற்றுப் பூச்சுகள், பூச்சு வேலைப்பாடுகள் செய்வோரையும் பிரமிக்கச் செய்பவை. நுழைவாயில் முதல், உள்ளே உள்ள ரூம்கள், தூண்கள் முதலிய அத்தனையிலும் சிற்பச் செல்வங்கள், தெய்வ முத்திரைகள், பூ வேலைப்பாடுகள், நாட்டிய வகைகள், இன்னும் எவ்வளவோ மர வேலைப்பாடுகள் நிறைந்தவை, வீட்டிற்குள் சென்ற யாரும் ஒரு மாய உலகிற்குள் நுழைந்துவிட்ட ஒரு உணர்விலிருந்து விடுபட முடியாது. தேர்ச்சி பெற்ற சின்னஞ்சிறிய சிற்றுளிகள் செட்டி நாட்டை ஒரு தெய்வீக சௌந்தர்ய சிற்பச் செல்வங்கள் நிறைந்த நகரமாக ஆக்கியிருப்பதைக் கண்ட ஆங்கிலேயர்களும் அமெரிக் கர்களும் பக்கம் பக்கமாக எழுதிக் குவித்திருக்கிறார்கள்.

இக்கட்டுரை 'ஓம்சக்தி' இதழில், 1985 நவ & டிசம்பர் மாதங்களில் வெளிவந்தது.

துரதிர்ஷ்டவசமாக இரண்டாவது உலக மகாயுத்தம் காரண மாக செட்டியார் சமூகத்தின் திடீர் பொருளாதார வீழ்ச்சியால் இப்படிப்பட்ட அருமையான வீடுகள், சில பணத்தேவை காரணமாக 'டெமாலிஷ்' செய்யப்பட்டன. கலைப்பொருள் சேகரிப்போர் மியூசியங்கள் இவர்களின் பேராவல்களைப் பூர்த்தி செய்யும் பொருட்டு இடம்பெயர்ந்துவிட்டன. மிஞ்சியுள்ள ஒரு சில பழமையான வீடுகளுள் என் வீடும் ஒன்று.

சென்னையை விட்டுச் சொந்த ஊர் வந்ததும் இங்கிருந்து கொண்டு டாக்டர் அழகப்பா செட்டியார் காலேஜ், காரைக்குடி முதலிய இடங்களில் 'சைன்போர்டு' பெயிண்டராகப் பணியாற்றி னேன். இந்தச் சமயங்களில் நான் சேகரித்த புத்தகங்கள் மட்டும்

சுமார் 5000 இருக்கும். இந்தக் காலம் போல அல்ல, 1852-60. புத்தகங்கள் மிகமிக மலிவாகக் கிடைக்கக் கூடிய காலம். வாங்கு வதற்கு அதிக ஆட்கள் இல்லாத காலம். ஒரு கிலோ எடையுள்ள பழமையான புத்தகங்களை 5 ரூபாய்க்கோ, சுமார் 100 பழைய புத்தகங்கள் அடங்கிய ஒரு 'பண்டி'லை 20 ரூபாய்க்கோ வாங்கி விடுவது சுலபமே.

"இன்று நரி முகத்தில்தான் விழித்திருக்கிறோம்; சரியான இளிச்சவாயன்; தலையில் கட்ட சரியான ஆள் அகப்பட்டான்" என்றெல்லாம் நினைத்துக்கொண்டு என்னிடம் புத்தகங்களை விற்கும் வியாபாரிகள் அநேகம் பேர்கள். குண்டூசி முதல் கோட்டைக் கொத்தளங்கள் வரை வாங்கி விற்கக்கூடிய தெரு வியாபாரிகள் இவர்கள். பழைய புத்தகக் கடைகளும் கிட்டத்தட்ட இப்படிதான். டாக்டர் சாமிநாத அய்யர் அவர்கள் பதிப்பித்த ஒரு சீவகசிந்தாமணி முதல் பதிப்பை (1887) 5 ரூபாய்க்கும், லண்டனி லிருந்து வெளிவந்த 1867ல் 'தி புல்டர்' என்ற சஞ்சிகை ஒரு வருஷ வால்யூமை 20 ரூபாய்க்கும், கொக்கோகம் வரைபடங்களுடன் கூடிய ஒரு பழைய பதிப்பை 50 ரூபாய்க்கும் வாங்குவது சாத்திய மாகவே இருந்தது. புத்தகங்கள் சேகரித்த விஷயத்தில் எனக்குப் பலவிதமான அனுபவங்கள், அவஸ்தைகள், சந்தோஷங்கள் எல்லாம் உண்டு.

ஒரு நாள் இரவு மைலாப்பூர் லஸ் கார்னரில் இருந்த நடைபாதை புத்தகக்கடையில் கையிலிருந்த 30 ரூபாய்க்கும் புத்தகம் வாங்கி விட்டேன். புத்தகக்கட்டுடன் நான் வழக்கமாகத் தங்கும் இடத்திற்குப் போய்ச் சேரும்போது மணி பத்து. அன்று இரவு பெரு மழை வேறு. தூங்குபவர்களை எழுப்ப மனமின்றி தாகத்தைத் தீர்த்துக்கொள்ள அந்த மழைத் தண்ணீரை நாலு டம்ளர் குடித்தேன். மறுநாள் காலை ஆறு மணிக்கே ஜன்னி கண்டு விட்டது. ஒரு வாரம் மரணப் படுக்கை. மயிலாப்பூர் மேற்கு மாட வீதியில் டிஸ்பென்சரி வைத்திருந்த டாக்டர் அவதானி என்பவரின் உதவியினால் பிழைத்தேன். நூறு ரூபாய்ச் சிலவு. புதுக்கோட்டை யில் ஒரு பழைய புத்தக வியாபாரியிடம் புத்தகங்கள் இருப்பதாகவும் அவைகளை அவர் அப்படியே விற்க விரும்புவதாகவும் கேள்விப் பட்டு நானும் என் மனைவியும் அங்கு சென்றோம். கிழக்கு 4ஆம் வீதியில் நான்கே அடி அகலமும் 30 அடி நீளமும் உள்ள ஒரு சிறிய வீடு. வெளிப்பக்கம் மூன்றுபேர் பேசிக்கொண்டிருந்தனர். வயதான அம்மாள் சொன்னார்: "இன்றோ நாளையோ நிச்சயம் அமாவாசை தாண்டாது. "வீட்டிற்குள் நுழைந்ததுமே ஒரு சகிக்க முடியாத நெடி. கெட்ட நாற்றம். பாதை பூராவும் அசிங்கம். தொடர்ந்து வந்தது குமட்டு இருமல் சத்தம். எப்படியோ உள்ளே போய்விட்டேன். எனது மனைவி நெடி தாங்கமல் நாலு வீடு தள்ளி ஒதுங்கிவிட்டாள்.

"இன்று நரி முகத்தில்தான் விழித்திருக்கிறோம்; சரியான இளிச்சவாயன்; தலையில் கட்ட சரியான ஆள் அகப்பட்டான்" என்றெல்லாம் நினைத்துக்கொண்டு என்னிடம் புத்தகங்களை விற்கும் வியாபாரிகள் அநேகம் பேர்கள். குண்டூசி முதல் கோட்டைக் கொத்தளங்கள் வரை வாங்கி விற்கக்கூடிய தெரு வியாபாரிகள் இவர்கள்.

புத்தகங்களை விற்க விரும்பியவர் 60 வயது நிறைந்த காச நோயாளி. பேசக் கூடச் சக்தியில்லை. அவரைச் சுற்றிலும் புத்தகங்கள். பல புத்தகங்கள் நைந்தும், கிழிபட்டும், நனைந்தும், எலிகளால் கடிக்கப்பட்டும் கிடந்தன. சுமார் நூறு புத்தகங்கள் மட்டும் ஒரு ஹார்லிக்ஸ் அட்டைப் பெட்டியில் அடுக்காக இருந்தன. எல்லா மாக மொத்தம் இருநூறு புத்தகங்கள் இருக்கலாம். அதில் 70-80 வருடங்களுக்கு முன்பு பதிப்பிக்கப்பட்டவை. சுமார் 50-60 தேறும்.

அவரது மனைவிதான் விலை சொன்னார். ரூ. 750ல் ஆரம்பித்த பேரம் ரூ.600ல் முடிந்தது. எல்லாம் ஓரிரு நிமிடங்களில்! புத்தக

உரிமையாளர் இடையிடையே இருமலுடன் சொன்னார்: "நிற்கிறீர்களே உட்காருங்கோ" (மனைவியைப் பார்த்து) என்னடி பேசாம நிற்கிறே? ஒரு காபி வாங்கிண்டு வாடி." பழைய புத்தகம் வாங்கப்போனால் அத்தனை மரியாதை, அந்த நாளில்! எனக்கு ரவிவர்மா பழைய அச்சுப் படங்கள் கிடைத்த விதம் இது:

ஏழு எட்டு வருடங்களுக்கு முன்பு தேவகோட்டை என்ற ஊரில் ஒரு வைத்தியர் வீட்டில் மருத்துவ நூல்கள் இருப்பதாகச் சொல்லி ஒரு புரோக்கர் என்னை அங்கு கூட்டிச் சென்றார். வைத்திய ருடைய மனைவியார் சிறுது பெரிதான சுமார் 100 புத்தகங்களை என் முன்பு கொண்டு வந்து வைத்துவிட்டு "இதெல்லாம் ரொம்ப நல்ல புத்தகங்கள்; அவர் இருந்தால் தரவே மாட்டார்; நல்ல விலை தருவீர்கள் என்று புரோக்கர் சொன்னதால்தான் சரி என்றேன்'' என்றார்.

சுமார் 20 புத்தகங்கள் இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் வெளியானவை. மற்றவை 1910 முதல் 1930 வரை வெளிவந்தவை. போகர் 7000, அகஸ்தியர் எழுதிய சில நல்ல நூல்களும் இருந்தன. "விலை என்ன?'' என்று கேட்டேன். "பார்த்து நல்லபடியாகக் கொடுங்கள்'' என்றார் புரோக்கர். இரண்டு நூறு ரூபாய் நோட்டுக்களைக் கொடுத்தேன். வாங்கிக் கொண்ட வைத்தியரின் மனைவி அதை திருப்பித் திருப்பிப் பார்த்தார் கலவரத்துடன்.

"நூறு ரூபாய் நோட்டுதான்'' என்று தெளிவுபடுத்தினார் புரோக்கர். அடுத்து எனக்கு ஏகப்பட்ட உபசாரம். காப்பியைக் குடித்துக் கொண்டிருந்த போது எனது பார்வை அங்கு இருந்த ஒரு ஸ்கிரீனின் மத்தியில் சுமார் ஒரு சதுர அடி அளவு துணி கிழிந்த ஓட்டையாக இருந்த இடத்தில் ஒரு பெரிய படத்தை வைத்து 4 பக்கம் குண்டூசியினால் குத்தப்பட்டிருந்ததைப் பார்த்தேன். பம்பாயில் அச்சிடப்பட்ட ரவிவர்மா ஓவியம்.

புரோக்கர் அந்த அம்மாவிடம் போய் ஏதோ சொன்னார். உடனே அந்த அம்மாள் உள் வீட்டிற்குச் சென்று ஒரு பெரிய ரோலை தூக்கி வந்து என் முன்புவைத்தார். பூராவும் சுமார் 60, 70 வகையான ரவிவர்மா பழைய அச்சுப் படங்கள். எல்லாம் பெரிய அளவிலானவை. படங்கள் இத்துப் போயும் கார்னர்கள் ஒடிந்தும், மடித்தால் ஒடியக் கூடியதாகவும் இருந்தது. எப்படிப் பார்த்தாலும் உருப்படியாக 50 தேறும். நூறு ரூபாய் நோட்டு ஒன்றை எடுத்துக் கொடுத்துவிட்டு, "ஏதம்மா?'' இவ்வளவு படங்களும்? என்றேன்.

சுமார் 50 வருடங்களுக்கு முன்பு தன்னுடைய தாத்தா இங்கு பஸ் ஸ்டாண்டு அருகே ஒரு கண்ணாடி படக்கடை வைத்திருந் ததாகவும் அவருக்குப்பின் அதை நடத்த யாரும் இல்லாததால் தன் வீட்டுக்காரர் அந்தச் சாமான்களை இங்கு கொண்டு வந்து போட்டார் என்றும், இதே போல மேலும் 200 படங்களுக்கு மேல் இருந்ததாகவும், அவற்றையெல்லாம் தனது மகன் ஒவ்வொன்றாக பட்டம் விட்டுவிட்டான் என்றும் கூறினார்.

அந்த அம்மாள் உள் வீட்டிற்குச் சென்று ஒரு பெரிய ரோலை தூக்கி வந்து என் முன்புவைத்தார். பூராவும் சுமார் 60, 70 வகையான ரவிவர்மா பழைய அச்சுப் படங்கள். எல்லாம் பெரிய அளவிலானவை. படங்கள் இத்துப் போயும் கார்னர்கள் ஒடிந்தும், மடித்தால் ஒடியக் கூடியதாகவும் இருந்தது. எப்படிப் பார்த்தாலும் உருப்படியாக 50 தேறும்.

"இதை நீங்கள் வாங்குவீர்கள் என்று தெரிந்திருந்தால் அந்தப் பயலை ஒரு படத்தைக்கூடத் தொடவிட்டிருக்க மாட்டேன்'' என்று சொன்னார். வெளியே வந்ததும் புரோக்கரிடம் "பாவம் . . . அந்த அம்மாள் ரொம்ப நல்ல மாதிரியாக இருக்கிறார்கள், அந்தச் சின்னப் பையன்களிடம் ஆளுக்குப் பத்து ரூபாய் கொடுங்கள்'' என்று சொல்லி முப்பது ரூபாயைக் கொடுத்தேன். "அட நீங்க வேறு,

இடம் காலியானதைப் பற்றி அந்த அம்மாள் இப்போ எவ்வளவு சந்தோஷமாக இருப்பாங்க தெரியுமா?" என்று சொல்லிவிட்டு ரூபாயைத் தனது பைக்குள் வைத்துக் கொண்டார், அவர்.

வைஷ்ணவர்களுக்குத் திருப்பதி எப்படி ஒரு புண்ணிய ஸ்தலமோ, சைவர்களுக்குக் காசி எப்படி ஒரு புண்ணிய க்ஷேத்திரமோ அதே போல என் புத்தகச் சேகரிப்பாளர்களுக்குச் சென்னை மூர்மார்க்கெட் ஒரு புண்ணியஸ்தலம். எத்தனை தடவை இந்த ஸ்தலத்துக்கு யாத்திரை போய்வந்தா லும் அலுப்போ, சலிப்போ தோன்றுவதில்லை. எவ்வளவு பணத்தை இழந்து விட்டு வந்தாலும் வருத்தம் தோன்றுவதில்லை: கையில் கொள்ளை கொள்ளையாகப் புத்தகங்களைக் குவித்துவிடக் கூடிய காலமாக இருந்தது முன்பு.

தபால்தலைகள் சேகரிப்பதும் எங்கள் ஏரியாவில் மிகவும் சாத்தியமான காரியம். அநேக வீடுகளில் மூட்டை மூட்டையாக இருக்கும். செட்டியார் சமூகத்தைச் சேர்ந்தவர்களிடம் ஒரு பழக்கம் உண்டு. எதையும் உடனே கிழித்தோ தூக்கியோ எறிந்துவிட மாட்டார்கள். "சிறு துரும்பும் பல்குத்த உதவும்" என்று பாதுகாத்து வைப்பார்கள்.

அவர்கள் பர்மா, மலாயா, சிலோன், இந்தோ சைனா முதலான நாடுகளில் பெரிய அளவில் கொடுக்கல் வாங்கல் முதலான வியா பாரங்கள் செய்து வந்தனர். இதனால் கடிதப் போக்குவரத்தும் அதிகமாக இருந்தது. நாளைக்கு வம்பு வழக்கு வந்தால் வேண்டுமே என்ற காரணத்தால் கடிதங்களைக் கவர்களுடனே பாதுகாப்பாகச் சேமித்து வைத்திருந்தனர். இந்தச் சேமிப்பை நாடித்தான் இன்று பல வெளிநாட்டினர் இந்த ஏரியாவுக்கு வருகின்றனர். அவர்கள் எதிர்பாராத அளவு இங்கு அபூர்வமான 'மெட்டீரியல்சும்' கிடைக்கிறது!

வைஷ்ணவர் களுக்குத் திருப்பதி எப்படி ஒரு புண்ணிய ஸ்தலமோ, சைவர்களுக்குக் காசி எப்படி ஒரு புண்ணிய க்ஷேத்திரமோ அதே போல என் புத்தகச் சேகரிப்பாளர்களுக்குச் சென்னை மூர்மார்க்கெட் ஒரு புண்ணியஸ்தலம். எத்தனை தடவை இந்த ஸ்தலத்துக்கு யாத்திரை போய்வந்தாலும் அலுப்போ, சலிப்போ தோன்றுவதில்லை. எவ்வளவு பணத்தை இழந்து விட்டு வந்தாலும் வருத்தம் தோன்றுவதில்லை.

1960- 70லும் ஆங்கிலேயர்களும் அமெரிக்கர்களும் லெட்டர் களை பைல் செய்து கொண்டு கவர்களை (ஸ்டாம்புகளை எடுத்துக் கொண்டோ அல்லது எடுக்காமலோ) குப்பைக் கூடையில் கிழித்துப் போட்டுக் கொண்டிருந்தபோது இப்பகுதியில் செட்டியார்கள் கவர்களை (அறிந்தோ அறியாமலோ "எதற்கும் ஆகும்" என்ற நினைவுடன்) டிரங்குப் பெட்டியிலோ மரப்பெட்டி யிலோ கவனமாக அடுக்கிவைத்துக் கொண்டிருந்தனர். செட்டி நாட்டில் அநேக வீடுகளில் இப்படிப்பட்ட கடித செல்வங்கள் உண்டு. ஆனால் எல்லோர் வீடுகளிலிருந்தும் கிடைப்பதில்லை. அவைகளின் மதிப்பை அறியாமல் அழித்துவிடுகின்றனர்.

கணக்கு வழக்குகள் வேறுயாருக்கும் தெரியவேண்டாம் என நினைத்தும், மூட்டை மூட்டையாக இடத்தை அடைத்துக் கொண்டிருக்கிறதே என நினைத்தும், நெல் அவிக்கும்போது அவற்றை விறகுக்குப் பதிலாக நெருப்பில் போட்டு எரித்து விடுகின்றனர். அல்லது ஒரு பொட்டலில் போட்டு நெருப்பை வைத்துக் கொளுத்திவிடுகின்றனர். கோடிக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள கவர்கள் இப்படி அழிந்துவிட்டன.

பணவசதி படைத்தவர்களிடமிருந்து இந்தக் கவர்மூட்டைகளை வாங்குவது மிகவும் கடினம். நடுத்தரமானவர்களிடமிருந்து பணத்தேவை உள்ளவர்களிடமிருந்து மட்டுமே இவற்றை விலை கொடுத்து வாங்க முடியும். சமீபத்தில் எனக்குத் தெரிய இரண்டு

சம்பவங்கள் நடந்தன. ஒன்று தேவகோட்டை என்ற ஊரில் நடந்தது. 1860 முதல் 1940 வரையிலான மலாயா ஸ்டாம்புகள் ஒட்டப்பட்ட கவர்கள் அடங்கிய சுமார் 10 மூட்டைகள் ஒரு இடத்தில் வைத்து நெருப்பை வைத்துக் கொளுத்தி அழித்தனர். கடைசி நிலையில் அதில் சுமார் 200-300 கவர்கள் என்னிடம் வந்து சேர்ந்தன. அவ்வளவும் அபூர்வமான கவர்கள். அதாவது பிரிட்டன் ஸ்டாம்புகள்; மலாயாவில் உபயோகிக்கப்பட்டு இந்தியாவுக்கு வந்து சேர்ந்தவை. "Great Britain used in Malaya" என்ற வகையைச் சேர்ந்தவை, தபால் தலைகளைச் சேகரிப்பவர்களுக்கு இப்படிப் பட்ட கவர்கள் ஒரு அபூர்வ சரக்கு. அந்தப் பத்து மூட்டைகளிலும் என்னென்ன அபூர்வமான கவர்கள் இருந்தனவோ?

இன்னொரு சம்பவம்: இந்தக் கோட்டையூரிலேயே ஆறு மாதங்களுக்கு முன்பு நடந்தது. ஒரு லட்சாதிபதி வீட்டில் இப்படிப்பட்ட கவர்கள் 100 மூட்டைகள் இருந்தன. வீட்டிலிருந்த அடைசல்களை ஒழிக்கும் காரணமாக அவற்றை நெருப்பு வைத்து அழித்துவிட முடிவு செய்தனர். உடனே அவருக்குச் சொந்தமான பஸ்ஸைக் கொண்டு வந்து இரண்டு பஸ் நிறைய அவற்றை அள்ளிப் போட்டு அவர்களுடைய ஸ்கூலிலேயே ஒரு வெற்று இடத்தில் 4- 4 மூட்டையாகப் போட்டு அவ்வளவையும் நெருப்பு வைத்துக் கொளுத்திவிட்டனர். இந்த அழிந்த மூட்டைகளின் மதிப்பு அந்த லட்சாதிபதியின் சொத்தைவிட அதிகமானது. அந்த லட்சாதிபதிக்கு மலாயா, பர்மா முதலிய 15 ஊர்களில் கொடுக்கல் வாங்கல் வியாபாரம். அழிந்த அத்தனை லட்சக்கணக்கான கவர்களும் (1840-1940) மொத்தம் 100 வருட சரித்திரங்களைக் கூறுபவை.

இந்த லட்சாதிபதி வீட்டிலிருந்து கவர் மூட்டைகள் அழியப் போகிறது என்று துப்பு தெரிந்த ஒரு பழைய சாமான் வியாபாரி இதை வாங்க ரொம்பவும் முயற்சி செய்தார். ரூ.3000 வரை தருவதாகச் சொல்லியும் லட்சாதிபதியும் கணக்குப்பிள்ளைகளும் சம்மதிக்கவில்லை. பெரிய பஸ் இரண்டும் ஸ்கூலை நோக்கி 'ஸ்டார்ட்' ஆகிவிட்டது. நம்பிக்கை இழக்காத வியாபாரி பஸ்ஸைப் பின் தொடர்ந்தார். வியாபாரி ஸ்கூல் போய்ச் சேரும்போது அநேக மூட்டைகள் நெருப்பில் அழிந்து கொண்டி ருந்தன. வியாபாரிக்கு ஏதோ ஒரு சபலம். கடைசி மூட்டையை நெருப்பில் தூக்கிப்போட்டுக் கொண்டிருந்த வேலையாளிடம் ஒரு பத்து ரூபாய் நோட்டை நீட்டினார். உடனே வேலையாள் ஒரு பெரிய கம்பை எடுத்து வெந்து கொண்டிருந்த ஒரு மூட்டையை ஒரு பக்கமாக ஒதுக்கித் தள்ளினார். வெந்ததுவும் வேகாததுமாக 100 கவர்களும் 2000 உண்டியல்களும் சில ரெக்கார்டுகளும் கிடைத்தன. வியாபாரி மூலம் அவைகள் அனைத்தும் என்னிடம் வந்துசேர்ந்தன. கிடைத்த கவர்களில் பெரும்பகுதி அபூர்வமானவை. (Rangoon to akyab cover with akyab due mark 1880).

கிடைத்த ரெக்கார்டுகளிலும் சில அபூர்வமானவை. நூறு வருடங்களுக்கு முன்பு கல்கத்தாவில் செட்டியார்கள் செய்த வியாபாரங்கள் பற்றிய ஒரு அரிய உண்மையை இதுவரை வெளிவராத உண்மையைத் தெரிவிக்கக்கூடியவை. அதாவது நூறு வருடங்களுக்கு முன்பு செட்டியார்கள் பணத்தை அதிக வட்டிக்குக் கொடுத்துச் சம்பாதிக்கவில்லை. அதிக வட்டிக்கு வாங்கியே சம்பாதித்திருக்கிறார்கள் என்ற உண்மையே அது. அத்துடன் ஒரு செட்டியாரின் ஏஜென்ட் என்ற ஒரு காரியஸ்தர்

வியாபாரிக்கு ஏதோ ஒரு சபலம். கடைசி மூட்டையை நெருப்பில் தூக்கிப்போட்டுக் கொண்டிருந்த வேலையாளிடம் ஒரு பத்து ரூபாய் நோட்டை நீட்டினார். உடனே வேலையாள் ஒரு பெரிய கம்பை எடுத்து வெந்து கொண்டிருந்த ஒரு மூட்டையை ஒரு பக்கமாக ஒதுக்கித் தள்ளினார். வெந்ததுவும் வேகாததுமாக 100 கவர்களும் 2000 உண்டியல்களும் (Hundies) சில ரெக்கார்டுகளும் கிடைத்தன. வியாபாரி மூலம் அவைகள் அனைத்தும் என்னிடம் வந்துசேர்ந்தன.

ஒரு சேட்டினிடமோ ஒரு மார்வாடியிடமோ பத்து லட்ச ரூபாய்கள்கூட ஒரு நிமிடத்தில் ஒரே கையெழுத்தில் வாங்கக்கூடிய அளவுக்குச் செட்டியார்கள் நம்பிக்கைக்கு உரியவர்களாக இருந்தனர் என்பது தெரிந்தது.

காரண காரியம் ஒரு எண்ணம்அல்லது ஒரு பயம். இவற்றின் மதிப்புத் தெரியாத ஒரு அறியாமை. இவை எல்லாமாகச் சேர்ந்து இப்படி எவ்வளவோ செல்வங்களையும், சரித்திரங்களையும் அழித்துவிட்டன. இருந்தபோதிலும் வேறு இடங்களில் மிச்ச மீதமிருந்த சில லட்சக்கணக்கான கவர்கள் காப்பாற்றப்பட்டு விட்டன. இதற்கு முற்றிலும் நானே காரணம் என்பது எனக்கு மகிழ்ச்சிதான். வெளிநாட்டினர் மலாயா, பர்மா, இந்தோசைனா முதலிய கவர்களில் மிக மிக ஆவலுள்ளவர்களாக இருக்கிறார்கள் என்பதை முன்பே குறிப்பிட்டுள்ளேன். உதாரணம்: எனக்கு பிரௌட் பெய்லி கோ லிட்டிலிருந்து வந்த கடிதம்.

"அன்புள்ள திரு முத்தையா, நான் மலேயா, பர்மாவிலுள்ள செட்டியார்களுக்கு எழுதப்பட்ட கடிதங்களைச் சேகரிக்கும் பணியில் ஈடுபட்டு அவை கிடைக்கும் மூலாதார இடத்தைத் தேடிக்கொண்டிருக்கிறேன். கல்கத்தாவிலும் தென்இந்தியாவிலும் உள்ள சில வியாபாரிகளிடமிருந்து வாங்கிக் கொண்டிருக்கிறேன். அவர்கள் உங்களிடம் இதுபோல் நிறைய இருப்பதாகச் சொன்னார்கள். இது சரிதானா?"

இப்படிப் பல வெளிநாட்டினர் என்னை நாடினர். அவர்களில் மலாயாவில் ஒரு பெரிய பிலெட்டிலிக் கம்பெனி வைத்துள்ளவரும் ஒருவர். அவருக்கு என்னிடம் இருந்த மலாயா கவர்களை வியாபாரம் செய்துகொண்டிருந்தேன். அங்கே இருந்த அவருடைய கஸ்டமர் ஒருவர், 'அநேக அரிய கவர்கள் செட்டி நாடு என்ற ஒரு பகுதியிலிருந்துதான் வந்துகொண்டிருக்கிறது', என்பது தெரிந்ததும் அவரே அடுத்த ஓரிரு மாதங்களில் செட்டிநாடு வந்து சேர்ந்தார்.

வந்ததும் பத்திரிகைகளில் விளம்பரம் செய்தார். இந்த விளம்பரத்தின் மூலம் நல்ல பலன் கிடைத்தது. அடுத்தடுத்த வந்து விளம்பரம் செய்தார். மேலும் மேலும் பயன் ஏற்பட்டது. ஒரு இரண்டு வருட இடைவெளிக்குள் மிச்சமீதமிருந்த லட்சக்கணக் கான கவர்களும் அவரது கைக்கு வந்து சேர்ந்துவிட்டன. இதன் மூலமும் பல அரிய கவர்கள் Postal Histories காப்பாற்றப்பட்டி ருக்கின்றன.

இப்படி நான் பதினாறாயிரக்கணக்கான புத்தகங்கள், சஞ்சிகைகள், லட்சக்கணக்கான கட்டிங்ஸ்கள், ஆரம்ப காலம் முதல் வெளிவந்த நாடக நோட்டீஸ்கள், கல்யாண அழைப்பிதழ்கள், சினிமாப் பாட்டுப் புத்தகங்கள், ஓவியங்கள், அச்சுப் படங்கள், பழைய கடிதங்கள், பழைய டாக்குமென்ட்ஸ் முதலிய ரெக்கார்டுகள், சிற்ப வேலைப்பாடுகள் மிகுந்த மரப் பொம்மைகள், தீமெட்டிக்ஸ் ரக வாரியாகப் பிரிக்கப்பட்டுள்ள பதினாறாயிரக் கணக்கான தபால் தலைகள், 1850லிருந்து வெளிவந்த Sale Deed Stamp Papers, Hundies வண்ண வண்ண கலைப்பொருள்கள் இவை அனைத்தும் சேர்த்தேன்.

புத்தகங்களோ, சஞ்சிகைகளோ நல்ல விலை கொடுத்து வாங்குவோர் அல்லாத காலத்தில் நான் ஒருவன்தான் எங்கள்

ஏரியாவில் கிடைத்த அனைத்தையும் அவர்கள் குப்பைகள் என நினைத்த டிராமா நோட்டீஸ் உள்பட அனைத்தையும் வாங்கினேன். ஐந்து லட்ச ரூபாய்க்கான புராதன புரோநோட் ஒன்று 'குப்பையில்' கிடைத்தது.

நான் புத்தகங்களை வாங்கி இராவிட்டால் எவ்வளவோ ஆயிரக்கணக்கான புத்தகங்கள் (பல அரிய புத்தகங்கள் உட்பட) பலகாரக்கடைகளில் பலகாரம் மடித்துக் கொடுப்பதற்காகவே கிழிக்கப்பட்டிருக்கும். அநேக அரிய புத்தகங்களை இந்தப் பட்சணக் கடைகளில், பதிலுக்கு நியூஸ் பேப்பர்களைக் கொடுத்துவாங்கினேன்.

சுமார் 5000 புத்தகங்கள் அளவில் வைத்துக்கொண்டு அதை நிர்வகிப்பது, ஒழுங்குபடுத்துவது, உபயோகிப்பது, நினைவில் வைத்துக் கொள்வது, எல்லாம் மிகச் சுலபம்தான். ஆனால் பதினாயிரக்கணக்கில் சேர்த்துவிட்டால் என்ன செய்வது? எப்படிப் பாது காப்பது? இந்தக் கேள்விகளுக்கு நான் கண்ட விடைகள் மூலம்தான் சமுதாயத்தில் என்னையும் உபயோகமுள்ள பணியாளனாகக் கடவுள் பயன்படுத்திக்கொண்டு இருக்கிறார் என்பதை உணர முடிகிறது.

சேகரித்த புத்தகங்களைப் பாதுகாக்க இடவசதி, ஷெல்ப் வசதிகள் முதயலின அதிகம் வேண்டும். 1972இல் சுமார் 4000 அடியில் புதிதாக ஒரு பங்களா கட்டிக்கொண்டேன். எனது கலெக்சனுக்கு இந்த வீடும் போதவில்லை. இந்த நிலையில் நான் வேறு சில வீடுகளை வாடகைக்குப் பிடித்து அதில் புத்தகங்களைப் பாதுகாத் தேன். இருந்தது பல நல்ல நூல்கள் கரையான்களாலும், எலிகளாலும், மழையாலும் சேதமாகிவிட்டன. இது ஒரு மகத்தான நஷ்டம்.

புத்தகப் பாதுகாப்பில் பல பிரச்சனைகள். புத்தகத்தை ஒன்றின் மேல் ஒன்று அடுக்கி வைத்தால் அடுத்த சில மாதங்களிலேயே எல்லாப் புத்தகங்களும் ராமாயணப் பூச்சிகளால் பஞ்சர் ஆக்கப்பட்டு விடும். இப்படி பஞ்சர் ஏற்படாமல் இருப்பதற்காக நான் "காமாக்சீன்" என்ற பூச்சிக்கொல்லி மருந்தை (வெண்மை நிறமுள்ள பவுடர்) புத்தகங்களின் இரண்டு பக்க உட்புற அட்டைகளிலும் தூவி வைப்பது வழக்கம்! இதன் நெடி மிகவும் கேடு பயக்கத்தக்கது; நாளடைவில் உடலையே உருக் குலைத்துவிடும் தன்மை வாய்ந்தது. இப்படித்தான் என் உடல் கெட்டுவிட்டது. தூசி, இருட்டு இவைகளெல்லாம் புத்தகங்களின் பகைவர்கள், அதே சமயம் இந்தப் பகைவர்களே புத்தகப் பூச்சிகளின் நண்பர்கள். புத்தகங்களைப் பாதுகாக்க முற்படும்போது அவைகளை வெளிச்சமான காற்றோட்டமான இடங்களில் ஷெல்புகளில் புத்தகங்களின் முதுகு தெரியும்படியாக ஒன்றின்மேல் ஒன்று கனம் ஏறிச் சாயாமல் நேராக அடுக்கி வைக்க வேண்டும். தூசி அடையாமல் அடிக்கடி எடுத்துச் சுத்தம் செய்ய வேண்டும். பழைய பேப்பர் கட்டிங்ஸ், டாக்குமென்ட்ஸ், டிராமா, சினிமா நோட்டீஸ், பழைய அச்சுப்படங்கள் ஆகியவற்றைக் காப்பாற்றுவது இதைவிட பெரியபிரச்சனை. இத்துப்போன பேப்பர்கள் காற்றுப்பட்டால் கூட கிழிந்துவிடும். ஒவ்வொரு பேப்பருக்கும் அடியில் கார்டு போர்டை வைத்து 'சலபன்' கவர் செய்ய வேண்டும். இப்படிச்

புத்தகத்தை ஒன்றின் மேல் ஒன்று அடுக்கி வைத்தால் அடுத்த சில மாதங்களிலேயே எல்லாப் புத்தகங்களும் ராமாயணப் பூச்சிகளால் பஞ்சர் ஆக்கப்பட்டு விடும். இப்படி பஞ்சர் ஏற்படாமல் இருப்பதற்காக நான் "காமாக்சீன்" என்ற பூச்சிக்கொல்லி மருந்தை புத்தகங்களின் இரண்டு பக்க உட்புற அட்டைகளிலும் தூவி வைப்பது வழக்கம்! இதன் நெடி மிகவும் கேடு பயக்கத்தக்கது; நாளடைவில் உடலையே உருக் குலைத்துவிடும் தன்மை வாய்ந்தது. இப்படித்தான் என் உடல் கெட்டுவிட்டது.

செய்தால் மட்டுமே இவற்றைக் காப்பாற்ற முடியும். ஒவ்வொரு பேப்பரையும் காப்பாற்ற சராசரி 35 பைசா ஆகும். என்னிடம் உள்ள பதினாயிரக்கணக்கான கட்டிங்ஸ்களும், நோட்டீஸ்களும் இந்த முறையில்தான் காப்பாற்றப்பட்டு ஒழுங்கான முறையில் வைக்கப்பட்டுள்ளன.

1954 மே மாதம் ஒருநாள் சமீபத்தில் ஒரு சஞ்சிகையில் படித்த ஒரு விஷயத்தை மறுபடி நினைவுக்குக் கொண்டுவர முயன்று கொண்டிருந்தேன். நினைவுக்கு வரவில்லை. அப்போதுதான் எனக்கு 'இவ்வளவு சிரமப்படுவானேன் நாம் படித்த விஷயங்களுக் கெல்லாம் ஒரு அட்டவணை வைத்துக்கொண்டால் என்ன?' என்ற எண்ணம் தோன்றியது. உடனே ஒரு பெரிய லெட்ஜரை எடுத்துக்கொண்டு வேலையைத் தொடங்கிவிட்டேன். அன்று ஆரம்பித்த அந்த வேலைதான் இன்று பெரிய அளவில் வால்யூம் வால்யூமாக வளர்ந்துவிட்டது. என் நேரத்தில் பெரும் பகுதியை இந்த வேலை ஆக்ரமித்துக் கொண்டுவிட்டது. ஆனால் இந்த வேலை எனக்குப் பரிபூர்ணமான மன நிறைவையும் திருப்தியையும் அளித்தது!

நான் 1960-61இல் திருமணம் செய்துகொண்டேன். அப்போது எனக்கு வயது 34. வருமானத்தில் ஒரு பகுதி வீட்டுச் செலவுக்கும் ஒரு சிறு பகுதி புத்தகச் செலவுக்குமாக ஆகிக்கொண்டிருந்தது. புத்தக செலவு விஷயமாகவே அவளுக்கும் எனக்கும் அடிக்கடி சச்சரவு ஏற்படும். பொய்யைத் துணையாகக் கொண்டு சமாளிப்பேன். சமாளித்துக் கொண்டே இருந்தேன். இருந்தாலும் அவளது முணு முணுப்பு எனக்கு எப்போதுமே ஒரு பிரச்சனை யாகத்தான் இருந்தது: 1968-69இல் சில அரிய புத்தக விற்பனையின் மூலம் எனக்கு ஒரு துகை கிடைக்கும்வரை! இன்று எனது அழகான வீடு பூராவும் புத்தக மயம், படிக்கக்கூட வசதியான ஒரு இடமோ தனி அறையோ இல்லாத அளவுக்குப் பத்திரிகை களும் புத்தகங்களும் அடைத்துக்கொண்டிருக்கின்றன. வீடு பூராவும் தூசி மயம். இந்த நிலையில் அவளுடைய சகிப்புத்தன்மை ஒரு தியாகம்தான் சந்தேகமில்லை.

'இவ்வளவு சிரமப்படுவானேன் நாம் படித்த விஷயங்களுக் கெல்லாம் ஒரு அட்டவணை வைத்துக்கொண்டால் என்ன?' என்ற எண்ணம் தோன்றியது. உடனே ஒரு பெரிய லெட்ஜரை எடுத்துக்கொண்டு வேலையைத் தொடங்கிவிட்டேன்.

1970-72இல் என் நூலகத்துக்கு "லைப்ரரி சர்வீஸ் இன்டியா" என்ற பெயர் வைத்துக்கொண்டு ஆய்வு செய்பவர்களுக்கு "ப்ரீ சர்வீஸ்" செய்ய ஆரம்பித்துவிட்டேன். எனது இந்தப் பணி வரவர மிகவும் விரிவாக வளர ஆரம்பித்துவிட்டது. மூன்று வருடம் பாடுபட்டுத் தேடிப் பெற வேண்டிய விஷயங்களெல்லாம் எனது நூலகத்தில் மூன்றே நாளில் கிடைத்துவிடும். அந்த அளவுக்கு எனது தயாரிப்பு சிறப்பாக இருந்தது.

120 வருடங்களுக்கு முந்திய பாங்கிங் பேப்பர்ஸ், எக்சேஞ்ச், டிராப்ட்ஸ், லோன் அட்மிஷன்ஸ், பேரேடு குறிப்பு முதலான கணக்குகள், அந்தக் கால வட்டி விபரங்கள் அடங்கிய வட்டிச் சிட்டைகள், முதலிய எல்லா ரிக்கார்டுகளும் அதிக அளவில் எனது கலெக்சனில் உள்ளன. இவற்றால் "பாங்கிங் லாஸ் கமிட்டி" "ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா'' போன்ற அநேகர் பயன் அடைந்தார்கள்.

புத்தகம் சேகரிப்பது , அவற்றை ஒழுங்குபடுத்துவது, படிப்பது, அவற்றைப் பிறருக்கும் பயன்படும்படிச் செய்வது இவற்றை நல்ல

ஒரு "ஷேப்" ஆக்குவது இவையெல்லாம் அதிக உழைப்பு மிகுந்த செயல்கள்தான். ஆனால் இதனால் ஏற்படும் மனநிறைவோ சந்தோஷமோ வேறு எதிலும் இல்லை. சத்தியமான வார்த்தை. இன்டெக்ஸ் செய்யும்போது எற்படும் மன உணர்வுகளும் மகிழ்ச்சிகளும் விவரிக்க இயலாதவை. வின்சன்ட் சர்ச்சிலைப் பற்றி படித்து இன்டெக்ஸ் செய்யும்போது அப்பேர் கொண்ட ஒரு சாதனை வீரர் மகாயுத்தம் முடிந்த பிறகு பிரிட்டனில் நடந்த பொதுத் தேர்தலில் ஏன் தோற்கடிக்கப்பட்டார் என்பதை சிந்திக்கும் போது, காந்தியடிகளைப் பற்றிப் படிக்கும்போது அடிகள் தென்னாப்பிரிக்க சிறையில் இருந்தபோது அந்நாட்டின் அதிபர் ஜெனரல் ஸ்மட்சுக்கு ஒரு காலணி (மிதியடி) அன்பளிப் பாக அளித்த செய்தியைப் படித்து மனம் நெகிழ்ச்சியுறும்தோறும், ஜிட்டு கிருஷ்ணமூர்த்தியின் கட்டுரை ஒன்றைப் படித்துவிட்டு மனம் குழம்பி "புரிந்துக்கொள்ளும் அளவுக்கு எனக்கு அறிவு போதாதா" என்று என்னைப்பற்றியே நான் எண்ணிப் பார்க்கிற போதும் ஏற்படுகின்ற மகிழ்ச்சிகள், ஆத்ம சிந்தனைகள், மனவளர்ச்சிகள் எதுவும், விலை கொடுத்துப் பெற முடியாதவை.

புத்தகச் சேகரிப்புடன் எனது ஆசை நின்றுவிடவில்லை. இந்தப் பகுதிகளில் கிடைக்கக்கூடிய ஓவியங்கள், மரப்பொம்மைகள், அச்சுப்படங்கள், தபால் தலைகள், ஏட்டுச் சுவடிகள் முதலியனவும் சேகரித்தேன். பெரிய அளவிலான ரவி வர்மா ஓவியங்களின் ஆரம்பகால அச்சுப்பிரதிகளும் தேசீயத் தலைவர்களின் அந்தக் காலப் படங்கள் அனைத்தும் கிடைக்க இயலாத அபூர்வமான வேறு படங்களும் சேகரிப்பில் குவிந்துவிட்டன. குழந்தைகள் விளையாடுவதற்கான மரத்தால் செய்து கொடுக்கப்படும் மரப்பாச்சி என்று சொல்லப்படும் பொம்மைகள், யானைகள், நடைவண்டிகள் (இது குழந்தைகள் நடை பயில்வதற்காக) முதலியவைகள் "செட்டிநாடு" என்று சொல்லப்படும் இப்பகுதிக்கே சொந்தமானவை. இவை மிக மிக நேர்த்தியான கை வேலைப் பாடும் அழகும் மிகுந்தவை.

மரப்பாச்சி பொம்மைகள் அபூர்வ அழகு உள்ளவை. ஒரு தாய் தனது குழந்தைகளுடன் நிற்கும் பாணியில் இருக்கும். பல மாதிரிகளில் இருக்கும். தாயின் முடி ஒப்பனை, உடை அலங்காரம், அணிகலன்களின் சிறப்பு, எடுப்பான தோற்றம் இவை அனைத்தும் கண்கொள்ளாக் காட்சி. குழந்தைகளின் அழகுத் தோற்றம் தெய்வீக செளந்தர்யம் மிக்கது, தொன்று தொட்டு வந்த பரம்பரை சிற்பாச்சாரியார்களால் செய்யப்பட்டவையாதலால், இதன் அழகு பிரமிக்கத்தக்கது. துரதிஷ்டவசமாக இப்படிப்பட்ட Master wood carvers இப்பொழுது அருகி விட்டனர். இப்படிப்பட்ட மரப்பாச்சி பொம்மைகளுக்கு என்று எனது கலக்சனில் ஒரு சிறப்பான இடம் உண்டு.


இப்பொழுது எனது சிரமம் எல்லாம் இந்தக் கலெக்சன்களை எலி, கரையான், ராமாயணப்பூச்சி முதலியவற்றினின்று காப்பாற்றுவது கஷ்டமாக உள்ளது என்பதுதான். அபூர்வமான பதிப்புகளையும் படங்களையும் என்னால் கடைசிவரை அழிவினின்றும் காப்பாற்றிவிட முடியுமா என்ற கேள்விக்கு என்னால் நம்பிக்கையான விடைகாண முடியவில்லை.

புத்தகச் சேகரிப்புடன் எனது ஆசை நின்றுவிடவில்லை. இந்தப்பகுதிகளில் கிடைக்கக்கூடிய ஓவியங்கள், மரப்பொம்மைகள், அச்சுப்படங்கள், தபால் தலைகள், ஏட்டுச் சுவடிகள் முதலியனவும் சேகரித்தேன். பெரிய அளவிலான ரவிவர்மா ஓவியங்களின் ஆரம்பகால அச்சுப்பிரதிகளும், தேசீயத் தலைவர்களின் அந்தக் காலப் படங்கள் அனைத்தும் கிடைக்க இயலாத அபூர்வமான வேறு படங்களும் சேகரிப்பில் குவிந்து விட்டன.

சில வெளிநாட்டு நிறுவனங்கள் எனது கலெக்சன்களைப் பெரிய விலை கொடுத்து வாங்கிக் கொள்ளவும் முன் வந்தன. எனக்கு உற்சாகமூட்டிய போதிலும் அவ்வளவு கலெக்சன்களுக்கு உடனடியாக லிஸ்ட் தயாரிக்க இயலாத காரணத்தினாலும் எனக்கு அப்படி ஒன்றும் விற்றுவிட வேண்டிய அவசியம் இல்லை என்பதாலும் எனது கலெக்சன்கள் விற்கப்படவில்லை. எனது வாழ்க்கை, புத்தகம் தேடி இரவு பகல் என்ற வித்தியாசமில்லாத உழைப்பாகவே அமைந்துவிட்டது. அது என் பாக்கியம். பயனோ அளவற்றது. ஒரே ஆனந்தமயம். இறைவனின் அருட்கொடைகளில்கூட புத்தகமே மிகமிக மேலானது!

எனது வாழ்க்கையிலேயே துக்கம், சந்தோஷம் என்பது இரண்டுதான். சந்தோஷம்: டாக்டர் அய்யரவர்கள் காலத்தில் நானும் வாழ்ந்தேன் என்பது. வேதனை: சமீபத்தில் மூர்மார்க்கெட் என்னும் புனிதத் தலம் நெருப்பு பற்றி எரிந்து போனது.

இராஜா முத்தையா எழுதிய கடிதம்


LIBRARY SERVICE INDIA

KOTTAIYUR. P. O. : 623106

TAMILNADU : INDIA

7-8.85.

The University of Chicago's Role in the Formation of the Roja Muthiah Research Library

James Nye

The University of Chicago's first interactions with Mr. Roja Muthiah date to the early 1970s when Maureen L.P. Patterson, then Bibliographer for Southern Asia, purchased early Tamil imprints from duplicates held by Mr. Muthiah. The books and journals were offered both from his stall in the famous Moore Market in Madras and by lists he mailed to potential buyers in the United States, Europe and elsewhere in the world. Those early purchases by Ms Patterson, several hundred in number, still grace the shelves of the Joseph Regenstein Library at the University, each bearing the distinctive stamp of Roja Muthiah, the book dealer.

More recently and importantly, our connection with the Roja Muthiah collection began through Dr. C. S. Lakshmi, a visiting fellow at the University of Chicago's Institute for Culture and Consciousness in 1992, who used Roja Muthiah's library for her research on women in India. After reading in a Tamil journal a notice of Muthiah's death in June 1992, she suggested that I correspond with his widow to discuss disposition of the collection. Dr. Lakshmi knew from previous discussions that Muthiah was concerned about the future of his library. She had also experienced the astonishing depth and importance of the collection first hand through her visits to Kottaiyur where Muthiah lived with his collection.

It was immediately clear from Lakshmi's description that the collection Roja Muthiah had built was perfectly complementary to the Tamil holdings at the University. Most of the Tamil imprints in our Chicago collection, at the time numbering more than 25,000, had been acquired via the South Asia Cooperative Acquisitions Program run by the Library of Congress from its Field Office in New Delhi. Since 1962 that program had delivered a selection of the most important publications in all South Asian languages to participating universities in the United States. Chicago had participated in that program since its inception. But, no U.S. libraries had engaged in systematic collecting of Tamil imprints prior to the late 1950s. In contrast, Roja Muthiah's collection was strongest in ink print publications prior to the 1960s and especially strong in periodical literature holdings. British libraries did not actively collect Tamil periodicals during the colonial period. This collecting lacuna in England meant the Muthiah collection was even more important for the understanding of south Indian culture during the nineteenth and early twentieth centuries. Within his library's eclectic range of subject matter – including classical literature, medicine, folklore, religion, cinema, and women's studies – and materials, such as theater playbills and popular songbooks, Roja Muthiah attempted to capture the essence of the Tamil people.

James H.Nye is Bibliographer for Southern Asia and Director, South Asia Language and Area Center, The University of Chicago

Intrigued by the contents of Muthiah's collection and the ways in

which it complemented the University's holdings, my staff and I began correspondence with Roja Muthiah's family to investigate purchasing the library. Four trips from Chicago to Kottaiyur and Madras followed the letters. All of these activities were guided by a Steering Committee composed in August 1992 of University of Chicago faculty and library staff. That Committee, including Prof. A. K. Ramanujan, Prof. Norman Cutler, Prof. Arjun Appadurai, Prof. Ralph Nicholas, and others at the University, were committed from the outset to keeping the library, an important cultural resource invaluable to Tamil scholars, in Tamilnadu.

The general plan of action devised by the Steering Committee was that the University would arrange with Muthiah's heirs for purchase of the collection, we would identify a collaborating partner in India to develop the collection into a library, we would raise funds to support the purchase and subsequent processing of the collection, including its preservation, and finally we would cede ownership of the library to our sister institution in India. We believe this to be the first time a research library has raised funds for purchase and preservation of a foreign collection with an explicit commitment to donating the publications to its collaborator in the host country. The University's plan for access to scholarly publications has not been at the expense of library holdings in India. Rather, the means employed to preserve the collection have enhanced cooperation between the U.S. and India. We hope this collaborative approach to preservation and access will serve as a model for other institutions in their acquisition of early foreign imprints.

Identification of a collaborating partner, a sister institution in India, was a critically important part of the University's plan. We knew that we could not succeed without a dedicated group of colleagues who would work with us to house the collection and share in development activities. After preparing a set of criteria describing the ideal institutional partner, I led site visits in December 1992 and April 1993 to discuss the program with seven Indian scholarly institutions. Mr. Anmol Vellani, at the time a program officer at the Ford Foundation in New Delhi, was a most important figure in the evaluation of partners. His sage advice and our own impressions led us to decide upon MOZHI in June 1993. MOZHI, a research and documentation center, is a public trust dedicated to developing resources in languages and culture. MOZHI's facilities in Madras are the site for dictionary compilation, studies in linguistics and grammar, and textual analysis. In addition to the preparation of a Tamil-Tamil-English dictionary of contemporary Tamil, it has also engaged in related projects on modern Tamil language such as creation of a corpus of machine-readable texts; a dictionary of idioms, phrases, and word combinations; and Tamil word-processing utilities including a spelling checker and a hyphenation dictionary for use on computers. As noted by S. Theodore Baskaran, "The trustees of MOZHI saw in the project scope to develop systematically a comprehensive facility that would acquire all varieties of printed material – both book and non-book – and conserve them through preservation microfilming." The two MOZHI trustees most intimately involved with the collaboration were S. Ramakrishnan, the

Roja Muthiah attempted to capture the essence of the Tamil people.

owner of Cre-A publishing house, and P. Sankaralingam, Reader in the Library Science Department of the University of Madras. Sankaralingam, about whom Mr. G. Sundar writes in more detail elsewhere in this publication, became the first director of the library and continued to provide inspired leadership for the Roja Muthiah Research Library until he passed away in 1997. Our collaboration with MOZHI continued until the formation of the Roja Muthiah Research Library Trust in 2004 as a successor body responsible for the library.

The University signed an agreement of sale for the collection with Roja Muthiah's heirs in April 1994. On April 23, 1994, the library, carefully squared into 1,110 specially designed waterproof boxes, was loaded onto four lorries and a trailer. The convoy headed away from Kottaiyur back to Madras where the library was located in a rented structure in the Annanagar area of Madras until 2005. That first facility, designed to meet the needs of the Library, had 5,200 square feet of space. It was adequate for housing the collection and seating twelve research scholars. It included nearly 1,000 square feet of space for the cataloging and preservation units.

Fund raising has been an important part of our work and our success in those efforts has been fundamentally important for the execution of our plans. Since 1994 the University has raised more than $1.6 million from various sources to acquire the Muthiah collection and sustain the Roja Muthiah Research Library. Major sponsors and contributors include the University of Chicago, the National Endowment for the Humanities, the U.S. Department of Education, the Ford Foundation, the Wellcome Institute for the History of Medicine, the Andrew W. Mellon Foundation via the Association of Research Libraries, the University of Chicago Women's Board, and the Roja Muthiah Research Library Trust. Additionally, the diligent efforts of the library staff in cataloguing the collection and other libraries have produced a substantial flow of revenue for support of the library.

As the value of Muthiah's library and the University's efforts to catalog and preserve its materials have become more widely known in the Tamil-speaking world, an appreciation has grown for the need to gather and preserve other Tamil collections. The Roja Muthiah Research Library has received donations of books, periodicals, and other research materials which have expanded the collection by at least fifty percent over the original size of the collection purchased in 1994.

The University is pleased to have begun ceding parts of the collection to the Roja Muthiah Research Library Trust in 2009. As the transfer continues over the coming years, the University is committed to continue its collaboration and support for what has become a model program. It is extraordinarily pleasing to see what has been accomplished over a decade and a half of joint effort. The world of scholarship on Tamil culture is vastly enhanced by the resources now available and the prospects for further improvement in access to scholarly resources are very bright thanks to dedicated work of our colleagues at the Roja Muthiah Research Library.

The world of scholarship on Tamil culture is vastly enhanced by the resources now available and the prospects for further improvement in access to scholarly resources are very bright thanks to dedicated work of our colleagues at the Roja Muthiah Research Library.

24

Preserving early print literature of Tamilnadu

■ G. Sundar

It was full of boxes! 19 km north-west from its present location, the building in Mogappair where the library was functioning in 1994 was full of boxes. It had a single computer and was manned by a staff of two apart from Sankaralingam. I could see the pride in his face when Sankaralingam took me around. The special boxes, kept one over the other in several rows were treasures, just brought in from Kottaiyur. This was supposed to be my interview. I was asked only one question - Do you have patience? I answered in the affirmative, very hesitatingly. I was initially hired to set up and take care of the preservation unit at the Roja Muthiah Research Library (RMRL). Recalling what Sankaralingam asked, now, after 17 years, I understand what he meant.

RMRL a brief profile

Today, RMRL is a resource centre for south Indian studies covering diverse fields from humanities and social sciences to popular culture. RMRL holds a unique collection and is widely recognized as a model library in India. With its beginnings as a small private collection by Roja Muthiah, the library has expanded its collection through gifts and donations and now holds an impressive collection of more than 200,000 items. The library aims at continually preserving and further expanding this historic archive. RMRL presents itself as a significant institution in the world of research and scholarship. RMRL Trust now maintains this rare private collection of Tamil imprints in collaboration with the University of Chicago. RMRL has expanded its scope of collecting material such as Documentaries, Film DVDs/CDs and Gramophone records.

A Visionary

P. Sankaralingam, one of the key architects of the RMRL was a multi faceted personality. A fine teacher and administrator he led the project for three full years. It was under his guidance that the core team of the Library grew. Actually, he believed in "work without supervision" . It was this attitude that gave us a free hand to put our creativity together. His entire family worked for RMRL. His sons, who were software whiz kids even when they were at school, developed interesting packages for the Library catalogue at a time when Tamil was just beginning to be put to use in computers. His wife sent soft *idlys*, not just for her husband, but for the entire Library staff! Sankaralingam breathed RMRL all the time; he probably shared the same kind of passion for the collection as Roja Muthiah did. He not only felt passionate, but also injected it into some of his passion into us. He was quite excited by the prospect of setting up RMRL and we

G. Sundar is the present Director of the Roja Muthiah Research Library.

drew inspiration from him. Despite the failure of the New Library Movement in India, Sankaralingam was optimistic about its feasibility and sustainability. He would talk about Dravidian Movement and the great impact it had on the State. We would be listening to him spellbound. Very quickly, he would theorize any situation. He was deeply influenced by western philosophies and western medicine, and had contempt for their Indian counterparts. In October 1997, when we had just begun the project, he succumbed to a massive heart attack… but left a legacy behind.

Institutionalizing the Roja Muthiah collection - what it means?

செட்டியாரின் நாட்களுக்குப்பிறகு இந்த கிடைத்தற்கரிய அச்சுப்பிரதிகள் கேட்பாரற்றுப் போய்விடக்கூடாது, என்ற எண்ணத் துடன் இவரது சேகரிப்பு பற்றியும், அது எவ்வாறு வரலாற்றா சிரியர்களுக்கு ஓர் அரிய மூலப்பொருள் என்றும் அது ஏன் பாதுகாக்கப்பட வேண்டும் என்றும் ஒரு முன்வரைவு எழுதினேன். ஒரு நாள் இரவு, இரண்டு மணி நேரம் உட்கார்ந்து இந்தக் குறிப்பை அடித்து முடித்தேன். அப்போது நான் ஒரு Olivetti என்ற ஒரு குட்டி டைப்ரைட்டரைப் பயன்படுத்திக் கொண்டிருந்தேன். மறுநாள் தமிழ்நாடு ஆவணக்காப்பக கமிஷ்னரிடம் அதை நானே கொடுத்தேன். பதிலோ, வேறு எந்த விதமான மறுவிளைவோ இல்லை. இப்போது பின் னோக்கிப் பார்க்கும்போது என்ன ஒரு குழந்தைத்தனமாக நம்பிக்கையுடன் அதை எழு தினேன், என்று ஆச்சரியமாக இருக்கின்றது.

ரோஜா முத்தையா சேகரிப்பில் உள்ள சிறப்பு முத்திரையுள்ள கடிதம்



நான் அப்போது சென்னையிலிருந்தேன். எழுபதுகளில் சென்னை வரும் போது செட்டியார் எனக்கு ஒரு அஞ்சலட்டை அனுப்புவார். மண்ணடியில் ஒரு நகரத்தார் சத்திரத்தில் இவரை நான் சந்திப்பதுண்டு.சில நாட்கள் அங்கேயே மதிய உணவு உண்போம்.ஒரு முறை ஒரு பழய மரச்சிற்பத்தை, (கதவொன்றின் மேல்பாகம்) விற்பதற்கு வந்திருந்தார். தன்னிடம் இருந்த தொன்மை யான தஞ்சாவூர் ஓவியங்களை விற்பதற்காகவும் சென்னைக்கு

வருவதுண்டு. நான் அவரோடு அதிகம் பேசியது அந்த நாட்களில்தான். மகாத்மா காந்தி படம் தயாரித்த ஏ.கே.செட்டியாரை இவர்தான் எனக்கு அறிமுகப்படுத்தி வைத்தார். சென்னை மௌபரீஸ் ரோட்டில் ஒரு சிறிய அறையை வாடகைக்கு எடுத்து குமரிமலர் இதழை ஏ.கே.செட்டியார் நடத்திக்கொண்டிருந்தார். அந்தப் பத்திரிக்கையின் அட்டையில் உள்ள அதே எழுத்துருவில் குமரிமலர் என்ற பெயர் தாங்கிய ஒரு பச்சை நிற போர்டு அங்கிருந்தது என் நினைவிற்கு வருகின்றது.

முத்தையா செட்டியாரின் சேகரிப்பைக் கருவாகக் கொண்ட ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகம் வேகமாக வளர்ந்து வருகின்றது. நூலகம் சென்னையில் துவக்கப்பட்ட நாளிலிருந்த சேகரிப்பு இன்று இரண்டு மடங்காகி விட்டது. சங்ககால இலக்கியத்தின் காலக்கணிப்பு என்ற பொருளில் ஈடுபாடு கொண்ட ஒரு ஆய்வாளர் அந்த பரப்பு சார்ந்த 2000 நூல்களை சில ஆண்டுகளுக்கு முன் கொடுத்தார். இதேபோல, கிஃப்ட் சிரோமணி, தெ.பொ.மீனாட்சிசுந்தரம் பிள்ளை, ஏ.கே.ராமானுஜம் இவர்களது சேகரிப்புகளும் இங்கு வந்து சேர்ந்துள்ளன. திராவிட இயக்கம் பற்றி ஆராய்ச்சி செய்த ராபர்ட் ஹார்டுகிரேவ், வட ஆற்காடு மாவட்ட ரெட்டியார்களைப்பற்றி விவரங்கள் திரட்டிய எட்வர்டு மன்கோமரி போன்ற ஆய்வாளர்கள் தங்கள் சேகரிப்புகளை இந்த நூலகத்தில் சேர்ப்பித்துவிட்டார்கள்.

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகத்திலுள்ள சினிமா பற்றிய ஆவணங்கள் இன்னும் சரிவர பயன்படுத்தப்படவில்லை. தமிழ் நாட்டில் இந்தியாவில் சினிமா பற்றிய ஆய்வு அதிகமாக நடப்பதாகத் தெரியவில்லை. பெங்களூரிலுள்ள Centre For The Study Of Culture and Society போன்ற தனியார் நிறுவனங்கள் இந்தத் துறை பற்றிய ஆராய்ச்சியில் ஆர்வம் காட்டுகின்றன. பல்கலைக்கழகங்களை எடுத்துக்கொண்டால், கொல்கத்தாவிலுள்ள ஜாதவ்பூர் பல்கலைக்கழகத்தில் சினிமா ஒரு தனித் துறையாக உள்ளது. தென்னிந்திய வரலாற்றின் மற்ற பரிமாணங்களைப்பற்றி ஆய்வு செய்பவர்களுக்கும் சினிமா சம்பந்தமான அச்சுப்பிரதிகள் ஒரு மூலப்பொருளாக உதவலாம். எடுத்துக்காட்டாக, இந்தியாவில் தொழிற்சங்கங்களைப்பற்றி ஆய்வு செய்யும் ஒருவர் தமிழ்ப்படங்களில் உழைக்கும் வர்க்கத்தினரின் பிரச்சனைகள் எவ்வாறு சித்தரிக்கப்படுகின்றன என்று பார்க்கலாம்.

எனது ஆய்வு சம்பந்தமாக மூன்று முறை நான் கோட்டையூர் சென்றிருந்தேன். கடைசி நாள் அவரிடமிருந்து விடைபெறும்போது 1932ல் பதிப்பிக்கப்பட்ட, நன்கு காலிகோ கட்டமைக்கப் பட்ட நளவீமபாக சாஸ்திரம் என்ற அரிய தமிழ்நூலை என் கையில் கொடுத்து இதை உங்கள் மனைவிக்குக் கொடுங்கள் என்றார். என் மனைவி உணவியல் படித்தவர் என்று ஒரு நாள் பேச்சு வாக்கில் அவரிடம் கூறியிருந்தேன். இந்த நூலை இப்போதும் நாங்கள் அடிக்கடி புரட்டிப்பார்க்கின்றோம். இதில் ஐம்பதிற்கும் மேற்பட்ட அரிசி வகைகள் பட்டியலிடப்பட்டிருக்கின்றன. அதே போல் பருப்பு வகைகளும். நூறாண்டுகளுக்கு முன் நம் நாட்டில் பல்லுயிரியம் [Biodiveristy] எவ்வளவு வளமாக இருந்தது என்பது தெரிகின்றது.

எனது ஆய்வு சம்பந்தமாக மூன்று முறை நான் கோட்டையூர் சென்றிருந்தேன். கடைசி நாள் அவரிடமிருந்து விடைபெறும்போது 1932இல் பதிப்பிக்கப்பட்ட, நன்கு காலிகோ கட்டமைக்கப் பட்ட நளவீமபாக சாஸ்திரம் என்ற அரிய தமிழ்நூலை என் கையில் கொடுத்து இதை உங்கள் மனைவிக்குக் கொடுங்கள் என்றார்.

முத்தையாவின் சேகரிப்பைச் சரிவர ஆய்வாளர்கள் பயன்படுத்தினால் தமிழ்நாட்டின் வரலாறு திருத்தி எழுதப்படலாம் என்று நான் நினைப்பதுண்டு. அயோத்திதாசரின் தமிழன் இதழ் அதிலிருந்து உருவான ஆய்வுக்கட்டுரைகள், நூல்கள் இந்த சாத்தியக் கூற்றிற்கு ஓர் எடுத்துக்காட்டு.

44

நூலகப் பெருஞ்செல்வர் ரோஜா முத்தையா

■ சேக்கிழார் அடிப்பொடி முதுமுனைவர்
தி.ந.இராமச்சந்திரன்

நூலகப் பெருஞ்செல்வர் ரோஜா முத்தையா இயற்கை எய்தி விட்டார் என்ற செய்தியைக் கேட்டவுடன் அன்பர் இராமலிங்கம், அவர் துணைவியார், நான் ஆகிய மூவரும் கோட்டையூர் சென்றோம். பெரியவருக்கு எங்கள் இறுதி வணக்கத்தைச் செலுத்திவிட்டு, விரைவாகவே தஞ்சை மீண்டோம். உடனேயே ஆங்கிலத்தில் இரு கடிதங்கள் வரைந்து, ஒன்றை தி ஹிந்து நாளிதழுக்கும், தி இண்டியன் எக்ஸ்பிரஸ் நாளிதழுக்கும் அனுப்பினேன். இரண்டு கடிதங்களும் தாமதமில்லாமல் வெளியாயின. நான் வரைந்த செய்தியின் சாரம் இதுவே. அமரர் ரோஜா முத்தையாவின் நூலகம் ஐந்து கோடி ரூபாய் பெறும். என்றாலும் இத்தொகையின் ஐந்தில் ஒரு பகுதி வழங்கப்பட்டாலும், அந்நூலகத்தை அவர்கள் குடும்பத்தாரிடமிருந்து பெறமுடியும்.

சேக்கிழார் அடிப்பொடி தி.நா. இராமசந்திரன் அவர்கள் உயர்நீதி மன்ற வழக்குரைஞராக பணிபுரிந்தவர். இவர் பாரதியார் குயில் பாட்டு, பெரியபுராணம் போன்ற பல நூல்களை மொழிபெயர்த்து உள்ளார். இவர் ரோஜா முத்தையா செட்டியாரின் நெருங்கிய நண்பராவார். இவரும் அரிய நூலகம் ஒன்றை தமது வீட்டில் உருவாக்கியுள்ளார்.

வெளிநாட்டில் இருந்த ஒரு பெண் ஆய்வாளர் இச்செய்தியைப் படித்தவுடன் ஷிகாகோ பல்கலைக்கழகத்தோடு தொடர்பு கொண்டு நூலகத்தை அப்பல்கலைக்கழகத்தார் பெற முயல வேண்டும் என்று வற்புறுத்தினார். கீழ்த்திசை நூல்கள் பிரிவின் தலைவர் நை என்னும் அறிஞர் இது வகையில் விரைந்து செயல் பட்டார். இரு அறிஞர்கள் கோட்டையூர் வந்தனர். நூலகத்தின் பெருமைகளையும், அதைப் பெறவேண்டிய அவசியத்தையும் வலியுறுத்தி, அவர்கள் ஓர் அறிக்கையைச் சமர்ப்பித்தனர். சேர்க்கப் பட வேண்டிய முக்கியமான தகவல்களை இராமலிங்கமும் நானும் அவர்களுக்குத் தந்தோம். நேரில் நூலகத்தைப் பார்வையிட்ட அவர்களே, நிறைவுபெற்று அறிக்கையை அமைத்தனர்.

பிறகு நை அவர்களின் உதவியாளர் கோட்டையூர் வந்தார். அவரிடமும் இராமலிங்கமும் நானும் அனைத்தையும் எடுத்துச் சொன்னோம். அவரிடம் எல்லா விளக்கங்களையும் பெற்ற நை அவர்கள் கோட்டையூர் வந்தார். அவரை இராமலிங்கம், நான், செட்டியார் அவர்கள் குடும்பத்தார் ஆகியோர் வரவேற்றோம். செட்டியார் அவர்களின் சகோதரியின் கணவர் வள்ளியப்பன் இயன்ற உதவி புரிய கோட்டையூர் வந்திருந்தார்.

நூலகத்தைப் பார்வையிடுவதற்கு முன்பாக அதைப் பற்றிய அரிய தகவல்களைக் கூற நை அவர்களின் அனுமதியை வேண்டினேன். “நீங்கள் கூற இருப்பன எனக்குப் பெரிதும் பயன்படும். சற்றே விரிவாக உங்கள் விளக்கம் அமைய வேண்டும்” என்றார் அவர்.

சற்றேறக்குறைய 90 நிமிடங்கள் நான் ஆங்கிலத்தில் விளக்கம் தந்தேன். நை அவர்கள் “நாள் முழுவதும் இதைக் கேட்க எனக்கு விருப்பம் மேலிடுகிறது. ஆனால் போதிய அவகாசம் இல்லை. இப்போது நான் நூலகத்தைப் பார்வையிட வேண்டும். தேவைப் படும் செய்திகளை அவ்வப்பொழுது சுருக்கமாகத் தாருங்கள்” என்றார். அன்றும், மறுநாளும் நை அவர்களோடு இராமலிங்கமும் நானும் இருந்தோம். நூலகம் தம் பல்கலைக்கழகத்தால் வாங்கப்படும் என்று உறுதி அளித்தார் நை அவர்கள்.

வள்ளியப்பன் அவர்கள் என்னைத் தனியே அழைத்துச் சென்று “இன்றுதான் இந்நூலகத்தின் பெருமையை நான் ஓரளவு புரிந்து கொண்டேன்; உங்கள் பேச்சு பதிவு செய்யப்படாமல் போய் விட்டதே” என்று உருக்கத்தோடு கூறினார்.

செட்டியாரின் நூலகம் தமிழகத்திலேயே வைத்துப் பேணப் படுவதற்கு நானும் காரணமாக இருந்திருக்கிறேன் என்பதை நினைத்து மகிழ்வு அடைகிறேன்.

செட்டியார் அவர்கள் மருத்துவச் சிகிச்சை பெற தஞ்சைக்கு எங்களால் அழைத்து வரப்பட்டார். மருத்துவமனையும் எங்கள் இல்லத்திற்கு அருகிலேயே இருந்தபடியால் செட்டியார் அவர் களுக்கும் அவர் மனைவியார் அவர்களுக்கும் தகுந்த உதவிகள் எங்களால் செய்ய முடிந்தது. மூன்றாம் முறையாக தஞ்சை மருத் துவமனையில் செட்டியார் அவர்கள் தங்கியிருந்தபோது, அவர் கைப்பட ஓர் உயில் வரைந்தார். அதில் தம் மனைவியாரையும் சாட்சி கையெழுத்திடுமாறு செய்தார். தம் காலத்திற்குப் பிறகு நூல் நிலையத்தை நன்கு காப்பாற்றும் அறிஞருக்கோ, நிறுவனத்திற்கோ, கிரயம் செய்து கொடுக்க இராமலிங்கமும் நானும் பொறுப்பேற் போம் என்று திடமாக நம்பினார். தம் நூல் நிலையக் கிரய வரும் படியிலிருந்து எனக்கும் இராமலிங்கத்திற்கும் தலா ஐந்து இலட்சம் ரூபாய் வழங்கப்படவேண்டும் என்று பதிவு செய்திருந்தார்.

ஷிகாகோ பல்கலைக்கழகம் நூல் நிலையத்தை வாங்க முற்பட்டபோது, இச்செய்தி வெளிவந்தது. கிரயத்திற்கு எந்த முட்டுக்கட்டையும் நிகழக்கூடாது என்று எண்ணிய இராமலிங்க மும் நானும், “எங்களுக்கு எந்தத் தொகையும் தேவையில்லை” என்று எழுத்து மூலம் சமர்பித்துவிட்டோம்.

இராமலிங்கத்தின் மூத்த மகள் திருமணத்திற்குச் செட்டியாரின் மனைவியார் ரூபாய் ஐம்பதினாயிரம் நன்கொடையாகக் கொடுத்தார். என் மணிவிழாவிற்கு 25,000 ரூபாய் பெறுமானம் உள்ள நகைகளை அளித்தார். கலாசம்ரக்ஷண சங்கம் என்ற நிறுவனத்தை நான் தோற்றுவித்து அதன்மூலம் அரிய, குறிப்பாகப் பல ஆண்டுகள் மறுபதிப்புப் பெறா நூல்களை, அச்சிடும் முயற்சியில் ஈடுபட்டு வந்தேன். என் செய்கையைப் பாராட்டிச் செட்டியார் அவர்களின் மகள் வள்ளிக்கண் எனக்கு ரூபாய் இருபதினாயிரம் அளித்தார். செட்டியாரின் மகன் நாராயணன் அவர்கள் ஒவ்வோராண்டும் ஒரு புதிய நூலை வாங்கி எனக்கு வழங்குவதைத் தம் வழக்கமாகக் கொண்டிருக்கிறார். இவற்றை எல்லாம் நினைக்கும்போது, “தாளுண்ட நீரைத் தலையாலே” தரும் தென்னை பற்றிய நினைவே எழுகிறது.

ஒரு சுமார்த்த பிராமணனாகப் பிறந்த நான் சைவ சித்தாந்தத்தில் ஈடுபட்டிருப்பதை உணர்ந்த செட்டியார் அவர்கள் அச்சில்

இல்லாப் பல நூல்களை எனக்கு வழங்கினார். நானும் அவர் கேட்ட சில நூல்களை அவருக்கு வழங்கி மகிழ்ந்தேன்

நூல்களை எவ்வாறு போற்ற வேண்டும் என்பதை நான் செட்டியாரிடம் அறிந்து கொண்டேன். அவரால் நான் பெற்ற நன்மைகள் பலப்பல.

என்னுடைய நூலகத்தில் 40,000 நூல்கள் உள. நூலகச் சுவரில் மூன்று படங்களை மாட்டியிருக்கிறேன். அவை பாரதியார், என் வழிகாட்டியான திருலோக சீதாராம், ரோஜா முத்தையா ஆகியோரின் படங்கள். என் வீட்டு வாசலில் உள்ள மேசையில் செட்டியாரின் படம் இடம்பெற்றுள்ளது. தினமும் அவர் திருவுருவத்தைப் பார்த்துப் பார்த்து மகிழ்ந்து வருகிறேன்.

செட்டியார் அவர்கள் முதல் பதிப்பிற்குத் தரும் மதிப்பு அலாதியானது. இதுவகையில் நான் அவரிடம் கற்ற பாடம் ஒன்றை இங்கே கூறுகிறேன். 1984இல் தருமபுர ஆதீனம் அனைத் துலக சைவ சித்தாந்தக் கருத்தரங்கம் ஒன்றைத் தருமையில் நடத்த முடிவு செய்தது. இதற்காகச் சில நல்ல நூல்களை வெளியிட ஏற்பாடாயிற்று. சைவ சித்தாந்தம் பற்றி ஆங்கிலத்தில் வரையப் பட்ட கட்டுரைகளைத் தேடிக் கண்டுபிடித்து ஒரு தொகுப்பு நூல் அமைத்துத் தரும் பணி என்னிடம் ஒப்படைக்கப்பட்டது. குருவரு ளாலும் திருவருளாலும் அப்பணியை நான் நிறைவேற்றினேன். சதமணிக்கோவை என்னும் நூலைக் குறிப்புரையுடன் அமைத்துதர அமரர் மு. அருணாசலம் அவர்கள் முன்வந்தார். சந்தான குரவருள் மூன்றாமவரான மறைஞானசம்பந்தர் எந்த நூலையும் இயற்ற வில்லை என்றே கொள்ளப்படுகிறது. இது மரபு வழிச்செய்தி யாகும். ஆனால் அருணாசலம் அவர்கள் மறைஞானசம்பந்தரே சதமணிக்கோவையின் ஆசிரியர் என்றும், சித்தாந்த சாத்திரங்கள் 14 என்பது பிழை என்றும், அவை 16 என்றும் தம் பதிப்பில் கூறியுள்ளார். சில வாதங்களையும், செய்திகளையும் தம் கருத்துக்குச் சார்பாக அவர் வரைந்துள்ளார். ஸ்ரீலஸ்ரீ குருமஹா சந்நிதானம் இந்நூலுக்கு ஓர் அணிந்துரை வரைய என்னைப் பணித்தது. நானும் அருணாசலம் அவர்கள் கருத்தை ஏற்றே என் அணிந்துரையை வரைந்தேன். அருணாசலம் பிள்ளை அவர்கள் பதிவு செய்த ஒரு கருத்து எனக்குப் பொருத்தமாகத் தோன்றியது. அவர் கூறியதா வது: சாத்திரங்கள் 14 என்று காட்டுவது ஒரு வெண்பா. அது "உந்தி களிறு'' என்று தொடங்குகிறது. "மெய்கண்ட சாத்திரங்களை 1866இல் மதுரை நாயகம் பிள்ளை என்பவர் முதன்முதலில் அச் சிட்டார். இச்செய்யுள் ஏட்டுப் பிரதிகளில் காணப்படாமையால் சாத்திரங்களை நினைவுபடுத்திக் கொள்ள எளிதாய் இருக்கும் பொருட்டு இவரே செய்த பாடல் என்று கருதத் தோன்றுகிறது. 14 என்ற வரையறை இதிலிருந்தே தொடங்குகிறது. அக்காலத்தில் சாத்திரப் பயிற்சி குன்றி இருந்தமையால் சதமணிக்கோவை பயிற்சியும் குன்றி இருந்தது. 14 என்று வரையறுத்தவர் சதமணிக் கோவையை மறந்துவிட்டார். ஆனால் பல சித்தாந்த சாத்திர ஏடுகளில் எண் குறிப்பிடப்படாமல் சதமணிக் கோவையையும் சேர்த்து எழுதியிருக்கக் காண்கிறோம். சில ஏடுகளில் சீர்காழிசிற்றம்பல நாடிகள் செய்த துகளறுபோதம் கொள்ளப்பட்டு, உமாபதியார் வரைந்த உண்மைநெறி விளக்கம் விடப்பட்டிருக்கக் காண்கிறோம். எனவே, சித்தாந்த சாத்திரம் 14 என்ற பிற்காலக் குறிப்பை நாம் மறந்து சித்தாந்த சாத்திரம்

நானும் அருணாசலம் அவர்கள் கருத்தை ஏற்றே என் அணிந்துரையை வரைந்தேன். அருணாசலம் பிள்ளை அவர்கள் பதிவு செய்த ஒரு கருத்து எனக்குப் பொருத்தமாகத் தோன்றியது. அவர் கூறியதாவது: சாத்திரங்கள் 14 என்று காட்டுவது ஒரு வெண்பா.

மொத்தம் எத்தனை என்று கருதத் தலைப்பட்டால் இன்று நாம் சம்பிரதாயமாகக்கொள்ளும் 14 நூல்களோடு சதமணிக்கோவையும், துகளறு போதத்தையும் சேர்த்துப் பதினாறு என்று கொள்ளுதல் பொருத்தமாய் இருக்கும். இவ்விரு நூல்களும் மிகவும் பொருளாழம் பொருந்திய சாத்திர நூல்கள் என்பதில் தடையில்லை. ஆனால் மற்ற பதினான்கு சாத்திரங்களுக்கும் பண்டை உரைகள் எழுந்திருக்க இந்த இரண்டு நூல்களுக்கும் பண்டைய உரைகள் நமக்குக் கிடைக்கவில்லை. அதுவே, இவற்றைச் சான்றோர் சாத்திர வரிசையில் கொள்ளாமைக்குக் காரணமாய் இருக்கலாம் என்று தோன்றுகிறது".

என் அணிந்துரையில் அருணாசலம் அவர்கள் வெளியிட்ட முடிவுகள் என்னால் ஏற்கப்பட்டன என்றாலும் அம்முடிவுகள் முறையாக ஆய்வுக்கு உரியவை என்பதையும் சுட்டிக்காட்டியுள்ளேன்.

என்னுடைய அணிந்துரையைப் பார்த்தருளிய மகா சந்நிதானத்தைத் தரிசனம் செய்யச் சென்றபோது, மகாசந்நிதானம் என்னிடம் கேட்ட கேள்வி இதுவே. "உமக்கு அருணாசலம் அவர்களைக் கண்டால் பயமா?" இக்கேள்வி எழுந்த உடனேயே, மகா சந்நிதானத்திற்கு அருணாசலம் அவர்களின் முடிவுகள் ஏற்புடையன அல்ல என்ற எண்ணம் தோன்றியிருப்பதை ஊகித்தேன். என்றாலும், மறுமாற்றாக நான் கூறியது என்ன என்பதை இப்போது கூறுகிறேன். "உண்மையைக் கண்டு நான் பயப்படுபவன் அல்லன்." அப்போது மகா சந்நிதானம் "மகா உண்மையைக் கண்டுவிட்டீர். மரபு என்ற ஒன்றை இலேசில் தள்ளிவிட முடியாது." விடை பெற்று வெளியேறும்போது, "என்ன இது?" ஆதீனத்தலைவர் ஆய்வில் கிடைத்த புதிய செய்திகளை ஏற்க மறுக்கின்றாரே இது நல்லது ஆகாதே" என்றே எண்ணினேன்.

பிறகு ஒரு நாள் இராமலிங்கமும் நானும் கோட்டையூர் செல்ல நேர்ந்தது. செட்டியார் அவர்களின் புத்தகங்கள் அவர் வீட்டிலும், வேறு ஒரு வீட்டின் மாடியிலும், ஒரு கிட்டங்கியிலும் இருந்தன. கிட்டங்கியில் இருந்த நூல்களைப் பார்க்க நாங்கள் ஆசைப்பட்டோம். மதிய உணவை முடித்துக்கொண்டு அக்கிட்டங்கிற்குச் சென்று பார்க்க செட்டியார் அனுமதி தந்தார். அப்போது அவர் சொன்னார்: "நூல்களைப் பார்க்கச் சில மணி நேரம் தேவைப்படும். பொறுமையாகப் பாருங்கள், உங்களுக்குத் தேவைப்படும் காபி, பலகாரங்களை ஆள் மூலம் அனுப்புகிறேன். பொறுமையாக நூல்களைப் பாருங்கள். ஒரு முக்கிய விஷயம். அவ்விடத்தில் பழைய திருக்குறள் பதிப்புகள் உள்ளன. அவற்றைத் தனியாக எடுத்து வைத்துவிடுங்கள். ஆள் மூலம் அவற்றை எடுத்துவர ஏற்பாடு செய்கிறேன்."

"நூல்களைப் பார்க்கச் சில மணி நேரம் தேவைப்படும். பொறுமையாகப் பாருங்கள், உங்களுக்குத் தேவைப்படும் காபி, பலகாரங்களை ஆள் மூலம் அனுப்புகிறேன். பொறுமையாக நூல்களைப் பாருங்கள். ஒரு முக்கிய விஷயம். அவ்விடத்தில் பழைய திருக்குறள் பதிப்புகள் உள்ளன. அவற்றைத் தனியாக எடுத்து வைத்துவிடுங்கள். ஆள் மூலம் அவற்றை எடுத்துவர ஏற்பாடு செய்கிறேன்."

கிட்டங்கியில் இருந்த நூல்களைப் பார்வையிட்டோம். சுமார் 20 திருக்குறள் பதிப்புகள் எங்கள் கண்களுக்குப் பட்டன. அங்கு வந்த பணியாளர் மூலம் அவற்றை அனுப்பி வைத்தோம். பிறகு இரண்டு மணி நேரம் கழித்துச் செட்டியார் இல்லத்திற்குப் புறப்பட்டோம். செட்டியார் அவர்கள் வீட்டு வாசலில் நின்று கொண்டிருந்தார். அவர் உடல் பலவீனத்தால் வீட்டின் உள்ளே அமைந்த திண்ணையில்தான் இருப்பார். என்ன அதிசயமாக வாசல்படியில் நிற்கிறாரே என்று நாங்கள் எண்ணினோம். எங்களைப் பார்த்த உடன் தம்முடைய இரு கரங்களையும் மேலே

தூக்கியபடி எங்களுக்கு வணக்கம் செலுத்தினார். நாங்கள் பதறிப்போய் விட்டோம். அவரைக் கையால் வணங்கியபடியே, "நீங்கள் இப்படி எங்களை வணங்குதல் முறையில்லை" என்றோம். ஆனால் கூப்பிய கரத்தை நெகிழவிடாமல், அவர் சொன்னார். "தொலைந்து போன புதையலை மீட்டெடுத்துத் தந்து இருக்கிறீர்கள். உங்களை எவ்வளவு பாராட்டினாலும் தகும்".

வீட்டின் உள்ளே மூவரும் சென்று திண்ணையில் அமர்ந்தோம். செட்டியார் கூறியதாவது: "ஆறுமுக நாவலர் 1861இல் திருக்குறளை பரிமேலழகர் உரையோடும், தம்முடைய அடிக்குறிப்புகளோ டும் பதிப்பித்தார். அதன் ஒரு படியை நான் மாத்திரமே வைத்தி ருந்தேன். ஆனால் எங்கு தேடியும் அதை நான் கண்டுபிடிக்க முடியவில்லை. மிக அருமையான நூல் போய்விட்டதே என்று நான் வருத்தப்பட்டுக் கொண்டிருந்தேன். இன்று நீங்கள் அனுப்பிய திருக்குறள் பதிப்புகளிலே, அந்நூல் இருப்பது கண்டு எல்லையற்ற மகிழ்ச்சி உண்டாயிற்று. நீங்கள் வீட்டுக்குள் வந்த பிறகு உங்களுக்கு வந்தனம் கூறாமல் வாசலிலேயே கூறவேண்டும் என்று காத்திருந்தேன்."

செட்டியார் எவ்வளவு பெரிய பண்பாளர். அவருடைய நூலை (அது எது என்று கூட எங்களுக்குத் தெரியாது) அவர் பெறுமாறு நாங்கள் செய்தது எதிர்ச்சையாக நிகழ்ந்த செயல். ஆனால் அந்த மகான் அதற்காக எவ்வளவு எங்களைப் பாராட்டினார் என்பதை நினைக்கும்போது இப்போதும் புல்லரிக்கின்றது.

இராமலிங்கம் உடனே அப்பதிப்பை வாங்கிப் புரட்டினார். சீவகசிந்தாமணி, சிலப்பதிகாரம் போன்ற நூல்களிலிருந்து அடிக்குறிப்புகளில் மேற்கோள்கள் அந்நூலில் தரப்பட்டிருந்தன. இதில் விசேஷம் என்னவென்றால் இவையெல்லாம் 1861இல் அச்சில் வராதவை. 1861இல் தமிழ்த் தாத்தாவின் வயது ஆறு. இதை மறக்க வேண்டாம்.

ஓர் அடிக்குறிப்பை இராமலிங்கம் வாசித்தபோது நான் துள்ளிக் குதித்தேன். சைவ சாத்திரம் ஒன்றிலிருந்து அதன் பெயரைக் கூறி மேற்கோள் ஒன்றைத் தந்த நாவலர் "இது சைவ சித்தாந்த சாத்திரம் பதினான்கினுள் ஒன்று" என்று குறிப்பிட்டிருந்தார். இந்த ஒரு குறிப்பு அருணாசலம் கொண்ட முடிவுகள் அனைத்தையும் தகர்த்து எறிந்துவிட்டது. பிள்ளை அவர்கள் 1866இல்தான் சித்தாந்த சாத்திரம் 14 என்று வரையறுக்கப்பட்டது என்று கூறி அந்த அஸ்திவாரத்தின் மேல் தம் முடிவுகளைக் கட்டி வைத்தார். மகா சந்நிதானம், "மரபு என்பதை இலேசில் தள்ள முடியாதே" என்று கூறியும் நான் ஏற்காமல் போனேனே என்று மெத்த வருந்தினேன். "வழக்கு வலியுடைத்து" என்று சேனாவரையரும் கூறியிருப்பதை நான் நினைவில் கொள்ளாதே போனேனே என்றும் வருந்தினேன்.

என்ன அதிசயமாக வாசல்படியில் நிற்கிறாரே என்று நாங்கள் எண்ணினோம். எங்களைப் பார்த்த உடன் தம்முடைய இரு கரங்களையும் மேலே தூக்கியபடி எங்களுக்கு வணக்கம் செலுத்தினார். நாங்கள் பதறிப்போய் விட்டோம். அவரைக் கையால் வணங்கியபடியே, "நீங்கள் இப்படி எங்களை வணங்குதல் முறையில்லை"

ஆக, முதல் பதிப்பு எவ்வளவு முக்கியம் என்பதைப் பல வருடங்களுக்கு முன்பே உணர்ந்து செயல்பட்ட செட்டியார் அறிஞருள் அறிஞர் என்பது நிதர்சனம்.

முதன்முதலில் வெளிவந்த திருவாசகப் பதிப்பின் இரண்டு படிகளைச் செட்டியார் அவர்கள் வைத்திருந்தார். ஒன்று முழுமை யான நல்லபடி; இரண்டாவதில் தலைப்புப் பக்கமும் மேலும் சில பக்கங்களும் இல்லை. செட்டியார் அவர்கள் ஒரு பழக்கத்தைக் கைக்கொண்டிருந்தார். தம்மிடம் இரண்டு அல்லது அதற்கு



திருவாசகம்

வேதாகமசித்தாந்தசைவசமயாசாரியரா

யெழுந்தருளியிருந்த

மாணிக்கவாசகசுவாமிகள்

திருவாய்மலர்ந்தருளியது.

இஃது

கையெழுத்துப்பிரதிகளிற்கற்றேர்சிலரிடத்தன்றி

ஞேரிடங்களிலேபுத்தகந்தோறும்பலவிதமாகமே

ட்டிருக்கைபற்றியிதனைச்சுத்தபாடமாகவெ

வழங்குவிக்கும்பொருட்டுத்தகுதியானவி...

ங்களிலிருந்துசுத்தப்பிரதிகள்வருவித்துச்

சென்னைக்கல்விச்சங்கத்துச்செந்தமிழ்ப்புலவராகிய-

கொட்டையூர்ச்

சிவக்கொ ... தேசிகர்

முதலாகியகனம் ... துவான்களாற்

பரி ... ஞ-

சின்னதம் ... யாரால்

மேற்சொல்வி ... புலவராகிய

திரு-வேங் ... லியாரது

சரஸ்வதியச்சு ... கப்பட்டது.

பு-முத்துவீ ... தலியாரால்

சாலிவாகனசகாத்தம் - ௲எ௱ இல் - ஜய(வரு)தைமீ

மேலும் சில படிகள் இருந்தால்தான், ஒரு படியையேனும் தாம் வைத்துக்கொண்டு மற்ற படி(களை) விற்கத் தலைப்படுவார். கல்கத்தா தேசிய நூலகத்தைச் சார்ந்த கேசவன் என்பவர் திருவாசகத்தின் முதற்பதிப்பின் படியைச் செட்டியாரிடமிருந்து பெற மிகவும் முயன்றார். செட்டியார் இசையவில்லை. செட்டியார் அவர்கள் தம்மிடம் இருக்கும் படிகளில் தலைப்புப் பக்கத்திலும் இன்னும் சில பக்கங்களிலும் தம் ரப்பர் ஸ்டாம்பு முத்திரையைப் பதிவு செய்து வைப்பார். கேசவன் அவர்கள் மிகவும் மன்றாடிக் கேட்டதால் திருவாசகத்தின் முதற்பதிப்பின் நல்ல படியை, தேச நலத்தை எண்ணி, 'கேசவனிடம் தந்தார். கொட்டையூர் சிவக் கொழுந்து தேசிகரே திருவாசகத்தை முதன்முதலில் வெளியிட்டார். செட்டியாரிடம் இப்புத்தகத்தை வாங்கிச் சென்ற கேசவன், செட்டியார் அவர்களுக்குப் பெருந்துரோகம் இழைத்து விட்டார். அவர் இந்தியாவில் அச்சு, பதிப்பு ஆகியவற்றின் வரலாற்றின் முதல் பாகத்தை 1985இல் வெளியிட்டார். அதில் செட்டியார் அவர்களிடம் பெற்ற திருவாசக நூலின் தலைப்புப் பக்கத்தைப் படம்பிடித்து வெளியிட்டிருந்தார். அப்புத்தகத்தின் தலைப்புப் பக்கத்தில் செட்டியார் அவர்களின் ரப்பர் ஸ்டாம்பில் முத்திரை பதிக்கப்பட்டிருந்தது. இந்தப் பகுதியின்மேல் தில்லி அருங்காட்சி யகத்தில் உள்ள ஒரு படிமத்தின் புகைப்படத்தைப் பொருத்தி விட்டு அதைப் படமெடுத்துத் தம் நூலில் வெளியிட்டார். கேசவனின் செய்கையை நான் துணிந்து ஒரு துரோகச் செயல் என்பேன், புத்தகத்தைத் தர மறுத்த செட்டியாரிடம் பலமுறை மன்றாடியே அவர் அதைப் பெற்றார். ஆனால் புத்தகம் செட்டியார் தந்தது என்பதைக் காட்ட அவருக்கு மனமில்லை. ஏதோ தாம் தேடிக் கண்டுபிடித்ததாக உலகோர் உணரவேண்டும் என்ற எண்ணத்தால் செட்டியார் அவர்களின் பெயரும், விலாசமும் அடங்கிய பகுதியை மறைத்து விட்டார். இதன் விளைவுகள் பல தீமைகளுக்கு இடந்தந்துள்ளன.

1. உண்மை வேண்டுமென்றே மறைக்கப்பட்டிருக்கிறது.
2. செட்டியார் அவர்களுக்குச் சேரவேண்டிய பெருமை வேண்டுமென்றே மறைக்கப்பட்டுவிட்டது.
3. கேசவன் அமைத்த புகைப்படப் படிமம், தலைப்புப் பக்கத்தில் உள்ள பல எழுத்துக்களை மறைத்துவிட்டது.
4. கேசவன் தலைப்புப் பக்கத்தில் தலையிட்டு ஒரு தவறான முன்மாதிரிக்குத் தாராளமாக இடம்தந்துவிட்டார்.
5. திருவாசக முதல் பதிப்பு வெளிவந்த காலத்திலேயே நூல்களில் புகைப்பட படிமம் இடம்பெற்றுவிட்டது என்ற பொய்யான தோற்றம் கேசவனால் உருவாக்கப்பட்டுவிட்டது.
6. பதிப்பில் தமிழ் வருடம் மாதம் ஆகியவையே இடம்பெற்றி ருந்தன. இவற்றை வைத்துச் சரியான முறையில் கேசவன் பதிப்பு ஆண்டைத் தரவில்லை. பதிப்பு ஆண்டு 1834 என்று அவர் காட்டியிருக்கிறார்.
7. முதல் பதிப்பு 1835 ஜனவரிபிப்ரவரியில் வெளிவந்தது.

எனக்கு மேலும் ஓர் ஐயம். கல்கத்தா நூலகத்திற்கு என்று பெறப்பட்ட திருவாசகம் அந்நூலகத்தில் சேர்க்கப்பட்டதா என்பதே.

ஷிகாகோ பல்கலைக்கழகம் கிரய ஒப்பந்தத்தை நிறைவு செய்த நிலையில், செட்டியாரின் மனைவியார் அன்பர் நை அவர்களிடம் ஒரு வேண்டுகோள் வைத்தார். நை அவர்கள் தம் புகைப்படம் ஒன்றை வழங்க வேண்டும் என்றும், அப்படம் செட்டியார் ஐயா படத்தின் பக்கத்தில் மாட்டப்பட வேண்டும் என்பதே அவ்வேண்டுகோள்.

தேசிய நூலகத்தோடு தொடர்புடைய கேசவன் செட்டியாரின் உதவியைப் போற்றியிருக்க வேண்டும். மாறாக தவறான முறையில் சுயப்பெருமையை நாடியது கொடுமையிலும் கொடுமை.

செட்டியார் அவர்கள் பற்பல திருவாசகப் பதிப்புக்களைச் சேகரித்துக் காத்து வந்தார். அதில் ஒரு பதிப்புப் பற்றி மட்டும் இங்கே கூறுகிறேன். இது 1868ஆம் ஆண்டு வெளிவந்தது. இந்நூலைப் பதிப்பித்தவர் ஒரு முசுலீம். அவர் பெயர் கா.பீர்காதர்லி ராவுத்தர். 142 ஆண்டுகளுக்கு முன்பு இந்து முசுலீம் நல்லிணக்கம் தமிழகத்தில் நிலவி வந்தது என்பதற்கு இந்நூல் ஒரு பென்னம் பெரிய அடையாளம். இந்நூலின் மீள்பதிப்பை எங்ஙனமேனும் வெளிக்கொணர நான் ஆசைப்பட்டேன். ஷிகாகோ பல்கலைக்கழகத்தார் செட்டியார் அவர்களின் நூல் நிலையத்தைக் கிரயம் பெற்று அதைப் பலரும் பயன்கொள்ளுமாறு சென்னையிலேயே அமைத்திருக்கின்றனர். தமிழுக்குப் புரியப்படும் ஒரு பெரும் தருமப்பணி இது. மேலே சொன்ன திருவாசக நூலை நான் வேறு எங்கும் காணமுடியவில்லை. ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலத்தின் இயக்குநர் அன்பர் திரு க. சுந்தர் அவர்கள் இந்நூலின் புகைப்படப் படிமத்தை எனக்கு அளித்து உதவினார். 24.06.2008 அன்று இந்நூலின் மீள்பதிப்பை, ரோஜா முத்தையா நினைவு வெளியீடாகவே வெளியிட்டேன். அன்பர் சுந்தர் அவரிடம் ஒப்படைக்கப்பட்ட நூலகத்தை அழகுறப் பேணிவரு கிறார். மேலும் பற்பல நூல்களைச் சேகரித்து அந்நூலகத்திற்கு வளம்கூட்டி வருகிறார்.

ராவுத்தர் ஐயா பதிப்பில் பல அற்புதமான அடிக்குறிப்புகள் உள. ஒன்று பற்றி மட்டும் இங்கு நான் கூறவேண்டும். திருவாசகத்தின் முதல் நான்கு பாடல்களை அகவல்கள் என்று குறிப்பிட்டு இன்று திருவாசகப் பதிப்புகள் வெளிவருகின்றன. சிவபுராணத்தின் முடிவில் ராவுத்தர் ஐயா தந்திருக்கும் அடிக் குறிப்புகள் புலவர்கள் போற்றும் வகையில் அமைந்திருக்கிறது. சிவபுராணம் கலிவெண்பாவில் அமைந்திருப்பதை அப்பெரியவர் நிறுவியிருக்கிறார். ராவுத்தர் ஐயா வெளியிட்டிருக்கும் நூலின் தொடக்கத்தில் சிவலிங்கம் ரிஷபதேவர் திருவுருவங்கள் இடம் பெற்றுள்ளன. மேலும் சிவமயம் என்ற மந்திரச் சொல்லும் இடம் பெற்றுள்ளது. ஆனால் ராவுத்தர் ஐயாவைப் பற்றிய செய்திகளை நான் பெற முடியாமல் தவித்துக்கொண்டு இருக்கிறேன், மீள்பதிப்பில் ரோஜா முத்தையா அவர்கள் ரப்பர் ஸ்டாம்பு முத்திரை தெளிவாக இடம்பெற்றுள்ளது. பின்புற அட்டையை செட்டியார் அவர்களின் திருவுருவப் படம் அலங்கரிக்கின்றது.

ரோஜா முத்தையாவின் நூலகத்தோடு தொடர்பு கொண்டால் ரோஜா முத்தையாவின் பண்புநலன்களின் ஒரு பகுதியேனும் தொடர்பாளர்களைப் பற்றிக் கொள்ளும் என்பது நானறிந்த உண்மை. விதிவிலக்காகப் போனவர் கேசவன் மட்டுமே.

ஷிகாகோ பல்கலைக்கழகம் கிரய ஒப்பந்தத்தை நிறைவு செய்த நிலையில், செட்டியாரின் மனைவியார் அன்பர் நை அவர்களிடம் ஒரு வேண்டுகோள் வைத்தார். நை அவர்கள் தம் புகைப்படம் ஒன்றை வழங்க வேண்டும் என்றும், அப்படம் செட்டியார் ஐயா படத்தின் பக்கத்தில் மாட்டப்பட வேண்டும் என்பதே அவ்வேண்டு கோள். அப்போது நை அவர்கள் என்ன சொன்னார் தெரியுமா? “செட்டியார் படத்தின் பக்கத்திலா? கூடாது. அவர் படத்தின்

“இப்படி புத்தகங்களைச் சேகரிக்க வேண்டும் என்று எப்படி உங்களுக்குத் தோன்றியது?” பதிலாக அவர் கூறியதாவது. “எப்படி தோன்றியதா? இதைத் தவிர வேறு ஒன்றும் எனக்குத் தோன்றவில்லை”.

கீழே மாட்டுங்கள்'' இத்தகு பண்பாளரான நை அவர்களோடு பழகும் பாக்கியம் பெற்றவன் நான். நை அவர்களே தம் மனைவியாரோடு எங்கள் இல்லத்திற்கு விஜயம் செய்து, நாங்கள் அளித்த விருந்தினையும் ஏற்றுக் கொண்டார்கள். ஊர் திரும்பிய நை அவர்களின் மனைவியார் எனக்கு ஒரு கடிதம் அனுப்பினார். அதில் தாம் வடுமாங்காயைச் சுவைத்து உண்டது பற்றி ஒரு குறிப்பு வரைந்திருந்தார்.

செட்டியார் அவர்களோடு உரையாடுவதே ஒரு சுகானுபவம். பெரிய அறிஞர்கள் அறிந்திரா உண்மைகள் பலவற்றை அவர் கொட்டுவார். அவர் பல சொல்லக் காமுற மாட்டார். பயனில சொல்ல மாட்டார். அவர் தாம் தேடிவைத்த தமிழ் நூல்களை நன்கு பயன்படுத்திக் கொண்டவர். பழைய அஞ்சல்தலைகள், ஆவணங்கள், பத்திரிகைகள், கடிதங்கள், திரைப்பட நாடக நோட்டிசுகள், இத்யாதி அவர் நூலகத்தில் இடம்பெற்றிருந்தன. அவர் ஒரு சமயம் கூறினார்: "நான் தபால் தலைகள் மூலம் பொருள் ஈட்டி அதைப் புத்தகம் வாங்கப் பயன்படுத்துகிறேன்.'' இது உண்மை. அரோண்டா என்ற கப்பல் முழுகிப் போயிற்று. பல மாதங்கள் கழித்து நீரில் மூழ்கி அதிலிருந்த பொருள்களை மீட்டனர். தோல் பையில் சேகரிக்கப்பட்ட கடிதங்களும் கிடைத்தன. அக்கடிதங்களில் அரோண்டா என்ற முத்திரையைப் பதித்து உரியவர்களுக்குக் கடிதங்கள் அனுப்பப்பட்டன. அதில் ஒரு கடிதம் செட்டியார் அவர்கள் வசம் இருந்தது.

ஆறுமுக நாவலர் பற்றி நாங்கள் பேசிக் கொண்டிருக்கும் போது, நாவலர் அவர்களின் திருக்கோவையார் முதல் பதிப்பின் கடைசிப் பக்கத்தில் அவர் இனி வெளியிடுவதாக இருக்கும் நூல் பட்டியலில் வளையாபதி போன்ற அரிய நூல்கள் இடம்பெற்றிருந்தன என்று சொன்னேன். செய்தியை செவிமடுத்த செட்டியார் அவர்கள் சிந்தனையில் ஆழ்ந்தார். இரண்டு வாரங்களுக்குப் பிறகு (மதுரை) வானொலி நிலையத்தார் செட்டியார் அவர்களை நேர்காண வந்தனர். அப்போது அவர் கூறிய செய்தி அவரது புத்தி கூர்மைக்கு ஓர் எடுத்துக்காட்டாக அமைந்தது. அவர் கூறியதாவது: "தமிழ்த் தாத்தாவைப் போல் புத்தகங்களைத் தேடிப்பிடித்து வெளியிடுவார் எவருமில்லை. ஆனாலும் அவர் ஊர் ஊராக அலையாமல் ஒருமுறை ஈழ நாட்டிற்குச் சென்றிருந்தால் ஏராளமான சுவடிகளை அள்ளிக்கொண்டு வந்திருக்கலாமே''.

ஹிந்து நாளிதழ் ரிப்போர்ட்டர் கணபதி அவர்கள் செட்டி யாரை நேர்காண வந்தபோது ஒரு கேள்வி கேட்டார். "இப்படி புத்தகங்களைச் சேகரிக்க வேண்டும் என்று எப்படி உங்களுக்குத் தோன்றியது?" பதிலாக அவர் கூறியதாவது. "எப்படி தோன்றியதா? இதைத் தவிர வேறு ஒன்றும் எனக்குத் தோன்றவில்லை''.

தி ஹிந்து நாளிதழ் செட்டியார் படத்தோடு அவர் நூலகம் பற்றிய விரிவான கட்டுரை ஒன்றையும் வெளியிட்டது. "A Life - time Quest" என்பதே அக்கட்டுரையின் தலைப்பு. இக்கட்டுரை வெளிவர நான் தி ஹிந்து அலுவலகத்துக்குச் சென்று ஏற்பாடு செய்ய முடிந்தது. கட்டுரை வெளிவந்த பிறகு செட்டியார் அவர்களைப் பார்க்கச் சென்றிருந்தேன். அப்போது இராமலிங்கம் அவர்களும் உடன் இருந்தார். அப்போது செட்டியார் அவர்கள், "கட்டுரையைப் படித்தேன். ஆனால் தலைப்பைப் படித்த எனக்குச்

சிரிப்புத்தான் வந்தது. என் தேடல் முழுவதும் . . . வாழ்நாள் முழுவதுமான தேடலா? இல்லவே இல்லை. ஜோலியோடு ஜோலியாக வாய்ப்புக் கிடைத்தபோது சேகரிக்கப்பட்டவை தாமே என்னிடம் உள்ள நூல்கள். கட்டுரையின் தலைப்பு எனக்குச் சிரிப்பையே உண்டாக்கியது." செட்டியார் அவர்களின் பணிவு எத்தகையது? அவர் கூறிய வாசகம் அப்பர் அடிகள் அருளிய வாசகத்தை ஒத்திருக்கிறதே. இதுபோன்றதோர் சூழலில், "விலா இறச் சிரித்திட்டேனே" என்றுதானே அப்பர் அருளியுள்ளார்.

ஒரு நேர்காணலில், செட்டியாரிடம் இப்படி ஒரு கேள்வி கேட்கப்பட்டது: "உங்கள் வாழ்வில் மிக மகிழ்ச்சி தந்த நிகழ்ச்சி எது? வருத்தம் தந்த செய்தி எது?" இதற்கு அவர் கூறிய விடை. "மிக மகிழ்ச்சியானது, தமிழ்த்தாத்தா வாழ்ந்த காலத்தில் நான் வாழக் கொடுத்து வைத்தேன் என்பது. மிக துக்கமான நிகழ்வு மூர்மார்க்கெட் எரிந்து போனது." மூர்மார்க்கெட் எரிந்து போனதை நினைத்து நினைத்து துக்கப்படுவார் அவர். அடடா! தேடினால் அங்கு எப்புத்தகத்தையும் பெறலாமே. ஒரு முறை என் வழிகாட்டியான திருலோக சீதாராம் அவர்களோடு மூர்மார்க் கெட் சென்று புத்தகங்களைத் தேடினேன். கடைக்காரர் "என்ன புத்தகம் வேண்டும்?" என்றார். பல ஆண்டுகளாக அச்சில் இல்லாத, ஈ. ஏ. அப்பாட் வரைந்த ஷேக்ஸ்பியரின் கிராமர் கிடைக்குமா" என்று இடக்காக ஒரு கேள்வி கேட்டேன். கேட்ட அக்கணமே அந்நூலின் பிரதி ஒன்றை அவர் எடுத்துத் தந்தார். ஒரு வாரத்திற்கு முன்பு வெளிவந்த மீள்பதிப்பு. நான் அசந்து போனேன். பழைய புத்தகக் கடைக்காரர் இந்நூலின் பெருமையை உணர்ந்து, மீள்பதிப்பு வந்த உடனேயே அதை வாங்கி வைத்தி ருப்பதைக் கண்டு வியந்து போனேன்.

தமிழுக்குச் சரியான இலக்கிய வரலாறு இன்னமும் எழுதப் படவில்லை என்பதே செட்டியார் அவர்களின் கருத்து. கூடிய வரையில் அனைத்து நூல்களையும் தேடி, அவையிற்றைப் பயன் கொண்டு வரலாறு படைக்கப்பட வேண்டும், இக்காரியத்தைச் சாதிப்பார் நம்மிடையே இல்லையே என்று செட்டியார் வருந்துவார்.

அபூர்வமான தகவல்களைச் செட்டியார் மூலம் நாம் தெரிந்து கொள்ள முடியும். கட்டடங்களைப் பற்றி ஆய்வு செய்ய வந்தவரிடம், செட்டியார் ஒரு பிரெஞ்சு சஞ்சிகையைக் காட்டி னார். அதில் ஒரு கட்டடம் தராசு மாதிரி கட்டப்பட்டிருந்தது. வந்தவரைப் பார்த்து. "இம்மாதிரி ஏதேனும் ஒரு கட்டடத்தைப் பார்த்ததுண்டா" என்று வினவினார். அவர் 'இல்லை' என்றார். செட்டியார் முகத்தில் ஒரு விஷமச் சிரிப்பு அரும்பியது. உடனே, தம் வீட்டிற்கு எதிரில் உள்ள வீட்டைப் பார்த்து வரச் சொன்னார். நாங்களும் போய்ப் பார்த்தோம். அது தராசு வடிவில் அமைந்த கட்டடம். செட்டியார் அவர்கள் பார்வை அலாதியானது. அது கூர்மையானது; தீட்சண்யம் உடையது.அவர் காண்பனவற்றை அவர் மனம் அப்படியே புகைப்படம் பாணியில் பதிவு செய்து வைத்திருக்கும்.

ஒருமுறை, அவர் என்னிடம், "தமிழ்த்தாத்தா உமர்கயாம் பாடல் களை மொழிபெயர்ப்பு மூலம் படித்துச் சுவைத்திருக்கிறார்; இது உங்களுக்குத் தெரியுமா?" என்றார். "தெரியாது" என்றேன். "இன்று தெரிந்துகொள்ளுங்கள். மின்னா நூருத்தின் மொழி பெயர்த்த

பாடல்களுக்கு ஐயர் பாயிரம் வழங்கியுள்ளார். படியுங்கள்" என்று ஒரு கையடக்க நூலைத் தந்தார். ஐயரின் சிறப்புப் பாயிரம்:

"ஓங்கிய சுவைசேர் பர்ஸிய மொழியில்
உமர்கையாம் மொழிந்தபாக் களைநல்
ஆங்கிலமுதலா மொழிகளிற் பல்லோர்
ஆக்கினர்; அவை தமிழ் செய்தான்
தேங்குசீ ரன்ன வாசலோன் முகம்ம
தப்துல்கா திர்ப்பெயர்த் திறலோன்
தங்கிலா குணத்தோன் றருமின்ன நூருத்
தீனெனு நல்லொழுக் கினனே."

உடனேயே அந்நூலின் ஒரு படியை அவர் எனக்கு அளித்தார். இது நிகழ்ந்த தேதி 2.1.1987

இந்நூலை அன்பர் கதிர் மீள்அச்சு செய்துள்ளார். விலை ரூபாய் 20. கிடைக்குமிடம்: அகரம், மனை எண். 1, நிர்மலா நகர், தஞ்சாவூர் 613 007

செட்டியார் அவர்கள் அசைக்க முடியாத தெய்வ நம்பிக்கை உடையவர். மகாத்மா காந்தியிடம் எல்லையற்ற ஈடுபாடு கொண்டவர். புத்தகப் பிரியர்களை மிகவும் நேசிப்பார். அவர் அதிக கவனம் செலுத்தியது பழைய நூல்கள் மீதே.

செல்லரித்த புத்தகங்களைத் தனியே ஓர் இடத்தில் வைத்திருந் தார். "இவைகளையுமா காப்பற்ற வேண்டும்" என்று அவரைக் கேட்டேன். அப்போது அவர் கூறியதாவது: "செல்லரிப்புகள் பல விதம். ஆக பலவிதமான செல்லரிப்பு நூல்களை நான் காப்பாற்றி வருகிறேன். இது வகையில் ஆய்வு செய்வாருக்கு இவை மிகவும் உதவும்" என்றார்.

பலப்பல அரிய நூல்கள், பலவிதமான சஞ்சிகைகள், நாளிதழ்கள் அவர் நூல்நிலையத்தில் பேணிக் காப்பாற்றப்பட்டுவந்தன. முக்கிய மான செய்திக் குறிப்புகளை முறையாகக் கத்தரித்து வைத்து, ஒவ் வொன்றையும் வெள்ளை செலஃபோன் தாளில் செருகி வைத்தி ருப்பார். அவர் சேகரித்த குறிப்புகள் சில இலட்சங்கள் ஆகும்.

பாம்புகளைப் பற்றிய ஆய்வுச் செய்திகளை அபரிமிதமாக சேமித்து வைத்திருந்தார். அவைகளைக் கொண்டு பத்தாயிரம் பக்கத்தில் ஒரு நல்ல நூலை உருவாக்க முடியும். ஊழல் பற்றி அவர் சேகரித்து வைத்த தகவல்கள் ஏராளம்.

நாடகங்கள் 300க்கு மேல் அவர் சேகரித்து வைத்திருந்தார். இவற்றில் பல மீள்பதிப்புப் பெறவே இல்லை. அப்பெரியாரின் வாழ்க்கை பற்றி ஒரு தனி நூலே வரையப்பட வேண்டும்.

ஒரு நூலைப் பற்றி என்ன என்ன தகவல்கள் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்கு ஒரு பட்டியல் அமைத்து வைத்திருந்தார். அதைக் கண்ணுற்ற நை அவர்கள், இப்படி ஒரு பட்டியலை ஒரு கமிட்டி போட்டு நாங்கள் தயாரித்தோம். அதைவிடவும் சிறப்பான பட்டியலைத் தனி ஒரு மனிதரான செட்டியார் செய்திருக்கிறாரே. இவர் அசாதாரண அறிஞர் என்று விதந்து பாராட்டினார்.

அவரைப் பற்றி மேலும் நான் என்ன சொல்ல. அமரர் செட்டி யார் ஓர் அசாதாரண அறிஞர். சற்றும் கர்வம் இல்லாதவர். பெரிய பரோபகாரி. அவர்தாம் தமிழைக் காப்பாற்றியவர். அவர் புகழ் ஓங்குக.

55

திராவிட இயக்க ஏடுகளின் பெட்டகம்: ரோஜா முத்தையா நூலகம்

■ எஸ். வி. ராஜதுரை

'நீதிக் கட்சி' எனப் பரவலாக அறியப்படும் 'தென்னிந்திய லிபரல் பெடரேஷனின்' நூறாண்டு நிறைவு விழாத் தொடங்க இன்னும் சில ஆண்டுகளே உள்ளன. நீதிக்கட்சியிலிருந்து தொடங்கி ஏறத்தாழ ஒரு நூற்றாண்டுக்காலமாக தமிழக அரசியல், பண்பாட்டு,பொருளாதாரத் தளங்களில் பெரும் மாற்றங்களைக் கொண்டு வந்துள்ள திராவிட இயக்கத்திற்குச் செட்டிநாடு பல்வேறு வகையான பங்களிப்புகளைச் செய்துள்ளது. நீதிக்கட்சி, சுயமரியாதை இயக்கம், திராவிடர் கழகம், திராவிட முன்னேற்றக் கழகம், எம்.ஜி.ஆர்.தலைமையில் இருந்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆகியவற்றில் மிகச் செல்வாக்குப் பெற்றிருந்த தலைவர்களையும் சிந்தனையாளர்களையும் செட்டிநாடு வழங்கியுள்ளது. நீதிக் கட்சியைச் சேர்ந்த தலைவர் பி. டி. ராஜன் போன்றோரால் தொடங்கிவைக்கப்பட்ட தமிழிசைக் கிளர்ச்சிக்குப் பருண்மையான வடிவம் கொடுத்து, தமிழிசைச் சங்கத்தை நிறுவிய ராஜா அண்ணாமலைச் செட்டியாரைத் தமிழகத்திற்கு வழங்கியதும் செட்டிநாடே.

திராவிட இயக்கம் இன்னும் 'வரலாறாக' ஆகவில்லை. எனினும் அதில் எத்தனையோ வரலாற்று மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. அந்த இயக்கத்தின் தோற்றம், வளர்ச்சி, மாற்றம் முதலியனவற்றை அறிந்து கொள்வதற்கும் செட்டிநாட்டைச் சேர்ந்தவர்தான் துணைபுரிகின்றார். கடல் கடந்து வாணிபம் புரிந்த, மலேயாவிலும், பர்மாவிலும்,இலங்கையிலும் கொடி கட்டிப் பறந்த, கானாடுகாத்தான் கோட்டையிலோ, செட்டிநாட்டின் வேறு பகுதி யிலோ ஒரு ஏக்கர், ஒன்றரை ஏக்கர் பரப்பளவுக்கு மாளிகைகளைக் கட்டி வாழ்ந்த குடும்பம் எதனையும் சேராத, உயர்நிலைப்பள்ளிப் படிப்பைக் கூட முடிக்காத ஒரு பாமரர் தான்,அவர் பிறக்க நேரிட்ட அந்த நகரத்தார் சமுதாயத்தைச் சேர்ந்த பல பெரிய மனிதர்களைத் தமிழக வரலாறு மறந்து விடாமல் செய்வதற் கானஆழமான அத்திவாரத்தை உருவாக்கிச் சென்றிருக்கிறார்.

நகரத்தார் சமூகத்தில் அந்தக் காலத்தில்,ஏன் இப்போதும்கூட, தடுக்கி விழுந்தால் ஒரு 'முத்தையா' வைப் பார்க்கலாம். கொங்கு

பாரதிதாசன் பல்கலைக் கழகத்தில் பெரியார் உயராய்வு மையத்தின் தலைவராகவும் பேராசிரியராகவும் சிலகாலம் பணியாற்றினார். தமிழ் அரசியல் மட்டுமின்றி உலக அரசியலை ஆராய்ந்து தமிழில் எழுதி வருபவர். வ. கீதாவுடன் இணைந்து பல நூல்களை எழுதியுள்ளார். ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகத்தில் அக்கறை கொண்டவர்.

நாட்டில் 'பழனிசாமி'களைப் போல, ஒரு முத்தையாவை இன்னொரு முத்தையாவிடமிருந்து வேறுபடுத்தி அறிந்து கொள்வது எவ்வாறு?அதிலும் ஒரே பகுதியைச் சார்ந்த இரண்டு 'முத்தையா'க்கள் புத்தகம், பத்திரிகைத் தொடர்பான விடயங்களில் அக்கறை கொண்டவர்களாக இருக்கும்போது? சென்ற நூற் றாண்டில் பிறந்து வளர்ந்தவர்களுக்கு 'முல்லை முத்தையா'வைத் தெரியும். அவர் புத்தகப் பதிப்பாளர். அருமையான புத்தகங்களை வெளியிட்டவர். எனவே நமது முத்தையா, அவரிடமிருந்து தன்னை வேறுபடுத்திக் காட்ட 'ரோஜா' என்னும் அடைமொழியைத் தன் பெயருடன் இணைத்துக்கொண்டார். அது ஒன்றும் பெரிய பட்டமல்ல; விளம்பரப் பலகைகள் எழுதுவதைத் தொழிலாகக் கொண்டிருந்த அவரது சிறுநிறுவனத்தின் பெயர் 'ரோஜா ஆர்ட்ஸ்'.

2

இன்னும்'பாடல் பெறாத'அந்த மாமனிதரைப் பற்றிய முழுமையான வரலாறு ஏதும் எழுதப்படவில்லை.கிடைத்தவை எல்லாம் வாய்வழிச் செய்திகளே. அவர் விளம்பரப் பலகை யொன்றை எழுதுகையில் ஏதோ ஒரு நூலின் பழம் பதிப்பொன்றைப் பார்த்திருக்க வேண்டும்.; அல்லது ஏதோ ஒரு பத்திரிகை நறுக்கொன்று அவரது கவனத்தை ஈர்த்திருக்க வேண்டும். இன்னும் சில ஆண்டுகள் சென்றால்,அவை வரலாற்று ஆவணக் களஞ்சியத்தில் சேர்க்கப்படும் தகுதியைக் கொண்டி ருக்கின்றன என்னும் தொலைநோக்குப் பார்வை அவரிடம் தோன்றியிருக்கக்கூடும்.' விளம்பரப் பலகைகள்' எழுதுவதை விட்டுவிட்டுப் பழம் புத்தகங்களை,பத்திரிகைகளைத் திரட்டத் தொடங்கினார்.அச்சடிக்கப்பட்ட ஒவ்வொரு காகிதத்திலும் பயனுள்ள விடயம் ஒன்று இருக்கிறது என்னும் அவரது நம்பிக்கை, சென்னை நகரத்திற்குப் பலமுறை பயணம் செய்ய வைத்திருக்கிறது. சென்னை சென்ட்ரல் நிலையத்திற்கு அருகிலிருந்த 'மூர் மார்க்கெட்டிலிருந்த (அது இருந்தபோது உயிர் வாழ்ந்தவர்கள், அதைப் பார்க்கக் கொடுத்துவைத்தவர்கள் பாக்கியவான்கள்) பழைய புத்தக வியாபாரிகளிடமிருந்து அவர் விலை கொடுத்து வாங்கிச் சென்றவை அவரது சேமிப்பு வங்கி (புத்தக வங்கி). அன்று அவரது சேகரிப்பின் அருமையை, மதிப்பை அறிந்திருந்த வர்கள் மிகச் சிலரே. அறுபத்தியாறு ஆண்டுகள்(1926-1992) வாழ்ந்த அந்த அற்புதமான மனிதர், கோட்டையூரில் நிறுவிய ஆய்வகத்தில் ஆயிரக்கணக்கான நூல்களையும் ஆவணங்களையும் விட்டுச் சென்றார். 'க்ரியா' ராமகிருஷ்ணன், சென்னைப் பல்கலைக் கழக நூலகவியல்துறைப் பேராசிரியர் பி.சங்கரலிங்கம், சிக்காக்கோ பல்கலைக்கழகத்தில் பணியாற்றி வந்த பேரறிஞர் ஏ. கே. ராமானுஜம் போன்றோர் முயற்சி எடுத்து, சிக்காக்கோ பல்கலைக்கழகத்தின் உதவியுடன் ரோஜா முத்தையா விட்டுச் சென்ற அறிவுக் களஞ் சியத்தைச் சென்னைக்குக் கொண்டு வந்தனர்.

தமிழ் மண்ணில் வேர் கொண்டுள்ள இந்த ஆய்வகம் தமிழ் நாட்டிலேயே இருக்கட்டும் எனப் பெருந்தன்மையோடு முடிவு செய்தது சிக்காக்கோ பல்கலைக்கழகம். கோட்டையூரிலிருந்து சென்னையின் வடமேற்குப் பகுதிக்கு மாற்றலாகி வந்த இந்த ஆலயம் இப்போது அதே சென்னையின் தென்கிழக்குப் பகுதிக்குச் சில ஆண்டுகளுக்குமுன் இடம்பெயர்ந்துள்ளது.

தமிழ் மண்ணில் வேர் கொண்டுள்ள இந்த ஆய்வகம் தமிழ் நாட்டிலேயே இருக்கட்டும் எனப் பெருந்தன்மையோடு முடிவு செய்தது சிக்காக்கோ பல்கலைக்கழகம். கோட்டையூரிலிருந்து சென்னையின் வடமேற்குப் பகுதிக்கு மாற்றலாகி வந்த இந்த ஆலயம் இப்போது அதே சென்னையின் தென்கிழக்குப் பகுதிக்குச் சில ஆண்டுகளுக்குமுன் இடம்பெயர்ந்துள்ளது.



மாலை : 3. — மலர் 2. சனிதோறும் வெளிவரும் விலை அணா 1· வெளிநாடு 0-16

திராவிடன்

வாரவெளியீடு ஆசிரியர் என்.வி.நடராசன்

(3-9-1949)

சவுண்டிகளுக்கு சவுக்கடி

சிலதுகளுக்குத்தங்கள்முதுகில் இருக்கும் புண்ணும் அதன் துர்நாற்றமும் தெரிவதில்லை. அப்படித் தெரிந்தாலும் அதைப்பற்றி கவலைப்படுவதோ, வெட்கப்படுவதோ கிடையாது. அதுகள் அவ்வளவு மானரோஷ மற்ற மரக்கட்டைகள் என்பது அர்த்தம்.

ஆனால், அதுகள் மற்றவர்கள் முதுகில் உண்டாகும் சிறு புண்ணைப்பற்றி பெரும் வாய்ப்பறையடித்து, ஆனந்தம்கொள்வதில் மட்டும், பலே சமர்த்தாக யிருக்கும். பொதுவானவர்கள் இதுகளைப் பார்த்து ஏம்பா, அவர்கள் புண்ணைப்பற்றி அமர்க்களம் செய்கிறீர்களே ! உனது முதுகில் நாறிப் போய் கிடக்கின்றதே அதைக் குணப்படுத்த வில்லையே என்றால் பல்லையிளிக்கும்.

பெரியார் அவர்களின் திருமணம்காரணமாக கழகத் தோழர்களிடையே மனவேதனையும், பிளவும், வீண் குரோதங்களும் ஏற்பட்டுள்ளன அல்லவா ! அதைப் பார்த்து சில பிறவிகள்கும்மாளம் அடிக்கின்றன. கழகமே அழிந்து விட்டது என்றும் பிதற்றுகின்றன. கழகத்தார் சொல்லில்வீரர்கள், செயலில் மகா மோசம், என்றும், பெரியாரே இப்படியாகி விட்டால் மற்றவர்களுக்குச் சொல்ல வேண்டுமா ? எனவே கழகம் அழிந்து விட்டது, பலே பலே என்று பரவசம் அடைகின்றன..

திருமணஏற்பாட்டை மனதில் நினைத்து, அதைச் செயல் முறையில் கொண்டு வரும் வரையில் பெரியார் அவர்களை கழகத் தோழர்கள் இன்றைய நிலை போன்று என்றும் கண்டிக்க முன் வந்ததில்லை. சிறு சிறு தவறுதல்கள் இருப்பினும் கொள்கையே முக்கியமாகக் கருதி அவைகளைத் தோழர்கள் பொருட் படுத்தியது கிடையாது.

திருமண ஏற்பாட்டினால், பெரியார், எக்கொள்கைக்காகசலியாது உழைத்து வந்தாரோ அது நாசமாக்கப்படுகிறது, எனவே தலைவராயிருப்பினும் தவறு செய்வதை அதுவும் இயக்க நலனுக்கே இழிவு தேடும் இச் செயலை பெருவாரியான கழகத் தோழர்கள் கண்டித்துள்ளது நாடறிந்ததாகும்.

தலைவர், நாட்டுக்கு இதுவரை உழைத்தபெரியார், என்பதற்காக கழகத்தவர் விட்டுக்கொடுத்து மழுப்பிவிடவில்லை. அவர் நலனில் இன்றுங் கூட பெரிதும் அக்கரையுடையவர்களும் கொள்கையைக் கருதி அவரது செயலை எதிர்த்துள்ளனர். இவ்வளவு தன்மானத்துடன் கழகப் பெருவாரியான தோழர்கள், செயலில் காட்டியிருக்கும் போது கொள்கையோ, இயக்கமோ அழிந்து விடுமா என்பது கூட நையாண்டி செய்யும் அறிவிலிகளின் புத்திக்கு எட்டவில்லை போலும் !

தலைவராயிருப்பினும், அவர்

திராவிடன் இதழ் 3.9.1949

பின்னர் வரலாற்றறிஞர் எஸ். முத்தையா (சென்னை மாநகரத்தின் தோற்றம், வளர்ச்சி பற்றிய அருமையான நூல்களை எழுதியுள்ளவர்), தியடோர் பாஸ்கரன் போன்றோரும் இந்த நூலகத்தின் வளர்ச்சிக்குத் தம் பங்களிப்பைச் செய்துள்ளனர். நூலகத்தின் தற்போதைய இயக்குநர் திரு சுந்தர் அவர்கள் பொறுப்பேற்றுக் கொண்டபின், இன்னும் ஏராளமான அறிவுச் செல்வங்கள் இந்த அறிவாலயத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளன. உதிர்ந்து பொடிப் பொடியாகிக் கொண்டிருக்கும் புத்தகங்கள், பத்திரிகைகள் எல்லாம் நவீன அறிவியல் தொழில்நுட்பம் வழியாகப் புத்துயிர்

பெற்று நுண்படங்களாக்கப்பட்டுப் பாதுகாக்கப்படுகின்றன. இந்தியாவில்,புது டில்லியிலுள்ள நேரு அருங்காப்பக நூலகத்தி லுள்ளவை போல அனைத்துத் தொழில்நுட்ப வசதிகளையும் கொண்டுள்ள ஒரே ஆய்வு நூலகம் இது மட்டும்தான்.

3

ஆய்வாளர்கள் படிப்பதற்கும் தங்களுக்குத் தேவையான தரவுகளைத் தேடிக் கண்டறிவதற்கும், தேவையான ஆவணங் களின் புகைப்படப் படிகளையோ,நுண்படங்களையோ பெறுவதற்கும் தனியாக ஒரு அறை 'ஏ.கே.ராமானுஜம் வாசக அறை' இங்கு உள்ளது. அண்மையில் தொல்லியல் அறிஞர் ஐராவதம் மகாதேவன் அவர்கள் சிந்துவெளி நாகரிகம், தமிழ் பிராமி எழுத்து முதலியன தொடர்பாகத் தான் சேர்த்து வைத்திருந்த அனைத்து நூல்களையும் ஆவணங்களையும் ரோஜா முத்தையா நூலகத்திற்கு அன்பளிப்பாக வழங்கியுள்ளார். அதனையொட்டி, இந்த நூலகத்தில் 'சிந்துவெளி ஆராய்ச்சி மையம்' உருவாக்கப்பட்டுள்ளது.

ஆய்வாளர்கள் படிப்பதற்கும் தங்களுக்குத் தேவையான தரவுகளைத் தேடிக் கண்டறிவதற்கும், தேவையான ஆவணங் களின் புகைப்படப் படிகளையோ,நுண்படங்களையோ பெறுவதற்கும் தனியாக ஒரு அறை 'ஏ.கே.ராமானுஜம் வாசக அறை'இங்கு உள்ளது. அண்மையில் தொல்லியல் அறிஞர் ஐராவதம் மகாதேவன் அவர்கள் சிந்துவெளி நாகரிகம், தமிழ் பிராமி எழுத்து முதலியன தொடர்பாகத் தான் சேர்த்து வைத்திருந்த அனைத்து நூல்களையும் ஆவணங்களையும் ரோஜா முத்தையா நூலகத்திற்கு அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

இந்த நூலகத்தில் அறிவு பல்வேறு வடிவங்களில் நூல்களாக, பத்திரிகை நறுக்குகளாக, பழம் சஞ்சிகை களாக, திரைப்பட, நாடக விளம்பர 'நோட்டீசு'களாக, சினிமா சுவரொட்டிகளாக, திருமண அழைப்பிதழ்களாக, தனிமனிதர்கள் தங்களுக்கிடையே எழுதிய கடிதங்களாக, பழைய கணக்குப் பேரேடுகளாக, கிராமபோன் இசைத்தட்டுகளாகபாதுகாக்கப் படுகிறது. பழைய கணக்குப் பேரேடுகள் எப்படி 'அறிவின்' வடிவங்களி லொன்றாக இருக்க முடியும்? முதலில், இந்தத் தலைமுறையைச் சேர்ந்த இளம் மக்களுக்கு நமது நாட்டு நாணயம் ரூபாய்,அணா, காசு (பைசா) என்று இருந்தது தெரியுமா? ஒரு ரூபாய்க்கு 16 அணா, ஒரு அணாவுக்கு நான்கு காலணா, ஒரு காலணாவுக்கு 16 காசு. உள்நாட்டு ,வெளிநாட்டு வாணிபத்தில் நீண்ட மரபுடையது நமது தமிழகம் என்பது பொதுவாகப் பலரும் அறிந்த செய்தி. ஆனால், 100 - 120 ஆண்டுகளுக்கு முன் பற்று வரவுக் கணக்குகள் எப்படி எழுதப்பட்டன என்பது எத்தனை பேருக்குத் தெரியும்? நாடக நிகழ்ச்சிக்கான விளம்பர நோட்டீசுகள் எப்படி 'அறிவின் வடிவமாக' இருக்க முடியும்? இவற்றிலிருந்து பல தகவல்களைத் திரட்ட முடியும். எத்தகைய நாடகங்கள் முன்பு பிரபலமாக இருந்தன, அவற்றின் புரவலர்கள் யார் என்பன போன்ற தகவல்கள் மட்டுமல்ல, எந்த சாதியைச் சேர்ந்தவர்களுக்கு நாடகம் பார்க்க அனுமதி தரப்படவில்லை என்னும் தகவலும் கிடைக்கும். பழைய புகைப்படங்களும் இங்கு முக்கிய ஆவணங்களாகச் சேகரிக்கப்பட்டுள்ளன. இவற்றில் 18601864ஆம் ஆண்டுகளில் ஆங்கிலேய இராணுவ அதிகாரிகளிலொரு வராக இருந்த கேப்டன் லின்னேனியஸ் ட்ரைப் என்பார் எடுத்த, சென்னை சேத்துப்பட்டிலுள்ள ஸ்பர்டாங்க்குக்கு அருகில் இருந்த ஒரு இந்துக் கோவிலின் புகைப்படமும் அடங்கும்.அந்தக் காலத்தில் அங்கு எத்தனைப் பனைமரங்கள் இருந்தன!

இப்படிப் பல்வேறு வகையான ஆவணங்கள் ஏறத்தாழ ஒன்றரை இலட்சம் இந்த நூலகத்தில் உள்ளன.இதில் மிகத் தொன்மையானது 1804இல் அச்சிடப்பட்ட தமிழ் நூலான 'கந்தரந் தாதி'. அச்சேறிய திருக்குறளின் எண்ணற்ற பதிப்புகள் இங்கே உள்ளன யாழ்ப்பாணச் சைவ அறிஞர் ஆறுமுக நாவலர் பதிப்பித்

தது உட்பட. சங்க இலக்கியமா, கம்ப இராமாயணமா, பெரிய புராணமா, பாரதியார் பாடல்களா, பாரதிதாசன் கவிதைகளா பல்வேறு பதிப்புகள் ஆகியன இந்நூலகத்தில் இடம்பெற்றுள்ளன.

4

அண்மைக் காலமாகத் திரட்டப்பட்டு வரும் பொருட்களில் பழைய இசைத்தட்டுகளும் அடங்கும். கிராமஃபோன் கருவியில் சுழல வைத்து இசைக்கப்பட்ட தட்டுகள், 1920 முதல் 1930 வரையில் வெளிவந்த பல இசைத்தட்டுகள் உள்ளன. எம்.கே.தியாகராஜ பாகவதரின் பாட்டுகள், பபூன் சண்முகத்தின் நகைச்சுவைப் பாடல்கள் முதலியன உள்ள இசைத்தட்டுகள் குறிப்பிடத்தக்கன. திரைப்பட இசை, கர்நாடக இசை ஆகியவற்றின் வளர்ச்சி, அவை பிரபல்யம் அடைந்த விதம் ஆகியனவற்றை ஆய்வு செய்பவர்களுக்கு இவை முக்கியமானவை. தமிழகத்தில் சமய நல்லிணக்கம் எவ்வாறு பேணப்பட்டு வந்தது என்பதற்கு இந்த இசைத்தட்டுகள் சாட்சியமாக விளங்குகின்றன. இந்து சமயத்தைச் சேர்ந்தவர்கள் முஸ்லீம் பாடல்களையும் முஸ்லீம் பாடகர்கள் முருகன் பற்றிய பாடல்கள் போன்ற இந்து சமயப் பாடல்களையும் அந்தக் காலத்தில் பாடியுள்ளனர். கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணனுக்கு உள் உந்துதலாகவும் முன்னோடியாகவும் இருந்தது பபூன் சண்முகத்தின் 'காமிக்' பாட்டுகள்.

இலக்கியம், நாட்டு மருத்துவம், சமயம், தத்துவம், நாட்டார் வழக்காற்றியல், நாட்டார் கலை, இதழியல், வெகுமக்கள் கலை, காந்தியம், பெண்ணியம், பெரியாரியம், வரலாற்றியல் எனப் பல்வேறு ஆய்வுத் துறைகளில் நாட்டமுடையோருக்குத் தோண்டத் தோண்ட குறையாத அறிவுக் கனிமங்கள் இங்கே உள்ளன.

❑

திராவிட இயக்கத்தைப் பற்றிய ஆராய்ச்சிகளை மேற்கொள்வோருக்கு இன்றியமையாத அந்த இயக்க ஏடுகள் அரும்பாடுபட்டுச் சேர்த்து வைக்கப்பட்டுள்ளன: தந்தை பெரியார் 1925இல் தொடங்கி இடையில் ஏறத்தாழ இரண்டாண்டுக்காலம் நிறுத்தப்பட்டு (அந்தக் காலகட்டத்தில் தான் அண்ணாவின் 'திராவிட நாடு' தொடங்கப்பட்டது) 1949ஆம் ஆண்டு வரை நடத்தப்பட்டு வந்த 'குடி அரசு' இதழ்கள் கிட்டத்தட்ட அனைத்தும் ரோஜா முத்தையா நூலகத்தில் உள்ளன. அரசாங்க ஒடுக்குமுறையின் காரணமாக 'குடிஅரசு' நிறுத்தப்பட்டபோது, அதன் இடத்தை நிரப்புவதற்காகத் தொடங்கப்பட்ட 'புரட்சி',அந்த ஏட்டுக்கும் தொல்லைகள் வந்தவுடன்,அவை இரண்டின் இடத்தையும் எடுத்துக்கொண்ட 'பகுத்தறிவு' ஆகிய வார ஏடுகள் அனைத்தும் இங்கு உள்ளன. அதேபோல, அறிவியல், பகுத்தறிவு, பெண் விடுதலை முதலியன தொடர்பான கட்டுரைகள் அடங்கிய அறிவுக் களஞ்சியமான 'பகுத்தறிவு'மாத இதழ்கள் (ஒன்றே ஒன்றைத் தவிர) அனைத்தும் இந்த நூலகத்தில் கிடைக்கின்றன. நீதிக் கட்சி, சுயமரியாதை இயக்கக் களப் போராளியும் அற்புதமான சிந்தனையாளருமான ஜே.எஸ்.கண்ணப்பரை ஆசிரியராகக் கோண்டு தொடங்கப்பட்ட தும் பின்னர் பெரியார் ஆசிரியர் பொறுப்பை மேற்கொண்டு நடத்தி வந்ததுமான நீதிக்கட்சி/சுயமரியாதை இயக்க நாளேடு 'திராவிடன்', நீதிக் கட்சியின் வார ஏடான 'ஜஸ்டிஸ்', 1940களில் பெரியார் தொடங்கிய 'நியூ ஜஸ்டிஸ்'

தந்தை பெரியார் 1925இல் தொடங்கி இடையில் ஏறத்தாழ இரண்டாண்டுக்காலம் நிறுத்தப் பட்டு (அந்தக் காலகட்டத்தில் தான் அண்ணாவின் 'திராவிட நாடு' தொடங்கப்பட்டது) 1949ஆம் ஆண்டு வரை நடத்தப்பட்டு வந்த 'குடி அரசு' இதழ்கள் கிட்டத்தட்ட அனைத்தும் ரோஜா முத்தையா நூலகத்தில் உள்ளன.



EIGHT PAGES

Regd. No. M. 1263

MOFUSSIL SUBSCRIPTION

Monthly	... Rs.	1-4-0
Quarterly	... Rs.	3-8-0
Half-yearly	... Rs.	7-0-0
Yearly	... Rs.	14-0-0

Government, Municipalities, District Boards, etc. Rs. 1—4—0 per month.

FOREIGN COUNTRIES—Rs. 8-4-0 per month

Justice

(With which THE NEW TIMES is Incorporated)

No. 203] MADRAS, MONDAY, AUGUST 30, 1937 [HALF ANNA

LOCAL SUBSCRIPTION

Monthly	... Re.	1-0-0
Quarterly	... Rs.	3-0-0
Half-yearly	... Rs.	6-0-0
Yearly	... Rs.	12-0-0

Government, Corporation, etc., Rs. 2 per month.

TENDER NOTICE

ANDHRA UNIVERSITY

NOTIFICATION

Sealed tenders for constructing a brick tank of 35' diameter and 12'-deep of 10,000 c. ft. capacity will be received by the *Registrar, Andhra University, Waltair,* till 12 noon of 11th September, 1937. Plans and specifications can be had from the Registrar on payment of Re. 1.

Waltair, 27-8-'37. (500)

FOR SALE

LINO-TYPE MACHINES FOR SALE!

The Perfect complexion soap

MYSORE Sandal SOAP

THE GOVT: SOAP FACTORY, BANGALORE.

ADVERTISE

Is the business feeling bad?

ADVERTISE!

Stocks and Shares make you mad?

ADVERTISE!

Grumbling never paid the rent;
Worrying never made a cent,
If on profits you are bent,

ADVERTISE!

Out the grouser from your list;
Be a cheery optimist;
Jump above depression's mist—
You have lots and lots to sell?

ADVERTISE!

Say, it often, say it well—

ADVERTISE!

Advertise in "Justice"—J. P. S.

ADVERTISE!

Advertise your goods to-day,
Advertise the modern way,
Advertise and make it pay—

Those Rapid Changes in Temperature make you susceptible to

Colds & Sore Throat

FORMAMINT—by disinfecting your mouth and throat—will relieve the soreness and protect you against infectious diseases, such as Influenza, Diphtheria, etc.

30.8.1937 ஜஸ்டிஸ் இதழ்

ஆங்கில வார ஏடு, பின்னர் கி. வீரமணியை ஆசிரியராகக் கொண்டு தொடங்கிய 'உண்மை' ஏடு ஆகியவையும் இங்குள்ளன.

1928இல் தந்தை பெரியாரின் துணைவியார் நாகம்மையாரால் தொடங்கப்பட்டதும் பெரியாரை ஆசிரியராகவும் சுயமரியாதை இயக்க முன்னோடிகளான எஸ்.ராமநாதன், சா.குருசாமி ஆகியோரைத் துணை ஆசிரியர்களாகவும் கொண்டு இரண்டாண்டுக் காலம் நடத்தப்பட்ட ஆங்கில வார ஏடான 'ரிவோல்ட்டின்' முக்கிய இதழ்கள் நுண்படங்களாக எடுக்கப்பட்டு பாதுகாக்கப்பட்டுள்ளன.

பிரெஞ்சிந்தியப் பகுதியாக இருந்த புதுச்சேரியில் சுயமரியாதை இயக்கம் காலூன்றி, வளர்ச்சியடைவதற்கு மூலகாரணமாக இருந்ததும் சா. குருசாமியை (குத்தூசி குருசாமியை) ஆசிரியர்களிலொருவராகக் கொண்டிருந்ததுமான 'புதுவை முரசு' இதழ்கள் கிட்டத்தட்ட அனைத்தும் இந்த நூலகத்தில் திரட்டி வைக்கப்பட்டுள்ளன. பாரதிதாசனின் புரவலரும் புதுவைப் பகுதி சுயமரியாதை இயக்கத் தூண்களிலொருவருமான தாழ்த்தப்பட்ட வகுப்புத் தலைவர் நோயல் அவர்களின் அரும் முயற்சியால் தொடங்கப்பட்டதுதான் 'புதுவை முரசு. அந்த ஏட்டின் மூலமாகவே பாரதிதாசனோடு இணைந்து சுயமரியாதை இயக்கக் கொள்கைகளைக் கவிதை மூலம் பரப்பிய கவிஞர் புதுவை சிவமும் தமிழக மக்களுக்கு அறிமுகமானார். 1928இல் தந்தை பெரியாரின் துணைவியார் நாகம்மையாரால் தொடங்கப்பட்டதும் பெரியாரை ஆசிரியராகவும் சுயமரியாதை இயக்க முன்னோடிகளான எஸ்.ராமநாதன், சா.குருசாமி ஆகியோரைத் துணை ஆசிரியர்களாகவும் கொண்டு இரண்டாண்டுக் காலம் நடத்தப்பட்ட ஆங்கில வார ஏடான 'ரிவோல்ட்டின்' முக்கிய இதழ்கள் நுண்படங்களாக எடுக்கப்பட்டு பாதுகாக்கப்பட்டுள்ளன. இந்த ஏட்டைப் பற்றி எத்தனையோ சொல்லலாம். ரஷியப் புரட்சி தினமான நவம்பர் 7அன்று தொடங்கப்பட்ட அந்த ஏட்டில்தான் மாபெரும் ஜெர்மானியத் தத்துவ அறிஞரான ஹெகல் பற்றிய செறிவான அறிமுகமொன்றும் தமிழகத்திற்கு முதன் முதலாகத் தரப்பட்டுள்ளது.

அண்ணாவின் 'திராவிட நாடு', தி.மு.க.வின் முதல் ஆங்கில ஏடாக அண்ணா தொடங்கிய 'ஹோம்லேண்ட்',அவர் கடைசியாக நடத்தி வந்த 'காஞ்சி'வார ஏடு, கலைஞர் மு. கருணாநிதியின் 'முரசொலி', நாவலர் இரா. நெடுஞ்செழியனின் 'மன்றம்', ஏ.வி.பி.ஆசைத்தம்பியின் 'போர் வாள்', திமுக ஏடுகளான 'புது வாழ்வு', 'அண்ணா', 'தோழன்' ஆகியன மட்டுமின்றி அக்

கழகத்தின் முதல் அதிகாரபூர்வமான நாளேடான 'நம்நாடு' இதழ்களும் இந்த நூலகத்தில் பேணிப் பாதுகாக்கப்பட்டுள்ளன.

சுயமரியாதை இயக்க முன்னோடிகளிலொருவரான சொ. முருகப்பாவின் 'குமரன்', சுயமரியாதை இயக்கப் பெண்ணியச் சிந்தனையாளர் மரகதவல்லியாரின் 'மாதர் மறுமணம்' ஆகியனவும் இங்கு உள்ளன.நீதிக் கட்சி,சுயமரியாதை இயக்கம் ஆகியனவற்றின் கருத்துகளுக்கும் செயல்பாடுகளுக்கும் உடன் பாட்டு வகையிலோ, எதிர்மறையாகவோ எதிர்வினையாற்றிய 'செந்தமிழ்ச் செல்வி', 'பஞ்சாமிர்தம்', 'தாருல் இஸ்லாம்', 'சுதந்திரச் சங்கு' போன்ற ஏடுகளும் இந்த நூலகத்தில் பேணப்படுகின்றன.

6

தமிழகத்தில் பார்ப்பனரல்லாதோர் இயக்கத்தின் முன்னோடியும் மூலச்சிறப்பு வாய்ந்த பௌத்தச் சிந்தனையாளருமான அயோத்திதாசப் பண்டிதரின் 'ஒரு பைசாத் தமிழன்'(தமிழன்) இதழ்களும் இங்குள்ளன.

திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் பெரியார் உயராய்வு மையத்தின் தலைவராகவும் பேராசிரியராகவும் பணி புரியும் வாய்ப்பு எனக்குக் கிடைத்த போது, மூன்றாண்டுகளுக்கு முன், அந்த மையத்தின் ஆய்வுப் பணிகளுக்காக ரோஜா முத்தையா நூலகத்திலுள்ள 'குடி அரசு', 'புரட்சி', 'பகுத்தறிவு' வார ஏடுகள் பகுத்தறிவு மாத ஏடு ஆகிய அனைத்தையும் நுண்படங்களாக்கி, குறுந்தகடுகளில் பதிவுசெய்து பெறப்படும் திட்டம் நிறைவேறியது.

சுயமரியாதை இயக்க ஏடுகளை எளிதாகப் படிக்க விரும்புவர்களுக்கு அந்தக் குறுந்தகடுகள் காலாகாலத்திற்குப் பயன்படும். வ.கீதா அவர்களும் நானும் இணை ஆசிரியர்களாக எழுதி,2009இல் வெளிவந்த 'பெரியார்: சுயமரியாதை சமதர்மம்' (திருத்தப்பட்டு விரிவாக்கப்பட்ட பதிப்பு) நூலுக்கு வேண்டிய முக்கியத் தரவுகளை வழங்கியதும் ரோஜா முத்தையா நூலகமே. திராவிட இயக்கம் குறித்து இன்னும் ஆழமான ஆய்வுகளைச் செய்யக் காத்திருப்போருக்கான தகவல் பெட்டகமே இந்த நூலகம்.

இந்த ஆராய்ச்சி நூலகத்தைப் பற்றி இன்னும் எத்தனையோ தகவல்களை அடுக்கிக் கொண்டே போகலாம்.சிக்காக்கோ பல்கலைக்கழகம், பிபிசி, ஃபோர்ட் நிறுவனம் போன்றவையே இத்தகைய அறிவு மையத்தைப் பேணிப் பாதுகாக்கும் புரவலர்களாக உள்ளன. தமிழக அரசாங்கக் கட்டடமொன்றில் தான் இந்த நூலகம் செயல்பட்டு வருகிறது என்றாலும், மாத வாடகையாக ஏறத்தாழ ரூ.20000 செலுத்தப்படுவதாகச் சொல்லப் படுகிறது. இந்தக் கட்டடத்தை இந்த அரிய நூலகத்திற்கு நன்கொடையாக வழங்குவது தமிழக அரசாங்கத்திற்குப் பெரிய காரியமல்ல. தமிழைச் செம்மொழியாக அறிவிக்கச் செய்தவர் தமிழக முதல்வர் கலைஞர் மு.கருணாநிதி அவர்கள். அவர்,இந்தச் செம்மொழி,சங்க இலக்கியத்தோடு நிற்காமல், நவீனத்துவப் பரிமாணத்துடன் உயிரோட்டமுள்ள,செழுமையான, உலகில் எட்டுக்கோடி மக்களால் பேசப்படுகிற மொழியாக இருப்பதை அறியாமலா இருப்பார்?அவரது ஆட்சிக் காலத்தில் இந்த நூலகத்திற்குக் கொடையாக இப்போது அது இயங்கி வரும் கட்டடம் வழங்கப்படுமானால்,செம்மொழி வளர்ச்சிக்கு அவர் வழங்கிய மிகப் பெரும் பங்களிப்பு என வரலாறு பதிவு செய்யும்.

தமிழக அரசாங்கக் கட்டடமொன்றில் தான் இந்த நூலகம் செயல்பட்டு வருகிறது என்றாலும், மாத வாடகையாக ஏறத்தாழ ரூ 20000- செலுத்தப்படுவதாகச் சொல்லப்படுகிறது. இந்தக் கட்டடத்தை இந்த அரிய நூலகத்திற்கு நன்கொடையாக வழங்குவது தமிழக அரசாங்கத்திற்குப் பெரிய காரியமல்ல. தமிழைச் செம்மொழியாக அறிவிக்கச்செய்தவர் தமிழக முதல்வர் கலைஞர் மு.கருணாநிதி அவர்கள்.அவரது ஆட்சிக் காலத்தில் இந்த நூலகத்திற்குக் கொடையாக இப்போது அது இயங்கி வரும் கட்டடம் வழங்கப்படுமானால், செம்மொழி வளர்ச்சிக்கு அவர் வழங்கிய மிகப் பெரும் பங்களிப்பு என வரலாறு பதிவு செய்யும்.

Old Madras and the Present: The Roja Muthiah Library in Chennai

■ V. Geetha

In RMRL, of a summer

V. Geetha is is a full time researcher.and has authored several books and articles on Gender and Self Respect Movement. She has co-authored several books with SV Rajadurai. Geetha is a bilingual scholar who can elegantly switch between Tamil and English and a brilliant translator.

For the feminist historian, wanting to understand the changing nature of women's lives in Tamil Nadu, in the modern period, the Roja Muthiah Research Library (RMRL) is an indispensable source.

Scattered across the many books, newspapers and magazines, pamphlets and sundry printed matter at the Roja Muthiah Research Library (RMRL) in Chennai are images, pictures, and visual gems that it has been my pleasure over the years to discover with the help of the Library's Director G. Sundar, and his colleague and head of reference services S. Muthumalathi (Mala). I take you into this treasure trove through one such image that I hope will convince you as well of the potential of visual history as an innovative means for reaching into pasts that might not be otherwise visible if we remain solely and exclusively within the world of words as scholars and researchers.

In Figure 1, you see an advertisement in Tamil for the "B. B. H. Restaurant," also known as "Paratapantu Intu Kapi Hotal." Located on Dalhousie Street in Rangoon, this establishment prided itself on its tasty snacks and confections made with the purest of clarified butter (ghee) and oil. The fact that B.B.H. Restaurant was owned by one S. R. Chettiar might not come as a great surprise to historians, given what we know of Chettiar entrepreneurship in Burma since the later 19th century. What might be more of a surprise is the logo that S. R. Chettiar consciously chose for his restaurant-and that justified as well the name he bestowed on it-for flanking the text in the advertisement is an image of Parata Mata (Mother India or Bharat Mata) as a four-armed goddess. There is no date mentioned in the textual part of this advertisement: instead, it is the image that comes to our aid and enables us to both date the advertisement, and also provide us with a rough timeline for S. R. Chettiar's Rangoon restaurant. In order to date this artifact, I am first drawn to the presence of the partial outline map of India in this image within which the unknown artist has placed Bharat Mata. As I have documented at length in my recently published book, The Goddess and the Nation, such images of Mother India in the company of the map of India, began circulating across India (and the Tamil country) in a wide variety of media from the early

years of the 20th century: calendar art and wall posters, oil and acrylic paintings by some of India's best known artists, textbook illustrations and jacket covers of nationalist pamphlets and books, newspaper cartoons and mastheads, advertisements and package labels, and even commercial films with a patriotic theme. So the first thing I can say about Figure 1 is that it belongs to the twentieth century, no earlier than that. But wait! I can also further narrow the time range by analyzing the banner that Bharat Mata holds in one of her four arms: not only is this banner conceived with three colors, but inscribed on the central panel is Gandhi's spinning wheel. Such a banner becomes ubiquitous in nationalist prints, and in images of Bharat Mata from the 1920s and especially in the 1930s, so it is possible for us to say that this advertisement might date from those decades (even given the fact that we know that often images are recycled and put to use well after their original time of production).

For a historian of visual culture like me, the importance of this visual artifact emerges also from the fact that taken together, image and text (or "image text" as some scholars call it) point to the B.B.H. Restaurant as an establishment that sought to use various patriotic means of persuasion to attract its Rangoon clientele-presumably diners nostalgic for some native fare in a place far away from their Indian homeland. The use of patriotic imagery, including Bharat Mata, the map of India, and the national flag, in advertisements for selling goods and services became popular from the early years of the twentieth century in colonial India, especially with the rise and spread of the so-called swadeshi ("of one's own country") movement from around 1905. The presence of the map of India in the company of Mother India in this advertisement also confirms the use made of patriotic themes by Indian businesses-like the B.B.H. Restaurant-abroad. It also reaffirms that while members of the Chettiar community were frequently devoted patrons of Tamil language, literature, and learning, they were also supporters of the cause of Indian nationalism both within the borders of the Madras Presidency and elsewhere in the Indian diaspora in south-east Asia.

“Pâratapantu Intu Kâpi Hotal.” Advertisement for restaurant in Rangoon, British Burma, circa 1920s-1930s.



Images such as those reproduced in Figure 1 allow us, therefore, to make numerous connections and arguments that might not be readily apparent in texts and written documents, and hence their very presence in RMRL's collection is important for us to know about. This is especially so because images such as these have not yet begun to be archived in many major collections in Tamilnadu, given that they are treated as "ephemera" at worst, "curiosities" at best-and not the source for "serious" history

and rigorous cultural analysis. In this essay, I argue to the contrary and also note that the very fact that such images have been collected, preserved, and in some cases catalogued, in the Library enables us to chart new territory in Tamil history, culture, and politics, even as they bear testimony to the archiving skills of the staff of the Library. It is these skills which Mala drew upon to bring to my attention the interesting image reproduced in Figure 2, an advertisement for a firm called Gemini Rubber Stamp Works located in Gudiyattam in North Arcot. The advertisement displays logos used by various firms across Madras state for which Gemini manufactured rubber stamps. I am of course immediately drawn to No. 77-a stamp featuring Bharat Mata in a map of India, much like the figure we encountered in Figure 1, which served as the logo for a firm called Bharati Vilas in Karaikkal. While I may not learn what that firm's business might be from this logo, I can use it to speculate about the manner in which an increasing number of businesses in early 20th century India were willing-in fact eager- to advertise their patriotic credentials verbally as well as visually. The very presence of Mother India and the map of India in this image also confirms for me that by the 1930s, this image had become popular in even small towns like Karaikkal, away from the big colonial metropolises of Calcutta, Madras and Bombay, or Kanpur, Poona, and Lahore, places where many of the pictures I have analysed in my book were printed or circulated. Stepping back and looking at the page as a whole, though, I am struck also by the irony of juxtaposing No. 77 with No. 76 placed above it, for the latter features a youthful C. N. Annadurai and is a rubber stamp for a branch office of the Dravida Munnetra Kazhagam (DMK) in Cuddalore. If I were a business historian attempting to reconstruct the history of the Gemini Rubber Stamp Works in Gudiyattam, North Arcot, I would use this example to note that this firm did not allow politics to (necessarily) interfere with business, being quite willing as the firm appears to have been to serve commercial enterprises that overtly at least supported the cause of Indian nationalism (such as Bharati Vilas in Karaikkal), even while working with entities such as DMK which were then considered to be anti Indian nationalists. If I were a business and economic historian, I would also use this page to conclude that firms such as Gemini Rubber Stamp Works in Gudiyattam were not limited in their reach, and indeed their client base appears to have extended across northern and eastern Madras state- Kanchipuram, Erode, Dindivanam, Tiruppur, Cuddalore and Karaikal- and also included Muslim firms. At the same time, the very presence of No. 76 on this page allows me to date this advertisement to at least 1949 (when the DMK was formed), even as it confirms a point I made


Page 6 from catalogue, Gemini Rubber Stamp Works, Gudiyattam, circa 1949.



in my discussion of Figure 1 about the manner in which motifs might circulate well after their initial time of production: for although Gandhi was certainly dead by 1949, his spinning wheel continues to be patronized by the goddess Mother India and by Bharati Vilas! At the same time, the stamp reproduced in No. 77 possibly evidences that Bharati Vilas might have been in existence in Karaikkal since the 1920s or 1930s.

Images such as Figure 2 allow the visual historian to trace micro-practices and activities that might otherwise escape our purview. One such patriotic micro-practice for which I was able to find evidence in RMRL's collection is the use of patriotic slogans such as "vande mataram" (I worship the mother) on personal and business letterheads from at least the 1920s. Figure 3 shows one such letter dated to October 11, 1940, written by V. Velautham, based in Colombo, to M. Meyappa Chettiar in Vithiyur in mainland India. While the contents of letter-written in English between two Tamilians!-are interesting in and of themselves for the various monetary transactions narrated therein, I am drawn to the trilingual inscriptions at the top which reveals Velautham's apparent devotion to the Indian nation (even while being based in Ceylon); this is not apparent from the words that follow. At the head of the letter is the Tamil inscription "vande mataram," made popular in Madras since at least the opening years of the 20th century in Bharati's poetry, prose, and pictures, as well as in the work of many nationalists who were fired up by the swadeshi movement. This inscription in turn is flanked by the image of Mother India (very similar to the logo for the firm of Bharati Vilas in Karaikkal that we encounter in Figure 2) as a four-armed goddess carrying a flag in one hand and the Gandhian spinning wheel in another, occupying an outline map of India. The words "vande mataram" are inscribed above and below the image in Devanagari and Telugu scripts, possibly suggesting Velautham's attempt to connect with a world that was not exclusively limited to Tamil speakers. In RMRL's collection, there are many such examples of letters and postcards bearing such "image texts" (not necessarily patriotic), that researchers can draw upon to understand how selves come to be constructed through the everyday practice of letter-writing, as well as will enable us to begin to get a sense of how grand projects (such as Indian or Tamil/Dravidian nationalism) enter the realm of the private and the intimate.

Letter from V. Velautham dated October 11, 1940, sent from 202 Sea Street, Colombo


V. VELAUTHAM,
202, Sea Street,
COLOMBO. 11th October 1940.

M. Meyappa. Chettiar. Esqr.
Vethiyur.

My Dear Mena,
I received your letter of the 1st inst.
I have sent you today Rs (50- Rupees fifty only) by M.O.
Mr Sowannmana gave me sum of Rs (25/ out of balance which he owes you, and he wants to tell you that he is not in a position to give you the whole some of Rs (50/ at present.
Mr. Arunachalam chettiar gave me Rs (25/ on giving your letter.
I am sorry to state that I was not able to collect the sum of Rs (75/ which you wanted immediatly, But ~~that~~ the best I could do was to collect a part of it which I have sent to you today.
I never thought that you will be in Vethiyur at present, as I know that you very seldom stay there.

Admittedly, the majority of such images and image-texts pertain to the public sphere, although even here, the visual and the pictorial often appear in tantalizing places and spaces which, even in an image-saturated country like India, can easily be missed, unless we have

decided-cognitively and intellectually-that pictures, too, have stories to show and arguments to manifest, and that images are not just illustrative and reflective, but also constitutive and world-making rather than world-mirroring. This is the fundamental premise of the new visual history that scholars like Christopher Pinney and Kajri Jain have taught us to appreciate in their fine works that have provided inspiration for my own foray into this emergent territory of scholarship. While their scholarship examines weighty issues such as the manner in which the "bazaar" or marketplace functions as an important site for the production, circulation and consumption of popular visual artifacts, or the role played by "chromolithographs" in nationalist struggles against colonial rule, it is also possible to use images to write the history of political satire, humor in India, or the play of irony. This is certainly one of the many uses to which cartoons (of which we have a good tradition in the Tamil country going back to the early years of the 20th century) can be put, and the RMRL has preserved numerous examples from magazines, journals, and newspaper articles. Here, I invoke one example in Figure 4 that Mala brought to my attention recently, which appeared in October 1932 on the cover page of *Kanti* (which took its name from the Mahatma, whose head adorned its banner), and was drawn by cartoonist K. R. Sarma. Set up in the form of a grid which reminds us of another visual genre that becomes very prolific, namely the school chart, the cartoon offers a satirical commentary on the state of the colonial economy and society in the 1930s by inviting its viewers to compare the relative incomes of various occupations, with the British viceroy at the top of the heap (first square of the grid), and the poor Indian peasant who works and toils all day and all year and makes a fraction at the bottom (the last square of the grid).

"Campala Vikitattin Vinôtam." Cartoon by K.R. Sarma, Cover page of *Kânti*, Vol. 4 (9), October 27, 1932, Chennai.



Kanti was launched in April 1931 in the wake of Gandhi's Salt March and of his numerous attempts to bring the plight of the Indian peasant to the center state of nationalist politics. Its founder-editor T. S. Chokkalingam was able to bring out weekly, monthly, and bi-monthly issues with national (and some international) news and featured articles until January 1932, and then again (when he came out of imprisonment, charged by the colonial state for this very work), for a couple years from October 1932 before its last issue was published in December 1934. *Kanti* is a fascinating example of what we might call an "illustrated" news and features magazine that attempted to deliver the world through words and images to the reading public for a cheap price (it is one of the earliest examples of a *kalana itaz*, the "quarter anna" periodical). In addition to K. R. Sarma's cartoons and others that routinely appeared on the cover page and on the back cover,

Kanti also carried original drawings and illustrations, pictorial advertisements, as well as reproductions of photographs. The history of the illustrated magazine in Tamil-which subsequently became so popular in Tamil with periodicals like *Kalaimakal* and *Ananta vikatan*, *Kumutam* and *Kalki*-will find an important fore-runner in the short-lived but innovative *Kanti*, and the RMRL has an almost complete run that should encourage researchers to reconstruct its history and place in the history of Tamil letters.

The implicit hero of K. R. Sarma's cartoon in Figure 4 is the hardworking farmer who comes to be figured in many national periodicals as well from the 1930s as the peasant question loomed large in Gandhian and post-Gandhian politics. And indeed, one of the most intriguing periodicals in the RMRL is titled *Meliccelvam* ("The Plough's Wealth"), the cover page of which from one of its very first issues is featured here as Figure 5. From its banner, the reader gets a sense of the goals of this periodical that was launched in July 1944 and was published by the Director of Agriculture of the Government of Madras until 1970: cattle pull at a plough in a field from which arise lush crops over which the rising sun casts its glow on a bucolic scene in which a cow gives suckle to its calf. Curiously the toiling farmer is missing from this banner, although the image on the cover of the September issue is revealing: a map of India occupied by a two-armed goddess Bharat Mata, blessing the peasant (and his wife) hard at work in their fields. The image-text declares that "India is our mother land," and "agriculture is our nation's preeminent occupation" (the latter statement in ironic dialogue with K. R. Sarma's cartoon in Figure 4 in which the poor peasant's hard toil is hardly rewarded monetarily), verbal statements that are visually reinforced by the presence of the map of India and Mother India. *Meliccelvam* was almost entirely dedicated to discussions of the business of agriculture and village life, ways of improving crop output and irrigation, as well as various efforts made by the state on behalf of agriculture. Published as it was by the government, the magazine can be treated as an example of the literature of development, and a mouthpiece of the state's new development vision of which there are other visual artifacts (such as the documentary film produced by the Films Division of India from the 1950s). Many images of farmers at work in their fields, of varieties of the plough and other agricultural tools of the industrial age, of varieties of crops, and of the techniques for improving agriculture and so on were featured in the magazine.

"Namatu Jenmapûmi: Intiyâ Tçcam." Illustration on cover page of *Mçliccelvam*, Vol. 1 (3), September 1944, Chennai.



The attractive banner of Meliccelvam points to another visual artifact of which the RMRL has many examples waiting to be analysed and discussed, namely, frontispieces, title pages of books and

pamphlets, and mastheads of newspapers and periodicals of all sorts, which are frequently adorned with images of various sorts that are enormously instructive of the history and politics of the publication. An example in the collection that I have found revealing is reproduced here as Figure 6. Most of us in Tamilnadu think of E.V. Ramasamy Naicker, "Periyar," as the fiery and outspoken iconoclastic leader of the Dravidian movement, yet there was a time before 1926 when he was a devout Congressman and supporter of Gandhian nationalism. Interestingly, the masthead of the earliest issues of Periyar's well-known radical weekly *Kudi Aracu* reflect his Indian nationalist sentiments: in one medallion stands a four-armed goddess Bharat Mata, her sari and posture vaguely outlining a map of India; in another medallion, a Gandhi-like figure sits at the loom, while all around them are figures of toiling peasant, hard at work in the fields or at the spinning wheel; they are the *"kudi"* whose dominion Periyar and the Congress were dedicating themselves ostensibly to establish in India and Tamilnadu. Notwithstanding his later powerful critique of institutionalized religion and of Hinduism in particular, the upper half of the banner is dotted with religious structures (a temple gopuram and a church) on the right and a meditating figure on the left. The very presence of this banner as a visual residue in the archive is a reminder to all of us about another politics to which Periyar was quite committed before his historic transformation to Dravidianism.



Sarma Bros., mast-head of *Kudi Aracu*, Vol. 1 (No. 13), October 11, 1925, Erode.

But it is not the study of society, economics, and politics that is enormously enriched by bringing pictorial materials to the center of our analysis. I close this essay by noting that amongst the RMRL's richest visual treasures are those pertaining to the world of Tamil cinema: not so much the films themselves, but all the print paraphernalia generated by the arrival of this new visual medium into the Tamil country: advertisements, songbooks, and cinema magazines. Figure 7 features one of my favourite examples: the cover image from a songbook for the 1939 film produced by K. P. S. Wadia and titled *Parata Kesari*. I was drawn to this image in the course of my own research on Mother India and the map of India because of their presence here. But what is also worth noting is an inscription in English, penned by a viewer of the film on the map of India: "Worst Picture." Could this have been a film that Roja Muthiah himself saw and responded to in this fashion? We will perhaps never know, but visual artifacts such as these frequently demonstrate-in various ways, including apparent mutilation-the responses of viewers, and that history too is worth noticing and telling.

1 Ramaswamy, Sumathi. *The Goddess and the Nation: Mapping Mother India*. Durham: Duke University Press, 2010.

2 For a recent work that examines the many configurations of India's "national" flag, especially in the colonial period, see Virmani, Arundhati. *A National Flag for India. Rituals, Nationalism and the Politics of Sentiment*. New Delhi: Permanent Black. 2008.

3 The map of India appears as part of Bharat Mata's iconography from at least 1913 in prints and publications of the Indian diaspora (see my *The Goddess and the Nation*, pp. 29-32, 254-256)

4 For a discussion of how Indian nationalism and Tamil/Dravidian nationalism conducted their rival politics in the gendered language of embodied figures (Bharat Mata and Tamilttây, see my *Passions of the Tongue: Language Devotion in Tamil India*. Berkeley: University of California Press, 1997).

5 See my *Goddess and the Nation*, pp. 18-23, 128-129, 147-148.

6 Pinney, Christopher. *Photos of the Gods: The Printed Image and Political Struggle in India*. New Delhi: Oxford University Press, 2004; Jain, Kajri. *Gods in the Bazaar: The Economies of Indian Calendar Art*. Durham: Duke University Press, 2007.

7 For two important published works on cartoons in Tamil magazines in Tamil, see Venkatachalapathy, A. R. *PâratiyiI Karuttup Padankal: Intiyâ, 1906-1910*. Madras: (Narmada), 1995, and Venkataraman, V. *Cutantira Canku: Karuttup Padankal 1930-33*. Rajapalayam: Swatantira Publications, 2001. For an assessment in English, see Venkatachalapathy, A. R. "Caricaturing the Political: The Cartoon in Pre-Independence Tamil Journalism," In *In those Days There was No Coffee: Writings in Cultural History*. New Delhi: Yoda Press, 2006, pp. 42-58.

Cover page from songbook for K. P. S. Wadia's *Pârata Kesari* (1939)



8 The histories of cartoonists such as K. R. Sarma, or his prolific predecessor M. S. Sarma, or his successor Mali, is yet to be written.

9 For a fascinating work that begins to look at this genre, with many examples drawn from Tamil India, see Sirish Rao, V. Geetha, and Gita Wolf. *An Ideal Boy: Charts from India*. Stockport, U.K./Chennai: Dewi Lewis Publishing/Tara Publishing, 2001.

10 P. Mathivanan, "Kânti," In *Intiya Vidutalaikku Muntaiya Tamil Italkal*, edited by I. Sundaramurthi and M. R. Arasu. Chennai: Ulakat Tamil Araycci Niruvanam, 1998, Vol. 1, pp. 381-396. The very first edition declared, "Our work is to explain clearly to the Tamilians the principles of the Congress and the actions of Mr. Gandhi at this important juncture" (*ibid*, pp. 395-396).

11 In an essay that was penned on the history of the cartoon in Tamil by Chokkalingam himself under the pen-name "Devidasan," the founder of the magazine in fact claimed that *Kânti* was a pioneer among Tamil periodicals in this regard (quoted in Mathivanan, "Kânti," pp. 386-87

12 For some examples, see my *The Goddess and the Nation*, pp. 284-86.

13 For another similar example from the RMRL titled "kirâmarâjyam" from *ÂIanta VikamaI* (Deepavali malar, 1947), see my *The Goddess and the Nation*, pp. 286-87.

14 The library has a complete run of this magazine, totaling 87 issues.

15 Indeed when V. M. Thanga Perumal Pillai, a key figure in the founding of *Kumi Aracu* and an ally and friend of EVR died, an editorial in the magazine was titled "Pârata MâtattâyiI Turpâkkiyam" (Bharat Mata's Misfortune) (*Kumi Aracu,* March 1, 1926, p. 8)

90

ரோஜா முத்தையா ஆய்வு நூலகம், தமிழ் சினிமா வரலாற்றின் திறவுகோல்கள்

■ ராஜன் குறை

வரலாறு என்பதைக் கடந்துபோனவற்றின் அர்த்தமற்ற தகவல்தொகுப்பாக உணரச்செய்வதில் நமது கல்விமுறைக்கும் ஒரு முக்கியப் பங்கிருக்கிறது (உதாரணமாக தேர்வுகளில் இடம்பெற்று வந்த ஒரு கேள்வி: ராணா பிரதாப் சிங்கின் குதிரையின் பெயர் என்ன?). வரலாறு என்பது மாற்றங்களின் தொடர் நிகழ்விலிருந்து புதிய தர்க்கங்களை உருவாக்கிக்கொண்டு மானுட சமூக இயக்கத்தைப் புரிந்துகொள்ள உதவும் அறிவுத்துறை என்பதனை முதற்கட்டமாக நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். அவ்வாறு நாம் மாற்றங்களை அவதானிக்கத் தொடங்கும்போது பழைய காலத்திலிருந்து கிடைக்கும் ஒவ்வொரு தாளும், ஓலைத்துணுக்கும், கல்லில் செதுக்கப்பட்ட ஒவ்வொரு எழுத்தும் நிகழ்காலத்துடன் ஊடாட்டம் பெற்று கால மாற்றத்தின் பரிமாணங்களை நமக்கு உணர்த்தத் தொடங்கும்.

தமிழ்ச் சமூகம் உள்ளிட்ட இந்தியச் சமூகங்களில் இவ்வரலாற்றுப் பிரக்ஞை மாற்றத்தின் தர்க்கத்திற்கு அழுத்தம் தராமல் தொடர்ச்சியின் இழைகளைக் கொண்டாடும் குணம் கொண்டது என்று கூறலாம். பல சமயங்களில் ஆக்கபூர்வமான மறதியும் கூட நம் சமூகத்தில் செயல்படுவதாக ஆஷிஸ் நந்தி சுட்டிக்காட்டியுள்ளார். இதன் காரணமாக பொதுவாகவே கடந்த காலத்துடன் நிகழ்காலத்தைத் தொடர்ந்து இணைத்துப் பார்க்கும் பண்பு வெகு குறைவாகவே நம்மிடம் இருக்கிறது. உதாரணமாக ஒருமுறை ஒரு பிரபல தமிழ்ப் பதிப்பாளரிடம் அவர் வெளியிட்ட சிறுகதைத் தொகுதியில் கதைகள் முதலில் பிரசுரமான ஆண்டு குறிப்பிடப்படாமலிருப்பதைச் சுட்டிக் காட்டியபோது அவர் ஓர் ஆய்வாளன் என்று அறிமுகப்படுத்திக்கொண்ட என்னைக் கடுமையாக உதாசீனம் செய்தது குறிப்பிடத்தக்கது. அவரைப் பொறுத்தவரை கதை 1945ல் எழுதியிருந்தாலும், 1955ல் எழுதியிருந்தாலும் ஒன்றுதான். எனக்கோ இடையில் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த 1947 என்ற வருடம் கவனத்தில் இருக்கிறது. அந்த எழுத்தாளரிடம் அந்த ஆண்டு ஏற்படுத்திய தாக்கத்துடன் இணைத்து நான் கதையைப் புரிந்துகொள்பவன்.

பொதுவாகவே வரலாற்றுப் பிரக்ஞை இப்படிப்பட்ட தென்றால் சினிமா போன்ற அன்றாட கேளிக்கை சாதனத்தை

கடந்த இருபது ஆண்டுகளுக்கு மேலாகச் சிறுபத்திரிகைகளில் எழுதுபவர் ராஜன்குறை. கொலம்பியா பல்கலைக்கழகத்தில் தனது ஆய்வை முடித்தள்ளார். அண்மையில் 'முதலீட்டியமும் மானுட அழிவும்' 'சமகாலத் தத்துவம் சார்ந்த குறிப்புகள்' எனும் இவரது நூல் வெளிவந்துள்ளது.'

9

கலாசார வரலாற்றின் பகுதியாக யாரேனும் கருதுவார்கள் என்று நினைத்துப் பார்க்கவும் முடியுமா? தமிழ் சினிமாவின் முன்னோடி வரலாற்றாசிரியர் தியடோர் பாஸ்கரன் இச்சிக்கலைக் குறித்து நிறைய எழுதியிருக்கிறார். தமிழ் சினிமாவைக் கலாசார ஆய்வுகள், மானுடவியல் ஆகிய துறைகள் சார்ந்து ஆராய நினைப்பவர்கள் சினிமாவின் வரலாற்று ரீதியான மாற்றங்களைப் புரிந்துகொள்ள என்ன செய்ய முடியும் என்பது முக்கியக்கேள்வி. கடந்த பத்தாண்டுகளில் ஓரளவு பழைய திரைப்படங்களின் பிரதிகள் குறுந்தட்டுக்களாகவும், டி.வி.டிக்களாகவும் கிடைக்கின்றன. ஆனால் அவை மட்டுமே கலாசார ஆய்வுகளுக்குப் போதாது. அப்பிரதிகள் எப்படி உருவாயின, பார்வையாளர்களால் எப்படி உள்வாங்கப்பட்டன என்பவைக் குறித்த தகவல்கள் மிக அவசியமானவை. ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தில் சமகால வரலாற்று ஆய்வு மையத்தில் பேராசிரியராக இருக்கும் எம்.எஸ்.எஸ்.பாண்டியன் பராசக்தி (1952) திரைப்படம் குறித்து அவ்வகையான தகவல்களைச் சேகரித்து எழுதிய கட்டுரை இந்தியாவில் திரைப்பட ஆய்வுகள் என்ற அறிவுத்துறையின் உருவாக்கத்திற்கு ஓர் உந்துதலாக அமைந்தது. அவர் சென்னை அரசு ஆவணக் காப்பகத்திலிருந்து அக்கட்டுரைக்கான ஆதாரங் களைப் பெற்றார். ஆனால் அது போன்ற கட்டுரைகளைத் தொடர்ந்து பலரும் எழுதுவதற்குத் தேவையான வரலாற்று ஆவணங்கள் கிடைப்பது எப்படிச் சாத்தியம்? பழைய ஏடுகளை, சினிமா இதழ்களை ஆய்வாளர்கள் பார்ப்பது என்பது தெய்வத்தைப் பார்ப்பதைவிடவும் கடினம். சமூகத்தில் யாருக்கும் ஏடுகளை பாதுகாத்து வைக்கவேண்டும் என்ற ஆர்வம் கிடையாது; இதற்குக் காரணமான வரலாறு குறித்த அக்கறை யின்மை பற்றி மேலே குறிப்பிட்டதை நினைவில் கொள்ளவும்.

ஆனால் தமிழகத்தின் இந்த பொதுவான மனநிலைக்கு முற்றிலும் மாறுபட்டவராக ஓர் அபூர்வ மனிதர் வாழ்ந்தார்; அவர்தான் கோட்டையூர் ரோஜா முத்தையா. எந்த காரணத் தினாலோ அவர் அச்சிடப்பட்ட, எழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் ஒரு வரலாற்று ஆவணம் என்ற மிக அரிய உணர்வை பெற்றிருந்தார். நாட்டார் வழக்காற்றியல், கலாசார ஆய்வுகள், திரைப்பட ஆய்வுகள் போன்றவையெல்லாம் கல்வித்துறைகளாக மேற்குலகில் சிறப்புப் பெறும் முன்னமே அவற்றை முன்கூட்டி அறிந்தவர் போல அவர் தம்மால் வாங்க முடிந்த புத்தகங்கள், ஏடுகள் அனைத்தையும் சேகரிக்கத் தொடங்கினார். அவற்றை முறையாகப் பாதுகாப்பதற் காக தன் வாழ்நாளை செலவழித்தார். அவர் காலத்திற்குப் பின், பல நல்ல மனங்களின் முன்முயற்சியில் சிகாகோ பல்கலைக்கழகம், வேறு சில நிறுவனங்கள் துணையுடன் சென்னைக்கு அவரது சேக ரிப்புகள் கொண்டுவரப்பட்டு ஓர் ஆய்வுமையம் நிறுவப்பட்டது.

தமிழ் சினிமா வரலாறு குறித்த சர்வதேசக் கருத்தரங்கம் ஒன்றை நடத்துவதற்கு ஃபோர்டு ஃபவுண்டேஷனின் நிதி உதவி கிடைத்தபோது எம்.எஸ்.எஸ்.பாண்டியன் என்னையும், திருமங் கலம் ரவிச்சந்திரனையும் அக்கருத்தரங்கை வடிவமைப்பதற்கான பூர்வாங்க ஆய்வுப்பணியில் சில மாதங்கள் ஈடுபட அழைத்தார். அப்போது சென்னை முகப்பேரில் உருவாகிக் கொண்டிருந்த ரோஜா முத்தையா ஆய்வு நூலகத்திற்கு நாங்கள் முதன் முதலில் சென்ற அந்த மாலை நேரத்தை என்னால் மறக்க முடியாது. அப்போது திரு.சங்கரலிங்கம் அந்த நூலக உருவாக்கத்திற்கு

தமிழகத்தின் இந்த பொதுவான மனநிலைக்கு முற்றிலும் மாறுபட்டவராக ஓர் அபூர்வ மனிதர் வாழ்ந்தார்; அவர்தான் கோட்டையூர் ரோஜா முத்தையா. எந்த காரணத் தினாலோ அவர் அச்சிடப்பட்ட, எழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் ஒரு வரலாற்று ஆவணம் என்ற மிக அரிய உணர்வை பெற்றிருந்தார். நாட்டார் வழக்காற்றியல், கலாசார ஆய்வுகள், திரைப்பட ஆய்வுகள் போன்றவையெல்லாம் கல்வித்துறைகளாக மேற்குலகில் சிறப்புப் பெறும் முன்னமே அவற்றை முன்கூட்டி அறிந்தவர் போல அவர் தம்மால் வாங்க முடிந்த புத்தகங்கள், ஏடுகள் அனைத்தையும் சேகரிக்கத் தொடங்கினார்.

பொறுப்பேற்றிருந்தார். அவர் நூலகம், ஆவணக்காப்பகம் போன்றவற்றைச் சமூக இலட்சியங்களாகக் கருதும் தரிசனம் கொண்டவர். ஒரு இயக்கத்தின் தலைவனைப்போல அவர் மேற்கொண்ட பணியின் மீது அவருக்குத் தீவிரப் பற்று இருந்தது. எத்தகைய அசாதாரண மன நிலையில் ரோஜா முத்தையா அவரது சேகரிப்புகளைச் செய்தாரோ, அதையொத்த அபூர்வ மன நிலையில் சங்கரலிங்கமும் ஆய்வு நூலகத்தை அமைப்பதில் ஈடுபட்டிருந்தார். அவரது உதவியுடன் இரண்டு மாதங்கள் சினிமா தொடர்பான ஆவணங்களைப் பார்வையிட்டோம். என் வாழ்வில் ஒரு குறிப்பிடத்தக்க திருப்பு முனையாக அந்த மாதங்கள் அமைந்தன. அப்போது நான் திரைப்படம் என்பது எவ்வளவு முக்கியமான ஒரு சமூக ஆற்றல் என்பதை முழுமையாக உணரத்தலைப்பட்டேன். ரோஜா முத்தையா சேகரிப்புகளைப் படிக்கப் படிக்க என்னுள் எழுந்த கேள்விகள் என்னை எட்டாண்டுகள் கொலம்பியா பல்கலைக்கழகத்தில் மானுடவியல் துறையில் சினிமா குறித்து ஆய்வு மேற்கொள்ளத் தயார் செய்தன. இந்தக்கட்டுரையில் அந்த இரண்டு மாதங்களில் என் கவனத்திற்கு வந்து என் ஆய்வைப் பெரிதும் வழி நடத்திய ஒரு சில உதாரணங்களை விவாதிக்க விரும்புகிறேன், அதற்கு முன்னால் திரைப்பட ஆய்வுகளைப் பற்றி சில வார்த்தைகள் கூற வேண்டும்.

திரைப்படங்களை அழகியல் ரீதியாக, உளவியல் அடிப்படையில், அவற்றின் கதையாடல் அம்சங்களின் அடிப்படையில் ஆய்வு செய்ய திரைப்பட பிரதிகளே போதுமானவை. பிரதிகளைத் தவிர பிற தகவல்கள் கிடைக்குமானால் அவற்றைக் கூடுதலாகப் பயன்படுத்திக்கொள்ளலாம் (ஒரு குறிப்பிட்ட காட்சி எடுக்கப்பட்ட விதத்திற்கு அந்த நேரத்தில் சில விசேஷ காரணங்கள் அமைந்திருக்கலாம்.) ஆனால் அத்தகைய தகவல்கள் இன்றியமையாதவை அல்ல. திரைப்பட வரலாறு எழுதும்போது கலைஞர்கள், ஸ்டூடியோக்கள், பொருளாதார தொழில் நுட்பக் கட்டுமானங்கள், திரைப்படங்கள் காண்பிக்கப்பட்ட விதம் ஆகியவை குறித்த தகவல்கள் போதுமானவை. ஆனால் மானுடவியல் கோணத்தில் திரைப்படங்கள் எப்படிப்பட்ட கலாசார சூழ்நிலைகளால் தீர்மானிக்கப்பட்டன, எப்படி பார்வையாளர்களால் உள்வாங்கப்பட்டன என்பதை அறிந்துகொள்ள சினிமா இதழ்கள், விளம்பரங்கள், பார்வையாளர்களின் எதிர்வினைகள் போன்ற பல ஆவணங்கள் தேவை. அது தவிரவும் மக்களிடமும் நேரடியாக உரையாடல் மேற்கொள்ள வேண்டும். சமகால சினிமா குறித்து மக்களிடம் பேச முடியும். முப்பதுகளின், நாற்பதுகளின் சினிமா குறித்து இன்று மக்களிடையே விவாதிக்க முடியாது. இங்குதான் சினிமா இதழ்கள் இன்றியமையாதவையாகின்றன. ரோஜா முத்தையா ஆய்வு நூலகத்தில் சுவரொட்டிகள், துண்டறிக்கைகள் எனப் பலவகையான சினிமா ஆவணங்களிருந்தாலும் நான் விவாதிக்கப் போவது சினிமா இதழ்களைத்தான். மூன்று உதாரணங்களின் மூலம் எப்படி இந்த இதழ்கள் நம் கலாசார வரலாற்றைப் பரிசீலிக்க உதவுகின்றன என்பதைக் கூற விரும்புகிறேன்.

திரைப்பட வரலாறு எழுதும்போது கலைஞர்கள், ஸ்டூடியோக்கள், பொருளாதார தொழில் நுட்பக் கட்டுமானங் கள், திரைப்படங்கள் காண்பிக்கப்பட்ட விதம் ஆகியவை குறித்த தகவல்கள் போதுமானவை. ஆனால் மானுடவியல் கோணத்தில் திரைப்படங்கள் எப்படிப்பட்ட கலாசார சூழ்நிலைகளால் தீர்மானிக்கப்பட்டன, எப்படி பார்வையாளர்களால் உள்வாங்கப் பட்டன என்பதை அறிந்துகொள்ள சினிமா இதழ்கள், விளம்பரங்கள், பார்வையாளர்களின் எதிர்வினைகள் போன்ற பல ஆவணங்கள் தேவை.

உதாரணம் ஒன்று: ஊழியன் வெளியிட்ட வாசகர் கட்டுரை

ஊழியன் என்ற பத்திரிகை நகரத்தார் சமூகத்தின் குரலாக இருபதுகளிலும், முப்பதுகளிலும் வெளிவந்தது. இப்பத்திரிகை ஒரு தேசிய இதழாகவும் தன்னை அடையாளப்படுத்திக்கொண்டது. ஊழியன் முப்பதுகளில் சினிமா விமர்சனங்களை வெளியிட்டா

லும் அது சினிமா பத்திரிகையல்ல. ஆனால் ஊழியனில் 1925ஆம் ஆண்டு வெளியான ஒரு வாசகர் கட்டுரையான "தஞ்சைக் கூத்து" என்னை மிகவும் சிந்திக்க வைத்தது. கட்டுரையை எழுதியவர் சென்னையிலிருந்து காரைக்குடி செல்கிறார். வழியில் தஞ்சாவூர் வரும்போது அந்த நகரத்திற்கு தனவணிகப் பெண்கள் பெருமளவில் வந்துள்ளதையும் தஞ்சாவூரில் நடக்கும் இசை நாடக நிகழ்ச்சிக்குச் செல்வதையும் பார்க்கிறார். அவருக்கு அவமானம் தாங்கவில்லை. எப்படி கௌரவமான குடும்பப் பெண்கள் இப்படி வெளிப்படையாக ஒரு கேளிக்கை வடிவத்தை நோக்கிச் செல்லலாம்? அந்தக் கட்டுரையில் அவர் பெண்களை அப்படிச் செல்ல அனுமதித்ததற்காகச் செட்டியார் சமூக ஆண்களைக் கடுமையாகக் கண்டிக்கிறார்.

இந்தச் சிறிய கட்டுரை என்னைப் பல்வேறு விதங்களில் சிந்திக்கத் தூண்டியது. முதலில் சாதீயச் சமூகத்திற்கும், பால் மற்றும் பாலியல் அடையாளங்களுக்கும் உள்ள நெருங்கியத் தொடர்பு. இது வேறு பல துறை ஆய்வுகள் சார்ந்து நாம் அறியக்கூடியதுதான் என்றாலும் இந்தக் கட்டுரையில் தஞ்சையில் கூட்டம் கூட்டமாகத் தனவணிகப் பெண்கள் நாடகம் பார்க்கப் போகும் காட்சியும், அதைக்கண்டு மனம் குமுறும் கட்டுரை யாளரும் நம்மை மிகவும் யோசிக்க வைக்கிறார்கள். இரண்டாவது, பொதுவெளியில் நவீன கேளிக்கை வடிவங் கள் பிரபலமடைதல் சார்ந்த பிரச்சினைகள். சினிமா பேசும்படமாவதற்கு முந்தைய பத்தாண்டுகளில், அதாவது இருபதுகளில், இசை நாடகம் மிகப் பிரபலமடைந்தது. பாய்ஸ் கம்பெனிகள் ஒருபுறமும், ஸ்பெஷல் நாடகங்கள் மற்றொரு புறமும் சமூக வெளியெங்கும் புதியதொரு புலன் அனுப வத்தைப் பரப்பிக்கொண்டிருந்தன. கிராமம் என்ற கிட்டத்தட்ட மூடிய கலாசார வெளியில் நிகழும் நாட்டார் கலை மரபுசார் நிகழ்வுகளிலிருந்து பல்வேறு வகைகளில் இந்தப் புதிய இசை நாடகங்கள் வேறுபட்டி ருந்தன. முதலில் இக்குழுக்கள் தொடர்ந்து பல்வேறு இடங்களுக்குப் பயணம் செய்து வந்தன. நடிக, நடிகையர் அதுவே முழுநேரத் தொழிலாகக் கொண்டி ருந்தனர். மேடை, திரை போன்ற புதிய காட்சி அம்சங்கள் தோன்றின. தனி நபர்கள் கட்டணம் செலுத்தி அதாவது டிக்கட் வாங்கிக் கொண்டு பார்க்க நேரிட்டது. நிகழ்வு குறித்து விளம்பரங்கள் செய்யப்பட்டன. பொதுவெளியில் கேளிக்கை என்பது ஒரு பண்டமாக மாறியது. இந்த நாடகங்களில் காதல், பாலுறவு சார்ந்த பாடல்களும், நகைச்சுவையும் புதிய வடிவங்கள் எடுத்தன. தொழில் முறை நடிகர்கள் தனிப்பட்ட வாழ்க்கையிலும் ஒழுக்கம் பிறழ்ந்தவர்கள் என்ற எண்ணம் அவர்களது நாடக வெளிப்பாட்டிற்கு மேலும் கவர்ச்சியைச் சேர்ப்பதாயிருந்தது. அதனால்தான் பெண்கள் அத்தகைய நாடகத்தைப் பார்க்கப் போவது பெரிய தலைகுனிவாக இருக்கிறது நமது கட்டுரைக் காரருக்கு. "தங்கள் பெண்களை கூத்துப் பார்க்க அனுப்பும் ஆட வரும் இருப்பது எவ்வளவு விந்தை?" என்கிறார் கட்டுரையாளர்.

கட்டுரை எழுதப்பட்ட வருடத்தையும் அதில் இடம் பெறும் வர்ணனையையும் பார்க்கும்போது ஒருவேளை தஞ்சையில் நடைபெற்றுக்கொண்டிருந்தது எஸ்.ஜி. கிட்டப்பா நடித்த நாடகமோ என யூகிக்கத் தோன்றுகிறது. கிட்டப்பாவும், சுந்தராம்பாளும் வெகுஜன ஊடகம் (Mass Media) என்பதன் வீர்யத்தைத் தமிழகத்தில் வெளிப்படுத்தியவர்கள். துரதிர்ஷ்ட

வசமாகக் கிட்டப்பா சினிமா பேசத்தொடங்குவதற்கு முன்னரே இறந்துவிட்டார். சுந்தராம்பாள் பல புகழ்பெற்ற படங்களில் நடித்துக் கடைசியில் ஔவையாராக மக்கள் மனதில் பதிந்தார். அவர்களோ அவர்களையொத்த பிரபல இசைநாடகக் கலைஞர் களோ சம்பந்தப்பட்டிருந்த நிகழ்வைப் பற்றிய இந்தக்கட்டுரை பெண்களையும், கேளிக்கை வடிவத்தையும் இணைத்துக் கூறும் சில கூற்றுகள் இன்றுவரை சினிமா பற்றிய நம் சமூகத்தின் பார்வையைப் புரிந்துகொள்ள உதவுகின்றன. கௌவரமான குடும்பப் பெண்கள் சினிமா பார்க்கலாமா என்பதும், எத்தகைய படங்கள் பார்க்கலாம் என்பதும் அதைத் தொடர்ந்து அவர்கள் சினிமாவில் நடிக்கலாமா என்ற விவாதமும் பாலியல் சார்ந்த கலை வெளிப்பாடுகளைக் குறித்த அல்லது கலை வெளிப்பாடுகளின் இன்றியமையாப் பாலியல் தன்மை குறித்த நம் சமூகத்தின் ஆழ்மனக் கவலைகளை வெளிப்படுத்துகின்றன.

உதாரணம் இரண்டு: சினிமா உலகம் தலையங்கக் குறிப்பு

ரோஜா முத்தையா ஆய்வு நூலகத்தின் மூலம் நான் அறிந்து கொண்ட இன்னொரு அற்புதப் புதையல் “சினிமா உலகம்” என்ற வாராந்திர சினிமா பத்திரிகை. 1935ஆம் ஆண்டு தமிழில் இருபது, முப்பது பேசும்படங்களே தயாரிக்கப்பட்டிருந்த நிலையில் ஒரு வாரப்பத்திரிகை தொடங்கப்படுவதென்பது எவ்வளவு ஆச்சர்யம். ஏறக்குறைய 14 ஆண்டுகள் வெளிவந்துள்ள அந்தப் பத்திரிகையின் இதழ்களில் 1936 வரையிலான இதழ்களே ரோஜா முத்தையா நூலகத்தில் இருக்கின்றனவென்பது மிகவும் வருந்தத்தக்க செய்தி. மீதமுள்ள இதழ்களை எந்தச் சக்தியாவது கண்டறிந்து இந்த நூலகத்திற்குக் கொண்டுவந்து சேர்த்தால் அது எதிர்காலத்தில் ஆய்வாளர்களுக்கு அரிய பொக்கிஷமாகுமென்பதில் ஐயமில்லை. பண்டித பி.எஸ்.செட்டியார் என்பவரால் நடத்தப்பட்ட இந்தப் பத்திரிகை தமிழ் சினிமா இதழ்களில் தலைசிறந்தது என்று சொல்லத்தக்கது. மிக விரிவான சினிமா விமர்சனங்கள், ஆழ்ந்த சமூக அக்கறை, தொழில்நுட்பத்திலும் தரத்திலும் தமிழ் சினிமா மேம்பட வேண்டுமென்ற தாகம் ஆகியவற்றில் இப்பத்திரிகை இன்றும் கூட இதழியலாளர்களுக்கு முன்மாதிரியாகக் கூடியது. அதே சமயம் இந்தப் பத்திரிகையின் பல கருத்துக்கள் அந்தக் காலத்து சிந்தனைகளை, குறிப்பாக ஆதிக்க சாதி, மேல்தட்டு கருத்துக்களைப் பிரதிபலிப்பவை; சில கருத்துகள் முதிர்ச்சியற்றவை. ஆனாலும் ஒரு நவீன ஊடகம், நவீனமடையத் தொடங்கிய சமூகத்தில் எழுப்பிய கேள்விகளை, சிந்தனைகளை மிகச் சிறப்பாக வெளிப்படுத்துவது இந்தப் பத்திரிகை. ஆனந்த விகடனில் எழுதி வந்த கல்கி கிருஷ்ணமூர்த்தியிடம் பல்வேறு கருத்து வேறுபாடுகள் கொண்டாலும், கல்கியின் நவீன மனோபாவத்தின் மற்றொரு பக்கம்தான் சினிமா உலகம் என்று கூறலாம்.

சினிமா உலகம் பத்திரிகையின் ஒரு இதழில் முதல் பக்கத்தில் ஒரு குறிப்பு. அதன் தலைப்பு “தெம்மாங்கு, தில்லானா“. இராமாயணத்தை ஒட்டி எடுக்கப்பட்ட ஒரு திரைப்படத்தில் இராமன் மிதிலைக்குள் நுழையும்போது தெம்மாங்கு, தில்லானா மெட்டுகளில் பாடுகிறான். சினிமா உலகம் இது பொருத்தமற்றது என்று சுட்டிக்காட்டுகிறது. தெம்மாங்கு, தில்லானா மெட்டுகள் உழைக்கும் மக்கள் பாடுவது. தெய்வ அவதாரமும், இளவரசனு மாகிய இராமன் நல்ல ராகங்களில் கீர்த்தனங்களைப் பாடுவதே பொருத்தம் என்கிறது.

என்னை மிகவும் சிந்திக்கத்தூண்டிய குறிப்பு இது. திரைப்படவியலாளர்கள் பலருக்கு இந்தப்பிரச்சினை சினிமா கதையாடல் சம்பந்தப்பட்டதே இல்லை என்று தோன்றலாம். என்னைப் பொறுத்தவரை பாடல் என்பது திரையில் தோன்றும் பிம்பங்களைத்தீர்மானிப்பது. சினிமா உலகத்தின் கேள்வி இராமன் ஏன் மிதிலை நகரை வர்ணித்துப் பாடவேண்டும் என்பதல்ல. உண்மையில் அந்தக் கேள்வியைத்தான் அப்பத்திரிகை கேட்க வேண்டும். நாடக மேடையில் மிதிலாபுரியைக் காட்சிப்படுத்த முடியாதபோது அந்த நகரை வர்ணித்துப் பாடவேண்டியது அவசியம். ஆனால் திரைப்படத்தில் மிதிலா நகர்போன்று ஒரு செட் போட்டு அதைக்காட்டி விடலாமல்லவா? ஆனாலும் கூட அக்காலத்தில் பார்வையாளர்களின் கற்பனை அந்தக் காட்சியில் பாடல் இல்லாமல் முழுமை பெறாது என்று படமெடுப்போர் கருதியுள்ளனர் என்றே தோன்றுகிறது. இதில் முக்கியமான பிரச்சினை என்னவென்றால் இராமர் போன்ற தெய்வ அவதாரம், ஒரு இளவரசர் மிதிலா நகர வீதியில் வாய்விட்டுப் பாடுவது பொருத்தமா என்ற கேள்வி எழவில்லை. ஆனால் அவர் எப்படிப் பட்ட பாட்டு பாடவேண்டும் என்பதுதான் பிரச்சினை ஆகிறது. இது யதார்த்தம் பற்றிய ஒரு நுட்பமான விஷயத்தை நமக்கு உணர்த்துகிறது. எது பெரும்பான்மையோரால் ஏற்றுக் கொள்ளப் படுகிறதோ அதுவே யதார்த்தம். அதே சமயம் அது அரசியல் முக்கியத்துவம் வாய்ந்தது என்பதால் அதை அதிகார பலமிக்கவர் கட்டுப்பாட்டில் வைத்திருக்கவேண்டும். பெரும்பான்மையோரின் விருப்பத்திற்கு விட முடியாது. சாதாரண மக்களுக்கு இராமர் தெம்மாங்கு பாடுவதில் ஒன்றும் பிரச்சினை இல்லாமலிருக்கலாம். ஆனால் ஆதிக்க சாதியினர் தங்கள் கடவுளைத் தங்கள் விருப்பத்தின்படிதான் கற்பிக்க முடியும். புதிதாகத் தோன்றியுள்ள அனைவருக்கும் பொதுவான திரைப்படச் சாதனம் இப்படிப்பட்ட புதிய பிரச்சினைகளைக் கிளப்ப வல்லதாக இருக்கிறது. அதனாலேயே அது ஜனநாயக அரசியலின் களமாகவும் மாறுகிறது. ஒரு கலாசார, ரசனைப் போருக்குக் கட்டியம் கூறப்படுவதை இத்தகைய குறிப்புகளில் பார்க்க முடிகிறது. அடுத்த எழுபது ஆண்டுகளில் எத்தனையோ சர்ச்சைகள் எழப்போகின்றன என்பது புரிகிறது.

உதாரணம் மூன்று: "அந்தக் கடிதத்தை காட்டு!"

என்னுடைய மூன்றாவது உதாரணம் மிக நுட்பமானது; அது என்னுடைய ஆய்வின் போக்கைத் தீர்மானித்த ஒன்று. சினிமா பற்றிய பல ரகசியங்களை எனக்கு உணர்த்தியவண்ணமிருப்பது. மேலோட்டமாகப் பார்க்கும்போது மிகவும் வேடிக்கையானது. கும்பகோணத்திலிருந்து வேங்கடராமன் என்பவர் 1935 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் ஒரு கட்டுரை அல்லது குறிப்பு ஒன்றை சினிமா உலகத்திற்கு அனுப்புகிறார். "தமிழ்ப் படங்களில் ஒரு குறை" என்ற தலைப்பில் அது வெளியிடப்படுகிறது. அதில் அவர் என்ன கூறுகிறாரென்றால், திரைப்படங்களில் ஒரு கதாபாத்திரத் திற்குக் கடிதமோ, ஓலையோ வருகிறது. அந்தக் கடிதம் அல்லது ஓலையைப் படித்துவிட்டு அந்தக் கதாபாத்திரம் அதன் உள்ளடக்கத்தைப் பிறரிடம் கூறுகிறது. அல்லது சில சமயம் வாசித்துக் காட்டுகிறது. இது தவறு என்கிறார் வேங்கடராமன். அந்தக் கடிதம் அல்லது ஓலையில் எழுதப்பட்டவற்றைப் பார்வையாளர்களுக்குக் காட்டவேண்டும் என்கிறார். முதலில்

சினிமா உலகம் பத்திரிகையின் ஒரு இதழில் முதல் பக்கத்தில் ஒரு குறிப்பு. அதன் தலைப்பு "தெம்மாங்கு, தில்லானா". இராமாயணத்தை ஒட்டி எடுக்கப்பட்ட ஒரு திரைப்படத்தில் இராமன் மிதிலைக்குள் நுழையும்போது தெம்மாங்கு, தில்லானா மெட்டுகளில் பாடுகிறான். சினிமா உலகம் இது பொருத்தமற்றது என்று சுட்டிக்காட்டுகிறது. தெம்மாங்கு, தில்லானா மெட்டுகள் உழைக்கும் மக்கள் பாடுவது. தெய்வ அவதாரமும், இளவரசனு மாகிய இராமன் நல்ல ராகங்களில் கீர்த்தனங்களைப் பாடுவதே பொருத்தம் என்கிறது.


10 சினிமா உலகம் 1935ஆ செப்டம்பர் 22

தமிழ்ப் படங்களில் ஒரு குறை

[ஸ்ரீ. N. வேங்கடராமன்]

ஓர் நற்செய்தி!

சினிமாப் படம் தயாரிப்போர்,

ஏராளமான லாபமும், சிறந்த பெயரும், நற்கீர்த்தியும் பெறவேண்டுமோனால்
சினிமாவிற் குகந்தபடி சமூக சீர்திருத்தமாய், நவரசங்களும் அமைத்து
இக்காலத்திற் கேற்றபடி நூதனமாய்த் தயாரித்த

கமலாபரணம் (நகைப் பைத்தியம்)

மதிகெட்ட மனைவி (நாகரீகப் பித்து)

இக்கதைகளைத் தேர்ந்த நடிகர்களைக்கொண்டு, அநுபவசாலிகளானவர்களின்
மேல்பார்வையில் படம் தயாரிப்பவருக்கு உரிமை யளிக்கப்படும்.

பிக்டோரியல் கம்பெனி,
137, பிராட்வே, : : சென்னை.

1935இல் வெளிவந்த 'சினிமா உலகம்' இதழ்

நாம் இந்தக் கோரிக்கையின் பின்புலத்தைக் கவனிக்க வேண்டும்.

நாடக மேடைகளில் ஒரு ஓலையோ, கடிதமோ ஒரு கதா பாத்திரத்திற்கு வந்தால் அதை அவர் மட்டும்தான் படிக்க முடியும். பார்வை யாளர்கள் பக்கம் காட்டி னால்கூட தூரம் காரணமாக எழுத்துக்கள் பார்வையாளர் களுக்குத் தெரியாது. ஆனால் திரைப்படத்தின் மிகப்பெரிய சாத்தியம் க்ளோஸ்அப் எனப் படும் அருகாமைக் காட்சி களும், படத்தொகுப்பும். எனவே சுலபமாக அந்தக் கதாபாத்திரம் அதைப் படிக்கும்போது அவரது தோளுக்கு மேலிருந்து அந்தக் கடிதத்தை அப்படியே காட்டி பார்வையாளர் களும் அதைப் படிக்கும்படி செய்யலாம். வேங்கடராமன் என்ன சொல் கிறாரென்றால், ஆங்கிலப் படங்களில் அப்படிக் காட்டுகிறார்கள். தமிழ்ப் படங்களிலோ, நாடக மேடை போலவே அதைக் காட்டாமலேயே விடுகிறார்கள் என்கிறார். மௌனப்படங்களில் பேச்சில் கூற முடியாது என்பதால் கடிதத்தையே காட்டிவிடுவது இயல்பு. ஆனால் பேசும்படம் வந்த பிறகு எழுத்தைக் காட்டாமல் கடிதத்தின் பொருளை வாயாலேயே பேசிவிடுகிறார்கள் என்கிறார். இது குறிப்பிடத்தகுந்த ஒரு அவதானிப்புதான். சினிமாவின் பிரத்யேக சாத்தியமான அருகாமைக் காட்சியைப் பயன்படுத்தி அந்தக் கடிதத்தைக் காட்டவேண்டுமென்பது ஏற்கத்தக்க கருத்துதான். ஆனால் அதற்கு மேல் வேங்கடராமன் கூறும் இன்னொரு விஷயம்தான் மிகவும் பிரச்சினைக்குரியதாகிறது.

மூன்றாவது பத்தியில் அவர் அந்தக்கருத்தைக் கூறுகிறார். இவ்வாறு கடிதத்தைக் காட்டும்படி சொல்வது ஏதோ அவருடைய விருப்பத்திற்காக அல்ல. "சில பாமர ஜனங்கள் பேசும் படத்தைப் பார்த்துவிட்டு பிறகு கதை தெரியாமல் விழிப்பது இந்த மாதிரி கடிதங்கள், தந்திகள் இவற்றிலுள்ள செய்தியைப் பார்க்காத தினால்தான்" என்று கூறுகிறார். வேங்கடராமனின் அக்கறை ஏதோ திரைப்பட அழகியல் சம்பந்தப்பட்டதல்ல, பாமர மக்களுக்குக் கதை புரியவேண்டும் என்பதுதான் என்றாகிறது. இங்கேதான் ஒரு பெரிய புதிர் விழுகிறது. 1935ஆம் ஆண்டில் பாமர மக்களில் மிகப் பெரும்பாலோருக்கு எழுதப் படிக்கத் தெரியாது என்பதை நாம் கருத்தில் கொள்ளவேண்டும். மொத்த மக்கள் தொகையில் 10% அல்லது 15% பேருக்குப் படிக்கத் தெரிந்திருந்தால் பெரிய விஷயம். எழுதப் படிக்கத் தெரிந்தோரின் தேசிய சராசரி அந்த ஆண்டு 8% மட்டுமே.

வேங்கடராமன் ஏன் எழுத்தறியா ஜனங்களுக்குக் கடிதத்தை காட்டவேண்டும் என்று சொல்கிறார்? அது மட்டுமின்றி அதைக் காட்டாததால் கதை புரியாமல் விழிக்கிறார்கள் என்று வேறு சொல்கிறார். அவர் கொடுக்கும் உதாரணமே அவரது கூற்றை மிகையென்று காட்டுகிறது. 'பயனீர்' துருவனில் உத்தானபாதன் சுருசிக்கு நாட்டை விட்டுப்போகும்படி கடிதம் எழுதுகிறான். அதை சுருசி வாங்கிப் படிக்கும்போதும் இப்படித்தான்" என்று எழுதுகிறார். அதாவது கடிதத்தைப் பார்க்காமலேயே அதன் உள்ளடக்கத்தைப் புரிந்துகொள்வதில், கதையின் போக்கை புரிந்துகொள்வதில் எந்தக் கஷ்டமும் இல்லை. அப்படியிருக்கும் போது மக்களுக்கு எழுத்தைக்காட்டாவிட்டால் கதை புரியாது என்று எதற்காகக் கூற வேண்டும்?

இந்தக் கடிதத்தை முதலில் படித்தபோது எனக்கு அடக்க முடியாத சிரிப்புத்தான் வந்தது. மற்றவருக்கு வந்த கடிதத்தை எட்டிப்பார்த்து படிப்பதில் உள்ள ஆர்வமே வேங்கடராமனை சினிமாவிலும் அதை எதிர்பார்க்க வைக்கிறது என்று நினைத்தேன். பிறர் அந்தரங்கங்களை அறிந்துகொண்டு வம்பு பேசுவது மனித இயல்பு, அதிலும் வேங்கடராமன் அக்ரஹாரத்துக்காரராயிருந் தால் வம்புக்கு கேட்கவே வேண்டாம். அப்படிப்பட்ட ஒரு வம்புப் பிராணியின் எட்டிப் பார்க்கும் ஆசை என்றே கடிதத்தை நான் முதலில் நினைத்தேன். ஆனால் இந்த பாமர ஜனங்களின் மேலான அக்கறை என்னை மிகவும் குழப்பியது, அதைத் தொடர்ந்து யோசித்ததன் மூலம் திரைப்படத்திற்கும், மக்கள் திரள்களுக்கும் இருக்கக்கூடிய நுட்பமான தொடர்புகளைப் பற்றி சில கருத்தாக்கங்களை எட்டாண்டுகளுக்குப் பின் உருவாக்க முடிந்தது. எழுத்தறிவற்ற சமூகப்பகுதிகளில் சினிமா எழுத்தின் இருத்தலியல் பரிமாணத்தை அறிமுகப்படுத்துகிறது என்பதே அக்கருத் தாக்கங்களின் சுருக்கமான சரடு.

இது போன்ற சிறு துணுக்குகள் பெரிய வரலாற்று ஆவணங் களல்ல என்று தோன்றலாம். ஆனால் இவை நாம் சிறிதும் யோசித்துப்பார்க்க முடியாத ஒரு கோணத்தை, சமூக இயக்கத்தின் அடர்த்திகளை நமக்கு முன் கொண்டுவருகின்றன. குறிப்பாக வெகுஜன கலாசாரத்தின் தோற்றுவாய்களை நாம் அடையாளங் காண வேண்டுமானால் மிகப் பொறுமையாக நாம் பல்வேறு இதழ்களை, அவற்றின் ஒவ்வொரு பக்கங்களையும் கவனமாகப் பரிசீலிக்கவேண்டும். அப்போதுதான் புதிய சிந்தனைகளை, பார்வைகளை உருவாக்க முடியும். ரோஜா முத்தையா நூலகத்தின் அபாரமான சேமிப்புகள் ஆய்வாளர்களின் வருகைக்காக காத்திருக்கின்றன. ஆனால், ஆய்வாளர்கள் அங்கு செல்லும்போது பட்டை தீட்டப்படாத வைரங்களைப் பார்த்தவுடன் அதைப் பட்டை தீட்டினால் எவ்வளவு மதிப்புள்ளதாக இருக்கும் என்று ஊகிக்கும் திறம் பெற்றிருக்கவேண்டும். சினிமா போன்ற வெகுஜன கலாசாரம் சார்ந்த தகவல்கள், ஆவணங்கள் எல்லாமே மேல்பார்வைக்குச் சாதாரணமாக இருக்கும். அவற்றை வரலாற்று இயக்கத்துடன் எப்படித் தொடர்புபடுத்துவது என்பதைப்பற்றிய அனுமானமே நமக்கு அவற்றின் மதிப்பைக் காட்டித்தரும். தமிழ் சினிமா நவீன தமிழகத்தின் வரலாற்றில் மிகப் பெரும் பங்காற்றியது என்பதை உணர்ந்தவர்கள் ரோஜா முத்தையா ஆய்வு நூலகத்தின் ஆவணங்களில் எத்தனையோ புதையல்களைக் கண்டெடுக் கலாம்.

ரோஜா முத்தையா நூலகத்தின் அபாரமான சேமிப்புகள் ஆய்வாளர்களின் வருகைக்காக காத்திருக்கின்றன. ஆனால், ஆய்வாளர்கள் அங்கு செல்லும்போது பட்டைதீட்டப்படாத வைரங்களைப் பார்த்தவுடன் அதைப் பட்டை தீட்டினால் எவ்வளவு மதிப்புள்ளதாக இருக்கும் என்று ஊகிக்கும் திறம் பெற்றிருக்கவேண்டும்

தமிழ் நாடக வரலாற்று ஆய்வு : ரோஜா முத்தையா நூலகம் காட்டும் திசைவழிகள்

■ அ. மங்கை

இக்கட்டுரையாளர், சென்னை தனியார் கல்லூரி ஒன்றில் ஆங்கில ஆசிரியர். கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாகத் தமிழ் நாடக உலகில் செயல்பட்டு வருகிறார். கவிஞர் இன்குலாப் நாடகங்களை நெறியாள்கை செய்துள்ளார். ‘Gender and Theatre’ எனும் இவரது ஆங்கில நூல் விரைவில் வெளிவரஉள்ளது.

இக்கட்டுரை 19ஆம் நூற்றாண்டு இறுதிதொட்டு, இருபதாம் நூற்றாண்டின் மையப்பகுதி வரை உள்ள தமிழ்நாடக வரலாற்றை எழுதுவதில் உள்ள இடைவெளிகளையும் ரோஜா முத்தையா நூலகத்தில் உள்ள ஆவணங்கள் காட்டும் சில திசைவழிகளையும் குறித்து விவாதிக்கிறது. அரசுவுடன் இணைந்து எழுதிய “மாற்றங்களுக்கான நடைதிறப்பு: காலனீய கால தமிழ்நாடக வரலாற்றை நாடக நோட்டீசுகள் மூலம் கட்டமைத்தல்” என்ற ஆங்கிலக் கட்டுரையை அடியொற்றியே எழுதப்படுகிறது.(Singh, Lata. (Ed.) Theatre in Colonial India: Play- house of Power, OUP, 2009, 105-131). பொதுவாக நாடக வரலாறு, நாடகப் பனுவல்கள், நாடகாசிரியர்கள் சார்ந்தே அணுகப்படுகிறது. தமிழின் நிகழ்த்துகலை வரலாற்றில் தொழிற்படும் ரசவாதங்கள் காரணமாகப் பனுவல்கள் மட்டுமே நாடக வரலாறாகாது என்பதைப் புரிந்துகொண்டு நாடக / அரங்க வரலாற்றை எழுதும் முயற்சிகள் 1970களில் தொடங்கின எனலாம்.(பெருமாள், 1979, சக்திபெருமாள் 1979). நிகழ்த்துக் கூறுகள், கலைஞர்கள் வாய்மொழி வரலாறு ஆகியவை இதன் காரணமாக முக்கியத்துவம் பெறலாயின. நிகழ்த்துக் கூறுகள் குறித்த பதிவாக அன்றைக்கு விளம்பரத்திற்காகப் பயன்படுத்தப் பட்ட நாடக நோட்டிசுகள் திகழ்கின்றன. பொதுவாக யுனெஸ்கோ விதித்துள்ள விளக்கப்படி 48 பக்கங்களுக்குள் இருக்கும் அச்சு நூல்கள் ‘பிரசுரங்கள்’; புத்தகங்கள் அல்ல. எனவே பொதுவாக ஆவணப்படுத்தும் ஆர்வம் உள்ள எவரும் இக்குறுநூல்களை/ விளம்பர நோட்டிசுகளைச் சிரத்தையாக அணுகுவதில்லை. பொதுவாக நூலகங்கள் இவற்றைச் சேகரிப்பதில்லை.

ரோஜா முத்தையா இத்தகு நோட்டீசுகளைச் சேகரிக்கவும் பாதுகாக்கவும் எடுத்த முயற்சிகளைப் பின்வருமாறு குறிப்பிடுகிறார். *“அவ்வளவும் இத்துப்போன பேப்பர்கள். காற்றுப்பட்டால் கூடக் கிழிந்துவிடும், ஒவ்வொரு பேப்பருக்கும் அடியில் கார்டு போர்டை வைத்து ‘சலபன்’ கவர் செய்யவேண்டும். ..... ஒவ்வொரு பேப்பரையும் காப்பாற்ற சராசரி 35 பைசா ஆகும். என்னிடம் உள்ள பதினாயிரக்கணக்கான கட்டிங்ஸ்களும் நோட்டீஸ்களும் இந்த முறையில்தான் காப்பாற்றப்பட்டு, ஒழுங்கான முறையில் வைக்கப்பட்டுள்ளன“ (“புத்தகங்களைத் தேடி அலைந்தபோது”, ஓம் சக்தி, 3:10,டிசம்பர் 1985:65)* இந்த நோட்டீசுகள் அனைத்தும்

இப்போதுள்ள நூலகத்தில் உள்ளனவா என்பது எனக்குத் தெரியாது. நானறிந்த வரையில் சூசன் சைசர் 'தமிழ் அரங்கில் இழிவு' என்ற தனது ஆய்வில் இந்த நாடக நோட்டீசுகளைக் கொண்டு பல முடிவுகளை எட்டுகிறார். அடுத்து அரசு, ரோஜா முத்தையா நூலத்தின் கருத்தரங்கத்தில் உரை நிகழ்த்தியபோது, அங்கிருந்த 1947க்கு முற்பட்ட நாடக நோட்டீசுகள் அனைத்தையும் ஆய்வுநோக்கில் அணுக முயன்றார். அதையடுத்து முன்னர் குறிப்பிட்ட ஆங்கிலக் கட்டுரை வெளிவந்துள்ளது. நாடக நோட்டீசுகள் குறுகிய கால உயிர்ப்புக்காக உருவாக்கப்பட்டவை தான் என்றாலும் எவ்வளவு கவனத்துடன் செய்யப்பட்டது என்பதை டி.கே.சண்முகம் விளக்குகிறார். கந்தசாமி முதலியார் அவர்கள் நாடகம் முடிந்து திரும்பும் பார்வையாளர்களுக்கு ஒரு சிகரெட் அளிப்பார். அதில் அடுத்த நாடக அறிவிப்பு இருக்கும். சில சமயம் ஒரு சீட்டுக்கட்டு. அவற்றில் புதுநாடக அறிவிப்புகள் அல்லது வீட்டுக்குவீடு தந்தி. மாலை நாடகத்திற்கான அழைப்பு. இந்த யுத்திகள் இவற்றின் முக்கியத்துவத்தைப் பறைசாற்றுகின்றன.

1892இல் தஞ்சை மனமோகன நாடக சபா வழங்கிய 'சந்திர ஹாஸ சரித்திரம்' நோட்டீஸ்தான் ரோஜா முத்தையா நூலகத்தின் மிகப் பழைய நாடக நோட்டீஸ் எனக் கருதுகிறோம். அதில் ஒழுங்கு என்ற குறிப்பில் ஸ்தீரிகளுக்கென ஒதுக்கப்பட்ட இடத்தில் இடம் மாறி உட்காரக்கூடாது என்பதும் , கலகம் செய்தால் போலீசார் வசம் ஒப்புவிக்கப்படும் என்பதும் பஞ்சமர்களுக்கு இடம் கிடைக்க மாட்டாது என்பதும் குறிப்பிடப்பட்டுள்ளது. 1915இல் சாமாவையரின் குழு வழங்கிய பால அலாவுடின் சரித்திரம், அல்லி அர்ஜீனா நோட்டிசிலும் பஞ்சமருக்கு இடமில்லை என்ற குறிப்பு உள்ளது. சினிமாக் கொட்டகைகள் சமூக மட்டத்தில் சன நாயகத்தைக் கொண்டு வந்தது பற்றி பேரா. சிவத்தம்பி குறிப்பிட்டுள்ளார்(1981). ஆனால் அவ்வளவு எளிதாகச் சாதியக்கட்டமைப்பு மாறவில்லை என்பதை இந்த நோட்டீசுகள் காட்டுகின்றன.

நாடகங்களில் பெண்கள் பங்கேற்பு குறித்த ஆய்வுகள் வங்காள, மராத்தி மாநில மொழிகளில் நடத்தப்பட்டுள்ள அளவு தமிழில் நிகழ்த்தப்படவில்லை. ஆண்கள் பெண் வேடமிட்டு நடிக்கும் மரபு இன்றளவும் நீடிக்கும் சமூகச் சூழலில், நாடகத்தில் பெண்களது பங்கு பற்றி அறிவதற்கு இந்நாடக நோட்டீசுகள் மிகப் பெரும் உதவியாக அமைகின்றன. பெண் வேடமிட்டு ஆண்கள் நடித்த அதே மேடையில், பெண்களும் நடித்தனர் என்பதை அறிய முடிகிறது. 1934இல் K. S. அனந்த நாராயண அய்யர் சத்தியபாமாவாகாவும், ஸ்ரீமதி S.D. சுப்புலெக்ஷிமி ருக்மணியாகவும் நடித்த நாடகம் பற்றி ஒரு நோட்டீஸ் தெரிவிக்கிறது. அதே போல ஆண்வேடமிட்டுப் பெண்கள் நடித்ததையும், பெண்கள் இசைக்கலைஞர்களாகத் திறம்படச் செயல்பட்டதையும் பெண்கள் மட்டுமே கொண்ட குழுக்கள் இயங்கியதையும் நாம் அறிய முடிகிறது. மிஸ் வி.எம். மீனாஷி சுந்தரம்மாள், பார்ஸி சதாரம் நாடகத்தில் பல்வேறு விதமான சர்க்கஸ் வித்தைகள், நடனங்கள் புரிவதைச்சொல்லும் நோட்டீஸ் ஒன்று 1933இல் வந்துள்ளது. அவரைப் போல் நடிக்கும் நபர்களுக்கும் ரு. 500 பரிசு வழங்கப்படும் என்று சவால் விடும் அளவு அவரது திறமை போற்றப்பட்டுள்ளது.

நாடகங்களில் பெண்கள் பங்கேற்பு குறித்த ஆய்வுகள் வங்காள, மராத்தி மாநில மொழிகளில் நடத்தப்பட்டுள்ள அளவு தமிழில் நிகழ்த்தப்படவில்லை. ஆண்கள் பெண் வேடமிட்டு நடிக்கும் மரபு இன்றளவும் நீடிக்கும் சமூகச் சூழலில், நாடகத்தில் பெண்களது பங்கு பற்றி அறிவதற்கு இந்நாடக நோட்டீசுகள் மிகப் பெரும் உதவியாக அமைகின்றன. பெண் வேடமிட்டு ஆண்கள் நடித்த அதே மேடையில், பெண்களும் நடித்தனர் என்பதை அறிய முடிகிறது.

அன்றை சூழலில் வீரியத்தோடு செயல்பட்ட விடுதலை இயக்கத்துடன் நாடகத்திற்கு இருந்த தொடர்பு பல்வேறு

கர்ணபரம்பரைக் கதைகள், வாய்மொழிப் புனைவுகளால் கட்டமைக்கப்படுகிறது. தியடோர் பாஸ்கரன் இந்நாடகங்களில் பாடப்பட்ட மேடைப்பாடல்கள் விடுதலை இயக்க உணர்வை வெளிப்படுத்தியதைக் குறிப்பிட்டுள்ளார். (The Message Bearers, 1981). கு. சா. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் பல பாடல்களை நினைவில் இருந்து பதிவு செய்துள்ளார் (1979). 1932இல் எஸ்.ஜி. கிட்டப்பா நடித்த ஸ்ரீவள்ளி நாடக நோட்டீஸ் ஒன்று "தேசீயப் பாடல்கள் பாடப்பட மாட்டாது" என்ற வாக்குமூலத்தைக் கொடுக்கிறது. கடுமையான தணிக்கை நாடகமேடையில் இருந்த தால் இத்தகு அறிவிப்புகள் தேவைப்பட்டிருக்கலாம். எஸ்.ஜி. கிட்டப்பாவின் விடுதலை இயக்க ஈடுபாடும், கதர் பக்தியும் போலீசாரை ஈர்க்கும் என்பதால் இத்தகைய அறிவிப்புச் செய்யப்பட்டிருக்கலாம், எப்படியாயினும், விடுதலைப் போராட்டம் என்ற தேசீய நீரோட்டத்தில் எல்லா வெகுசன வடிவங்களும் எந்தளவுக்குத் தம்மை ஈடுபடுத்த முடியுமோ, அந்தளவுக்குத் தான் தமிழ் நாடகமும் ஈடுப்பட்டது என்பதே உண்மை. இவற்றில் ஒரு சில நடிகர்கள் தொடர்ந்த அரசியல் செயல்பாடுகளில் இருந்தனர் என்பதைக் குறிப்பிட வேண்டும். அதன் தொடர்ச்சியாகவே என்.எஸ்.கே, எம்.ஆர்.இராதா ஆகியோரைக் காணலாம்.

1932இல் எஸ்.ஜி. கிட்டப்பா நடித்த ஸ்ரீவள்ளி நாடக நோட்டீஸ் ஒன்று "தேசீயப் பாடல்கள் பாடப்பட மாட்டாது" என்ற வாக்குமூலத்தைக் கொடுக்கிறது. கடுமையான தணிக்கை நாடகமேடையில் இருந்த தால் இத்தகு அறிவிப்புகள் தேவைப்பட்டிருக்கலாம். எஸ்.ஜி. கிட்டப்பாவின் விடுதலை இயக்க ஈடுபாடும், கதர் பக்தியும் போலீசாரை ஈர்க்கும் என்பதால் இத்தகைய அறிவிப்புச் செய்யப்பட்டிருக்கலாம்.

ஆனால் தமிழக இசை நாடக / ஸ்பெஷல் நாடக வடிவம் / மேடை நாடகம் தம்மைக் காத்துக் கொள்ள வேண்டிய அளவுக்குக் காலனிய அரசுக்குக் 'குடை' பிடித்தது என்பது தான் உண்மை. அதைக் குறித்து நாம் வெட்கப்பட வேண்டியதில்லை. ஆண்டு குறிப்பிடப்படாமல் வெளியிடப்பட்டுள்ள நவாப் இராஜமாணிக்கம் அவர்களின் 'மதுரை தேவிபால வினோத சங்கீத சபை'யினருக்கு வழங்கப்பட்ட நற்சாட்சிப் பத்திரங்கள் ஒரு சிறு பிரசுரமாக வெளியிடப்பட்டுள்ளது. கோவையில் 1934இல் காந்தியின் வாழ்த்துரையில் தொடங்கி 1935இல் காங்கிரசுக்கு நன்கொடை வழங்கியதைக் குறிப்பிட்டு வாழ்த்தும் ராஜேந்திர பிரசாத் அவர்களின் நற்சாட்சிப் பத்திரம் இடம்பெற்றுள்ளது.

அதைத் தொடர்ந்து 1937வரை உள்ள மேற்கோள்கள் ஆங்கி லேய அதிகாரிகள் 'கருப்பு பாபுக்களான' இந்திய அதிகாரிகள் ஆகியோருடையவை. மொழி புரியாவிட்டாலும், இசையையும், செய்நேர்த்தியையும் இரசித்ததாக ஆங்கிலேய அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர். 1930களின் இறுதியில் மீண்டும் தீவிரமாகச் சூடுபிடிக்கத் தொடங்கிய விடுதலை இயக்கச் சூழலில் எண்பது நடிகர்களும்,பிற கலைஞர்கள் எழுபதுமாகச் சேர்த்து சுமார் 150பேர் கொண்ட நாடகக் குழு தனது இருப்பை உறுதி செய்து கொள்ள மேற்கொண்ட முயற்சியாகவே இச்சிறு வெளியீட்டைக் காண விழைகிறேன். ரோஜா முத்தையாவில் உள்ள இக்குறு நூல் அருமையான புகைப்படங்கள் கொண்ட ஆவணமாகத் திகழ்கிறது. அப்படங்கள் மீண்டும் மீண்டும் நாடக ஆய்வாளர்கள், மலர் தயாரிப்பாளர்களால் பயன்படுத்தப்படுவதைக் காண முடிகிறது.

1930களின் இச்செயல்பாட்டை இரு நிலைபாடுகளோடு புரிந்து கொள்ள முடியும். 1920கள் வரை இரு கோடுகளாக இயங்கி வந்த அரசியல் பத்திரிகை, வர்த்தக இதழ் ஆகிய சூழல் முப்பதுகளில் ஒன்றாக இணையத் தொடங்குகிறது. விடுதலைப் போராட்டம் என்ற பெருங்கதையாடல் இயங்கிய போதும், கலை வரலாறு, புது இலக்கிய முயற்சிகள், மொழி மற்றும் பிற சமூக அலகுகள்

குறித்த நுண்கதையாடல்களும் மேலெழும்பத் தொடங்கின. அதே நேரம் வர்த்தகமயமாக்கமும் காலூன்றத் தொடங்கியது. பத்திரிகைத் துறையில் சதானந்த் என்ற ஒரு தனி நபர் தினமணி, காந்தி, மணிக்கொடி ஆகிய இதழ்களை ஒரே நேரத்தில் நடத்த முடிகிறது. ஆங்கில பத்திரிகைத் துறைப் பயிற்சியோடு தன்னிடம் இருந்த முதலீட்டை வைத்து பத்திரிகைச் சங்கிலித் தொடரை நடத்துவது சாத்தியம் என்றானது. வீ. அரசு மணிக்கொடி குறித்து 'சிறு பத்திரிக்கை அரசியல்' (2006) நூலில் குறிப்பிடுவது போல, 'மணிக்கொடிக் காலம்', 'மணிக்கொடிக் குழு' எனும் சொல்லாட்சிகள் மூலம் இவ்விதழ் தமக்கென ஒரு நிலைப்பாட்டில் செயல்பட்டது போன்ற பிரமைகள் உருவாக்கப்பட்டுள்ளன. புதுமைப்பித்தன் கதைகள் இடம்பெற்றமையும் ந.பிச்சமூர்த்தி, கு.ப.ரா.ஆகிய பிறர் அவ்விதழில் எழுதினர் என்பதாலும் அது சிறு பத்திரிக்கையாக ஆகிவிட முடியாது. வழக்கமாகச் செயல் படும் அச்சு ஊடகத்தில் மேற்குறித்தவர்கள் எழுதினர். இவர்களது எழுத்துக்களை வேண்டி அவ்விதழ் செயல்படவில்லை. வணிக இதழ்களில் இன்னொரு வகை இதழாகவே மணிக்கொடி செயல்பட்டது" (8-9) எனக் குறிப்பிடுகிறார்.

வணிகமயமாக்கம் மட்டுமின்றி அரசியலில் காந்தியுடனும், கலை, இலக்கியத்தில் ஆங்கிலம் மூலம் கிடைத்த ஐரோப்பிய வடிவங்களின் தாக்கத்துடனும் இயங்கிய குழுவொன்று முப்பது களில் தீவிரமாக இருந்தது என்பதையும் காணமுடிகிறது. 1933 இல் வெளிவந்த மணிக்கொடி இதழ்களில் தொடர்ந்து நாடகம் குறித்த விவாதங்கள் இடம்பெற்றுள்ளன. 15.10.1933 இல் பி. எஸ். இராமையா "பொறுமையுள்ள பிராணி தமிழ் நாடகாபிமானி" என்ற கட்டுரையில் நாடாகாபிமானிகள் சங்கம் வேண்டும் என வலியுறுத்துகிறார். நாடக நோட்டீசுகளில் "கைதட்டிக் கலகம் செய்பவர்களைப் போலீசார் வசம் ஒப்புவிக்கப்படும்" எனப் போடும் நிலையை மாற்ற இது உதவும் என வாதிடுகிறார். நோட்டீசுகளின் வாசகத்தை அவர் வாசிக்கும் முறை அரசியல் சார்ந்ததாக அல்ல, நாடக அழகியல் சார்ந்ததாக முன்வைக்கப்படுகிறது.

15.10.1933 இல் பி. எஸ்.இராமையா "பொறுமையுள்ள பிராணி தமிழ் நாடகாபிமானி" என்ற கட்டுரையில் நாடாகாபிமானிகள் சங்கம் வேண்டும் என வலியுறுத்துகிறார். நாடக நோட்டீசுகளில் "கைதட்டிக் கலகம் செய்பவர்களைப் போலீசார் வசம் ஒப்புவிக்கப்படும்" எனப் போடும் நிலையை மாற்ற இது உதவும் என வாதிடுகிறார். நோட்டீசுகளின் வாசகத்தை அவர் வாசிக்கும் முறை அரசியல் சார்ந்ததாக அல்ல, நாடக அழகியல் சார்ந்ததாக முன்வைக்கப்படுகிறது.

"நடிகப் புலமை இல்லாத நடிகர்கள், நாடக லக்ஷணங்கள் இல் லாத கூத்துக்கள், நாடக ரஸம் இல்லாத கதைகள், பொறுத்தமற்ற சங்கீத இனிமை இவை அனைத்தும் சேர்ந்து 'நாடகம்' என்று வேஷம் போட்டுக் கொண்டு ஆடுகின்றன" (29.10.1933) என்று மேலும் விளக்குகிறார்.

5.11.33 இல் இவ்வாதத்தை மேலும் விரித்துப் பேசும்போது ஷா, கால்ஸ்வொர்தி, ஜேம்ஸ் பாரி போன்ற மேலைய நாடகாசிரியர் களின் நூல்களோடு ஒப்பிட்டுப் பேசுகிறார். எந்த மேடைப் பாடல்கள் விடுதலை இயக்கத்திற்கு உரமளித்தது என்று பண்பாட்டியல் ஆய்வாளர்கள் பாராட்டுகிறார்களோ, அதே பாடல்களைக் கேலி செய்கிறார்.

"எதற்கும் பாட்டா? நாடகத்திற்கு இது அவசியமா? மேல்நாட்டு நாடகங்களில் பாட்டு கிடையாது. ஸ்வரம் பாடியா கோபித்துக் கொள்கிறோம்?" என்ற தலைப்பு, உபதலைப்புகள் இடப்பட்ட கட்டுரையில் பின்வருமாறு கூறுகிறார்:

"எல்லாம் பாட்டு மயம். வேட்டைக்குப் பாட்டு; விளை யாட்டுக்குப் பாட்டு ; புலம்பலுக்குப் பாட்டு; சிரிப்புக்குப்பாட்டு; காதலுக்குப் பாட்டு; யுத்தத்துக்குப் பாட்டு; பேச்சுக்குப் பாட்டு.

அதுமட்டுமா? நாடகப் போக்குக்குப் பொருத்தமில்லாத பாட்டு. கோவலன் சரித்திரத்துக்கும், சித்தரஞ்சன் தாஸ் இறந்ததற்கும் என்ன சம்பந்தம்?. வள்ளி திருமணத்திலே தாதாபாய் நாரோஜிக்கு என்ன வேலை? .... நாட்டை ஆள நமக்குத் திறமையில்லை என்று பலர் சொல்லுகிறார்கள்; பாட்டில்லாத நாடகம் எழுதக் கூடவா நமக்குச் சக்தி கிடையாது"

தேசிய விடுதலை இயக்கம் குறித்த அரசியல் சிந்தனையும், நாடக அழகியல் குறித்த சிந்தனையும் ஒரே கோட்டில் அமைய வேண்டும் என்ற கட்டாயம் எதுவுமில்லை. காலனியத்துடனான உறவு வெட்டியும், ஒட்டியும் வெளிப்பட்ட இந்த ஊடாட்டங்களைப் பதிவு செய்வதும் ஆய்வுக்கு உட்படுத்துவதும் அவசியமாகின்றன. அதனை விடுத்து நேர்கோட்டுப் பாணியில், கருப்புவெள்ளையாக வரலாறு செயல்படுவதில்லை. வரலாற்றை அப்படிப் புரிந்து கொள்ள முயற்சிக்கும் விபரீதம் தான் பாரதியின் மன்னிப்புக் கடிதத்தைக் கொண்டு அவனது முழு அரசியல் உறுதியைக் கேள்விக்கு ஆளாக்கும் அபத்தத்திற்குள் நம்மைத் தள்ளிவிடுகிறது.

தேசிய விடுதலை இயக்கம் குறித்த அரசியல் சிந்தனையும், நாடக அழகியல் குறித்த சிந்தனையும் ஒரே கோட்டில் அமைய வேண்டும் என்ற கட்டாயம் எதுவுமில்லை. காலனியத்துடனான உறவு வெட்டியும், ஒட்டியும் வெளிப்பட்ட இந்த ஊடாட்டங்களைப் பதிவு செய்வதும் ஆய்வுக்கு உட்படுத்துவதும் அவசியமாகின்றன. அதனை விடுத்து நேர்கோட்டுப் பாணியில், கருப்பு-வெள்ளையாக வரலாறு செயல்படுவதில்லை.

தமிழ்நாடக நூல்கள் வெளியீட்டில் உள்ள சிக்கல்களையும் ரோஜா முத்தையா நூலகத்தில் உள்ள நாடக நூல்கள் மூலம் அறிய முடிகிறது. உதாரணமாக, 1907இல் பதிப்பிக்கப்பட்ட இராமநாடகம் நூலின் முகப்பு பின்வருமாறு குறிப்பிடுகிறது:

"இராமநாடகம் சீர்காழி அருணாச்சலக் கவிராயர் பாடியது இஃது மகா.ஸ்ரீ. சிற்றேரி அருணகிரி முதலியாரவர்கள் கேட்டுக் கொண்டபடி சென்னைக் கல்விச் சங்கத்துத் தமிழப் புலவர் திரு. வேங்கடாசல முதலியாராலும், சங்கீத சாகித்திய வித்துவாமிசரா கிய பொன்விளைந்த களத்தூர் இராமசாமி நாயகராலும், முன்பதிப்பித்த பிரதிக்கிணங்கப் பொன்விளைந்த களத்தூர் இராஜசேகர முதலியாரால் இயற்றிய இராமாயண ஓரடிக் கீர்த்தனையுடன், ஸ்ரீரங்கம் ராமசாமி நாயுடு அவர்களால் பரிசோதிக்கப்பட்டு லெத்தகிராப் படத்துடன் சென்னை இட்டா பார்த்தசாரதி நாயுடு அவர்களால் தமது பத்மநாப விலாச அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது" (அழுத்தம் எனது)

1853இல் இராமநாடகம் பிரபாகர அச்சுக்கூடம் வெளியிட்ட பதிப்புதான் முதன்முதல் வந்த பதிப்பாக இருக்கலாம் என்பதை அ. கோகிலாவின் 'தமிழ் அரங்க வரலாறு அச்சு நாடகப் பிரதிகள் (1835- 1922)' ஆய்வேடு குறிப்பிடுகிறது. ஆனால் நாடக நூல் பதிப்பில் இருந்த இந்தச் சிக்கல்களைப் பொருட்படுத்தாது. சக்திபெருமாளின் நூல், பதிப்பு ஆண்டு தெரியாத 1880இல் வெளியான நூலாகக் குறிப்பிடுகிறது (361). இயற்றமிழ் விளக்க அச்சுக்கூடத்தின் 1883 பதிப்பான இராமநாடகம், ஆசிரியர் பெயரின் கீழ் பட்டியலிடப்படவில்லை (364). கீர்த்தனைப் பட்டியலில் இந்நூலின் P. R. & Sons வெளியிட்ட 1950ஆம் ஆண்டு பதிப்பு இடம்பெற்றுள்ளது. ஏ. என். பெருமாள் அவர்களின் பட்டியலில் அருணாசலக்கவிராயரின் அசோமுகி நாடகம் 1775இல் வெளியிடப்பட்டதாகக் குறிப்பிடப்படுகிறது. 1771இல் வெளியான இராமநாடகக் கீர்த்தனை நூலில் இருந்து மேற்கோள் காட்டும் இவர், இந்நூலின் சிறப்புக்களை பம்மல், கா. சு. பிள்ளை ஆகியோர் விதந்திருப்பதைக் கூறி "இவ்வாறு வழங்கப்பெற்றாலும் இஃது ஒரு நாடக நூலா என்ற சிந்தனை எழத்தான் செய்கிறது" (1979, 26-28) என்கிறார். நாடகம் என்ற வடிவம் நாட்டார்

கலைகளோடு பிணைந்திருந்ததை ஆய்வு செய்த ஏ. என். பெருமாள் அவர்களின் இந்த முடிவு கீர்த்தனை வடிவம் தமிழ் நாடகத்தின் முன்னோடியாகத் திகழ்ந்த வரலாற்றை ஏற்க மறுப்பதையே காட்டுகிறது. அத்துடன் பதினெட்டாம் நூற்றாண்டு இறுதியில் இந்நூல்கள் அச்சில் வந்தனவா? என்பதும் கேள்விக்குறி.

தமிழ்நாடக வரலாறு குறித்த இவ்விரு நூல்களையும் அவர்கள் குறிப்பிடும் பதிப்பு வரலாற்றோடு மீளாய்வு செய்வது அவசியம் என்பதை ரோஜா முத்தையா நூலகத்தில் காண நேர்ந்த 'இராமநாடகம்' (1883 பதிப்பு) உணர்த்தியுள்ளது.

அதுதவிர அச்சுப்பிரதிகள் காட்டும் பல்வேறு தகவல்களை ஒன்றிணைத்த வரலாறு தமிழ் நாடக வரலாறு எழுதுவதற்கு தேவை என்பதையும் வேறு சில நூல்கள் காட்டுகின்றன. புழக்கத்தில் பெரிதும் பேசப்படாத இஸ்லாமிய நாடகங்கள் பற்றி ஏ. என். பெருமாள் குறிப்பிடுகிறார். அவருக்குக் காணக்கிடைக் காத 'அப்பாசு நாடகம்' (1887) இந்நூலகத்தில் இடம்பெற்றுள்ளது. அதன் முகப்பு பின்வருமாறு குறிப்பிடுகிறது.

"நாகூர் ஆயுள்வேதிய பீர்முகயீத்தீன் குமாரர் வாஞ்ஞுர் பகீர் அவர்களால் தற்காலம் நாகூர் நாகபட்டினம் பினாங்கு சிங்கப்பூர் இவ்வூர்களில் வழங்கும் வர்ணமெட்டு பாட்டிராகப்படிக்கு ஒருவாறு சேகரம் செய்ததை திருநெல்வேலிப் பேட்டை சேயிப்பு காசிம் ராவுத்தர் குமாரர் காசி முகயீத்தீன் ராவுத்தர் அவர்களால் பார்வையிடவைத்து தமது முகம்மது காமதானி அச்சியந்திர சாலையிற் பதிப்பிக்கப்பட்டது.காரைக்கால்".

மிக அருகில் இத்தகவல்கள் தமிழ்நாடக வரலாற்றில் இடம்பெறவேண்டியது அவசியமாகிறது.

1910இல் வெளிவந்துள்ள குலசேகரி (அ) நல்லதங்காள் சரித்திரம் நூலில் இந்நாடகத்தில் பிரபலமாக அறியப்பட்ட கலைஞர்கள் பெயரில் டி. ஏ. இராஜாமணியம்மாளின் பெயர் 'கானமோகினி' என்ற அடைமொழியோடு வெளியிடப்பட்டுள் ளது. அதே போல 'பரத நளின' ஜானகி அம்மாள் பெயர் வேறொரு நாடகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. 1920களில் நாடகத்திலகம் எஸ்.கே. முருகாம்பாள் பெயர் குறிப்பிடப்படுகிறது. இப்பெண்களின் பெயர்கள் பட்டியல்களில் பத்தோடு பதினொன் றாக இடம் பெறுவதை இன்று காண்கிறோம். அவற்றுக்கான ஒரு முகவரி தருபவையாக இந்நூல்கள் அமைகின்றன. அதே சமயம், பலரும் குறிப்பிடும் பாலாமணி அம்மாள் பற்றிய விவரங் களுக்கான எந்த ஆவணத்தையும் இதுவரைப் பெற முடியவில்லை.

இதுதவிர சமஸ்கிருதம், ஆங்கிலம் பிற ஐரோப்பிய நாடகங்களைத் தழுவி வெளியிடப்பட்ட மொழி பெயர்ப்பு நூல்களும் இடம்பெற்றுள்ளன. மூலநூலைச் சரிபார்த்துச் செய்யப்பட்ட மொழிபெயர்ப்பும், மேடையேற்றத்துக்கென செய்யப்பட்டவையும் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளன.

1911இல் வெளிவந்துள்ள எஸ். அரங்கநாத முதலியாரின் பபூன்ஸ் ஆக்ட், மற்றும் ஆண்டு தெரியாத "நாகரீகப் பபூன் பார்ட்" பாடல் தொகுப்பு நூலும் வெகுசனப் பண்பாட்டில் இவற்றுக்கு இருந்த "மவுசை'க் காட்டுகின்றன. பபூன்ஸ் ஆக்ட் நூலில் அகடவிகட மகா நாடகம் என்ற உபதலைப்பும், பல்வேறு நகைச்சுவைக் காட்சிகள், பாடல்கள் ஆகியவையும் தொகுக்கப்

"நாகூர் ஆயுள்வேதிய பீர்முகயீத்தீன் குமாரர் - வாஞ்ஞுர் பகீர் அவர்களால் - தற்காலம் நாகூர் நாகபட்டினம் பினாங்கு சிங்கப்பூர் இவ்வூர்களில் வழங்கும் - வர்ணமெட்டு பாட்டிராகப்படிக்கு ஒருவாறு சேகரம் செய்ததை - திருநெல்வேலிப் பேட்டை - சேயிப்பு காசிம் ராவுத்தர் குமாரர் காசி முகயீத்தீன் ராவுத்தர் அவர்களால் பார்வையிடவைத்து - தமது முகம்மது காமதானி அச்சியந்திர சாலையிற் பதிப்பிக்கப்பட்டது

பட்டுள்ளன. அதன் இறுதியில் அகடவிகட தாசி, பாத்திரமாக வருகிறார். தாசி கோகிலம் சொன்ன கதைகள் 80 - 93 பக்கங்கள் வரை அடுத்தடுத்து வரிசையாகத் தொகுக்கப்பட்டுள்ளன. நாகரீக பபூன் பார்ட் நூலின் பின் அட்டையில் ஆண் பெண் மர்ம ரகசியங் கள் மற்றும் கிராமபோன் கீதக் களஞ்சியம் நூல்களுக்கான விளம்பரம் வெளியிடப்பட்டுள்ளது. பாய்ஸ் கம்பெனி, ஸ்பெஷல் நாடகம் குறித்த பயிற்சிக்கு இத்தகு பாடல் தொகுப்புகள் உதவியாக இருந்திருக்கலாம். மையக்கதையோடு ஒட்டாமல் தனிப் போக்கில் போகும் நகைச்சுவைக் காட்சிகளாக இவற்றைப் பயிலவும், ரசிக்கவும் செய்திருக்கலாம். இன்றளவும் நமது திரைப்படங்களில் நகைச்சுவைக் காட்சிகள் தொழிற்படும் தன்மைகளைப் புரிந்து கொள்ள இவை உதவும். அத்துடன் என். எஸ். கிருஷ்ணன் போன்ற கலைஞர்கள் தமது நகைச்சுவைக் காட்சிகளைத் தாமே உருவாக்கிக் கொண்டதையும் இணைத்துப் பார்க்கலாம். சங்கரதாஸ் சுவாமிகள், பம்மல் சம்பந்த முதலியார் நாடகங்கள் நூல் வடிவில் 40 பக்கங்களுக்குள் இருப்பதையும், இவை மணிக் கணக்காக நடிக்கப்பட்டதையும், இவற்றில் நகைச்சுவைக் காட்சிகள் எழுதப்படாமல் இருப்பதையும் இத்துடன் சேர்த்துப் புரிந்து கொள்ள வேண்டும். அந்த வகையில் சபாபதி நாடகங்கள் பார்ஸ் (Farce) எனப்படும் கேளிக்கைக் காட்சிகள், பகிடி (burlesque) நாடகங் கள் போன்றவற்றை வெளியிட்டவர் பம்மல் அவர்கள்தான்.

1937இல் கோ. நடேசய்யர் எழுதிய "இலங்கைத் தோட்ட இந்தியத் தொழிலாளர் அந்தப் பிழைப்பு நாடகம்" என்ற நூல் கொழும்பில் வெளியாகியுள்ளது. அதன் நுண் இழை நகல் (விவீநீக்ஷீஷீயீவீறீனீ) நூலகத்தில் கிடைக்கிறது. அதன் முகப்பு நடேசய்யரின் துணைவியார் மீனாட்சியம்மாள் இந்நாடகத்திற்கான பாடல்களை இயற்றியதைக் குறிப்பிடுகிறது. இலங்கைத் தேயிலைத் தோட்டத் தொழிலாளர் போராட்ட வரலாற்றில் நடேசய்யர்- மீனாட்சியம்மாள் தம்பதியரின் பங்கு அளவிடற்கரியது.

இக்கட்டுரைக்காக ரோஜா முத்தையா நூலகத்தில் நுனிப்புல் மேய்ந்த போது கிடைத்த மாபெரும் சொத்தை இங்குப் பகிர்ந்து கொள்வது அவசியம் எனப்படுகிறது. 1937இல் கோ. நடேசய்யர் எழுதிய "இலங்கைத் தோட்ட இந்தியத் தொழிலாளர் அந்தப் பிழைப்பு நாடகம்" என்ற நூல் கொழும்பில் வெளியாகியுள்ளது. அதன் நுண் இழை நகல் (Microfilm) நூலகத்தில் கிடைக்கிறது. அதன் முகப்பு நடேசய்யரின் துணைவியார் மீனாட்சியம்மாள் இந்நாடகத்திற்கான பாடல்களை இயற்றியதைக் குறிப்பிடுகிறது. இலங்கைத் தேயிலைத் தோட்டத் தொழிலாளர் போராட்ட வரலாற்றில் நடேசய்யர்மீனாட்சியம்மாள் தம்பதியரின் பங்கு அளவிடற்கரியது. சாரல் நாடன் அவர்கள் நடேசய்யர் குறித்து எழுதிய நூல் ஒன்றைச் சமீபத்தில் குமரன் புத்தக இல்லம் வெளியிட்டுள்ளது (2008).

நடேசய்யரின் கருத்துக்கள் பிரசுரங்களாக வெளியிட்டதைத் தடுக்க முயற்சிகள் எடுக்கப்பட்டதையும் ஆங்கிலத்திலும் தனது கருத்துக்களை அவர் வெளியிட்டதையும் சாரல்நாடன் குறிப்பிடு கிறார். தோட்டச் சொந்தக்காரர்களும் பெரும் கங்காணிகளும் அப்புத்தகங்களை விலைக்கு வாங்கித் தீயிட்டுக் கொளுத்தினர். அதையொட்டியே 'தொழிலாளர் அந்தரப் பிழைப்பு நாடகம்' என்ற நூல் வெளியானது. 'அய்யர் இயற்றிய அநேக பாடல்கள் இதில் இடம்பெற்றிருந்தன. கணவனும் மனைவியுமாக தோட்டத் துக்குச் சென்று கூட்டங்கள் போடும்போது பாரதியின் பாடல் களோடு இந்தப்பாடல்களையும் அவர்கள் பாடிக்காட்டு வதுண்டு' (119) என்று சாரல்நாடன் குறிப்பிடுகிறார் நாடகக் காட்சிகளின் சுருக்கத்தைத் தேசபக்தன் இதழில் நடேசய்யர் எழுதிய கட்டுரை களில் இருந்து மேற்கோள் காட்டிச் சாரல் நாடன் குறிப்பிடுகிறார். நேரடியாக நாடக நூலைப் படிக்கும் வாய்ப்பைச் சாரல் நாடன் பெற்றதாக அறியமுடியவில்லை. இந்நாடக மேடையேற்றம் குறித்தும் தகவலறிய நம்மால் இய வில்லை. 2007இல் அம்மன்கிளி

இந்தியத் தொழிலாளர் அந்தரப் பிழைப்பு நாடகம்.

இது
கணக்குப் பதிவுநூல், கணக்குப் பரிசோதனை, ஆயில் எஞ்சின்,
நீ மயங்குவதேன், வெற்றியுனதே முதலிய நூல்களின்
ஆசிரியரான

கோ. நடேசய்யர்

இயற்றியது.

இந்நாடகத்திலுள்ள பாடல்கள்
சந்தச்சரபம் உடுமலை, முத்துச்சாமிக் கவிராயர் அவர்கள்
மாணவியும், ஆசிரியரின் பெண்சாதியுமான

ஸ்ரீமதி. கோ. ந. மீனாட்சியம்மாளால்

இயற்றப்பெற்றவை.

கமலா பிரஸ்
கொழும்பு.
1937

(விலை 50 சதம்.)

இலங்கை மலையகத்தில் செயல்பட்ட கோ.நடேசய்யர் எழுதிய நாடகம்

முருகதாஸ் தொகுத்து வெளிவந்துள்ள நூலில் பேரா. சிவத்தம்பி மலையக அரங்கு பற்றிய குறிப்பை வழங்கியுள்ளார்.(178- 180). அதில் மலையக மக்கள் வடிவங்களான தப்படித்தல், காமன்கூத்து, பொன்னர் சங்கர் கதை, அர்ச்சுனன் தபசு ஆகியன பற்றிப் பொதுப் பட பேசாதது பற்றிக் குறிப்பிடுகிறார். நடேசய்யரின் இந்நாடகம் குறித்த தகவல் சிவத்தம்பி அவர்களுக்குக் கிட்டியதாகத் தெரியவில்லை.

இலங்கைக்குச் சென்ற இந்திய வம்சாவளியினர் வாழ்முறை குறித்த சித்திரிப்பாக இந்நாடகம் அமைந்துள்ளது. கங்காணிகள், துரைமார் ஆகியோரின் போக்கும், இந்திய அரசு இவ்வாறு வேலைக்குச் சென்ற மக்களிடம் எடுத்துக் கூறிய சட்டங்கள், தொழிலாளர் நலத்துக்கான சங்கப் பணி ஆகியவை இதில் இடம் பெறுகின்றன. கங்காணி ஒருவன் ஆள் பிடிக்கும் ஏஜெண்டு பற்றிப் பின்வருமாறு வர்ணிக்கிறான்.

"தாலியில்லாதவளுக்குப் புதுச்சரடு போட்டுச்
சோடி சேர்ப்பான்; தாலி இருப்பவர்களுக்கு
அவள் தாலியை வெடுக்கென அறுத்து
மகள் கம்மனாட்டின்னு பதிஞ்சிடுவான்.
அப்பனையும் மகளையும் புருசன்
பென்சாதி என்னும் பதிஞ்சுடுவான்.
அவன் ஆளுக்கு ரூ3 தான் கேட்கிறான்."

கூலித் தொழிலாளர்கள் இந்திய அதிகாரிகளிடம் தாங்கள் ஏற்கனவே இலங்கையில் இருந்தவர்கள் எனச் சொல்லுமாறு பயிற்றுவிக்கிறான் ஏஜெண்ட்.

"மிளகாய்க்குக் கொச்சிக்காய்தான்
முன்னே அறிந்திடுங்கோ
அளகா எலுமிச்சைக்கு
அரிய தேசிக்கா யென்பார்கள்"

என்று பாடம் புகட்டியும் அவர்கள் பயத்தில் உளறுவது நாடகத்தில் காட்சியாக்கப்படுகிறது. துரைமார்கள் தொழிற்சங்கம் குறித்துப் பேசுவதாக

"சட்டப்படி நடக்கணும்நான்இல்லையேல்
சங்கடங்கள் வந்து சேரும்பங்கப்படணும்
தொழிலாள சங்க மொன்றுண்டுஅதனால்
தொந்தரைகள் வந்து விடும்சிந்தை கலங்கும்'

என்று குறிப்பிடுகிறார்.

மக்கள் மத்தியில் தன் கருத்துக்களைப் பரப்ப பிரசுரம், பிரசங்கம் இருக்க நாடகம் என்ற வடிவத்தைத் தேர்ந்தெடுத்ததை நடேசய்யர் முன்னுரையில் விளக்குகிறார்.

"இதர நாடகங்களைப் போல் இந்நாடகத்திற்கும் கதாநாயகன் என்று ஏற்படுத்தி அவனைப் பொருத்து கதை அமைக்கப் பெற வில்லை. ஆதலின் சிற்சில சீன்களைக் குறைத்துக் கொண்டு நாடகத்தை நடித்துக் காட்டக் கூடும். இந்நாடகத்தின் நோக்கத்தை அறியாதவர்களும் உணர்ச்சியில்லாதவர்களும் ஏற்றி நடத்தி இதன் லட்சியத்தைக் கெடுக்காதிருக்க வேண்டுகிறேன்" என்று கறாராக முன்னுரையில் எழுதியுள்ளார். பாத்திரங்களின் உடை, ஒப்பனை குறித்த தகவல்களையும் வழங்குகிறார். "கங்காணி கணக்கன் காலில் செருப்பிருக்க வேண்டும்" என்று பிரத்யேகமாக குறிப்பிடுகிறார்.

நானறிந்த வரையில் தமிழில் அரசியல் அரங்கம் குறித்த வரலாற்றை எழுதுகையில் தொழிற்சங்கவாதியாகவும் அரசியலில் தீவிரமாகவும் பணியாற்றிய ஒருவரின் நாடக முயற்சியாக இந்நாடகத்தைக் காணலாம்.

தமிழ் நாடகம்/அரங்கம் குறித்த 19, 20 ஆம் நூற்றாண்டு ஆய்வு களை அதற்கான பல்வேறு சிக்கல்களை அங்கீகரித்து நடத்துவ தற்குத் தேவையான தரவுகளை ரோஜா முத்தையா நூலகம் பெற்றுள்ளது. குறிப்பாக வெகுசனப் பண்பாடு சார்ந்த வடிவங்களை அணுகும் போது தேவைப்படும் நெளிவு சுளிவுக்கான ஆதாரங்கள் இங்கு உள்ளன. இவை இருப்பது பெரிய விஷயம் ஆனால் அவற்றை உரிய முறையில் பயன்படுத்தாவிடில், தமிழ்ப் பண்பாட்டு வரலாற்றைப் புரிவதில் நமக்குள்ள மெத்தனம் நாம் சமூகத்திற்குச் செய்யும் அநீதி.

தமிழ் நாடகம்/ அரங்கம் குறித்த 19, 20 ஆம் நூற்றாண்டு ஆய்வுகளை அதற்கான பல்வேறு சிக்கல்களை அங்கீகரித்து நடத்துவ தற்குத் தேவையான தரவுகளை ரோஜா முத்தையா நூலகம் பெற்றுள்ளது. குறிப்பாக வெகுசனப் பண்பாடு சார்ந்த வடிவங்களை அணுகும் போது தேவைப்படும் நெளிவு சுளிவுக்கான ஆதாரங்கள் இங்கு உள்ளன.

107

தமிழில் உருவான அச்சு ஆக்கங்கள்– சிறுமணவூர் முனிசாமி முதலியார் – வெகுசனப் பண்பாடு – ரோஜா முத்தையா ஆய்வு நூலகம்

■ வீ. அரசு

ஒவ்வொரு சமூகத்திலும் உருவாகி வளர்ந்துவரும் புதிய புதிய நிகழ்வுகள் குறித்த புரிதல் தேவை. தமிழ்ச் சமூகத்தில் உருவான அச்சுப்பண்பாட்டைக் குறித்த புரிதல் நோக்கி இவ்வுரையாடல் அமைகிறது. அச்சுப் பண்பாடு தமிழில் உருவான/உருவாகி வரும் வரலாற்றைக் கீழ்க்காணும் வகையில் தொகுத்துக் கொள்ளமுடியும்.

பதினாறாம் நூற்றாண்டின் இடைக்காலத்தில் அச்சுக்கருவி தமிழ்ச்சூழலில் புழக்கத்திற்கு வந்தது. பதினெட்டாம் நூற்றாண்டு முடிய (சுமார் 150 ஆண்டுகள்) அச்சுக்கருவி முழுமையாகப் புழக்கத்திற்கு வந்துவிட்டதாகக் கூற முடியாது. ஆனால் இக்காலங்களில் தமிழ்த்தொடர்பான அச்சுப்பணிகள் நடந்தன. அவை கிறித்தவச் சமயம் தொடர்பான அச்சுப்பணிகளே ஆகும். இக்காலத்தைத் தமிழ்ச்சூழலில் அச்சுப்பண்பாடு உருவாகி நிலைபேறு கொண்ட தாகக் கருதமுடியும். கோவா (1556 - 1669), கொல்லம்-கொச்சி (1578 - 1586), அம்பலக்காடு (1677 - 1680), தரங்கம்பாடி (1712 - 1800), கொழும்பு (1737 - 1800), புதுச்சேரி (1778 - 1795), சென்னை (1761 - 1800), ஆகிய இடங்களில் அச்சுப்பணிகள் நடந்தன. இவ்விடங்களில் 933 அச்சு ஆக்கங்கள் செய்யப்பட்டிருப்பதை அறிய முடிகிறது. (பார்க்க: கிரஹாம் ஷா நூல்) இதில் தமிழில் அச்சிடப்பட்டவை 266 ஆக்கங்கள். இதிலிருந்து தமிழ் அச்சுப்பண்பாட்டைக் கட்டமைக்க முடியும்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கம் முதலே, கிறித்தவ சமயப் பரப்புச் செயல்பாடுகள் வேகமாக முன்னெடுக்கப்பட்டன. ஜான் மர்டாக் பதிவுகள் (1865, 1870) வழி தமிழில் செயல்பட்ட அச்சுச் செயல்பாடுகளை அறிய முடிகிறது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் பள்ளிக்கூடங்கள் உருவாயின. எழுத்தறிந்தவர்கள் எண்ணிக்கைக் கூடியது. 'வாசிப்பாளர்கள்' எனும் புதிய பிரிவினர் உருவாயினர். இக்காலங்களில் 182 ஐரோப்பிய தொண்டூழிய நிறுவனங்கள் (Missionaries) செயல்பட்டன. கிறித்தவர்களின் எண்ணிக்கை சுமார் ஒரு இலட்சம் ஆகியது. (94, 540) ஆங்கிலோ இந்தியப் பள்ளிகளில் 8106 மாணவர்கள் படித்தனர். உள்ளூர் பள்ளிகளில் 28,836

பேரா.அரசு சென்னைப் பல்கலைக் கழகத்தின் தமிழ் இலக்கியத் துறையின் தலைவராகப் பணியாற்றுகிறார். பல நூல்களும் கட்டுரைகளும் எழுதியிருக்கிறார். தமிழ்ப் பதிப்புத்துறையிலும் தமிழியல் ஆராய்ச்சியிலும் ஒரு முக்கிய அங்கம் வகிப்பவர். ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகத்தின் வளர்ச்சியில் அக்கறையும் ஈடுபாடும் உள்ளவர்.

மாணவர்கள் படித்தனர். (ஜான் மர்டாக்:1870) இக்காலங் களில் ஆயிரக்கணக்கில் சமயச் சிறுநூல்கள் மற்றும் அறிக்கைகள் (Tracts) அச்சிடப்பட்டுப் பரப்பப்பட்டன. 1835 இல் மெக்கபே கொண்டுவந்த சட்டத்தின்மூலம், அச்சிடும் உரிமை அனைவருக்கும் வழங்கப்பட்டது. சென்னைக் கல்விச் சங்கம் மூலம் தமிழ் இலக்கண நூல்கள் மற்றும் பாடநூல்கள் அச்சிடப்பட்டன. பாடநூல்கள் மிகுதியாக அச்சாகின. இவ்வகையில் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இடைக்காலத்திற்குள் அச்சுப்பண்பாடு வளர்ச்சியுற்று முழுமையடைந்துவிட்டது. அச்சுச்சூழல், எழுத்தறிதல்வாசிப்புப் பழக்கம் என்ற முறைமையில் அச்சுப்பண்பாடு உருப்பெற்றதாகக் கூறமுடியும். தமிழ் அச்சுப் பண்பாட்டின் இரண்டாம் கட்டமாக (1800 - 1870) இதனைக் கூறலாம்.



இப்படம், சிறுமணவூர் முனிசாமி அவர்களின் 'நாரதர் கலகம்' (1939) நூலிலிருந்து எடுக்கப்பட்டது.

பிரித்தானிய அரசு 1867இல் அச்சிடும் ஆக்கங்களை அரசுக்கு வழங்கும் நூல் பதிவுச்சட்டத்தைக் கொண்டு வந்தது. இதன்மூலம் அச்சிடும் ஆக்கங்கள் ஓரிடத்தில் கிடைக்கும் வாய்ப்பு உருவானது. மெக்கென்சி மற்றும் டெய்லர் தொகுப்புகள் மூலம் பல விவரணங்கள் கிடைத்தன. பிரித்தானிய அருங்காட்சியகம் மூலம் உருவாக்கப்பட்ட முதலிரு நூற்பட் டியல்கள் (1909, 1931) தமிழ் நூல்கள் அச்சிட்ட விவரங்களை அறிய உதவுகின்றன. தமிழ்நாட்டு அரசினரின் தமிழ் வளர்ச்சி ஆராய்ச்சி மன்ற வெளியீடான (1964), தமிழ்நூல் விவர அட்டவணைகள் (முதல்தொகுதி ஐந்து பகுதிகள் 1867 - 1900) மூலம் விரிவான விவரங்களை அறியமுடிகிறது. இப் பதிவுகள் மூலம், தமிழில் உருவான அச்சுப் பண்பாட்டை அறிய முடிகிறது. முதலிரு கட்டங்களைவிட, பத்தொன்பதாம் நூற்றாண் டின் இறுதிப்பகுதி தொடர்பான விரிவான விவரணங்கள் உள்ளன.

தமிழ் அச்சுப்பண்பாடு பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் வெகுசனத் தன்மையை உள்வாங்கத் தொடங்கியது. இரண்டாம் உலகப்போருக்கு முந்தைய காலங்களில் (1900 - 1945) வெகுமக்களின் நுகர்வுப் பண்டமாக அச்சுச் செயல் உருவானது. பலதரப்பிலும் உருவான எழுத்தறிவு வளர்ச்சி, தேசியம், மொழி ஆகியன உள்ளிட்ட 'நாடு' என்னும் கருத்தாக்கம் மற்றும் தேசிய இனக் கருத்தாக்கம் ஆகியவை வாசிப்பு மரபை வளர்த்தன. இதழியல் உருவானது. சங்கிலித் தொடராக அச்சு வெளியீட்டு நிறுவனங்கள் உருவாயின. காலனியத்தின் மூலம் கிடைத்த எழுத்தறிவு மற்றும் தொழில்நுட்பம் தன்வயமாயின. வட்டார மொழிகள் எனும் அடையாளம் உருவானது. இதில் அச்சுப் பண்பாட்டின் கூறுகளைக் கண்டறியமுடியும். (இப்பகுதி குறித்து இக்கட்டுரையில் பின்னர் விரிவாக உரையாடலுக்கு உட்படுத்த உள்ளோம்).

பிரித்தானியர்கள் ஆட்சி அதிகாரத்தைக் கைமாற்றிச் சென்ற பின்னர் உருவான காலனிய அச்சுச்செயல்பாடுகள் மாற்றமுற்று, முழுவதாக வட்டாரத்தன்மையைப் பெற்றன. ஐரோப்பியர்களால், நமக்குக் கிடைத்தாலும் அது நமது வடிவமாக இக்காலங்களில் உருவானது. பெரிதும் வெகு சனப் பண்பாடாகவே இயங்கிவந்த அச்சுச் சூழல், 'மாற்று'க்களை அறிமுகப்படுத்துவதாகவும் செயல்பட்டது. பல செல்நெறிகள் அச்சுப்பண்பாட்டில் உருவாயின (1945 - 1990). நூல் வெளியிடுதல், இதழியல், சிறுவெளியீடுகள் ஆகிய பிற அச்சுச் செயல்பாடுகளில் வெகுசனப் பண்பே முதன்மையாக இருந்தாலும் மாற்றுப் பண்பு களும் அங்கீகாரம் பெறும் சூழல் உருவானது. தமிழ்ச் சிற்றிதழ்கள், தமிழ்ப் புனைகதைகள், தமிழ்ப் படக்கதைகள், தமிழ்ச்சிறார் புனைவுகள் எனப் பல பரிமாணங்களில் தமிழ் அச்சுப்பண்பாடு உருவானது. இத்தன்மைகள் குறித்த விரிவான உரையாடல் தேவைப்படுகிறது.

எண்பதுகளின் இறுதி தொடங்கி தமிழில் உருவான கணினி அச்சுப்பண்பாடு, தமிழ் அச்சுப்பண்பாட்டில் ஊடாட்டங்களை நிகழ்த்திவருவதைக் காண்கிறோம். நுகர்வின் பல்வேறு கூறுகள் தொழிற்படுகின்றன. ஒவ்வொரு துறை சார்ந்தும் அச்சுப்பண்பாடு தனித்துச் செயல்படுகின்றது. திரைப்படங்கள் போன்ற துறைகள் மற்றும் வாக்குச்சீட்டுகள் சார்ந்து நடைபெறும் அரசியல் அதி காரப் போட்டிகள் ஆகிய பிற நிகழ்வுகளுக்கும் அச்சுப்பண் பாட்டிற்குமான உறவுகள் பல பரிமாணம் மிக்கவை. கணினித் தொழில்நுட்பமே புதிய அச்சுப்பண்பாட்டை உருவாக்கும் வகையில் செயல்படுவதைக் காண்கிறோம். இத்தன்மை இருபத்தோராம் நூற்றாண்டில் நிலைபேறு கொள்ளத் தொடங்கியுள்ளது. பல்வேறு ஊடகங்களின் இணைவாகவே (பல் ஊடகம்) ஊடகப்பண்பாடு உருப்பெற்று வருகிறது. தனித்த ஒரு ஊடகத்தின் பண்பாடாகக் கட்டமைப்பதில் சிக்கல்கள் உள்ளன.

❑

1556 - 2000 என்ற கால அச்சுப்பண்பாட்டு வரலாற்றை மேற்குறித்தவாறு உரையாடலுக்கு உட்படுத்தலாம் 1556 - 1800; 1801 - 1867; 1886 - 1900; 1901 - 1945; 1946 - 1990; 1991 - 2010 என்ற கால ஒழுங்கில் தமிழ் அச்சுப்பண்பாட்டு வரலாற்றை நாம் கட்ட மைக்க முயலலாம். தொகுக்கப்பட்டுள்ள தரவுகள் சார்ந்தும் அந்தக் காலத் தொழில்நுட்பம் மற்றும் எழுத்துப்பயிற்சி வழி உருவான வாசிப்புமுறைகள் சார்ந்தும் இதனைக் கட்டமைக்க முடியும். இந்த வரலாற்றில் 1900 - 1945 கால வெகுசன அச்சுப்பண்பாடு குறித்த உரையாடலாக இப்பகுதி அமைகிறது. இவ்வுரையாடல் உருப்பெற்றதற்கான பின்புலம் பின்வரும் வகையில் அமைகிறது:

'மாற்றுவெளி' நான்காவது இதழை ரோஜா முத்தையா ஆய்வு நூலகம் குறித்தச் சிறப்பிதழாகக் கொண்டுவர முடிவு செய்தோம். இவ்விதழின் அழைப்பாசிரியராக இந்நூலக இயக்குனர் க. சுந்தர் அவர்கள் செயல்பட ஒப்புதல் தந்தார். அவர் என்னை இந்நூலகம் பற்றி எழுதித் தருமாறு என்னைக் கேட்டார். அதன் விளைவாக அந்நூலகத்தில் உள்ள அச்சு ஆக்கங்கள் குறித்துக் கணிப்பொறி யில் உள்ள பட்டியலைத் தட்டிப் பார்க்கத் தொடங்கினேன்.

அப்பொழுது ஒரு பெயர் அடிக்கடி வருவதைப் பார்த்தேன். அப்பெயரில் எவ்வளவு பதிவுகள் இருக்கும் என்று அங்குள்ள நூலகர் திருமதி மாலா அவர்களிடம் கேட்டேன். சுமார் முந்நூறு தேறும் என்றார். பின்னர், அவர் 216 பதிவுகளின் பட்டியலை எனக்கு எடுத்துக் கொடுத்தார். அப்பதிவுகளுக்கு உரியவர் சிறுமணவூர் முனிசாமி முதலியார் என்பவர். தமிழில் எழுதப்பட்டுள்ள மரபான எந்த இலக்கிய வரலாற்றிலும் இவர் பெயர் இடம்பெறவில்லை. இவர் யார் என்றும் விவரங்கள் அறிவது சிக்கலாக இருக்கிறது. தேடினால் கண்டறியமுடியும். அது இப்போது நமது உடனடித் தேவையாக அமையவில்லை. இவரது பெயரில் உள்ள ஆக்கங்களின் பட்டியலைப் பார்த்தபோது வெகுசனப் பண்பாட்டின் அனைத்துக் கூறுகளையும் உள்ளடக்கிய அச்சு ஆக்கங்களுக்கு “சிறுமணவூர் முனிவரே” சொந்தக்காரராக இருப்பதை அறிய முடிந்தது.

ரோஜா முத்தையா நூலகத்தில் சிறுமணவூரார் பெயரில் உள்ள பதிவுகளுக்கு இணையாக தனிநபர் பெயரில் வேறு பதிவுகள் இடம் பெற்றிருப்பதாகக் கூறமுடியவில்லை. எனவே, இந்நூலகத்தில் வெகுசன நுகர்வு சார்ந்த வாசிப்பு மரபில் உருவான வெகுசன அச்சு ஆக்கங்களை மதிப்பீடு செய்வதற்கு சிறுமணவூர் முனிசாமி முதலியார் (இனி முனிசாமி) ஆக்கங்களே அடிப்படைத் தரவுகளாக அமையக்கூடும் என்று முடிவு செய்தேன். வெகுசன அச்சுப்பண்பாடு சார்ந்த மூலத்தரவுகளின் கொள்கூடமாக இந்நூலகம் அமைவதை இதன்மூலம் உரையாடலுக்குக் கொண்டு வருவது நமது நோக்கம்.

ரோஜா முத்தையா நூலகத்தில் சிறுமணவூரார் பெயரில் உள்ள பதிவுகளுக்கு இணையாக தனிநபர் பெயரில் வேறு பதிவுகள் இடம் பெற்றிருப்பதாகக் கூறமுடியவில்லை. எனவே, இந்நூலகத்தில் வெகுசன நுகர்வு சார்ந்த வாசிப்பு மரபில் உருவான வெகுசன அச்சு ஆக்கங்களை மதிப்பீடு செய்வதற்கு சிறுமணவூர் முனிசாமி முதலியார் (இனி முனிசாமி) ஆக்கங்களே அடிப்படைத் தரவுகளாக அமையக்கூடும் என்று முடிவு செய்தேன்.

முனிசாமி அவர்களின் ஆக்கங்கள் 1888 தொடங்கி 1952 வரை கிடைக்கின்றன. 1888 முதல் 1939 வரை அவரால் ஆக்கப்பட்ட அச்சு வடிவங்கள் கிடைக்கின்றன. அக்காலத்திலும் பின்னரும் அவரது ஆக்கங்களின் மறு அச்சுகள் கிடைக்கின்றன. ஒவ்வொரு ஆக்கமும் ஒவ்வொரு ஆண்டும் மறு அச்சு தொடர்ச்சியாக செய்யப்பட்டிருப்பதை ரோஜா முத்தையா நூலகப்பட்டியல் மூலம் அறிய முடிகிறது. முனிசாமி அவர்களின் ஆக்கங்கள் குறித்துப் பிற நூலகப்பட்டியல்களிலும் விவரங்கள் காணப்படுகின்றன. பிரித்தானிய அருங்காட்சியக நூலகப்பட்டியல்கள் மூன்றிலும் சேர்த்துப் பதினாறு பதிவுகள் உள்ளன. தமிழ்நூல் விவர அட்டவணையில் (தொகுதி I-IV மற்றும் தொகுதி II) பத்துப் பதிவுகள் உள்ளன. (இவரைப் போலவே சூளை முனிசாமி முதலியார் என்பவரும் எழுதியுள்ளதைத் தமிழ்நூல் விவர அட்டவணையில் காணமுடிகிறது.) அனைத்துப் பட்டியல்களிலும் மிக அதிகமான பதிவுகளைப் பெற்றவராக முனிசாமி இருக்கிறார். முனிசாமி குறித்து ரோஜா முத்தையா நூலகமே மிக அதிகப் பதிவுகளைக் கொண்டதாக அமைகிறது. சூளை முனிசாமி முதலியாரையும் இவரையும் இணைத்து, தமிழ் வெகுசன அச்சுப்பண்பாடு குறித்து உரையாடல் நிகழ்த்தலாம். ஆனால் சூளை முனிசாமி முதலியார் நூல்கள் ஆவணக் காப்பகத்தில் மட்டுமே கிடைக்கலாம்; பிற நூலகங்களில் இடம்பெறவில்லை. இப்பின்புலத்தில் சிறுமணவூர் முனிசாமி முதலியார் ஆக்கங்களை அதிகமாகப் பெற்றுள்ள ரோஜா முத்தையா நூலகம், தமிழ் அச்சுப் பண்பாட்டின் வெகுசனத் தன்மையைப் பற்றிப் பேசுவதற்குப் பெரிதும் உதவுகிறது.

வெகுசனப் பண்பாடு குறித்த உரையாடல் தமிழில் மிக அருகியே நடத்தப்படுகிறது. ஆங்கில மொழியில் எழுதப்பட்ட அளவிற்குத் தமிழில் இல்லை. தமிழின் தொன்மை என்னும் நீண்ட வரலாறு, வெகுசனத் தன்மைகளை மறுக்கும் காரணியாக அமைகிறது. எழுதப்பட்ட செவ்வியல் ஆக்கங்களை மட்டுமே கவனத்தில் எடுக்கும் கல்விச்சூழல் தமிழில் செயல்படுகிறது. நம்மைச் சுற்றி நாள்தோறும் நிகழும் கூறுகள் குறித்து எவரும் அக்கறை கொள்வதில்லை. அவை ஆய்விற்கோ, நம் கவனத்திற்கோ உரியவைகளாகக் கூட கருதும் மனநிலை இல்லை. செவ்வியல் ஆக்கங்களிலிருந்து முற்றிலும் வேறுபட்ட இவ்வகையான ஆக்கங்கள் குறித்த உரையாடல், நம்மை சமகால மனிதர்களாகக் கட்டமைக்க வழிவகுக்கும். அச்சு ஆக்கங்கள், அருங்காட்சியகப் பொருட்களாக அமைவதில்லை; ஒவ்வொரு கணமும் நம்மோடு உறவாடும் வாசிப்புப் பழக்கத்தின் உடன்விளைவுகள். வாசிப்பு என்பது நிகழ்காலத்தின் மிக முக்கியமான சமூக நிகழ்வு. இதற்குள் செயல்படும் வெகுசனப் பண்பு என்பது சமகால மனிதர்கள் பற்றியப் புரிதலாக அமைகிறது.

❑

வெகுசனப் பண்பாடு என்பது வெகுமக்களின் ஊகங்கள், நம்பிக்கைகள், உணர்வுகள், அவர்களது சிந்தனைப் போக்குகள் ஆகிய பல கூறுகளை உள்வாங்கிச் செயல்படுபவை. இவற்றைக் காட்டுவனவாகவே வெகுசன ஊடகங்கள் செயல்படுகின்றன. இதில் அச்சு ஊடகம் மிக முதன்மையான இடத்தைப் பெறுகிறது. ஏனெனில் எழுத்தறிவு எனும் பயிற்சி வழி இந்த ஊடகம் செயல்படுகிறது. முனிசாமி அவர்களின் அச்சு ஆக்கங்களை மேற்குறித்த பின்புலத்தில் நாம் புரிந்து கொள்ளவேண்டும். அவர், வெகுமக்களின் ரசனைகள், நுகர்வுகள், வெகுசன நம்பிக்கைகள், உணர்வுகள் ஆகிய பிற தொடர்பானவற்றை அச்சுவழி ஆக்கங்களாக உருவாக்கியுள்ளார். அவர் உருவாக்கியுள்ள வெகுசனப் பண்பாடு சார்ந்த ஆக்கங்களைப் புரிந்துகொள்ள கீழ்க்காணும் வகையில் நாம் தொகுத்துக் கொள்ளலாம்.

வெகுசனப் பண்பாடு என்பது வெகுமக்களின் ஊகங்கள், நம்பிக்கைகள், உணர்வுகள், அவர்களது சிந்தனைப் போக்குகள் ஆகிய பல கூறுகளை உள்வாங்கிச் செயல்படுபவை. இவற்றைக் காட்டுவனவாகவே வெகுசன ஊடகங்கள் செயல்படுகின்றன. இதில் அச்சு ஊடகம் மிக முதன்மையான இடத்தைப் பெறுகிறது.ஏனெனில் எழுத்தறிவு எனும் பயிற்சி வழி இந்த ஊடகம் செயல்படுகிறது.

-வெகுசனத்தளத்தில் மனித சமூகம், மனித உடல் பற்றிய உரையாடலைப் பல தளங்களிலும் நிகழ்த்துவதைக் காண்கிறோம். உடல் நலம் என்பது உணவு முறைகளாகப் புரிந்து கொள்ளப்படுகிறது. உடல் கேடுகளை மருந்துகள் வழி காப்பாற்றலாம் என்று நம்புகின்றனர். இதனால் வெகுசனப் பேச்சில் உடல்நலத்திற்கான மருந்துகள் குறிப்பாக மூலிகைகள் போன்றவை குறித்துப் பேசுகின்றனர். வெகுசன நுகர்வு சார்ந்து அச்சில் இவை மிக அதிகமாக இடம்பெறுகின்றன.

-பெண் உடல் வேறாகவே கட்டமைக்கப்படுகிறது. உயிரின் மறு உற்பத்தி என்பது காமஇச்சை சார்ந்த செயல்பாடாகக் குறுக்கப் பட்டு, அத்தன்மை தொடர்பான அச்சு வெளிப்பாடுகள் மிகுதியாக வெளியாகின்றன. பெண் உடலை இழிவுபடுத்தல், பெண் பிறவியை இழிவுப் பிறவியாகச் சித்திரித்தல், பெண் என்பவள் கலி காலத்தின் மோசமான வடிவம் எனப் பலவகையாக வெகுசன எழுத்துக்கள் பதிவுசெய்துள்ளன. நீலிக்கள், தாசிக்கள், மோசக்காரிகள், சூனியக்காரிகள் எனப் பல நிலைகளில் பெண் வெகுசனப் பண்பாட்டில் பதிவு செய்யப்படுகிறார்.

-ஆதிகாலம் முதலே இயற்கை நிகழ்வுகள் குறித்த தர்க்க மனநிலை இழந்தவர்களாகவே வெகுமக்கள் இருக்கிறார்கள். தங்களது தர்க்க அறிவில் புலப்படாதவற்றை அதீக நம்பிக்கை களுக்குள் வைத்துக்கொள்கிறார்கள். இந்த நம்பிக்கைககளை ஜோதிடங்களாக, குறிசொல்லுதலாக, பூச்சி இனங்கள் பறவைகள் விலங்குகள் ஆகிய பிற சார்ந்த நம்பிக்கைகளாகக் கட்டமைக்கி றார்கள். இவை அனைத்தும் அச்சு ஆக்கங்களில் வெளிப்படுகின்றன.

-நம்பிக்கைகளை அடிப்படையாகக் கொண்ட நூற்றுக்கணக் கான சடங்குகளை மக்கள் நிகழ்த்துகிறார்கள். இவற்றை வழிபாடு கள் என்று அழைக்கிறார்கள். அவை அடிமட்ட நிலையிலிருந்து சமூகத்தின் மேல்மட்டம் வரை பல வகைகளில் பல வடிவங்களில் உருவாக்கப்படுகின்றன. இதன் உச்ச வடிவமாகவே பக்தி அமை கிறது. இவை தொடர்பான அச்சு ஆக்கங்களே மிக அதிகமாகும். இவை சமயத்தோடும் சாதிகளோடும் வைதீகத்தோடும் நெருங்கிய உறவுடையவை.

-சமூகத்தில் வெகுமக்களின் நடைமுறை வாழ்க்கையில் உள்ள பல்வேறு செயல்களுக்கும் ஒழுக்க மதிப்பீடுகள் கட்டப்படுகின்றன. இம்மதிப்பீடுகள் சார்ந்து அச்சு ஆக்கங்கள் உருவாக்கப்படு கின்றன. வெகுமக்கள் புழக்கத்தில் பாரதம், இராமாயணம் சார்ந்த கதைகள் பரவலாக உள்ளன. இவற்றிலிருந்து வெகுமக்களுக்கான வாசிப்பு ஆக்கங்களை உருவாக்குகின்றனர். இவை சார்ந்த நிகழ்த்துப் பிரதிகளும் மிகுதியாக உருவாக்கப்படுகின்றன.

-நவீன தொழில்நுட்பம் புதிது புதிதாகக் கருவிகளை உற்பத்தி செய்துகொண்டே இருக்கிறது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதி மற்றும் இருபதாம் நூற்றாண்டில் இவ்வகையில் உருவான போக்குவரத்துச் சாதனங்கள் வெகுமக்கள் கவனத்தில் பெரிதும் தாக்கம் செலுத்தப்படுபவற்றைக் காண்கிறோம். இவை குறித்து வெகுசன அச்சு வடிவங்களில் பதிவுகள் உருவாக்கப்படுகின்றன.

-நாள்தோறும் நடைபெறும் நிகழ்வுகளை இன்று பத்திரிக்கை களில் வாசிக்கிறோம். வானொலி மற்றும் தொலைக்காட்சிகளில் கேட்கிறோம், பார்க்கிறோம். இந்த வசதிகள் இல்லாத காலத்தில், எதிர்பாராத விதமாக நடைபெறும் நிகழ்வுகளான விபத்துகள், இயற்கைப் பேரிடர்கள், கொலைகள் ஆகியவை குறித்துச் சிந்து, கும்மி வடிவில் ஆன அச்சு ஆக்கங்கள் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் அச்சிடப்பட்டன.

-மனிதர்களால் புரிந்துகொள்ள முடியாத மந்திரங்கள் எனப்படும் தந்திரங்கள்; ஜாலங்கள் எனும் பெயரில் அச்சாகியதை அறியமுடிகிறது. நகைச்சுவை உணர்வை வெளிப்படுத்தும் ஆக்கங்கள், அனைத்துக் காலங்களிலும் வெகுசனத்தளத்தில் உருவாக்கப்படுகின்றன. இன்றைய திரைப்படத்துறையின் நகைச்சுவை நடிகர்கள் இதற்கு நல்ல எடுத்துக்காட்டு. அச்சுச் சார்ந்த நுகர்விலும் இவ்வகை ஆக்கங்கள் மிகுதியாக உருவாக்கப் பட்டிருப்பதைக் காண்கிறோம்.

இவ்வகையில் மனிதர்கள் தங்கள் வாழ்விலும் தங்களைச் சுற்றியுள்ள சூழலில் நிகழும் பல்வேறு நிகழ்வுகளையும் அச்சு வடிவத்தில் வாசிக்க முற்பட்ட வரலாறு நம்முன் உள்ளது. இவை வெகுசனப் பண்பாடாக அமைகிறது. செவ்வியல் மரபுக்கு மாறாக அமையும் இவ்வகை அச்சு ஆக்கங்கள் நமது கவனத்தைக் கோரி

இவ்வகையில் மனிதர்கள் தங்கள் வாழ்விலும் தங்களைச் சுற்றியுள்ள சூழலில் நிகழும் பல்வேறு நிகழ்வுகளையும் அச்சு வடிவத்தில் வாசிக்க முற்பட்ட வரலாறு நம்முன் உள்ளது. இவை வெகுசனப் பண்பாடாக அமைகிறது.

நிற்கின்றன. மேற்குறித்த பின்புலத்தில் சிறுமணவூர் முனிசாமி முதலியாரின் அச்சு ஆக்கங்களை உரையாடலுக்கு உட்படுத்தலாம்.

வெகுசன அச்சு ஆக்கங்களில் மிகுதியாக இடம்பெறுபவை மருத்துவம் தொடர்பான நூல்கள். 'சகல ஜெந்துக்களின் விஷநிவர்த்தி' (1892), 'அனுபோக வயித்திய பிரம்மரகசியம்' (1893), 'ஹிந்து பால வைத்தியபோதினி' (1895), 'நாற்பத்தியெண்மர் களீண்டிய ஊர்வசி வயித்திய சிட்கா' (1895), 'சிறந்த ஆயுள்வேத பண்டிதர்களால் உபயோகித்துவரும் அனுபோகத்துக்கிசைந்த வயித்திய முறைகள்' (பதிப்பு:1895), 'பார்வதி பரணியம் யென்னும் விஷ வயித்திய சிந்தாமணி' (1899), 'உயிரெழுத்து மூலிகை மர்மம்' (1900), 'பிணியற்ற வாழ்வென்றும், சவுக்கியகாரமென்றும் வழங்க வேண்டிய நோயில்லா வாழ்வு' (1904), 'வயித்திய கை முறைகள்' (பதிப்பு:. 1896) ஆகிய சில முனிசாமி அவர்களால் உருவாக்கப்பட்ட மருத்துவம் தொடர்பான நூல்களாகும். இவரை ஆயுர்வேத வைத்தியர் என்று குறித்திருப்பதைக் காணமுடிகிறது. வெகுசனப் பண்பாட்டில் உடல்நலம் குறித்து வெகுமக்கள் கொண்டிருந்த ஈடுபாட்டை இவ்வகை அச்சு ஆக்கங்கள் காட்டுகின்றன. இந் நூல்களின் பெயர்கள், பேச்சுமொழியில் இருப்பதையும் பண்புப் பெயர் அடைகள் சேர்த்து நூல்பெயர் அமைக்கப்பட்டிருப்பதை யும் காணமுடிகிறது. செவ்வியல் நூல்களின் பெயர்கள் இவ்வகையில் அமைவதில்லை. இந்நூல்களின் மறு அச்சு இன்றும் தொடர்வதைக் காண்கிறோம். இவ்வகையில் உடல்சார்ந்த நம்பிக்கைகளுக்கும் வெகுசன அச்சுப்பண்பாட்டிற்குமான உறவை அறிய இயலும்.

வெகுசனப் பண்பாடு சார்ந்து அச்சான வடிவங்களில் மிகவும் இழிவாகப் பதிவு செய்யப்படுவது பெண்உடல். பெண் குறித்து இழிவு மொழியில் ஆக்கப்படும் அச்சு ஆக்கங்களை மிக இயல்பான ஒன்றாகவே கருதி உள்ளனர். முனிசாமியும் இதற்கு விதிவிலக்கல்ல. இவரது ஆக்கங்களில் இடை இடையே இதனைக் காணமுடியும். 'குடும்ப சனியன் என்னும் அகடவிகட சம்சாரி' (1906), 'சித்திரகுளா வென்னும் பெண்ணின் கெடையாட்டாம்' (1908) ஆகியவை இவ்வகையில் அமைந்தவை.

வெகுசனப்பண்பாட்டில் மிகுதியாக இன்றும் அச்சாகும் நூல்கள் ஜோதிடம் தொடர்பானவை. 'ஜோதிடச்சுவடிகள்' இன்று பெரும் தொழிலாக நடைபெறுகிறது. ஜோதிடத்திற்கான பஞ்சாங்கங்கள் உருவாக்கப்பட்டன. கெவர்மெண்டு நட்சத்திர பஞ்சாங்கம், ஆர்க்காடு சர்வமுகூர்த்த பஞ்சாங்கம், கஞ்சனூர் பஞ்சாங்கம், பாக்கெட் பஞ்சாங்கம், சிறுமணவூர் முனிசாமி முதலியார் காலண்டர் பஞ்சாங்கம் என்று பல பஞ்சாங்கங்களைத் தமது நூலில் முனிசாமி குறிப்பிடுகிறார். 'தருமருக்கு பீஷ்மாச்சாரி உபதேசித்த சகாதேவ சாஸ்திரம் மரணக்குறிப்பு சகுனப்படம் பல்லி சாஸ்திரம்' (1893), மானிடக் குறியென்னும் திரேசக்குறி புருஷலஷ்ணமென் றும் வழங்கிய அங்கக்குறி சாஸ்திரம் (1893) ஆகிய சில நூல்கள் முனிசாமி இயற்றியவை. எழுத்துக் கூட்டி வாசிக்கத் தெரிந்தவர்கள் இவ்வகையான நூல்களைக் கோயில் தளங்கள், சந்தைகள், தெருவோரக் கடைகள், நாட்டு மருந்துக் கடைகள் ஆகிய இடங்களில் இன்றும் வாங்குகின்றனர். அச்சு வடிவத்தில் வாய்மொழிப் பாரம்பரியம் இடம் மாறுவதை இதன் மூலம் அறியமுடிகிறது. தர்க்கங்களை மறுக்கும் இவ்வகை

வெகுசனப் பண்பாட்டில் உடல்நலம் குறித்து வெகுமக்கள் கொண்டிருந்த ஈடுபாட்டை இவ்வகை அச்சு ஆக்கங்கள் காட்டுகின்றன. இந் நூல்களின் பெயர்கள், பேச்சுமொழியில் இருப்பதையும் பண்புப் பெயர் அடைகள் சேர்த்து நூல்பெயர் அமைக்கப்பட்டிருப்பதை யும் காணமுடிகிறது. செவ்வியல் நூல்களின் பெயர்கள் இவ்வகையில் அமைவதில்லை.

நம்பிக்கைகள் வெகுசனப் பண்பாட்டின் அடிவேராக இருப்பதைக் காண்கிறோம்.

வழிபாடுகளை நடத்துவதற்கு அச்சிடப்படும் பதிகங்கள், அலங்காரங்கள், கும்மிகள், ஏராளம் “சிறுமணவூர் முனிசாமி முதலியாராலியற்றிய திருவொற்றியூர் தியாகேசர் பதிகம்” (1888), சிதம்பரம் நடராஜர் பஞ்சாட்சரப்பதிகம், நடராஜப் பத்து, சங்கப்புலவர் கண்ட சுத்தி இம்மூன்றும் அடங்கியிருக்கின்றன (1893). ‘மதுரை சொக்கர் அலங்காரம்’ (1894), ‘இஃது நாகூர் ஆண்ட வர் தெரிசனக்கும்மி, நாகூர்க்ஷேத்திர அலங்காரம், ஆநந்தக் களிப்பு இரண்டும் அடங்கியிருக்கின்றன (1897). ‘ஸ்ரீவைகுண்ட ஏகாதசி விரதக்கும்மி என்னும் உருக்கு மாங்காத மகாராஜன் சரித்திரக் கும்மி’ (1896) ஆகியவை முனிசாமி நூல்களாகும். வெகுசனங் களின் இசையோடு கூடிய பாடல்களாகச் சிந்து, கும்மி வடிவங்கள் அமைகின்றன. வெகுசனப் பண்பாட்டில் இவ்விரு வடிவங்களே மிகுந்த செல்வாக்குடன் செயல்பட்டிருப்பதைக் காண்கிறோம்.

சமூக நிகழ்வுகள் குறித்த மதிப்பீடுகள் வெகுசனத் தளத்தில் பரவலாகச் செயல்படுவதைக் காண்கிறோம். ‘கலியுகச்சிந்து: கடன் பத்திரம், கலிகாலக் கண்ணாடி இம்மூன்றும் அடங்கியிருக்கின்றன’ (1896), ‘கள்ளுக்கடைச்சிந்து என்றும் குடியர் சிந்து, புகையிலைச் சிந்து, கெஞ்சாவின் மகத்துவம் இம்மூன்றும் அடங்கியிருக்கின்றன (1896)’. ‘திருட்டுப் பிடிக்கும் சாஸ்திரமென்னும் களவுநூல்’ (1897), ‘தடிக்கழுதை பாட்டும் ஆண் பிள்ளை வீண்பிள்ளை சிந்தும் அடங்கியிருக்கின்றன.’ (1900) ஆகிய சில முனிசாமி உருவாக்கியவை. இவைகள், புகையிலை, கஞ்சா, திருட்டு ஆகிய பிற தொடர்பான வெகுசன மதிப்பீடுகளைப் பதிவு செய்திருப்பவை. இவற்றில் இவை நியாயப்படுத்தப்படுவதும் விமரிசனம் செய்யப்படுவதும் பகடி மொழியில் அமைந்திருக்கும்.

கி. பி. பத்தொன்பதாம் நூற்றாண்டிற்குப் பிறகு தமிழ்ச் சமூகத்தில் பாரதக்கதையின் செல்வாக்கு மிகுதியாகும். கும்மி வடிவங்கள், நிகழ்த்தும் கூத்து வடிவங்கள், கதைப்பாட்டு வடிவங்கள், கதை வடிவங்கள் ஆகிய அனைத்து வடிவங்களிலும் பாரதக்கதை மீண்டும் மீண்டும் உருவாக்கப்படுவதை அறிகிறோம். ‘வியாசர் விபரீதம்’ (1908) எனும் நூலை முனிசாமி உருவாக்கியுள்ளார். மகாபாரதம் தொடர்பான பதிவுகளைத் தமது நூல்களில் இவர் ஆங்காங்கே செய்துள்ளார்.

கி. பி. பத்தொன்பதாம் நூற்றாண்டிற்குப் பிறகு தமிழ்ச் சமூகத்தில் பாரதக்கதையின் செல்வாக்கு மிகுதியாகும். கும்மி வடிவங்கள், நிகழ்த்தும் கூத்து வடிவங்கள், கதைப்பாட்டு வடிவங்கள், கதை வடிவங்கள் ஆகிய அனைத்து வடிவங்களிலும் பாரதக்கதை மீண்டும் மீண்டும் உருவாக்கப்படுவதை அறிகிறோம்.

‘பெங்களூரில் உடன் கட்டையேரிய உத்தமிச்சிந்து’ (1893), ‘மதிராஸ் தூக்குப்பாட்டு’ (1893), ‘மூடமதி திறவுகோல்’ (1895), ‘சென்னை பீபில்ஸ்பார்க்கு காலேஜ் பத்திய சிந்து’ (1898), ‘ஈட்டிக் காரனிடத்தில் கடன்பட்டு ஓட்டம் பிடிக்கும் சிந்து’ (1902); ‘துர்முகி வருடத்தின் தொந்திரவு’ (1905), ‘நந்தன வருட சிந்து’(1900), ‘தாரண வருஷத்திய வெள்ளம்’, ‘திருநெல்வேலி கொட்டாய் பத்திய சிந்து’ (1906), ‘1906 அக்டோபர் 20 சனிக்கிழமை மூடப்பட்ட அர்பத் நெட்டவுசின் அனியாயச் சிந்து’(1908) ஆகிய சில நூல்கள் முனிசாமி அவர்களால் உருவாக்கப்பட்டவை. சமகாலச் செய்திகள் எவ்வாறு அச்சு வடிவம் பெற்றன என்பதை இதன் மூலம் அறிய முடிகிறது. வாய்வழிச் செய்தியாக அறியப்பட்ட வற்றை வெகுசனங்களும் வாசித்து அறியும் வடிவங்களில் இவை உருவாக்கப்பட்டுள்ளன.

அனியாயமகாராஜன் வசனம்.

அப்பா கொலைப்பாதகமந்திரி இந்தக் கவிராயன் நமக்குத்தோர்த்தவனேயல்லநமக்குமேல் ஆயிரம்பங்கு அதிகமாகத்தானிருக்கிறன் ஆசையால் இவன் வாயால்வந்த நூலெல்லாங் கேழ்க்கத்தான்வேண்டும் முதலிருந்துசொல்லச்சொல்லு.

கொலைப்பாதகமந்திரி வசனம்.

ஒய் கவிராயரே நீர் பாடின பாட்டெல்லாங் கேழ்க்கவேணுமென்று மகாராஜா உத்திரவாய்விட்டது பயப்படாமல் வரிசையாய்ச் சொல்லிக்கொண்டுவா.

முதலாவது சண்டாளக் கவிராயர் சொல்

கீத்துச் சுவடி.

பனைமரத் தோத்திரம் கவி.

நேத்தியாய் வளர்ந்த நெடும்பனை யோலைக்
கீத்துச் சுவடியை கைவிட வேண்டாம்.

அரஞ்செய்ய யிரும்பு
அரவது ஜெனம்
இயல்வது கொரவை.
ஈவது உலக்கை
உடைப்பது தலையே
ஊக்கமே கெடுக்கும்.

அனியாயமகாராஜன் வசனம்.

பலேபேஷ் வெகு பசந்தாயிருக்கிறது இன்னம் யெதாவது உண்டா சொல்லு.

இரண்டாவது ஔவைசொன்ன கொன்றைவேந்தனுக்கு பதில்

கின்றைவேந்தன்.

கொன்ற வேந்தனைக் கூறுண்டாக்கினல்
நின்ற மீதியும் நிலத்திற் சாயுமே.

அன்னையும் பிதாவு மென்றைக்குஞ் சனியன்
ஆலயந் தொழுவது கேவலம்மூடர்
இல்லறந் தலைக்கால் யெல்லைகள் சுத்தலாம்

முனிசாமி அவர்களின் நாடக நூலில் உள்ள ஒரு பகுதி.

வாய்வழி உருப்பெறும் செய்திகள் எவ்விதம் அச்சு மரபாக வெகுசனப்பண்பாட்டில் இடம் பெறுகிறது என்பதை இதன் மூலம் அறிகிறோம். இப்பண்புகள் இன்னும் கிராமங்களில் உள்ள சாவடிகளில் நடைபெறும் உரையாடல்கள், முடிதிருத்தும் கடைகளில் நடைபெறும் உரையாடல்கள், தேநீர் கடைப் பெஞ்சுகளில் அமர்ந்து செய்யும் உரையாடல்கள் ஆகியவற்றோடு தொடர்புடையவை. ‘தினத்தந்தி’ பத்திரிகையின் செய்திகளும் அதன் மொழிநடையும் இத்தன்மை மிக்கன. இவ்வகையான மொழிக்கு ஆதித்தனார் உருவாக்கியுள்ள ‘பத்திரிகை நடைக் கையேடு’ எனும் நூல் நல்ல தரவு.

❑

வெகுசனப் பண்பாட்டில் மிகவும் அதிகமாக இடம்பெறுவது நகைச்சுவைப் பண்பு. முனிசாமியவர்கள் இவ்வகையில் பல நூல்களை எழுதியுள்ளார். ‘செல்வப் பிள்ளை அகட விகட கல்யாணச் சிந்து’ (1892), ‘குடும்ப சனியன் என்னும் அகடவிகட சம்சாரி’ (1906), ‘நாரதர் கலகம்’ (1910) ஆகிய சில நூல்கள் வெகுசனப் பண்பாட்டில் நகைச்சுவை குறித்து அறிய உதவும். ‘கொழுத்த சிறிப்பு என்னும் அகசிய நாடகம்’ (1908) ஒன்றை முனிசாமி எழுதியுள்ளார். துஷ்டத்தூதன், சமயசாம்பிராணி, தனியாய மகாராஜன், கொலை பாதக மந்திரி, கிரககார பஞ்சாங்க புரோகிதன் ஆகியோர் நாடகப் பாத்திரங்கள் ஆகும். இந்நூலில் ஆத்திசூடியை ‘கீத்துச்சுவடி’ என்று எழுதுகிறார். அந்நூல் கீழ்வரும் வகையில் அமைந்துள்ளது. (பார்க்க: பக்116)

இவ்வளவும் என் சொந்த புத்தகமாகையால் விற்பனைக்குத் தயாராய் வைத்திருக்கின்றேன் இதுவுமன்றியில் சிறுவர்களுக்கு இன்பமான சில்லரைப்புத்தகங்கள் எத்தனையோதினுசுகளிருக் கிறது இவை தேவையானவர்கள் சென்னை சூளை போஸ்டு, சட்டண்ணநாய்க்கன் தெருவு, 12வது நெம்பர்வீடு சிறுமணவூர் முனிசாமியென்பவரிடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

❑

தமிழில் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதி தொடங்கி, இரண்டாம் உலகப்போர் நிகழ்ந்த காலம் வரையில் செயல்பட்ட அச்சுச்செயல்பாடுகளை முனிசாமி அவர்களின் ஆக்கங்களை அடிப்படையாகக் கொண்டு புரிந்துகொள்ள முடிகிறது. சமயப் பரப்பல் சார்ந்தும் செவ்விலக்கிய மரபு சார்ந்தும் செயல்பட்ட தமிழ் அச்சுப் பண்பாடு எவ்வகையில் வெகுசன நுகர்வுப் பண்பாடாக வடிவம் பெற்றது என்ற உரையாடலே மேலே நாம் மேற்கொண்டதாகும். இவ்வுரையாடல் தமிழ் அச்சுப்பண்பாடு உருவாக்க வரலாற்றில் மூன்றாம் கட்டமாக அமைந்த பகுதியை மட்டும் கவனத்தில்கொண்டு செய்யப்பட்டுள்ளது. இக்காலச் சூழலில் தமிழில் புதிதான அச்சுப்பண்பாடு உருவானது. இதனை முனிசாமி அவர்களின் ஆக்கங்களை எடுகோளாகக் கொண்டு நாம் புரிந்துகொள்ள முடியும். இக்காலத்தில் அச்சுப்பண்பாட்டைப் புரிந்துகொள்ள முனிசாமி அவர்களின் ஆக்கங்களை அடிப்படை யாகக் கொண்ட குறுநூல் (monograph) ஒன்றை உருவாக்கலாம்.

34 அகசிய நாடகம்.

கவிராயர்சொல் வசனம்.

மகாப்பிரபு இதுகளெல்லாம் அச்சிலிட்டால் ஒவ்வொருவரும் ஞானிகளாயும், வேதாந்திகளாயும், நீதிமான்களாயும் போவார்கள் மேலும் அதமம் மறைந்து அனியாயம் மேலிட்டுப்போகுமென்றுவெளிப்படுத்தவேயில்லை தாங்கள் ஒருவருக்காக இந்த ரகசியமெல்லாம் சொல்லிவிட்டேன் ஆனால் அச்சிட்டு விற்பனைக்குத் தயாராயிருக்கிற புத்தகங்களெல்லாம் வேறே அனேகமிருக்கின்றது.

அனியாயமகாராஜன் வசனம்.

அது என்னென்ன புத்தகங்கள் அதின் பேரையும் அதுகள்விற்கிற இடத்தையும் விபரமாகச்சொல்லு நமது அனியாய சபாமண்டபத்து (லைபரியில்) வாங்கி வைக்கவேணும் (அப்படியே சொல்லுகிறேன்)

புத்தகத்தின் பெயர்கள்.

பிரபஞ்சோற்பத்தி	பெண்கள்ருதுஜெனனஜாதகம்
இங்கிலீஷ்தமிழ்வைதிய சிகாமணி	சகுனசாஸ்திரம்
உலகவிசித்திரக்கதை	மனோரஞ்சிதக்கொத்து
பதிவிரதைகள்சரித்திரம்	கண்கட்டுவித்தை
சண்டாளர்சகவாசம்	கஷ்டஜாதகம்
அகடவிகடசம்சாரி	நவகண்டஆரூடம்
தெய்வகுணவெளிச்சம்	வன்னியநாடகம்
கொழுத்தச்சிறிப்பு	மதிகொடாநாடகம்
பக்காக்கதை	நூதனகலியாணப்பாட்டு
விபூதிருத்திராட்சமகத்துவம்	பூநாதிஅனுபோகவைதியம்
விவாகவிதி	பாவபுண்ணிக்கண்ணாடி
விஷவைத்தியசிந்தாமணி	பிரம்மவித்தை
மூலிகைமர்மம்	

இவ்வளவும் என் சொந்த புத்தகமாகையால் விற்பனைக்குத்தயாராய் வைத்திருக்கின்றேன் இதுவுமன்றியில் சிறுவர்களுக்கு இன்பமான சில்லரைப்புத்தகங்கள் எத்தனையோ தினுசுகளிருக்கிறது இவை தேவையானவர்கள் சென்னை சூளை போஸ்டு, சட்டண்ணநாய்க்கன் தெருவு, 12-வது நெம்பர்வீடு சிறுமணவூர்-முனிசாமியென்பவரிடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

முனிசாமி தமது நாடக நூலில் தான் எழுதிய நூற்பட்டியலை நாடகப் பாத்திரம் வாயிலாக வெளிப்படுத்தியுள்ளார்.

இதற்கான தரவுகளை ரோஜா முத்தையா நூலகம் கொண்டிருக்கிறது.

சான்றாதாரங்கள்:

- ரோஜா முத்தையா நூலகத்தில் உள்ள சிறுமணவூர் முனிசாமி முதலியார் ஆக்கங்கள்.
- A catalogue of the Tamil books in the library of the British Museum (3 vols.)
- தமிழ்நூல் விவர அட்டவணைகள். (மூன்று தொகுதிகள், 11 பகுதிகள்)
- Classified catalogue of Tamil printed books with introduction notices, compiled by John Murdoch (1865).
- Catalogue of the Christian vernacular literature of India, compiled bu John Murdoch (1870)
- The South Asia and Burma retrospective bibliography, stage 1:1556-1800, compiled by Graham Shaw.

குறிப்பு

இயக்குநர் க. சுந்தர், நண்பர் பிரகாஷ், திருமதி. மாலா மற்றும் கணேஷ் (ரோஜா முத்தையா நூலக ஊழியர்கள்) ஆகியோர் உதவி இல்லாவிடில் இக்கட்டுரையை உருவாக்கியிருக்க முடியாது. அவர்களுக்கு எனது மனப்பூர்வமான நன்றி.

18

செவ்வியல் இலக்கியங்கள் – ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகம்

■ மு. நஜ்மா

ஒரு மொழிக்குரிய செவ்வியல் தன்மை பல்வேறு அடிப்படைகளைக்கொண்டு நிர்ணயிக்கப்படுகின்றன. அவற்றில் ஒன்று அம்மொழியில் உள்ள இலக்கிய வளமை. அத்தகைய இலக்கியங்களைப் பாதுகாக்கும் பணி நூலகங்களின் வழியாகவே மேற்கொள்ளப்படுகின்றன. தமிழியல் ஆய்வுக்குரிய தரவுகளைப் பாதுகாக்கும் நூலகங்களில் ஒன்று ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகம். 1994ஆம் ஆண்டு சென்னையில் நிறுவப்பட்ட இந்நூலகம் கோட்டையூரைச் சேர்ந்த ரோஜா முத்தையா என்பவரால் சேகரிக்கப்பட்ட நூல்களைக்கொண்டு தொடங்கப்பட்டது. ரோஜா முத்தையா தொகுத்த நூல்களுக்குப் பின்பும் பல நூல்கள் இங்கு சேகரிக்கப்பட்டுள்ளன. பல துறை நூல்களைக் கொண்டுள்ள இந்நூலகம் தமிழ்ச் செவ்வியல் இலக்கிய ஆய்வுகளுக்கு எவ்வாறு துணைநிற்கின்றது என்பது குறித்து இக்கட்டுரை அமைகிறது. செவ்வியல் இலக்கியங்களாகச் சுட்டப்பெறும் 41 இலக்கியங்களில் (தொல்காப்பியம் தவிர்த்து) எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, பதினெண்கீழ்க்கணக்கு, சிலப்பதிகாரம், மணிமேகலை, முத்தொள்ளாயிரம், இறையனார் அகப்பொருளுரை ஆகிய 40 நூல்கள் மட்டும் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன.

நஜ்மா சென்னைப் பல்கலைக்கழகத்தில் ஆய்வில் நிறைஞர் பட்டம் பெற்றவர்.

சென்னை பல்கலைக் கழகத்தில் தமிழிலக்கியத் துறையில் முனைவர் பட்டத்திற்கு ஆராய்ச்சியினை மேற்கொண்டுள்ளார். சிந்துவெளிக் கூறுகளைப் பற்றி சிந்துவெளி பண்பாட்டு ஆய்வு மையத்தில் பயிற்சி பெற்றுவருகிறார்.


பத்தொன்பதாம் நூற்றாண்டில் இலக்கியங்கள் அச்சாக்கம் பெறத்தொடங்கிய பின்பு தமிழியலின் ஆய்வுப்பரப்பு பல பரிமாணங்களில் விரிவடைந்துள்ளது. ஓரிடத்தில் வைத்துப் பாதுகாக்கப்பட்டு வந்த ஓலைச்சுவடிகள் தாள்வடிவில் பலருக்கும் பயன்படும் வகையில் மாற்று வடிவம் பெற்றன. சுவடிகளினின்று இலக்கியங்களின் மூலங்களை மட்டும் தனியாகவும் உரையுடனும் பதிப்பித்துள்ளனர். இப்பதிப்புப் பணி ஓர் இயக்கமாகவே நடைபெற்றது. பதிப்பித்தல் என்பது சுவடிகளில் உள்ளவற்றை அப்படியே பதிப்பிக்கும் இயந்திரத்தனமாக நடைபெறவில்லை. கிடைக்கின்ற பிரதிகளை ஆய்வுக்குட்படுத்தி அவற்றுக்கான வரலாற்றையும் பதிப்புச் சிக்கல்களையும் சேர்த்துப் பதிப்பித்துள்ளனர்.

இலக்கியங்களைப் பதிப்பிக்கும்போது பதிப்பாசிரியர்கள் / உரையாசிரியர்கள் பல ஆய்வுமுறைகளை மேற்கொண்டுள்ளனர். அவற்றுள் ஒன்று மூலபாட ஆய்வு. மூல ஆசிரியர் இயற்றியதாக வழங்கும் பாடத்திற்கும் இன்னவாக அது இருத்தல்கூடும் எனப் பதிப்பாசிரியர் கருதுகின்ற பாடத்திற்கும் இடையே உள்ள தொடர்பை ஆராய்வது மூலபாட ஆய்வு எனப்படுகிறது. இதற்கு

ஒரே மூலபாடத்திற்குரிய பல பிரதிகள் அவசியம். கிடைக்கின்ற பிரதிகளை ஒப்பிட்டு ஆய்வு செய்து பதிப்பித்துள்ளனர். 1892இல் உ.வே.சா. சிலப்பதிகாரத்தைப் பதிப்பிக்கும் முன்பு 23 மூலப்படி களை ஆய்வு செய்துள்ளார். 28 ஆண்டுகள் கழித்து இரண்டாம் பதிப்பைக் கொண்டுவரும்போதும் மேலும் மூன்று கையெழுத்துப் படிகளை ஆய்வு செய்துள்ளார் (1990, பக்: 56). இவ்வாறு பல மூலப்படிகளை ஆய்வுசெய்து பெறப்படும் 'பதிப்பு' முக்கியமானது. செவ்வியல் இலக்கியங்களின் பெரும்பாலான முதல் பதிப்புகள் இத்தகைய ஆய்வுமுறைக்கு உட்பட்டே பதிப்பிக்கப்பட்டுள்ளன. பதிப்பு வரலாற்றில் இம்முதற்பதிப்புகள் முக்கியப் பிரதியாகக் கருதப்படுகின்றது. எனவே அவற்றைப் பாதுகாக்க வேண்டியது அவசியமாக உள்ளது.

செவ்வியல் இலக்கியங்களின் முதற்பதிப்புகளில் பெரும்பாலா னவை ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகத்தில் உள்ளன. மிகப் பழமையான நூல்கள் சிதைவுறக்கூடும் என்பதால் அவற்றை நுண் படம் எடுத்துப் பாதுகாத்து வருகின்றனர். செம்மொழித் தமிழ் நூல்கள் பதிப்புரைத் தொகுப்பு (2009) என்னும் நூலில் கொடுக்கப் பட்டுள்ள முதற்பதிப்பு குறித்த அட்டவணைப்படி செவ்வியல் இலக்கியங்களான 41 நூல்களில் (தொல்காப்பியம் தவிர்த்து) 30 நூல்களுக்கான முதல் பதிப்பு நூல்கள் இந்நூலகத்தில் உள்ளன (காண்க: இணைப்பு). எட்டுத் தொகையில் அகநானூறு தவிர்த்த அனைத்து முதற்பதிப்பு களும் உள்ளன. ஒவ்வொரு இலக்கியத்திற்கும் உள்ள முக்கிய உரைப்பதிப்புகள் உள்ளன.

திருக்குறள் முதல் அச்சுநூல் -1812.


திருக்குறள்
மூலபாடம்
அருளிச்செய்தது.

மூலபாட ஆய்வுக்கும் பதிப்பு வரலாறு குறித்த ஆய்வுக்கும் ஒரு இலக்கியத்தின் பல்வேறு பதிப்புகள் அவசியம். ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகத்தில் ஒவ் வொரு இலக்கியத்தின் ஆரம்பகாலப் பதிப்புகளி லிருந்து இக்காலப் பதிப்பு வரை காணப்படு கின்றன. தன்னிடத்து இல்லாத நூல்கள் பற்றிய அடிப் படைத் தகவல்களை மற்ற நூலகங்களிலிருந்தும் தனிமனிதரிடமுள்ள நூல்களிலிருந்தும் பெற்று அவற்றைப் பதிவு செய்துள்ளனர். இவற்றில் நூல்களின் பெயர், ஆசிரியர் பெயர், பதிப்பாசிரியர் / உரையாசி ரியர் / தொகுப்பாசிரியர், பதிப்பு ஆண்டு, பதிப்பகம், பழைய நூல்களாக இருப்பின் யாருடைய பொருளுதவியால் அச்சிடப்பட் டுள்ளது என்று முகப்புப் பக்கத்தில் உள்ள செய்திகளையும் நூலின் அளவு, பக்கங்கள், நூல் குறித்த சிறுகுறிப்புகளையும் தொகுத்து கணினியில் பதிவுசெய்துள்ளனர். இம்முறை மற்ற நூலகங்களில் பின்பற்றப்படுவதில்லை. இத்தகைய தகவல் சேகரிப்பு பதிப்பாய்வுகளுக்குப் பெரிதும் துணைபுரிகின்றன. மேலும் பழைய அச்சுக்கூடங்களைப் பற்றிய ஆய்வுக்கும் இது பயனுடைய தாக இருக்கும்.

ஒரு நூலுக்கு எத்தனை உரைகள் எழுதப்பட்டன, எந்தெந்த ஆண்டுகளில் பதிப்பிக்கப்பட்டன என்பவற்றை இல்லாத நூல்

களுக்கும் அறிய முடிகின்றது. செவ்வியல் இலக்கியங்களுக்கான பத்தொன்பதாம் நூற்றாண்டுப் பதிப்புகள் இந்நூலகத்தில் மிகுதியாக உள்ளன. ஒரே பதிப்பகத்தின் பல மறுபதிப்புகளும் பல பதிப்பகத்தார் பதிப்பித்த பதிப்புகளும் இங்கு உள்ளன. இப் பதிப்புகள் மூலம் ஒவ்வொரு பதிப்பகமும் மேற்கொண்டுள்ள பதிப்பு முறைமைகளையும் எந்தப் பதிப்பு பலமுறை மறுபதிப் பாகியுள்ளன என்ற தகவலையும் அறிய முடிகின்றது. செவ்விலக் கியங்களைப் பதிப்பிப்பதில் எந்தப் பதிப்பகங்கள் முனைப்பாகச் செயல்பட்டுள்ளன, அவர்கள் யாருடைய பதிப்பினைப் பதிப்பித்துள்ளனர் என்ற அரசியலையும் அறிய இத்தகவல்கள் பயன்படு கின்றன.

செவ்விலக்கியங்களுக்கான உரைகள் குறிப்புரைகளாகவும் கண்ணழித்துப் பொருள்கூறும் வகையிலும் விருத்தியுரைகளாக வும் ஆராய்ச்சியுரைகளாகவும் செய்யப்பட்டன. ஒரே நூலுக்குரிய பல உரையாசிரியர்களின் உரைகளையும் தொகுத்து உரைவளம் செய்யப்பட்டன.

இவ்வுரைகள் காலத்திற்கேற்ப மொழி அமைப்பிலும் பொருண் மையிலும் மாறுபட்டன. ஒரு நூலுக்கான பல்வேறு உரைகளைக் காணும்போது இத்தகைய மாறுபாடுகளை உணரமுடியும். எடுத்துக்காட்டாக, திருக்குறளுக்கு எழுதப்பட்ட உரைகள் திருவள்ளுவரைப் பல சமயங்களோடு அடையாளம் காட்டக் கூடியனவாக உள்ளன. இதற்கு திருக்குறள் குறித்த பலருடைய உரைகள் அவசியமாகின்றன. ரோஜா முத்தையா நூலகத்தில் திருக்குறளுக்கு பன்னிரெண்டுக்கு மேற்பட்ட உரையாசிரியர்களின் உரைகள் உள்ளன. அவற்றில் உரைக்கொத்து, உரைவளம் முதலியன பல உரையாசிரியர் உரைகளைக் கொண்டவை. எளிய உரை தொடங்கி ஆராய்ச்சி உரை வரை பல்வேறு உரைகளும் அதற்கான பல்வேறு பதிப்புகளும் உள்ளன. இவை உரைமரபினை விளங்கிக்கொள்ளவும் ஆய்வு செய்யவும் உதவுகின்றன. ஆங்கில மரபுக்கு ஏற்றவாறும் தமிழ் இலக்கியங்களுக்கு உரைகள் எழுதப்பட்டுள்ளன. 1957இல் டி.கே.சி. அழகியல் அடிப்படையில் முத்தொள்ளாயிரத்துக்கு உரை எழுதியுள்ளார். இதே அடிப்படை யில் 1960இல் ஸ்ரீ கே.இராஜகோபாலாச்சாரியார் சிலப்பதிகார கானல்வரிக்கு உரை எழுதியுள்ளார். இவை தமிழிலக்கியங்களின் உரைவளத்தைக் காட்டவல்லன. உரைமரபுத் திறனாய்வுக்கு இத் தகைய சிறப்பு உரைகள் இந்நூலகத்தில் தொகுக்கப்பட்டுள்ளன.

செவ்விலக்கியங்களுக்கான உரைகள் குறிப்புரைகளாகவும் கண்ணழித்துப் பொருள்கூறும் வகையிலும் விருத்தியுரைகளாக வும் ஆராய்ச்சியுரைகளாகவும் செய்யப்பட்டன. ஒரே நூலுக்குரிய பல உரையாசிரியர்களின் உரைகளையும் தொகுத்து உரைவளம் செய்யப்பட்டன.

செவ்வியல் இலக்கியங்கள் குறித்து ஆய்வு செய்வதற்கு முன்பு இதுவரை நிகழ்ந்துள்ள ஆய்வுகளைக் காண்பது அவசியம். செவ்வியல் இலக்கியங்களில் சங்க இலக்கியங்கள் தொடர்பான பல ஆய்வுகள் இந்நூலகத்தில் உள்ளன. பத்தொன்பதாம் நூற் றாண்டு தொடங்கி இருபத்தோராம் நூற்றாண்டு வரையிலான ஆய்வு நூல்கள் உள்ளன. இவற்றில் மொழியியல், தொல்லியல் என்று பல துறை சார்ந்த ஆய்வு நூல்கள் அடங்கும். சங்க இலக்கியங் களில் மீன்கள், புள்ளினம், விலங்கினம், ஆடைகள், உணவுப் பொருட்கள் முதலிய பல தலைப்புகளில் நூல்கள் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கன.

பல்வேறு துறை சார்ந்த ஆய்வுகளுக்குச் செவ்வியல் இலக்கி யங்கள் பயன்படுத்தப்படுகின்றன. செவ்வியல் இலக்கியங்களிலும்

இவ்வகை ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. சங்க கால நாணயங்கள், சங்க கால பிராமிக் கல்வெட்டுக்கள், சங்க கால எழுத்தியல் முதலிய பல தொல்லியல் சார்ந்த நூல்கள் இந்நூலகத் தில் உள்ளன. 'கல்வெட்டு எழுத்துக்களில் திருக்குறள்' என்பது 1975ஆம் ஆண்டு கிஃப்ட் சிரோமணி என்பவரால் தொகுத்து வெளியிடப்பட்டது. இதில் காலந்தோறும் திருக்குறள் எவ்வாறு எழுதப்பட்டது என்பதைக் கொடுத்துள்ளனர். விஜயநகரமன்னர் காலத் தமிழ்ப்பாணியில் தொடங்கி சோழர் பல்லவர் பாணியில் எழுதப்பட்டு கடைசிப் பகுதியான இன்பத்துப்பால் தமிழ் பிராமி யில் எழுதப்பட்டுள்ளது. இவை, எழுத்துக்கள் காலந்தோறும் எவ்வாறு எழுதப்பட்டன என்பதைக் கல்வெட்டுக்களைப் பார்த்துத் தொகுக்கப்பட்டவை. இவை ஒரே காலத்தில் வெவ்வேறு வகையாக எழுத்துக்கள் எழுதப்பட்டன என்பதைக் காட்டுகின்றன. இதே நூல் 1980இல் மீண்டும் பதிப்பிக்கப்பட்டது. இதில் தமிழ், ஆங்கிலம், கல்வெட்டு எழுத்துக்கள் ஆகிய மூன்று பகுதிகள் உள்ளன. கல்வெட்டு எழுத்துக்களின் பரிணாம வளர்ச்சியை இந்நூலில் அட்டவணைப்படுத்தியுள்ளனர். இது கல்வெட்டுக்களையும் இலக்கியங்களையும் இணைக்கும் ஒரு நூலாக உள்ளது. இந்நூலின் இரண்டு பதிப்புகளும் ரோஜா முத்தையா நூலகத்தில் உள்ளது. மேலும் வாக்கிரிபோலி மொழியிலும் (1979) வட்டெழுத்துக்களி லும் (1976) எழுதப்பட்ட திருக்குறள் நூல்களும் இங்கு உள்ளன. இது போன்ற பிற துறைசார் நூல்களும் இந்நூலகத்தில் தொகுக்கப்பட்டுள்ளன.

செவ்வியல் இலக்கியங்களின் மூலப்பதிப்புகள், உரைப்பதிப்புகள், ஆய்வு நூல்கள், ஆய்வுக்கட்டுரைகளைக் கொண்டுள்ள தமிழ்/ ஆங்கில இதழ்கள் என்று பல்வேறு பரிமாணங்களில் தரவுகளைச் சேகரித்துப் பாதுகாத்துள்ளனர்.

தமிழியல் ஆய்வுக்கான தரவுகளை ஓரிடத்தில் சேகரித்துப் பாதுகாப்பது ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகத்தின் தலையாய நோக்கமாக உள்ளது. சிதையும் நிலையில் உள்ள பழமையான நூல்களை நுண்படமாக்கியும் பாதுகாத்து வருகின்றது. காலங் கடந்து நூல்களைப் பாதுகாக்கும் பணிகளையும் மேற்கொண்டு வருகின்றது.செவ்வியல் இலக்கியங்களின் மூலப்பதிப்புகள், உரைப்பதிப்புகள், ஆய்வு நூல்கள், ஆய்வுக்கட்டுரைகளைக் கொண்டுள்ள தமிழ்/ஆங்கில இதழ்கள் என்று பல்வேறு பரிமாணங்களில் தரவுகளைச் சேகரித்துப் பாதுகாத்துள்ளனர்.

நூலகத்தின் பார்வைக் கணினியில் உள்ள தகவல்கள் நூலகத்தில் இல்லாத நூல்களுக்கும் சேகரிக்கப்பட்டுள்ளது பல வகையில் பயன்பாடுடையதாக உள்ளது. கணினிமயப்படுத்தப் பட்ட தகவல்கள் ஆசிரியர், நூல்கள், ஆண்டு, பதிப்பகங்கள் என்று பல அடிப்படைத் தகவல்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இவை ஒரு ஆசிரியர் பதிப்பித்த / எழுதியுள்ள பிற நூல்களையும் அவற் றின் காலத்தையும் அறிய உதவுகின்றன. இலக்கிய ஆய்வுகளை மேற்கொள்ளும் ஆய்வாளன் தரவுகளைத் தேடும் முயற்சியில் நீண்டகாலம் செலவிடவேண்டிய தேவை ஏற்படுகின்றது. இந்நூலகம் மேற்கொள்ளும் சேகரிப்பு மற்றும் பாதுகாப்பு முறைமைகள் தமிழியல் ஆய்வாளனுக்குரிய பல்வேறு சிக்கல் களைத் தீர்ப்பனவாக உள்ளன. செவ்வியல் இலக்கியங்களில் ஆய்வுமேற்கொள்பவர்களுக்குப் பல துறைசார்ந்து பல பரிமாணங் களிலும் ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகம் துணைபுரிவதாக உள்ளது. விடுபட்டுப்போன செவ்வியல் இலக்கியங்களுக்கான முதற்பதிப்புகளையும் இத்தொகுப்பில் சேர்க்க வேண்டிய கடமை இந்நூலகத்திற்கு உள்ளது.

இணைப்பு:

ரோஜா முத்தையா நூலகத்தில் உள்ள செவ்வியல் இலக்கியங்களின் முதற் பதிப்புகளும் உரைகளும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

நூல்கள்	முதற்பதிப்பு	உரைகள்
எட்டுத்தொகை		
1. நற்றிணை	1915	5
2. குறுந்தொகை	1915	6
3. ஐங்குறுநூறு	1903	5
4. பதிற்றுப்பத்து	1904	4
5. பரிபாடல்	1918	3
6. கலித்தொகை	1887	7
7. புறநானூறு	1894	3
8. அகநானூறு	1933*	4
பத்துப்பாட்டு		
9. பத்துப்பாட்டு	1889	5
பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள்		
10. திருக்குறள்	1812	12
11. நாலடியார்	1812	12
12. நான்மணிக்கடிகை	1872	5
13. இனியவை நாற்பது	1863*	3
14. இன்னா நாற்பது	1876	4
15. களவழி நாற்பது	1875	4
16. கார் நாற்பது	187-?*	4
17. ஐந்திணை ஐம்பது	1903	2
18. ஐந்திணை எழுபது	1926	2
19. திணைமொழி ஐம்பது	1922*	2
20. திணைமாலை நூற்றைம்பது	1904	2
21. திரிகடுகம்	1868	4
22. சிறுபஞ்சமூலம்	1875	2
23. கைந்நிலை	1961*	1
24. ஆசாரக்கோவை	1883*	4
25. பழமொழி	1917*	3
26. முதுமொழிக்காஞ்சி	189-?*	3
27. ஏலாதி	1887*	2
28. இன்னிலை	1928*	1
பிற		
29. சிலப்பதிகாரம்	1872	10
30. மணிமேகலை	1894	5
31. இறையனார் அகப்பொருள்	1883	2
32. முத்தொள்ளாயிரம்	1935*	4

* ரோஜா முத்தையா நூலகத்தில் உள்ளவை. ஆனால் முதல் பதிப்பு இல்லை.

* ஒவ்வொரு நூலுக்கும் ஒன்றுக்கு மேற்பட்ட உரையாசிரியர்கள் உரை எழுதியுள்ளனர். ஒரு உரையாசிரியர் உரையைப் பல பதிப்பகங்கள் பதிப்பித்துள்ளன. அவ்வாறு பதிப்பிக்கப்பட்ட பல பதிப்புகள் இந்நூலகத்தில் உள்ளன. இவற்றில் பெரும்பாலானவை பத்தொன்பதாம் நூற்றாண்டைச் சேர்ந்தவை.

தமிழ் இதழியல் வரலாறு (1842-1950):

ரோஜா முத்தையா நூலகத் தரவுகள்

■ கோ.கணேஷ்

நூல்களைத் தளமாகக் கொண்டு தமிழிலக்கிய வரலாற்றினை நோக்கும் இயல்பு நம்மிடையே இருந்து வந்துள்ளது. இலக்கிய வரலாறென்பது அந்த மொழியில் எழுதப்பட்ட எல்லா எழுத்துக் களினதும் வரலாறு ஆகும். கி.பி. 18ஆம் நூற்றாண்டுக்குப் பிறகான வரலாறு என்பது தமிழிலக்கிய வரலாற்றில் பல மாற்றங்களைக் கொண்டுவந்து சேர்த்தது.

காலனிய ஆட்சிக்காலத்தில் அச்சு ஊடகத்தின் வருகையால் அச்சுப் பண்பாடு உருப்பெறத்தொடங்கியது.அதாவது, தமிழில் முன்னர் நிலவாத இரு முக்கிய மாற்றங்கள் நிகழ்ந்தன. ஒன்று அனைவருக்குமான கல்வி, இரண்டாவதாகத் தொழில்முறை மாற்றங்கள். இவற்றில் கல்வி சார்ந்து உருவான எழுத்தறிவு, அது சார்ந்த வாசிப்புமுறை இவற்றின் அடிப்படையில் தமிழிலக்கிய வரலாறு பல்வேறு பரிணாமங்களை அடைந்தது. அதனூடாக எழுத்தறிவு வளர்ச்சிபெறத் தொடங்கியதுடன் இரு வாசிப்பு நிலை உருவாகியது.

காத்திரமான வாசிப்பு நிலை, ஜனரஞ்சக வாசிப்பு நிலை. இவ்விரு வாசிப்பு நிலையும் நம் சமூகத்தில் மிகப்பெரிய மாற்றங்களைக் கொண்டு வந்தது. அதன் பின்னணியில் அச்சு சார்ந்த செயல்பாடு தீவிரமடையத் தொடங்கின. பிரித்தானிய ஆட்சிக்காலத்தில் கிறித்துவப் பாதிரிமார்களின் பணியையும், சேவையையும் உள்வாங்குதல் அவசியம். சமயப்பணியை முதன்மையாகக் கொண்டு செயல்படத் தொடங்கிய இவர்கள் பள்ளிக்கூடங்களை உருவாக்கியதன் மூலம் ஒரு சாராரே பெற்று வந்த கல்வியை மற்ற பிரிவினரைப் பெறச்செய்ததன் மூலம் எழுத்தறிவைப் பரவலாக்கம் செய்கின்றனர். இவை ஒருபுறமிருக்க, அச்சு ஊடகத்தின் மூலம் தொடக்கக் காலகத்தில் கிறித்துவச் சமயக் கருத்துக்களும் கொள்கைகளும் சிறுபிரசுரங்களாகவும் துண்டறிக்கைகளாகவும் அச்சிடப்பட்டு விநியோகிக்கப்பட்டன.

இந்தப் பின்புலத்தில் தமிழில் உருவான அச்சிதழ்களின் வரலாற்றையும் அவற்றின் ஊடாகப் பெறப்படும் விடயங்களை உள்வாங்குதல் எளிது.

கணேஷ் சென்னைப் பல்கலைக்கழகத்தில் ஆய்வில் நிறைஞர் பட்டம் பெற்றவர்.

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகத்தில் திட்ட உதவியாளராகப் பணிபுரிகிறார்.

இதழ்களின் அடிப்படை தரவுகளைப் பட்டியலிடாமல், ஒட்டு மொத்த இதழியல் வரலாற்றை விரித்துரைக்காமல்(உலகளவில் இதழ்களின் தோற்றம்), தமிழ் இதழியல் வரலாற்றை மீள்வாசிப்பிற்கு உட்படுத்தியும், அதன்மூலம் உருபெறும் தமிழியல் வரலாறு குறித்தான நுண்ணாய்வாகவும் அமைகிறது. 'தமிழ் இதழ்கள் தோன்றிய நாள்முதல் இன்றுவரை ஒருமித்து ஒருசேரத் தொகுத்திருக்கும் ஒரு நூல்நிலையத்திடமோ தனியார் இடமோ காணக்கிடைக்கவில்லை' என்று மா.சு.சம்பந்தன் கூறியதற்கு எதிர்நிலையில் ரோஜா முத்தையா செட்டியாரும் அவருக்குப் பின் ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகமும் செயல்பட்டிருப்பதைப் பிரதானமாக இங்கு முன்வைக்கப்படலாம்.

ரோஜா முத்தையா சேகரித்த இதழ்களும் அவற்றின் ஊடாக பெறப்படும் தமிழியல் ஆய்விற்கான ஆதாரங்களின் மீதான கவன ஈர்ப்பாகவே இதனைக் கருதலாம். தமிழ் இதழியல் வரலாறு குறித்துக் காண்பதற்கு முன் 'இதழ்' என்ற சொல் செய்திப் பத்திரிகைகள், சஞ்சிகைகள் ஆகிய இரண்டையும் பொதுப்படக் குறிப்பதாக உள்ளது. சஞ்சிகைகளையும் நாளிதழ்களையும் மிகத் துல்லியமாகப் பிரித்து நோக்க வேண்டும். நாளிதழ்க்கும் சஞ் சிகைக்குமான தொடர்பியல் வேறுபாடுகளையும் அவதானித்துக் கொள்ளல் வேண்டும்.

இதழ்களின் பெயர்களைப் பட்டியலிடுவது என்பதோ அல்லது அவற்றின் அடிப்படைத் தரவுகளை விவரணமுறையில் இங்கு கொடுப்பது என்பதோ சாத்தியமில்லாத ஒன்று. எனவே இந்நூலகச் சேகரிப்பின் ஊடாக இதுவரை அறியப்பட்டு வந்த இதழியல் வரலாற்றின் ஆய்வுக்கோப்புகள் குறித்தும் இனி எதிர்காலத்தில் உருவாக்கப்பட வேண்டிய தமிழ் இதழியல் வரலாற்றிற்கான ஆய்வுக் களங்கள் குறித்தும் எடுத்தியம்புவது இக்கட்டுரையின் நோக்கம்.

தமிழ் இதழியல் வரலாறு என்பது கி.பி.19 நூற்றாண்டு முற்பகுதியில் தொடங்கி இன்றுவரை நீடித்துவந்திருப்பதைக் காணலாம். சுமார் 170 ஆண்டுகால இவ்விடைப்பட்ட காலங்களில் ஆயிரக்கணக்கான இதழ்கள் தோன்றியும் மறைந்தும் வந்து கொண்டிருக்கின்றன.

ஒரு இதழைத் தொடங்கி நடத்தி வருவதில் பல்வேறு சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன. அவ்வாறு வந்த இதழ்களை ஒருசேரத் தொகுத்து, பாதுகாப்பது என்பது அரசு சார்ந்த ஆவணக்காப்பகம் மட்டுமே முழுமையாகச் செய்யக்கூடிய ஒன்று. ஆனால், ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அடைவில் (கணினி மூலமான பதிவில்)1842 தொடங்கி இன்று வரை சுமார் 3000த்திற்கும்(தமிழ், ஆங்கிலம் இரண்டும் சேர்த்து) மேற்பட்ட இதழ்களின் பட்டியலைப் பார்க்க முடியும்.

இதில் தமிழ் இதழ்கள் மட்டும் சுமார் 2500க்கும் மேற்பட்டவை. அவ்வெண்ணிக்கை என்பது சாதாரண விடயமாக எடுத்துக்கொள்ள முடியாது. தமிழ் இதழியல் வரலாற்றை மீள் கட்டமைப்பதற்கான தளமாக இந்நூலகம் விளங்கும் என்றால் அது மிகையாகாது. அவ்வனைத்து இதழ்களின் பெயர்களைப் பட்டியலிடுவது என்பதோ அல்லது அவற்றின் அடிப்படைத் தரவுகளை விவரணமுறையில் இங்கு கொடுப்பது என்பதோ சாத்தியமில்லாத ஒன்று. எனவே இந்நூலகச் சேகரிப்பின் ஊடாக இதுவரை அறியப்பட்டு வந்த இதழியல் வரலாற்றின் ஆய்வுக்கோப்புகள் குறித்தும் இனி எதிர்காலத்தில் உருவாக்கப்பட வேண்டிய தமிழ் இதழியல் வரலாற்றிற்கான ஆய்வுக் களங்கள் குறித்தும் எடுத்தியம்புவது இக்கட்டுரையின் நோக்கம்.

இந்நூலகச் சேகரிப்பில் 1842இல் வெளிவந்தது முதல் இன்று வரையுள்ள அனைத்து இதழ்களையும் ஆராயவில்லை. தொடக்க கால இதழ்களின் மையப்போக்கு அக்காலக்கட்டங்களில்

உருவான சமூகச் சிக்கல்கள் காலனிய ஆட்சிக்காலத்தில் இந்திய விடுதலைக்கு முன்பான காலகட்டம் எழுந்து இதழ்களின் போக்குக்குகள் மட்டுமே இங்கு முன்வைக்கப்படுகிறது.

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகச் சேகரிப்பில் 1842 முதலே பதிவுகள் (Records) காணப்படுகின்றன. 1842 முதல் 1899 ஆம் ஆண்டு வரையிலான இதழ்களின் எண்ணிக்கை மிகக் குறைவே. இந்த ஐம்பத்தேழு ஆண்டுகளில் 14 இதழ்கள் மட்டுமே இச்சேகரிப்பில் இடம்பெற்றுள்ளன. ஆனால் இவை மீதான பதிவுகள் என்பது வரலாற்றில் மிகக் குறைவே. 1900 முதல் 1942 வரையிலான காலக் கட்டத்திலேயே அதிகளவில் இதழ்கள் தோற்றம் பெற்றுள்ளன. சுமார் 400க்கும் மேற்பட்ட இதழ்களின் பெயர்களைப் பட்டியலிட முடியும். ஒரு நூற்றாண்டுக் கால அளவில் இதழ்களின் போக்கைக் கீழ்க்கண்டவாறு பகுத்துக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணத்தில் வெளிவந்த செய்தி இதழ். தமிழின் முதல் செய்தி இதழாக இதனைக் கருதலாம்.

- கிறித்துவ சமய இதழ்கள்
- பெண்கள் நடத்திய இதழ்கள்
- சைவம் / வைணவம் சார்ந்த சமய இதழ்கள்
- தமிழ்ச்சங்கங்களின் வாயிலாக வெளி வந்தவை.
- இந்திய விடுதலையை முன்நிறுத்திய இதழ்கள்.
- மொழி, தமிழ்தேசியம் தனித்தமிழ் சார்ந்த இதழ்கள்
- பகுத்தறிவு இதழ்கள்
- இந்துத்துவ சாதீய இதழ்கள்
- விளிம்புநிலை சார்ந்த இதழ்கள்
- வெகுசன, அறிவியல், மருத்துவ இதழ்கள்
- அயலக-புலம்பெயர்ந்தோர் இதழ்கள்

என இவ்வாறு சில புரிதலுக்காக 1842 முதல் 1942 வரையிலான இதழ் களின் பின்புலத்தை வகைப்படுத்தலாம். இவ்வாறான பகுப்பு முறை அவ்விதழ்களின் அரசியல் கருத்தாக்கங்களை அடிப்படையாகக் கொண்டும், அவை வெளிவந்த மட்டங்கள் சார்ந்த புரிதலின் அடிப் படையிலேயே பகுத்துக் கூறப்பட்டுள்ளன.


உதயதாரகை.—MORNING STAR.

Published on the 1st and 3d Thursday of every Month at one shilling a Quarter, payable in advance.

Thursday, May 5, 1842. [Vol. II. No. 9.

(Historical sketch of the Pandian kingdom.)

(Continued from page 85.)

LIFE OF MOHAMMED.

(The Koreish exasperated and alarmed by Mohammed's growing success—Commence persecution—Some of his followers seek safety in flight—New converts—The Koreish form a League against him—Abu Taleb and Cadijah die—He makes a temporary retreat from Mecca—Returns and preaches with increased zeal—Some of the Pilgrims from Medina converted.)

ஒரு நூற்றாண்டு கால இதழியல் வர லாற்றை ஒட்டுமொத்தமாக வைத்துப் பார்க்கும்போது சில வினாக்களை முன்வைக்க வேண்டியுள்ளது.

பெண் இதழியலாளர்கள் குறித்தும் காலனிய காலகட்டத்தில் பெண்களுக்கான கல்வி என்பது முன்வைக்கப்பட்டது. குறிப் பாக

பெண்களுக்கான இதழ்களும் பெண்களே இதழ்களை நடத்தியும் வந்துள்ளனர். இதழி யல் வரலாற்றில் இன்று பெண்களால் நடத்தப் படும் இதழ்கள் குறைவே. பெண்ணியம் குறித்து தீவிரமாகப் பேசப்பட்டு வரும் நிலையில் பெண்கள் இதழ்களை ஏன் நடத்தவில்லை? என்பது காத்திரமாக முன்வைக்க வேண்டிய கேள்வி.

- 1900க்குப் பிறகே பெரும்பாலான இலக்கிய இதழ்களும் வெளிவரத்தொடங்கின. இவை பாடசாலையின் வருகையால் என்பது ஒருபுறமிருந்தாலும் இதழியல் தடைச்சட்டம் வந்தபிறகு பெரும்பாலான இதழ்கள் தங்களை இலக்கி யம், சமயம், சாதியம் சார்ந்து மாற்றிக்கொண்டன.

தமிழில் வெளிவந்த முதல் நாத்திக இதழ்


தத்துவவிவேசினி

இந்து சுயக்கியான சங்கத்தாரால் பரிபாலிக்கப்பட்டுவருகின்ற

வாராந்த திராவிட சுயக்கியான பத்திரிகை.

[Vol V—No. 4.] MADRAS:—SUNDAY JANUARY 24, 286. [MONTHLY, 4 ANNAS

CHARLES BRADLAUGH, M. P.

மனத்தின்நிலைமை.

- இரண்டாம் உலகப்போர் காலக்கட்டங்களில் ஏற் பட்ட தாள் தட்டுப்பாடு களில் பெரும்பாலான இதழ்கள் நின்றுவிட்டன. இருப்பினும் ஒரு சில சமூகம் பிரித்தானிய அர சிடம் கொண்ட உறவால் தங்களின் இதழ்களைத் தடையற வெளியிட்டனர். குறிப்பாக அதில் நகரத்தார் சமூகத்தின் செயல் போக்கு ஊன்றி கவ னிக்கத் தக்கது. பார்ப்பனிய, வேளாள சமூகத்திற்குப் பிறகு தங்களை பலதுறைகளிலும் நிலை நிறுத்திக் கொண்டவர்கள். பதிப்புத் துறையிலும் இதழியல் துறையிலும் வடிவ ரீதியாகவும் வியாபார ரீதியாகவும் பெரும் மாற்றங்களை கொண்டு வந்தனர்.

இவ்வாறு தொடக்ககால இதழ்களின் செல்நெறிகளை மேலோட்டமாக முன்வைத்த பின்னர் தமிழ் இதழியல் வரலாற்றைக் கட்டமைப்ப தில் ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகம் எவ்வாறான செயல் பாடுகளை மேற்கொண்டுள்ளது என்பதைக் காணலாம். ரோஜா முத்தையா செட்டியாருக்குப் பிறகான இதழ்களின் சேக ரிப்பு என்பது அந்நிறுவன செயல்பாடுகளில் அளவிடற்கரியது. ஆனால், இத்தொகுப்பில் இதழ்கள் அனைத்தும் முழுமை பெற வில்லை. அதாவது ஒரு இதழின் ஆரம்பம்முதல் இறுதிவரை முழுத் தொகுப்பும் இல்லை. இந்நூலகச் சேகரிப்பில் விடுபடல்கள் உள்ளன. 3000 இதழ்களில் ஒரு தலைப்பிலான இதழ்கள் கூட முழுமையாக இல்லை என்று உதவி நூலகர் திருமதி. மாலா அவர்கள் தெரிவித்தனர்

ஆனால், அவை எதிர்காலத்தில் அவ்வாறான சிக்கல்கள் ஏற்படாது என்பதை அந்நூலககச் செயல்பாடுகள் நம்பிக்கையை ஏற்படுத்துகின்றன. குறிப்பாக LIBRARY SERVEY மூலம் விடுபட்ட அனைத்து இதழ்களும் சேகரிக்கப்பட்டு வருகிறது. இந்தச் செயல்பாடு தமிழ் இதழியல் வரலாற்றை கட்டமைப்பதற்கான தளமாகத் திகழ்வதற்கான அவதானிப்பு ஆகும்.

மேலும், இதழ்களை அடைவுப்படுத்துவதோடு இதழ்களில் வரும் கட்டுரைகளையும் அடைவுப் படுத்தி வருகின்றனர். இவ்வாறான பணிகள் இதழியல் ஆய்வாளர்களின் ஆய்வுக் களத்தை விரிவுபடுத் துணைபுரியும்.

இதழியல் தொகுநிலை ஆய்வுகளும் நவீன தமிழிலக்கியத்திற்கான முக்கிய ஆக்க வடிவங்களான சிறுகதை, நாவல், கவிதை, ஆகியனவற்றின் வரலாறு தொக்கி நிற்பதை இக்கூறுகள் உணர்த்துகின்றன.

வெகுசன இதழ்களின் மீதான ஆய்வுகள் என்பது கொண்டுள்ள வாசக மட்டங்களையும் உள்ளடக்கியதாகவே நிகழ்த்தப்பட வேண்டும். மேலும், அவற்றின் ஊடான விளம்பரங்கள் , குறிப்புகள் போன்ற வெகுசன மற்றும் வியாபாரம் இவ்விரண்டின் உள்ளார்ந்த விடயமாகக் கொள்ளல் வேண்டும். இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், போன்ற அயல்நாடுகளில் தமிழ் இதழியல் வளர்ந்த வரலாற்றிற்கான ஆதாரங்கள் சேகரிக்கப் படவில்லை அல்லது குறைந்தளவே சேகரிக்கப்பட்டுள்ளன எனறே செல்ல வேண்டும்.

இவையனைத்தையும் ஒன்றாகச் சேர்த்துக் காண்கையில் தனி மனித சேகரிப்பின் ஊடாக நிகழ்ந்த வரலாற்று ஆவணங்களின் மீட்டுருவாக்கத்தின் குறியீடும், நிறுவனமயமாக்கப்பட்டதன் எதிர்விளைவாகக் கணினி பயன்பாட்டின் ஊடான தமிழியல் மற்றும் இதழியல் ஆய்வுப் போக்குகளை மாற்று வழிகளை நோக்கிச் செலுத்தவும் ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகத்தின் மீதான கவன ஈர்ப்பாக இக்கட்டுரையைக் கொள்ளலாம்.

பின்னிணைப்பு

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அடைவிலுள்ள 1842 - 1942 வரை வெளிவந்த இதழ்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட இதழ்களின் பட்டியல் மட்டுமே இங்கு கொடுக்கப்பட்டுள்ளது.

இதழ்	தொடக்க ஆண்டு
உதயதாரகை	1841
தத்துவபோதினி	1864
ஜநவிநோதிநி	1869
தத்துவவிவேசினி	1886
மாதர் மித்திரி	1887
விவேகச் சிந்தாமணி	1891
மாதர் மனோரஞ்சனி	1899
விவேகபாநு	1901


ஞானசாகரம்	1902
செந்தமிழ் 1902	
பிரஜாநுகூலன்	1904
நல்லாசிரியன்	1905
தமிழகம் 1905	
ஒரு பைசாத் தமிழன்	1907
விவேகபோதினி	1908
வேதாந்த தீபிகை	1911
வைசியமித்திரன்	1911
பெண்கல்வி	1912
சிந்தாந்தம்	1912
ஞானபாநு	1913
வன்னிகுல மித்திரன்	1913
கலைமகள்	1913
நாட்டுக்கோட்டை வைசியம்	1914
வைத்திய கலாநிதி	1914
வர்த்தகமித்திரன்	1915
சைவம்	1915
ஆனந்தபோதினி	1915
விவேகோதயம்	1916
மனோரஞ்சனி	1917
தமிழர் நேசன்	1917
நாவல்	1917
தருமசீலன்	1918
பாலவிநோதினி	1918
தமிழ்நாடு 1920	
தனவைசிய ஊழியன்	1920
தத்துவ இஸ்லாம்	1921
தாருல் இஸ்லாம்	1922
குமரன் 1922	
புஸ்தக சமாச்சாரம்	1922
செந்தமிழ்ச் செல்வி	1923
ஆரோக்கிய தீபிகை	1924
சிந்தாமணி	1924
பஞ்சாமிர்தம்	1924
பாலபாரதி	1924
தமிழர்	1925
குடிஅரசு	1925
தமிழ்ப்பொழில்	1925
கருணிகமித்திரன்	1925
ஆனந்தவிகடன்	1926
அருட்பிரகாசம்	1927
சிவநேசன்	1927

கள்வர் கோமான்	1928
கலாநிலயம்	1928
சுதேமித்திரன்	1929
வீரசைவம்	1929
யாதவமித்திரன்	1929
விமோசனம்	1929
செந்தமிழ்ப்பாநு	1929
பித்தன்	1929
தனவணிகன்	1930
சுதந்திரச் சங்கு	1930
ஈழகேசரி ஆண்டு மடல்	1930
காந்தி	1931
குலாலமித்திரன்	1931
கலைமகள்	1931
பிரசண்டவிகடன்	1933
சந்ரோதயம்	1933
நாரதர்	1933
மணிக்கொடி	1933
சித்தர் களஞ்சியம்	1934
தமிழ்ப்பெருமாட்டி	1934
கொங்குமலர்	1934
கைத்தொழில்	1934
புதுஉலகம்	1935
சினிமா உலகம்	1935
ஆடல் பாடல்	1935
பகுத்தறிவு	1935
ஸில்வர் ஸ்கிரீன்	1936
பாலர் கல்வி	1936
மாதர் மறுமணம்	1936
சினிமா ரஸிகன்	1936
ஜெயபாரதி	1936
கிரஹலக்ஷ்மி	1937
ஜோதி	1937
குடிநூல்	1937
வானொலி	1938
தமிழ் விவசாய சஞ்சிகை	1938
சக்தி	1939
காவேரி	1941
கல்கி	1941
கலாமோகினி	1942
வசந்தம்	1942

மொத்த இதழ்கள்: 92

பகுதி

3



அறிஞர் ஐராவதம் மகாதேவன்.

நூலகச் செயல்பாடுகள்

ச.சுப்பிரமணியன்
க. சுந்தர்

132

சிந்துவெளி ஆய்விற்கு ஒரு மையம்

■ ச. சுப்பிரமணியன்

முனைவர் ஐராவதம் மகாதேவனைச் சந்திக்கும் வாய்ப்பு எனக்கு தற்செயலாகக் கிடைத்தது. நீண்டகாலமாகவே சிந்துவெளிக் குறியீடுகளைப் படிப்பதில் ஆர்வம் கொண்டிருந்த நான் பெரும் முயற்சிக்குப் பிறகு அவரிடம் அக்டோபர் 2005இல் என்று நினைவு, தொடர்பு கொண்டு பேசினேன். அப்போது அவர், தான் சென்னைப் பல்கலைக் கழகத்தில் சொற்பொழிவு நிகழ்த்த இருப்பதாகக் கூறி அதற்கு வரும்படி அழைத்தார். சொற்பொழிவின் முடிவில் மகாதேவனைச் சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது. சிந்துவெளிக் குறியீடுகள் பற்றிய எனது ஆர்வத்தை அவரிடம் கூறினேன். அவர் தனது இல்லத்துக்கு வந்து சந்திக்கும்படி அழைப்பு விடுத்தார். பல்வேறு காரணங்களால் அச்சந்திப்பு உடனே நடக்க வில்லை. ஆனால் பிற்காலத்தில் அவருடன் சேர்ந்து பணியாற்று வேன் என்று நான் அப்போது கனவிலும் நினைக்கவில்லை!

நிறுவனம் சார்ந்து ஆராய்ச்சி செய்வதன் மூலம் பல ஆராய்ச்சி யாளர்களை உருவாக்க முடியும் என்று ஐராவதம் மகாதேவன் நம்பினார். ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகத்தின் தனித்திறச் செயலாண்மையைக் கண்டு வியந்த அவர் சிந்துவெளி பண்பாட்டு ஆய்வு மையம் என்ற பெயரில் ஜனவரி 2007ல் நூலகத்தின் ஓர் அங்கமாக, செயல்பட ஆலோசனை வழங்கி, அதன் மதிப்புறு ஆலோசகரானார். அவரிடம் உள்ள சிந்துவெளி ஆய்வுகள் தொடர்பான நூல்கள் மற்றும் ஆய்வுக்கட்டுரைகள் என அனைத்தையும் கொடுத்துதவினார். (அது நூலகத்தொகுப்பில் உள்ள முனைவர் கிஃப்ட் சிரோமணியின் தொகுப்போடு இணைக்கப்பட்டது) முனைவர் கிஃப்ட் சிரோமணி ஒரு பன்முக ஆய்வாளர், சென்னை கிறித்துவக்கல்லூரி புள்ளியியல் பேராசிரியராக இருந்த அவர் புள்ளியியல் கோட்பாடுகளைப் பல்வேறு துறைகளிலும் புகுத்தி ஆய்வு செய்துள்ளார்.

இந்தக் கட்டுரை சிந்துவெளி தொடர்பான ஆராய்ச்சியின் போக்கையும் இதுவரை நடந்த ஆய்வு முயற்சிகளையும் பட்டியலிட்டுக் காணும் சிறு முயற்சியாகக் கருதலாம்.

திரு.சுப்ரமணியன் கணினிப் பொறியாளர். அமெரிக்காவில் பல ஆண்டுகள் பணிபுரிந்துவிட்டு சிந்துவெளி ஆராய்ச்சியினால் ஈர்க்கப்பட்டு தற்பொழுது சிந்துவெளி பண்பாட்டு ஆய்வு மையத்தில் முனைவர் பட்டத்திற்கு ஆராய்ச்சியினை மேற்கொண்டுள்ளார்.

சிந்துவெளி ஆராய்ச்சி வரலாறு

சிந்துவெளி தொடர்பான ஆராய்ச்சி அதன் நாகரிகத்தைப் பற்றியும், அங்கு பேசிய மொழி மற்றும் எழுத்துக்களைப் பற்றியும், அந்நாகரிகத்தின் தொன்மை, அதன் வளர்ச்சி வீழ்ச்சி, அந்நாகரிகம் பரவியிருந்த பரப்பளவு, மக்களின் இடப்பெயர்ச்சி எனப் பல கோணங்களில் ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. சிந்துவெளி எழுத்துக்கள் இன்னும் முழுமையாகக் கண்டறியப்படவில்லை. இதற்குப் பல காரணங்களுண்டு. முதலில் முத்திரைகளிலுள்ள எழுத்துக்களின் எண்ணிக்கை குறைவாக உள்ளது. ஒரு

முத்திரையில் 5, 6 எழுத்துக்களே உள்ளன. இவ்வெழுத்துக்களுக் கான வேற்று மொழியின் இணைகள் இதுவரை கண்டெடுக்கப் படவில்லை. மொழியியல் ரீதியாகக் கண்டறிவதற்கு அக்கோட் பாடுகளில் பயிற்சி அவசியம். சிந்துவெளி நாகரிகம் திராவிட நாகரிகம், ஆரிய நாகரிகம் என இரு வேறு பார்வைகளின் அடிப்படையில் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சிந்துவெளி எழுத்துக்களையும் அதன் மற்ற கூறுகளையும் பல்வேறு மொழிகளோடு ஒப்பிட்டு ஆராய்ந்து பார்த்ததில் அது திராவிட மொழி என்பதற்குப் பல ஆதாரங்கள் கிடைத்துள்ளன. அந்த ஆதாரங்களை ஐராவதம் மகாதேவன், அஸ்கோ பர்போலா போன்றோர் உறுதிப்படுத்துகின்றனர்.

மொகஞ்சதாரோ, ஹரப்பா முதலிய இடங்களில் அகழ் வாராய்ச்சிகள் 1920களில் நடைபெற்றது. முதல் சில ஆண்டுகளில் அகழ்வராய்ச்சிப் பணிகள் துரிதகதியில் நடந்து பல கண்டுபிடிப்புகள் அறிவிக்கப்பட்டன. 1921இல் தயாராம் சாஹ்னி தலைமையில் ஹரப்பாவிலும், 1922இல் ராக்கல் தாஸ் பானர்ஜி தலைமையில் மொகஞ்சதாரோவிலும் அகழ்வாராய்ச்சிகள் தொடங்கின. ராக்கல் தாஸ் பானர்ஜிக்குப் பிறகு இந்தியத் தொல்லியல் துறை இயக்குநர் ஜான் மார்ஷல் இவ்வகழ்வாராய்ச்சிப் பணிகளை மேற்கொண்டார். மேலும், அவர் சிந்துவெளிப் பண்பாடு, இந்தோ ஆரியர்கள் வருவ தற்கு முன்னரே இந்தியாவில் இருந்தது என்று முதன்முதலில் உணர்த்தினார்.

சிந்துவெளி குறித்த ஆராய்ச்சியில் பல நாடுகளைச் சேர்ந்த அறிஞர்களும், ஆர்வலர்களும் ஈடுபட்டு வருகின்றனர். அவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் எர்னஸ்ட் மெக்கே, சர் வீலர், அகமது ஹாசன் தானி, பி. பி. லால், நானி மஜும்தார், மாதவ் ஸ்வரூப் வத்ஸ் மற்றும் சர் மார்க்ஸ்டைன் ஆவார்கள். முப்பதுகளில் உலக அளவில் ஏற்பட்ட பொருளாதாரச் சரிவு (the great depression), இரண்டாம் உலகப்போர் இவையிரண்டும் சிந்துவெளி ஆராய்ச்சி களைப் பெருமளவு முடக்கிவிட்டன.

சிந்துவெளி குறித்த ஆராய்ச்சியில் பல நாடுகளைச் சேர்ந்த அறிஞர்களும், ஆர்வலர்களும் ஈடுபட்டு வருகின்றனர். அவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் எர்னஸ்ட் மெக்கே, சர் வீலர், அகமது ஹாசன் தானி, பி. பி. லால், நானி மஜும்தார், மாதவ் ஸ்வரூப் வத்ஸ் மற்றும் சர் மார்க்ஸ்டைன் ஆவார்கள்.

1947இல் இந்தியா ஆங்கிலேயரிடமிருந்து விடுதலை பெற்ற போது பாகிஸ்தானும் தனி நாடாக மாறியதால், அதுவரை கண்டு பிடிக்கப்பட்ட பல சிந்துவெளிப் பகுதிகள் பாகிஸ்தான் எல்லைக் குள் சென்றுவிட்டன. 1947க்குப் பிறகு இந்தியாவில் ராஜஸ்தான், ஹரியானா, குஜராத், மகாராஷ்டிரம் முதலிய மாநிலங்களில் அகழ்வாராய்ச்சிகள் நடத்தப்பட்டு, அவ்வப்போது அவற்றைப் பற்றிய செய்திகள் வெளியிடப்பட்டு வந்தன. சிந்துவெளி அகழ் வாய்வுத் தகவல்கள் (excavation notes) மற்றும் களப்பணி அறிக்கைகள் (field reports) வெளியிடப்படாமல் இருப்பது சிந்துவெளி ஆராய்ச்சி யாளர்களின் மனக்குறை. எடுத்துக்காட்டாக, சமீபத்தில் இந்து நாளிதழ், தோலவிரா அகழ்வாய்வில் சிந்துவெளிக் குறியீடுகள் பொறிக்கப்பட்ட கல்லை, 1999இல் கண்டெடுக்கப்பட்டதாக எழுதியிருந்தது. இதற்கு முன் கல்லில் சிந்துவெளிக் குறியீடுகள் கிடைக்கப்பெறாத நிலையில், இக்கல்லை அகழ்ந்து எடுத்தவர்கள் உடனுக்குடன் இச்செய்தியை வெளியிட்டிருந்தால் இது பற்றிய ஆராய்ச்சிப் பணிகளும், விவாதங்களும் உடனுக்குடன் தொடங்கி யிருக்கும், ஆனால் அவ்வாறு நடைபெறவில்லை. இக்குறையைத் தீர்க்க, அகழ்வாராய்ச்சி களப்பணி அறிக்கைகளையும் அகழ் வாராய்ச்சி ஆய்வுத்தகவல்களையும் உடனுக்குடன் வெளியிட் டால், அது சிந்துவெளி ஆராய்ச்சிக்குப் பேருதவியாக இருக்கும்.



சிந்துவெளி முத்திரை

இதே போல் மேல்நாட்டு அறிஞர்களும் தம் ஆராய்ச்சிகளின் முடிவுகளை உடனுக்குடன் வெளியிடுவதில்லை. மேலும் இவ் வாராய்ச்சிக் குறிப்புகளும் புகைப்படங்களும் சில அறிஞர்களுக் கிடையே மட்டும் சுற்றிக் கொண்டு இருக்கின்றன.

சிந்துவெளி ஆராய்ச்சியின் போக்கு

ஹரப்பாவும் மொகஞ்சதாரோவும் அகழ்ந்தெடுக்கப்படாத நிலையில் இந்தியத் தொல்லியல் துறைத்தலைவர் அலெக்ஸாண்டர் கன்னிங்ஹாம், முதலில் கிடைத்த முத்திரைகளை வைத்து அதில் எழுதப்பட்டுள்ள மொழி சுமேரிய மொழியெனக் கருத்து தெரி வித்தார். எனினும் சிந்துவெளி மொழியைப்பற்றிய ஆராய்ச்சிகள் 1920களுக்குப் பிறகே தொடங்கியதென்று கூறவேண்டும். சர் ஜான் மார்ஷல் சிந்துவெளி மொழி திராவிட மொழி எனக் கூறினார். இப்போது பெரும்பாலான அறிஞர்கள் சிந்துவெளி மொழி பண்டைய திராவிட மொழியென்று கருதுகிறார்கள். ஆயினும், இக்கருத்துக்கு இன்றளவும் எதிர்ப்பு இருந்து வருகிறது. சமீப காலங்களில் குதிரை வடிவங்கள், குதிரை எலும்புகள், ஆரக்கால் உடைய ரதங்கள் கிடைத்திருப்பதாகச் செய்திகள் வந்தாலும் இச்செய்திகள் யாவும் உண்மையென நிரூபிக்கப்படவில்லை. குதிரையும், ஆரக்கால் உள்ள தேரும் இந்தோ ஆரியர்கள் கொண்டுவந்ததெனக் கருதப்படுகிறது.

ஹரப்பாவும் மொகஞ்சதாரோவும் அகழ்ந்தெடுக்கப்படாத நிலையில் இந்தியத் தொல்லியல் துறைத்தலைவர் அலெக்ஸாண்டர் கன்னிங்ஹாம், முதலில் கிடைத்த முத்திரைகளை வைத்து அதில் எழுதப்பட்டுள்ள மொழி சுமேரிய மொழியெனக் கருத்து தெரி வித்தார். எனினும் சிந்துவெளி மொழியைப்பற்றிய ஆராய்ச்சிகள் 1920களுக்குப் பிறகே தொடங்கியதென்று கூறவேண்டும். சர் ஜான் மார்ஷல் சிந்துவெளி மொழி திராவிட மொழி எனக் கூறினார். இப்போது பெரும்பாலான அறிஞர்கள் சிந்துவெளி மொழி பண்டைய திராவிட மொழியென்று கருதுகிறார்கள்.



சிந்துவெளி முத்திரை

சிந்துவெளி மொழியை முறையாக ஆய்வு செய்தவர் ஜி. ஆர். ஹன்டர் என்பவர். இவரே சிந்துவெளிக் குறியீடுகளின் தொகுப்பை (Concordance) முதன் முதலில் (1934) உருவாக்கி, சிந்துவெளிக் குறியீடுகளை அட்டவணைப்படுத்தியவர்.

ஒரு முழுமையான சிந்துவெளிக் குறியீடுகளின் தொகுப்பினை 1977இல் வெளிக்கொணர்ந்த பெருமை முனைவர் ஐராவதம் மகாதேவனைச் சேரும். சுமார் 3,000 சிந்துவெளி எழுத்துச் சின்னங்களை (முத்திரைகள், முத்திரைப் பதிவுகள், பானை ஓடுகள், செப்புத்தகடுகள் முதலியன) பட்டியலிட்டு, சிந்துவெளிக் குறியீடு களைத் தொகுத்ததுடன், புள்ளியியல் மற்றும் கணினி உதவியுடன் பல்வேறு பகுப்பாய்வு முடிவுகளையும் அளித்திருக்கிறார். இன்றும் இத்தொகுப்பு சிந்துவெளி மொழியில் ஆராய்ச்சி செய்பவர்களுக்கு ஓர் இன்றியமையாத கருவி நூலாக இருந்து வருகிறது.

முனைவர் மகாதேவனின் முயற்சியைத் தொடர்ந்து அஸ்கோ பர்போலா மற்றும் சமீபத்தில் ப்ரையன் வெல்ஸ் போன்றவர்களும் சிந்துவெளிக் குறியீடுகளின் தொகுப்புகளை வெளியிட்டிருக் கிறார்கள். சிந்துவெளி எழுத்துக்களில் லேசான மாறுபாடுகளுடன் காணப்படும் குறியீடுகளைப் ப்ரையன் வெல்ஸ் வெவ்வேறு குறியீடுகளாகக் காண்கின்றார். மகாதேவன் அம் மாறுபாடுகளை ஒரு குறியீட்டிற்கான மாற்றுவடிவங்களாகக் குறிப்பிடுகின்றார். இந்த அடிப்படை வேறுபாடுகளுடன் சிந்துவெளிக் குறியீடுகள் தொகுக்கப்பட்டுள்ளன. இதே போல் அஸ்கோ பர்போலாவும் தொகுத்துள்ளார்.

சிந்துவெளிக் குறியீடுகள் திராவிட மொழிகளுடன் தொடர்பு டையவை என்ற கூற்றை முதலில் ஆதாரங்களுடன் முன் வைத்த பெருமை ஹீராஸ் பாதிரியாரைச் சேரும். இவர்தாம் மீன் வடிவக் குறியீட்டைத் திராவிட மொழிகள் பலவற்றிலும் உள்ள மீன் என்ற சொல்லாக இணைத்துக் காட்டினார்.

சிந்துவெளி மொழி ஆராய்ச்சியிலும் அஸ்கோ பர்போலா, வால்டர் பேர்ஸர்விஸ், யூரி நோரோஸாவ் (மாயன் மொழி ஆராய்ச்சியாளர்) தலைமையில் செயல்பட்ட ரஷ்ய ஆராய்ச்சியாளர்கள் மற்றும் பல இந்திய ஆராய்ச்சியாளர்கள் ஆராய்ச்சி செய்துள்ளனர், செய்தும் வருகின்றனர். யூரி நோரோஸாவ் இவ்வெழுத்துக்களைத் திராவிட மொழிக் கூறுகளுடையன என்றும் அவை சித்திர எழுத்துக்களாக இருக்கவேண்டும் என்றும் கூறியுள்ளார்.

சிந்துவெளி ஆய்வு குறித்தும் தமிழகத்தில் விரல்விட்டு எண்ணக்கூடிய அளவில், ஐராவதம் மகாதேவன், மதிவாணன், கல்யாணராமன், பூரண சந்திர ஜீவா போன்ற வெகு சில அறிஞர்களே தொடர்ந்து ஆராய்ச்சிக் கட்டுரைகள் எழுதி வருகிறார்கள். இவர்களில் சிலர் பண்பாடு குறித்தும், சிலர் மொழி குறித்தும் ஆராய்ச்சி செய்துள்ளனர். உதாரணமாக மதிவாணன் சிந்துவெளி எழுத்துக்களுக்கு இணையாகத் தமிழ் பிராமி எழுத்துக்களை அடையாளம் காண்கிறார். சர்வதேச ஆராய்ச்சியாளர்கள் இதை ஒப்புக்கொள்ளவில்லை என்றாலும் அது ஒரு பெரும் முயற்சி. அவர்கள் அனைவரும் ஒருமித்த கருத்து உடையவர்கள் அல்லர், இருப்பினும், இவ்வாறு எழுப்பப்படும் மாறுபட்ட கருத்துக்கள் தாம் சிந்துவெளி மொழி ஆராய்ச்சியை வலுவூட்டும். கவலையான ஒரு செய்தியை இங்கே பகிர்ந்து கொள்ள வேண்டும். என்னவென்றால் இதுவரை தமிழில் சிந்துவெளி குறித்து (மொழிபெயர்ப்பு நூல்களையும் சேர்த்து) 50க்கும் குறைவான நூல்களே வெளியிடப்பட்டுள்ளன. இது சிந்துவெளி ஆராய்ச்சிக்குத் தேவையான ஊக்கத்தையும் பொருளுதவியின் தேவையையும் வலியுறுத்துகிறது.

ஐராவதம் மகாதேவனின் ஆராய்ச்சி

முனைவர் மகாதேவன் தொடக்க காலத்திலிருந்தே தம் சிந்துவெளி மொழி ஆய்வுகளுக்குக் கணினியைப் பயன்படுத்தி வருகிறார். நேரடியாக அருங்காட்சியகங்களுக்குச் சென்று சிந்துவெளிக் குறியீடுகளைப் பார்வையிட்டு, அவற்றைப் படி எடுத்து பட்டியலிட்டார். 1977இல் வெளியிட்ட சிந்துவெளிக் குறியீடுகளின் தொகுப்பு (concordance) அப்போது மும்பை டாடா அடிப்படை ஆராய்ச்சி நிறுவனத்தில் (TIFR) இருந்த கணினியின் உதவியுடன் செய்யப்பட்டவையாகும்.

சிந்துவெளி மொழி குறித்த பகுப்பாய்வுக்கு சிந்துவெளி குறியீடுகளின் தொகுப்பு மிக இன்றியமையாதது. தொகுப்பின் முதல்கட்டமாக குறியீடுகளை வகைப்படுத்தி பட்டியலிட வேண்டும். முனைவர் மகாதேவனின் 1977 தொகுப்பு 417 குறியீடுகளைக்கொண்டிருந்தது. குறியீடுகளில் இருந்த சிறு வேறுபாடுகள் தனியாகப் பட்டியலிடப்பட்டிருந்தன. இதுதவிர, தொகுப்புக்குப் பயன்படுத்தப்பட்ட அத்தனை எழுத்துக் கோர்வைகளும் (texts) இருவிதமாகப் பட்டியலிடப்பட்டிருந்தன. முதலாவதாக முனைவர் மகாதேவன் இவற்றுக்குக் கொடுத்திருந்த வரிசை எண் படியும், இரண்டாவதாக ஒவ்வோர் குறியீட்டுக்கும் அதை மையமாகக் கொண்டு அதற்கு முன்னும் பின்னும் என்ன குறியீடுகள் வருகின்றன என்பதை எளிதில் கண்டறியுமாறு சித்திர வடிவத்தில் தரப்பட்டிருந்தன. இதையும் தவிர புள்ளி விவரப் பட்டியல்கள் மிக அதிகமாக வரும் குறியீடு, இரட்டைக் குறியீடுகள் முதலியன எவ்விடத்தில், எத்தகைய சின்னங்களில்

சிந்துவெளி ஆய்வு குறித்தும் தமிழகத்தில் விரல்விட்டு எண்ணக்கூடிய அளவில், ஐராவதம் மகாதேவன், மதிவாணன், கல்யாணராமன், பூரண சந்திரஜீவா போன்ற வெகுசில அறிஞர்களே தொடர்ந்து ஆராய்ச்சிக் கட்டுரைகள் எழுதி வருகிறார்கள். இவர்களில் சிலர் பண்பாடு குறித்தும், சிலர் மொழி குறித்தும் ஆராய்ச்சி செய்துள்ளனர்.



சிந்துவெளி முத்திரை

கிடைத்துள்ளன போன்ற விவரங்களையும் தெரிவிக்கின்றன. இவை மொழி ஆராய்ச்சியாளர்களுக்கு மிகவும் உறுதுணையாக இருக்கும்.

1977இல் வெளியான மகாதேவனின் சிந்துவெளிக் குறியீடுகளின் தொகுப்பினால் ஈர்க்கப்பட்ட கிஃப்ட் சிரோமணி கணினி உதவியுடன் புள்ளியியல் கோட்டுபாடுகளைப் பயன்படுத்தி சிந்துவெளிக் குறியீடுகள் பற்றிப் பல்வேறு ஆய்வுக்கட்டுரைகளை எழுதியுள்ளார். சிந்துவெளி மொழி ஆய்வுக்குக் கணினி மற்றும் புள்ளியியலைப் பெருமளவு பயன்படுத்திய இந்திய ஆராய்ச்சி யாளர்களில் இவர் குறிப்பிடத்தக்கவர். இவர் 1989 இல் அகால மரணம் அடைந்தது சிந்துவெளி மொழி ஆய்வுக்கு ஏற்பட்ட பேரிழப்பு என்றே கூற வேண்டும்.

தற்போது சிந்து வெளியிலுள்ள தமிழ்க் கூறுகளையும் பழந்தமிழிலுள்ள சிந்துவெளிக் கூறுகளின் நீட்சியையும் மகாதேவன் தம் ஆய்வில் மேற்கொண்டு வருகிறார்.

1977இல் வெளியான மகாதேவனின் சிந்துவெளிக் குறியீடுகளின் தொகுப்பினால் ஈர்க்கப்பட்ட கிஃப்ட் சிரோமணி கணினி உதவியுடன் புள்ளியியல் கோட்டுபாடுகளைப் பயன்படுத்தி சிந்துவெளிக் குறியீடுகள் பற்றிப் பல்வேறு ஆய்வுக்கட்டுரைகளை எழுதியுள்ளார். சிந்துவெளி மொழி ஆய்வுக்குக் கணினி மற்றும் புள்ளியியலைப் பெருமளவு பயன்படுத்திய இந்திய ஆராய்ச்சி யாளர்களில் இவர் குறிப்பிடத்தக்கவர்.

கடந்த சில ஆண்டுகளில் தென்னிந்தியாவில், குறிப்பாக தமிழ்நாட்டில், சிந்துவெளிக் குறியீடுகள் போன்ற குறியீடுகள் கொண்ட பானையோடுகளும் கற்கோடரியும் கிடைத்துள்ளன. முனைவர் மகாதேவன் சிந்துவெளிப் பண்பாட்டின் எச்சங்கள் நம்மிடையே இன்றளவும் இருந்து வருவதாகவும் கருதுகிறார். சமீபத்தில் அவர் எழுதிய ஆராய்ச்சிக் கட்டுரையில் அகத்தியர் வேளிர் குலத்தினருடன் தென்னாட்டிற்குப் புலம் பெயர்ந்ததைப் புறநானூற்றை மேற்கோள் காட்டி விளக்கியுள்ளார். இத்தகைய ஆராய்ச்சிகளைத் தொடர்ந்து செய்யவும், அவ்வாறு ஆராய்ச்சி செய்யும் அறிஞர்கள் கருத்துப் பரிமாற்றத்துக்கு ஒரு இடமாகவும் சிந்துவெளிப் பண்பாட்டு ஆய்வு மையம் பணியாற்றி வருகிறது.

அண்மையில் மயங்க் வாஹியா, நிஷா யாதவ், ராஜேஷ் ராவ், ரொணொஜய் அதிகாரி ஆகியோர் மேற்கொண்ட கணினி மற்றும் மொழியியல் ஆய்வில் சிந்துவெளி எழுத்துக்கள் நிச்சயமாக ஒரு மொழி தான் என்ற முடிவிற்கு வந்து அதற்கான அறிக்கையினை Science என்ற ஆராய்ச்சி இதழில் வெளியிட்டுள்ளனர். இது மகாதேவன் முதலான ஆய்வாளர்களின் கருதுகோளை உறுதி செய்வதாக உள்ளது. இது விஞ்ஞானிகளின் (இங்கே கணிதவியல், மொழி யியல், கணிப்பொறியியல், வானவியல்) முதல் கட்ட ஒப்புதலாகும். இவர்கள் தொடர்ந்து மகாதேவனின் ஆலோசனையைப் பெற்று இந்த ஆராய்ச்சிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

சிந்துவெளி மொழி ஆய்வுகளைப்பற்றி மூன்று கருத்துக்களை மனதில் கொள்ள வேண்டும்.

1. நாம் செய்யும் ஆராய்ச்சிப் பணிகள் பன்னாட்டு அளவில் சென்று அடைய வேண்டுமென்றால் அவை செம்மையான ஆய்வு நெறிமுறைகளைக் கடைபிடித்து செய்யப்பட்டிருக்க வேண்டும்; ஆராய்ச்சிக் கட்டுரைகளும் பன்னாட்டுத் தரத்தில் எழுதப்பட்டிருக்க வேண்டும். இவ்வகைக்கு முனைவர் மகாதேவனின் ஆராய்ச்சிக் கட்டுரைகளை எடுத்துக் காட்டுகளாகக் கூறலாம்.

2. இத்துறையில் இருக்கும் ஆராய்ச்சியாளர்கள் இத்துறையைச்

சார்ந்த ஆராய்ச்சி ஏடுகளில் வரும் கட்டுரைகளைப் படித்து வர வேண்டும். உலகில் சிந்துவெளி மொழி தவிர படிக்கப்படாத இதர மொழிகள் இருக்கின்றன. அவற்றைப் பற்றியும் ஆராய்ச்சிகள் நடந்து வருகின்றன; இம்மொழி ஆராய்ச்சியாளர்களது அணுகுமுறை என்னவென்று அறிந்து கொள்வது சிந்துவெளி ஆராய்ச்சியாளர்களுக்கு மிக்க பயனுள்ளதாக இருக்கும்.

3. தமிழ் மட்டுமல்லாது பிராமி, கரோஷ்டி, பழைய சீனம், சுமேரிய மற்றும் எகிப்திய எழுத்துக்கள், பிற திராவிட மொழிக்கூறுகளை அறிந்திருக்க வேண்டும் அல்லது அவற்றோடு சிந்து வெளி எழுத்துக்களை ஒப்பிட்டுப் பார்க்கப் பயிற்சி பெற்றிருக்கவேண்டும்.

கடந்த சில ஆண்டுகளாகவே வரலாற்றியலிலும், குறிப்பாகப் பண்டைய வரலாறு மற்றும் தொல்பொருள் ஆய்வுத் துறைகளிலும், முனைவர் பட்டத்திற்கான ஆயவு மாணவர்களின் எண்ணிக்கை குறைந்து கொண்டே வருகிறது. இது இத்துறைகளின் மீது மாணவர்களுக்கு ஆர்வமில்லாததையே காட்டுகிறது. தகவல் தொழில் நுட்பத் துறையின் தாக்கத்தால் ஏற்பட்ட விளைவு என்று சிலர் கூறினாலும், இம்மையத்தினை தனிப்பட்ட முறையில், தன்னார்வம் கொண்டு அணுகுபவர்கள் பலரும் தகவல் தொழில் நுட்பத் துறையைச் சேர்ந்தவர்களே என எண்ணும்போது இக்கூற்றை அப்படியே ஏற்க மனம் ஒப்பவில்லை. நமது பண்பாடு குறித்து ஆழ்ந்து படிக்கும் ஆர்வம் குறைந்துவிட்டதே காரணமாக இருக்குமோ என எண்ணத் தோன்றுகிறது.

தொல்பொருள் அகழ்வாராய்ச்சிப் பணிகளை மேற்கொள்வதில் இந்திய அரசு தொல்பொருள் துறை மற்றும் தமிழ்நாடு அரசு தொல்பொருள் துறை தவிர சென்னைப் பல்கலைக்கழகம், புதுச்சேரி பல்கலைக்கழகம் மற்றும் ஓரிரு தனியார் துறை நிறுவனங்களும் செயல்பட்டுவருகின்றன, எனினும் நானறிந்தவரை சிந்துவெளி அகழ்வாராய்ச்சிகளில் தமிழ் நாட்டைச் சேர்ந்த எந்த ஒரு கல்வி/ ஆராய்ச்சி நிறுவனமும் இது வரை ஈடுபட்டதாகத் தெரியவில்லை. இங்குதான் ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகத்தின் செயல் பாடுகளில் ஒன்றான சிந்துவெளிப் பண்பாட்டு ஆய்வு மையம் இத்துறையில் செய்து வரும் அரிய பணிகளைக் காணலாம்.

சிந்துவெளி அகழ்வாராய்ச்சி மட்டுமல்லாது தமிழகத்திலேயே இன்னமும் செய்ய வேண்டிய அகழ்வாராய்ச்சிப் பணிகள் நிறைய இருக்கின்றன. எடுத்துக்காட்டாக, கொடுமணல் நமக்குப் பல பண்டைய வரலாற்றுச் சான்றுகளை அள்ளித்தந்திருக்கிறது. ஆயினும் இது வரையில் கொடுமணலின் பத்தில் ஒரு பங்கே அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளது என்றெண்ணும் போது, அவ்விடத்தில் இன்னும் என்ன ரகசியங்கள் புதைந்து கிடக்கின்றனவோ என்று எண்ணத் தோன்றுகிறது. இதுவரை நடந்த அகழ்வு ஆய்வின் அறிக்கை கூட இதுவரை முழுமையாக வெளியிடப்படவில்லை.

சிந்துவெளிப் பண்பாட்டு ஆய்வு மையத்தின் செயல்பாடுகள்:

சிந்துவெளி தொடர்பான ஆராய்ச்சி நூல்கள் மற்றும் கட்டுரைகளின் பட்டியல் ஒன்றை உருவாக்கியுள்ளது. அதை வைத்து நூலகத்தில் இல்லாத நூல்களையும் கட்டுரைகளையும் தருவிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது. இதுவரை நூற்றுக்

கணக்கான ஆதாரங்களைத் திரட்டி இவ்வாய்வுக்குத் தேவையான வசதிகளையும் செய்து வருகிறது இம்மையம். மேலும் ஆர்க்கியாலஜி, ஆன்ட்டிக்விட்டி, புராதத்வ மற்றும் JSTOR போன்ற கணினி வழி இதழ்களைத் தருவிப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இவ்வாறு செய்வதால் ஆராய்ச்சியாளர்களுக்கு ஒரே இடத்தில் இத்துறை சார்ந்த தரவுகள் கிடைக்கும். ஆராய்ச்சி மேற்கொள்வ தற்கு ஏதுவாக ஒரு சூழலை உருவாக்குகிறது.

இம்மையத்தின் மூலம் மொழியியல், பண்பாடு, புள்ளியியல் தொடர்பான ஆய்வுகள் நடந்து வருகின்றன. இம்மையம் TIFR மற்றும் சென்னையில் உள்ள கணித அறிவியல் நிறுவனத்தின் (Institute of Mathematical Sciences) ஆராய்ச்சியாளர்களுடன் தொடர்பு கொண்டு சிந்துவெளிக் குறியீடுகள் பற்றி கருத்துப் பரிமாற்றம் செய்து வருகிறது.

பல கருத்தரங்குகளும், பயிலரங்கம் நடத்துவதும், கட்டுரை களைப் படிக்க ஆய்வாளர்கள் அழைக்கப்படுவதும் தொடர்ந்து நடக்கிறது. அஸ்கோ பர்போலா, ரொமிலா தாபர் உள்ளிட்ட அறிஞர்கள் இங்கு வருகை தந்துள்ளனர்.

1977க்கு பின் பல இடங்களில் சிந்துவெளி அகழ்வாராய்ச்சிப் பணிகள் நடந்துள்ளன. குறிப்பாக ஹரப்பா, தோலவிரா, பர்மானா, பிரானா போன்ற இடங்களில் ஏராளமான சிந்துவெளி முத்திரை கள் கிடைத்துள்ளன. இவை அனைத்தையும் ஒருங்கிணைத்து, ஏற்கனவே உள்ள சிந்துவெளிக் குறியீடுகளின் தொகுப்பைச் செம்மை செய்து, விரிவாக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

சிந்துவெளி பண்பாட்டு ஆய்வு மையத்தின் வளர்ச்சியில் மத்திய செம்மொழித் தமிழாய்வு நிறுவனம் பெரும்பங்கு வகித்து வருகிறது. இம்மையம் தொடங்கப்பட்டபோது மத்திய செம்மொழித் தமிழாய்வு நிறுவனம் தக்க சமயத்தில் பொருளுதவி அளித்து மையத்தின் வளர்ச்சிக்கு அடிகோலியது. இப்பொருளுதவி யுடன் இம்மையம் சிந்துவெளி குறியீடுகளின் 1977 தொகுப்பை சீரமைத்தல், சிந்துவெளி மற்றும் சிந்துவெளிக் குறியீடுகள் பற்றிய ஆராய்ச்சிக் கட்டுரைகளைச் சேகரித்தல் போன்ற பணிகளைச் செய்து முடித்தது. நடைபெறும் ஆண்டில் சிந்துவெளிக் குறியீடு களைப் பற்றி ஒரு கருத்தரங்கம் நடத்தவும், ஒரு பயிலரங்கம் நடத்தவும் இம்மையத்திற்கு மத்திய செம்மொழித் தமிழாய்வு நிறுவனம் பொருளுதவி அளித்துள்ளது. பொருளுதவி தருவது மட்டுமின்றி, செம்மொழித் தமிழாய்வு நிறுவனம் இம்மையத்துக்கு ஒரு பக்க பலமாக இருந்து வருகிறது. இம்மையத்தின் எதிர் காலத் திட்டங்களுக்கும் மத்திய செம்மொழித் தமிழாய்வு நிறுவனம் எல்லா உதவிகளையும் அளிக்கும் என்பது இம்மையத்தின் நம்பிக்கையும் எதிர்பார்ப்பும் ஆகும்.

இம்மையத்தின் மூலம் மொழியியல், பண்பாடு, புள்ளியியல் தொடர்பான ஆய்வுகள் நடந்து வருகின்றன. இம்மையம் TIFR மற்றும் சென்னையில் உள்ள கணித அறிவியல் நிறுவனத்தின் (Institute of Mathematical Sciences) ஆராய்ச்சியாளர்களுடன் தொடர்பு கொண்டு சிந்துவெளிக் குறியீடுகள் பற்றி கருத்துப் பரிமாற்றம் செய்து வருகிறது.

சிந்துவெளி ஆய்வுகளைச் சீரான முறையில் பன்னாட்டு அறிஞர்களும் ஏற்கும் வகையில் ஆய்வுகளை மேற்கொண்டு வரும் சிந்துவெளி பண்பாட்டு ஆய்வு மையம், ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகத்தின் அங்கமாக இருப்பது ஆய்வாளர்களுக்குக் கிடைத்த மற்றொரு அறிவுத் தளம். மேலும் தமிழியல் ஆய்வாளர்களுக்கான ஆவணக்காப்பகமாக விளங்கும் ரோஜா முத்தையா நூலகம், ஆய்விற்கான மற்றொரு முகாந்திரமாக சிந்துவெளி பண்பாட்டு ஆய்வு மையத்தை உருவாக்கியுள்ளது இத்துறையின் ஆராய்ச்சிப் பணிகளைப் பன்னாட்டுத் தரத்திற்கு உயர்த்தும் என்பது உறுதி.

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகத்தின் சேவைகள்

■ க. சுந்தர்

ரோஜா முத்தையா நூலக அறக்கட்டளையின் முக்கிய குறிக்கோள்கள் / அம்சங்கள்:

தமிழியல் ஆய்வுகளுக்கான ஆராய்ச்சி நூலகமாகவும் ஆவணக் காப்பகமாகவும், ஆய்வாளர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்தும், ஆய்வுக்கானத் தரவுகளைப் பாதுகாப்பதாக இந்நூலகத்தின் செயல்பாடுகள் உள்ளன. நூலகங்கள் மற்றும் ஆவணக்காப்பகங்களுக்கான செய்திகளைத் திரட்டவும், அவ்வாறு திரட்டும் செய்திகளைப் பரவலாக்குதலும், நூலகர்களுக்கும் ஆவணக்காப்பாளர்களுக்கும் பயிற்சி அளிப்பதும், நூலகத்தின் பயனீட்டாளர்கள் பயன்பெறும் வகையில் வெளிநாட்டுக் கல்வி நிறுவனங்களுடன் கூட்டு முயற்சிகளில் கலந்துகொள்ளுதல், மானுடவியல் மற்றும் சமூக அறிவியல் ஆராய்ச்சிகளில் ஈடுபடுதல் என்பன. நூலகத்தின் பிற செயல்பாடுகள் ஆகும்.

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகத்தின் தலையாய சேவை குறிப்புதவி சேவையாகும். ஆய்வாளர்களுக்குச் சீரான குறிப்புதவி சேவை 1997 ஆம் ஆண்டு முதல் தொடங்கப்பட்டது. முதலில் இது பட்ட மேற்படிப்பு மற்றும் முனைவர் பட்டப் படிப்பு மேற்கொள்ளும் ஆய்வாளர்கட்கு மட்டும் அனுமதிக்கப்பட்டது. பின் 2000ஆம் ஆண்டில் ஆய்வாளர்களுக்கு மட்டுமல்லாமல் பொது மக்களும் பயன்படுத்த அது விரிவாக்கப் பட்டது. ஒரு பொது நூலகத்தின் தன்மைகளுடன் அனைவரும் பயன்படுத்திக்கொள்ளும் வகையில் வழிவகை செய்யப்பட்டது.

இதுவரை இந்நூலகத்தைப் பல ஆயிரக்கணக்கானவர்கள் பயன்படுத்தி உள்ளனர். இந்நூலகத்திற்கு முனைவர் பட்ட ஆய்வாளர்கள்,ஆய்வியல் நிறைஞர்கள், முதுகலை மாணவர்கள், இளங்கலை மாணவர்கள், ஆவணப்படத் தயாரிப்பவர்கள், திரைப்படத் தயாரிப்பாளர்கள், எழுத்தாளர்கள், கல்லூரி மற்றும் பள்ளி மாணவர்கள் எனப் பல தரப்பினரும் வருகை புரிகின்றனர். ஆய்வாளர்களின் தேடுதல் நேரத்தைக் குறைத்து, எளிதில் நூல்களின் விவரம் அளிக்கப்படுகிறது. இங்கு சங்க இலக்கியம், பக்தி இலக்கியம், இஸ்லாமிய இலக்கியம், புராணம், நவீன இலக்கியம், நாட்டுப்புறவியல், சினிமா, தலித் வரலாறு, திராவிட இயக்க வரலாறு, தமிழ் நாட்டு வரலாறு, கல்வி, பெண்ணியம், சங்கீதம், மானுடவியல், தொல்லியல், சித்த மருத்துவம் போன்ற

பல துறைகளைச் சேர்ந்த பழம்பதிப்புகளைக் கொண்ட நூல்கள் உள்ளன.

பத்தொன்பது இருபதாம் நூற்றாண்டில் வெளியான பத்திரிகை களான செந்தமிழ், செந்தமிழ்ச் செல்வி, ஒரு பைசாத் தமிழன், உதயதாரகை, தமிழ்ப்பொழில், மஞ்சரி, கலைமகள், கல்கி, மாதர் மனோரஞ்சனி மற்றும் திராவிட இயக்கம் சார்ந்த இதழ்களான குடியரசு, பகுத்தறிவு, புரட்சி, திராவிடநாடு, காஞ்சி, போர்வாள், புதுவை முரசு போன்ற பல பத்திரிகைகளைப் படிப்பதற்காகவும் ஆய்வாளர்கள் வருகை புரிகின்றனர்.

சங்க இலக்கியத்தில் ஆய்வு செய்யும் ஆய்வாளர்கள், சங்க இலக்கியப் பதிப்பு ஒப்பீட்டிற்காகவும், சங்க இலக்கியத்திலுள்ள விருந்தோம்பல், சங்கப் பரத்தமை மரபும் நீட்சியும், சங்க இலக்கியத்தில் வானவியல் மற்றும் சோதிடவியல், சங்க இலக்கியத்தில் நாடகக் கூறுகள் போன்ற தலைப்புகளில் ஆய்வு செய்துவருகின்றனர். தொல்காப்பிய எழுத்ததிகார ஆராய்ச்சி, சிறுபாணாற்றுப் படையில் வாழ்வியல் விழுமியங்கள், அசோகமித்திரன் நாவல்களில் மகளிர் நிலை, நா. பார்த்தசாரதி நாவல்களில் கல்வித்துறைச் சிக்கல்கள், சிவப்பிரகாசரின் இலக்கியம் காட்டும் சமூகம், இக்கால இலக்கியங்களின் போக்கு, பூரணலிங்கம் பிள்ளை குறித்த ஆய்வு, புதுமைப்பித்தன் ஆவணங்கள் ஆய்வு, சு. சமுத்திரம் நாவல்களில் தொழிலாளர், தமிழ் ஓலைச்சுவடி பதிப்பு வரலாறு, இலக்கணப் பதிப்பு வரலாறு, ஆனந்த போதினி இதழ்கள், விடுதலைப் போராட்டத்தில் தமிழ் இதழ்களின் பங்கு, கண்ணதாசனின் திரையிசைப் பாடல்கள், தமிழ் வளர்ச்சிப் பணிகளில் ஆதிதிராவிடர்களின் பங்கு, புதுக்கவிதையில் யாப்பு, பாரதியார் பாடல்களில் பதிப்பு வேறுபாடு போன்ற பல தலைப்புகளில் ஆய்வு செய்வதற்காகவும் ஆய்வாளர்கள் வருகின்றனர்.

சென்ற ஆண்டு மட்டும் நூலகத்தைப் பயன்படுத்தி 7 முனைவர் பட்ட ஆய்வுகளும், 10 ஆய்வியல் நிறைஞர் ஆய்வுகளும், 35 நூல்களும் மற்றும் பல கட்டுரைகளும் வெளிவந்துள்ளன.

நகலகச் சேவை

ஆய்வாளர்களுக்குத் தேவையான நூல்களுக்கான நகல்களை நூலகத்திலேயே பெற்றுக் கொள்ளலாம்.

தமிழ்நாட்டில் நூலகக் கள ஆய்வு

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகம் ஆய்வாளர்களுக்காகத் தமிழில் வெளியான நூல்களின் பட்டியலை ஒரே இடத்தில் பார்ப்பதற்காகவும், ஆய்வாளர்களின் தேடுதல் நேரத்தைக் குறைப்ப தற்காகவும் தமிழ்நாட்டில் பல இடங்களிலுள்ள நூலகங்களை 1998 முதல் கள ஆய்வு செய்து அந்நூலகங்களில் உள்ள நூல்களுக் கானப் பட்டியல் தயாரித்து வருகிறது. இதன் மூலம் தமிழ் ஆய் வாளர்கள் ஒரே இடத்தில் இந்நூல் பட்டியலைப் பார்க்க முடியும் (நூற்பட்டியல் தயாரித்தல் பற்றி இவ்விதழில் உள்ள பிரகாஷின் கட்டுரையைப் பார்க்க லாம்). குறிப்பாக உ.வே.சாமிநாதையரின் நூலகம், கலாக்ஷேத்ரா நூலகம், மியூசிக் அகாதமி நூலகம் என பல நூலகங்களுக்கான நூற்பட்டியலைத் தயாரித்துள்ளது. பல நூலகங்கள் இச்சேவையை அறிந்து ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகத்தை அவர்களது நூலகத்திலுள்ள நூல்களைப் பட்டியலிட அழைக்கின்றன.

1556 ஆம் ஆண்டு முதல் தமிழில் இதுவரை வெளியான தரவுகளின் எண்ணிக்கை என்ன என்ற கேள்வியை மனதில் கொண்டு ஒருங்கிணைந்த நூல்விவரணப் பட்டியலைத் தயாரித்து வருகிறது. இப் பட்டியலை வைத்து ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகத்தில் இல்லாத புத்தகங்களைத் தேடிக் கண்டுபிடித்து அவற்றைப் பாதுகாக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது. அம்முயற்சியில் தமிழ்நாட்டிலுள்ள நூலகங்களைக் கள ஆய்வு செய்வதற்கென்று ஒரு குழு அமைக்கப்பட்டு அக்குழுவானது நாகர்கோவில், காரைக்குடி, மதுரை, ராஜபாளையம், தஞ்சாவூர், மன்னார்குடி, கூத்தாநல்லூர், கும்பகோணம், திருப்பனந்தாள், காரைக்கால், சிதம்பரம், புதுக்கோட்டை, பாண்டிச்சேரி, நீலகிரி போன்ற பல இடங்களிலுள்ள நூலகங்களான கிறித்துவ நூலகம், இந்துமதா பிமான சங்கம், காந்தி கலைமன்றம், பென்னிங்டன் நூலகம், சாயபு மரைக்காயர் நூலகம், ஞானாலயா நூலகம், அஞ்சுமன் நுஸ்ரத்துல் பொது நூலகம், சாஹிப் இல்ல நூலகம், ஸ்ரீவித்யா ராஜகோபால் நூலகம், பாரதியார் அருங்காட்சியகம், சிவகுருநாதன் செந்தமிழ் நூலகம் போன்ற பல நூலகங்களைப் பார்வையிட்டு, அழிந்து போகும் நிலையிலிருந்த அரிய ஆவணங்களை மட்டும் எவ்வித கட்டணமும் இன்றி நுண்படம் செய்ய முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளது. பல நூலகங்கள் ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகப் பணிகளை அறிந்து இவ்வாறு நூல்களைப் பாதுகாக்க முன் வருகின்றனர்.

உலகின் மிகப் பெரிய நூற்பட்டியல் தளம் oclc (online computer library center) என்று அழைக்கப்படும் கணினித் தளமாகும். இத்தளத்தில் இந்திய மொழிகளில் இந்தியும் சமஸ்கிருதமும் தான் அதிக அளவில் பட்டியலிடப்பட்டிருந்தன. தமிழ் நூற்பட்டியல் 4ஆம் இடத்தில் இருந்தது. ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகத்தின் முயற்சியால் இப்போது தமிழ் இரண்டாமிடத்திற்கு நகர்த்தப் பட்டிருக்கிறது. இந்தத் தளத்திற்கு அமெரிக்க காங்கிரஸ் நூலகம், சிங்கப்பூர் தேசிய நூலகம் மற்றும் ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகங்கள் நூற்பட்டியலை இணைக்கின்றன. அவ்வாறு இணைப்பதற்குப் பயிற்சியும் பெற்றிருக்கின்றன. இதனால் உலகிலுள்ள அனைவரும் தரவுகள் இருக்குமிடத்தை எளிதில் கண்டுகொள்ளமுடியும்.

உலகின் மிகப் பெரிய நூற்பட்டியல் தளம் oclc (online computer library center) என்று அழைக்கப்படும் கணினித் தளமாகும். இத்தளத்தில் இந்திய மொழிகளில் இந்தியும் சமஸ்கிருதமும் தான் அதிக அளவில் பட்டியலிடப்பட்டிருந்தன தமிழ் நூற்பட்டியல் 4ஆம் இடத்தில் இருந்தது. ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகத்தின் முயற்சியால் இப்போது தமிழ் இரண்டாமிடத்திற்கு நகர்த்தப் பட்டிருக்கிறது.

பயிற்சிப் பட்டறைகள்

இந்நூலகத்தில் பணிபுரியும் 26 நபர்களில் 20 பேர் முதுகலை நூலக அறிவியல் மற்றும் ஆய்வியல் நிறைஞர் (தமிழ், வரலாறு) படித்தவர்கள், மேலும் முனைவர் பட்டத்திற்காக ஆய்வுகளை மேற்கொண்டுள்ளனர். இந்நூலகத்தில் பணிபுரியும் வல்லுநர்கள் ஆவணப்படுத்தல், நூற்பட்டியலிடுதல், நுண்படமெடுத்தல், மின்னணுவாக்கம் செய்தல், நூல் பாதுகாத்தல் போன்றவற்றில் பிரிட்டிஷ் நூலகம், அமெரிக்க காங்கிரஸ் நூலகம், வெல்கம் அறக்கட்டளை போன்ற சர்வதேச நூலகங்களில் பயிற்சிப் பெற்றுள்ளனர். அவ்வாறு பயின்ற அத்தொழில்நுட்பத்தையும் பயிற்சியினையும் இந்நூலகம் மற்ற நூலகங்களுக்கு வழங்கி வருகிறது. இந்நூலகத்தில் பயிற்சிப் பெற்ற சில நூலகங்கள் மற்றும் ஆவணப் பாதுகாப்பு நிறுவனங்களின் பெயர்கள் பின்வருமாறு:

- தமிழ்நாடு ஆவணக் காப்பகம், சென்னை
- மதன் பரஸ்கார் புஸ்தகாலயம் (MPP), நேபாளம்

- Centre for Studies in Social Sciences, Calcutta (CSSSC),
- இந்திய தொழில் நுட்பக் கழகம் (IIT)- கான்பூர்,
- பிரஞ்சு இன்ஸ்டிட்யூட், புதுச்சேரி
- சுந்தரய்யா விஞ்ஞான கேந்திரம், ஹைதராபாத்
- உருது ஆராய்ச்சி மையம், ஹைதராபாத்
- Center for the Study of Marathi Culture (CSMC), புனே
- கோத்ரேஜ் ஆவணக் காப்பகம், மும்பை
- Tata Institute of Fundamental Research (TIFR) Archive, மும்பை
- கலாக்ஷேத்ரா பவுண்டேஷன், சென்னை
- மியூசிக் அகாதமி, சென்னை

ஆலோசனை வழங்கும் சேவை

நூலகப் பட்டியல், மென்பொருள், மின்னணுவாக்கம், நுண்படமெடுத்தல், ஆவணங்களைப் பாதுகாத்தல் போன்றவற்றிற்கு பிற நூலகங்களுக்குத் தேவைப்படும் ஆலோசனையை இந்நூலகம் வழங்கி வருகிறது. மேலே பட்டியலிட்டுள்ள பல நிறுவனங்களுக்கு மட்டுமல்லாமல் இச்சேவையை UNESCO விற்காகவும், சத்யஜித் ரே பவுண்டேஷன், IISc., பெங்களூர், உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை ஆகிய நிறுவனங்களுக்கும் வழங்கி வருகிறது.

சொற்பொழிவுகள்

பல்வேறு அறிஞர்களைக் கொண்டும் ஆய்வாளர்களைக் கொண்டும், பல்வேறு தலைப்புகளில் இதுவரை 60 சொற்பொழிவுகள் நடந்துள்ளன. இச்சொற்பொழிவுகளின் மூலம் பலதரப்பட்ட மக்களை ஒருங்கிணைக்கும் செயல்பாட்டை இந்நூலகம் செய்து வருகிறது. குறிப்பாக பொதுமக்கள், ஆய்வாளர்கள் இச்சொற்பொழிவுகளில் கலந்துகொள்கிறார்கள். சில சொற்பொழிவுகளின் சுருக்கத்தைக் கீழ்வருமாறு காணலாம்.

வ. கீதா "காந்தி மறு வாசிப்பு பாலினம், மதம் மற்றும் நம்பிக்கை" என்ற தலைப்பில் இந்திய விடுதலைக்கு முன்பும், விடுதலைக்குப் பின்பும் மக்களின் பார்வையில் காந்தி எவ்வாறு திகழ்ந்தார் என்பதின்மூலம் காந்தியை மறுவாசிப்பிற்கு உட்படுத்தினார்.

கவிஞர் கனிமொழி, (மாநிலங்களவை உறுப்பினர்) "சென்னை சங்கமம், ஒரு கலாச்சார நிகழ்வு" என்ற தலைப்பில் சங்கமத்தில் கிடைத்த அனுபவங்களைப் பகிர்ந்துகொண்டார். நகர்ப்புறத்தில் பொங்கல் விழாவையும் நாட்டுப்புறக் கலைகளையும் உயிர்ப்பிப்பதற்கு சென்னைச் சங்கமம் ஒரு பாலமாக அமைந்திருக்கிறது என்பதைத் தெரிவித்தார்.

முனைவர் அஸ்கோ பர்போலா, (சிந்துவெளி எழுத்துக்களின் வல்லுநர், ஹெல்சின்கி பல்கலைக் கழகம்), "Is the Indus Script indeed is not a writing system" என்ற தலைப்பில், சிந்துவெளி எழுத்துகள் ஒரு மொழியை உள்ளடக்கியவை என்பதையும், அதே சமயம் ஸ்டீவ் பார்மர், ரிச்சர்ட் ஸ்ப்ரோட் மற்றும் மைக்கேல் விட்சல் போன்ற அறிஞர்கள் சிந்துவெளி எழுத்துக்கள் ஒரு மொழியை உள்ளடக்கியவை அல்ல என்ற கருத்தை ஆதாரங்களுடன் மறுத்துப் பேசினார்.

பேராசிரியர் தாமஸ் டிரவுட்மன் (வரலாற்றுத்துறை, மிட்சிக்கன் பல்கலைக்கழகம்,USA), எப்.டபிள்யூ.எல்லிஸும் திராவிடச் சான்றும் என்ற தலைப்பில் எல்லிஸ்துரை தமிழ்

மொழிக்கு ஆற்றிய தொண்டினைப் பற்றியும், அவர் 'திராவிட மொழிகள் வடநாட்டு மொழிகளிலிருந்து வேறுபட்டவை' என்ற கருத்தை கி.பி.1816லேயே கால்டுவெல் காலத்திற்கு முன்பே வலியுறுத்தியவர் என்று கூறினார்.

இச்சொற்பொழிவுகளைத் தொடர்ந்து நடத்துவதற்கான செலவுகளை நூலகமே ஏற்றுவருகிறது. இவ்வாண்டு, முதல் முதலாக ரா. ராகவையங்காரின் பெயரில் முனைவர் பத்மாசினி கண்ணன் அவர்கள் அறக்கட்டளை சொற்பொழிவுகளை நிகழ்த்த பொருளுதவி கொடுத்துள்ளார்.

கண்காட்சிகள்

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகத்தில் கடந்த 2006ஆம் ஆண்டு முதல் பல்வேறு கண்காட்சிகள் நடத்தப்பட்டு வந்துள்ளன. இக்கண்காட்சிகள் பல்வேறு துறைசார்ந்தும் பல பொருண்மைகளின் மூலம் வரலாற்று நிகழ்வுகளை ஆவணப்படுத்தி மாணவர்கள், ஆய்வாளர்கள், அறிஞர் பெருமக்கள், மற்றும் பொதுமக்கள் என அனைத்துத் தரப்பினர்க்கும் பயன்படும் வகையில் கண்காட்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகம், நூலகச் செயல்பாட்டில் கண்காட்சி நடத்தி வருவதை முக்கியப் பணியாகக் கொண்டு பொதுமக்களும் மாணவர்களும் காணமுடியாத பல அரிய செய்திகளை இலவசமாகக் காண, சேவை மனப்பான்மையுடன் செயல்பட்டு வருகிறது. மேலும் இக்கண்காட்சிகளுக்கு அத்துறை சார்ந்த அறிஞர் பெருமக்களின் ஆலோசனையைப் பெற்றும், இலவசமாகக் கையேடுகளை அச்சிட்டு வழங்கியும் கண்காட்சி களை நடத்தி வருகிறது. குறிப்பாக இக்கண்காட்சிகளைச் சென்னையிலுள்ள பெரும்பாலான பள்ளிகளுக்கும் பல்கலைக்கழகத்திற்கும் மாணவர்களுக்கு பயன்படும் விதம் அனுப்பி வைக்கிறது.

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகத்தில் இதுவரை நடைபெற்ற கண்காட்சிகளின் விவரம் பின்வருமாறு காணலாம்.

முதல் கண்காட்சியாக ஐரோப்பிய அறிஞர் சீகன்பால்கு அவர்கள் தரங்கம்பாடிக்கு வருகைபுரிந்த 300வது நினைவு ஆண்டையொட்டி 2005இல், அவரின் தமிழ்ப்பணியைப் போற்றும் வகையில் பல அரிய தகவல்களைக் கொண்டு இக்கண்காட்சி அமைக்கப்பட்டது.



2006ஆம் ஆண்டில் சென்னையும் பதிப்பும் என்ற தலைப்பில் சென்னை மாகாணத்தில் உருவான அச்சு உருவாக்க வரலாற்றையும் துண்டுப்பிரசுரங்கள் அச்சிடுதல், நூல்கள் பதிப்பு, போன்று சென்னையில் உருவான அச்சுப் பண்பாட்டை இக்கண்காட்சி விளக்கியது.

டிசம்பர் 2007இல் இசை பரப்பிய ஆரம்பகால ஊடகங்கள் என்ற பொருண்மையில் கி.பி.1850களுக்குப் பிறகான தமிழில் இசைக் கருவிகள், இசை நூல்கள், இசைக் கலைஞர்கள் ஆகியவை தொடர்பான அரிய செய்திகளை இக்கண்காட்சியின் மூலம் பலரும் அறிந்தனர். குறிப்பாக ஆரம்ப காலத்தில் அச்சிடப்பட்ட இசை நூல்கள், ஒலித்தட்டுகள் ஆகியவற்றைக் கொண்டு இக்கண்காட்சி வடிவமைக்கப்பட்டது.

2008ஆம் ஆண்டில் சுதந்திரப் போராட்டத்திற்காக சென்னை மாகாணத்தில் அச்சிடப்பட்ட பல்வேறு நூல்களைக் கொண்டும்

அவற்றின் மூலம் சென்னையில் அல்லது தமிழகத்தில் எவ்வாறான போராட்ட நிகழ்வுகள் நடைப்பெற்றன என்பதைப் பின்வரும் தலைமுறையினருக்குப் பயன்படும் வகையில் இக்கண்காட்சி அமைக்கப்பட்டது.

சிந்துவெளி நாகரிகம் தொடர்பான கண்காட்சி ஜனவரி 2009ஆம் ஆண்டு நடத்தப்பட்டது. இதில் சிந்துவெளி நாகரிகத்தின் மையமான ஹரப்பா, மொகஞ்சதாரோ, லோத்தல், தோலவிரா, தைமபாத் போன்ற இடங்களிலும் மற்றும் தமிழகத்தில் உள்ள அதன் கூறுகளைப் பற்றியும் ஆய்வு செய்த அறிஞர்களைப் பற்றியும், அந்நாகரிகத்தில் வாழ்ந்த மக்களின் பண்பாட்டு எச்சங்கள் குறித்தும் இக்கண்காட்சி விளக்கியது. இதனை மாண்புமிகு தமிழக நிதியமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் திறந்து வைத்தார்.



ஆகஸ்ட் 2009ஆம் ஆண்டு தமிழ் நாட்டில் காந்தி என்ற தலைப்பில் மகாத்மா காந்தியடிகள் தமிழ்நாட்டிற்கு எப்பொழுது, எங்கு, எதற்காக வந்தார் என்ற செய்திகளை அடிப்படையாகக் கொண்டு காந்தி வந்த இடங்களுக்கெல்லாம் நேரில் சென்று களஆய்வு செய்து, இக்கண்காட்சி நடத்தப்பட்டது.

ஜனவரி 2010ஆம் ஆண்டு நகரத்தாரும் தமிழ்ப்பதிப்பும் என்ற தலைப்பில், நாட்டுக்கோட்டை செட்டியார்கள் தமிழ்ப்பதிப்புலகில் செய்த பங்களிப்பை மையமாகக் கொண்டு பல அரிய செய்திகளைத் திரட்டி இக்கண்காட்சி அமைக்கப்பட்டது. தமிழில் சங்க இலக்கியம் முதல் நாவல்இலக்கியம் வரை பல அரிய நூல்களைப் பதிப்பித்தும் புரவலர்களாக இருந்தும் நகரத்தார் சமூகம் திகழ்ந்தது என்பதை இக்கண்காட்சி சித்திரித்தது.

மேலே குறிப்பிட்ட கண்காட்சிகளை ஜெர்மனியிலுள்ள ஹலே நிறுவனம், இந்து நாளேடு, சுந்தரம் பாஸ்ட்னர்ஸ் நிறுவனம், சென்னை வில்லிங்டன் கார்ப்ரேட் நிறுவனம், செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம், எம்.ஆர் உமையாள் ஆச்சி எம்.ஆர் அருணாசலம் அறக்கட்டளை போன்ற பல்வேறு நிறுவனங்களின் உதவியுடன் நடத்தப்பட்டது. இக்கண்காட்சிகள் 15க்கும் மேற்பட்ட பள்ளிகளுக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

வருங்காலத்தில் தமிழ்நாட்டில் கல்வெட்டுகள், நாணயங்கள், பானையோடுகளில் எழுத்துக்கள், நடுகற்கள், சிறுபாணர் சென்ற பெருவழி, தமிழ்க் கணிதம், சினிமா, விளம்பரம் என்னும் பல்வேறு தலைப்புகளில் கண்காட்சிகளை நடத்தவுள்ளது.

முகவரி: ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகம், மூன்றாவது குறுக்குச் சாலை, சிபிடி வளாகம், தரமணி, சென்னை- 600113 தொலைபேசி: 044-22542551/2 மின்னஞ்சல்: rmrl@dataone.in